# தமிழக
# நாட்டுப் பாடல்கள்

மு. வை. அரவிந்தன், எம். ஓ. எல்.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
அரசினர் கலைக் கல்லூரி,
வேலூர், வ. ஆ.

விற்பனை உரிமை:
பாரி நிலையம்,
59, பிராட்வே
சென்னை-1.

லட்சுமி பதிப்பகம்
வெளியீடு—1
முதற் பதிப்பு: மார்ச்சு, 1977.

உரிமை ஆசிரியர்க்கு.

விலை ரூ. 9-00

லட்சுமி பதிப்பகம்,
3, பவழக்காரத் தெரு,
சென்னை-600 001

அச்சிட்டோர்:
பிரபு பிரிண்டிங் ஹவுஸ்,
48/42 வடக்கு உஸ்மான் ரோடு,
தி. நகர் சென்னை-600 017.

## இந்த நூல்

*1950-ஆம் ஆண்டு.*

மே மாதம்—கோடை காலம்;

வட ஆர்க்காடு மாவட்டம் செங்கம் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது, முழு ஆண்டுத் தேர்வு எழுதிவிட்டு விடுமுறையில் பொழுது போக்காகத் தமிழ் நூல்களை நான் படித்துக் கொண்டிருந்த காலம் அது.

என்னுடன் பயின்று வந்த நண்பர் ஆலப்புத்தூர் இராகவன், எனக்காகத் தம் ஊர் நூலகத்திலிருந்து விடுமுறை நாட்களில் படிப்பதற்காக ஒரு நூலைக் கொண்டு வந்து தந்தார்.

அந்த நூலின் பெயர்: காற்றிலே மிதந்த கவிதைகள்.

நூலின் தலைப்பே எனக்குக் கிளர்ச்சியூட்டியது!

காற்றிலே மிதந்த கவிதைகள்! என்ன புதுமையான — கவர்ச்சி மிகுந்த தலைப்பு!

நூலின் பெயருக்கு நெஞ்சத்தைப் பறிகொடுத்த நான், நூலை மிக ஆர்வத்தோடு புரட்டினேன்!

அதில் இடம் பெற்றிருந்த அத்தனை கவிதைகளும், காற்றிலே மிதந்து வந்து செவியினுள் புகுந்து நெஞ்சில் குடியேறிவிட்ட அற்புதமான கவிதைகள்!

அந்த நூலின் ஆசிரியர் மு. அருணாசலம், இப்போது நூற்றாண்டு வரிசையாகத் தமிழ் இலக்கிய வரலாறு எழுதித் தமிழின் வளர்ச்சிக்கு மிகப் பெரியதொரு தொண்டாற்றி வருகின்ற தமிழறிஞர்தான், அந்த நூலின் ஆசிரியர்!

கல்லாத மக்கள் பாடும் நல்ல கவிதைகளை எல்லாம் கேட்டு இன்புற்று அவற்றைப் போற்றி எழுதி, அவற்றிற்குச் சுவையான விளக்கமும் எழுதியுள்ளார் அவர்.

அந்த நூலைப் படித்து மகிழ்ந்த நான், அன்று முதல் எங்கள் ஊர்ப் புறங்களில் காற்றிலே மிதந்து வருகின்ற நாட்டுப் பாடல்களின்மீது நாட்டம் செலுத்தினேன்.

காடு கழனிகளில் உலவும் போதும்—தோட்டம் துரவுகளில்

சுற்றும்போதும் காற்றிலே மிதந்து வருகின்ற கவிதைகளைக் கேட்டு எழுதி வந்தேன்.

எழுதாத கவிதைகள் எழுத்து வடிவம் பெற்றன!

பல ஆண்டுகள் தொடர்ந்து நாட்டுப் பாடல்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டதன் விளைவாய்ப் பல பாடல்கள் கிடைத்தன.

என் முயற்சியையும் ஆர்வத்தையும் அறிந்த நண்பர்கள், தம் ஊர்ப் பகுதிகளில் கிடைத்த நாட்டுப் பாடல்களைத் தந்து உதவினர். இதனால், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் வழங்கிவரும் பாடல்கள் கிடைத்தன.

மாணவர்களின் உதவியினாலும் பல பாடல்களைப் பெற்றேன்.

கல்லூரி அவையில்—உயர் நிலைப் பள்ளியில்—இலக்கிய மன்றத்தில் நாட்டுப் பாடல்களைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினேன். எழுதாத இலக்கியம், நாட்டிலே உலவும் பாட்டுகள், கல்லாதவர் படைத்த கவிதைகள், மக்கள் இலக்கியம்—என்பவை போன்ற தலைப்புகளில் என் சொற்பொழிவு அமைந்தது. இலக்கிய அன்பர்கள் அவற்றைப் பெரிதும் விரும்பினர்.

தமிழ் நாடு (ஞாயிறு மலர்) காதல், மாலை முரசு, சாந்தி ஆகிய இதழ்களில் நாட்டுப் பாடல்களைப் பற்றிக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டேன்.

இப்போது இந்த நூலின் வாயிலாக, எழுதாத இலக்கியம் வளர ஆற்றிய பணிக்கு—காற்றிலே மிதந்து வரும் கவிதைகளின் வளத்திற்கு ஒரு முழு வடிவம் தருகின்றேன்.

இந்த நூலில், நாட்டுப் பாடல்களைப் பல வகையாய்ப் பாகுபாடு செய்து, அவற்றிற்குப் போதிய அளவு விளக்கமும் தந்துள்ளேன்.

இதனை வெளியிட்ட லட்சுமி பதிப்பகத்தார்க்கும், விரைவாகவும் அழகாகவும் அச்சிட்டுத் தந்த பிரபு பிரிண்டிங் ஹவுஸ்க்கும் நன்றி செலுத்துகிறேன்.

இந்த நூலைத் தமிழ் மக்கள் ஆர்வத்துடன் வரவேற்று என்னை மேன்மேலும் ஊக்குவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

**மு. வை. அரவிந்தன்.**

நாட்டினிலும் காட்டினிலும்
நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப்
பறி கொடுத்தேன்!

—பாரதியார்.

## உள்ளே


1. நாட்டுப் பாடல் அறிமுகம்
2. வாழ்த்தும் வணக்கமும்
3. பாரதியார் போற்றிய பாடல்கள்
4. தாய்க்குலம் வளர்த்த தமிழ்க் கவிதைகள்
5. சிறுவர் உலகம்
6. ஏற்றப் பாடல்கள்
7. கவிதை விளையும் கழனி
8. காதல் வாழ்க்கை
9. திருமணப் பாடல்கள்
10. பிறந்த பெண் போகின்றாள்
11. கண்ணீரில் பூத்த கவிதை மலர்கள்
12. உலகம் பலவகை
13. மலரும் மாலையும்
14. தெய்வப் பாடல்கள்
15. எழுதாத கதைகள்
16. மன்னன் மகள்

# 1. நாட்டுப்பாடல்கள்: அறிமுகம்

தமிழ்நாட்டில் வாழும் கல்லாத மக்கள் நல்ல நல்ல கவிதைகளைப் பாடுகின்றனர். அந்தக் கவிதை களில் இலக்கியச் சுவையைக் காணலாம்; சிறந்த உணர்ச்சியைக் காணலாம்; விழுமிய கருத்தைக் காணலாம். அவற்றில் நயமான ஓசையுண்டு; வளமான சொற்கள் உண்டு; உயர்வான கற்பனை உண்டு.

கல்லாதவர் பாடும் நல்ல பாடல்களே நாட்டுப் பாடல்கள்.

நாட்டுப் பாடல்களுக்குப் பல வேறு பெயர்கள் வழங்குகின்றன. நாட்டுப்புறப்பாடல், நாடோடிப் பாடல், கிராமியப்பாடல், பாமரர் பாடல் என்று பல பெயர்கள் உண்டு. ஆனால், இப்பெயர்களைவிட 'நாட்டுப்பாடல்' என்ற பெயரே மிகவும் பொருத்தம் உடையதாகும். நம் நாட்டில் தோன்றி வழங்கிவரும் மொழியை நாட்டுமொழி என்கிறோம். நம் நாட் டிற்கே உரிய மருத்துவத்தை நாட்டு மருத்துவம் என் கிறோம். இவ்வாறே நாட்டுத்தணி, நாட்டுப் பழக்கம் போன்ற வழக்குகளும் இம்மரபு பற்றி வந்தவை யாகும். எனவே நம் நாட்டு மக்கள் பாடும் பாடல்

களை 'நாட்டுப்பாடல்கள்' என்று வழங்குவதே பொருத்தமாகும்.

தமிழ் மண்ணில் எல்லா இடங்களிலும் நாட்டுப் பாடல்கள் தோன்றி மணம் வீசுகின்றன. தமிழ் நாட்டு மாவட்டங்கள் யாவற்றிலும் அப்பாடல்கள் ஒலிக்கின்றன. நாடு நகரங்களிலும், காடு கழனி களிலும், தோட்டம் வயல்களிலும், நாட்டுப்பாடல் கள் பிறக்கின்றன. தமிழ்நாட்டுக் கழனிகள் எல்லாம் கவிதைகள் விளையும் இடமாக உள்ளன; நிலத்தை உழும்போதும், ஏற்றம் இறைக்கும் பொழுதும், நாற்று நடும்போதும், களை எடுக்கும்போதும், கதிர் அறுக் கும்போதும் உழுதுண்டு வாழும் மக்கள் பாடுகின்ற னர். தமிழ் மக்களின் வாழ்க்கை தாலாட்டுப்பாட லில் தொடங்கி, விளையாட்டுப் பாடலில் வளர்ந்து, திருமணப்பாடலில் நிறைவு எய்தி, ஒப்பாரிப்பாட லில் முடிகிறது.

சமுதாயத்தின் அடித்தளத்திலேயே தேங்கி நின்று, அழுந்தி விட்ட மக்களின் நெஞ்சத்தி லிருந்து வெளிப்படும் உணர்வுகளும், அனுபவங்களும் கல்லாத மக்களின் பாடல்களில் நிரம்பியுள்ளன. கல்லாத மக்கள் தம்மைப் பற்றிக் கற்றவரும் மற்ற வரும் கவலை கொள்ளாத நிலையில், தாமே தம்முடைய குறைநிறைகளைப் பாடல்களில் வெளிப்படுத்தி ஆறுதல் அடைகின்றனர்.

நாட்டுப் பாடல்கள் ஏழைமக்களின் இலக்கியம்; கல்லாத மக்களின் கற்பனைச் செல்வம்; ஏடும் எழுத்தும் அறியாத மக்களின் இதய ஒலி. அந்தப்

பாடல்களை எல்லாம் அவர்கள் எந்தச் சிறு பயனும் கருதிப் பாடவில்லை; பரிசு பெறப் பாடவில்லை; காசுக்கு விற்றுச் சிறக்க வேண்டும் என்று பாட வில்லை; புகழ்பெற்று உயரவேண்டும் என்று பாட வில்லை; அவர்கள் தம் உழைப்பை மறக்கப் பாடு கின்றனர். பாடிப்பாடி மற்றவர்களின் உழைப்பை யும் மறக்கச் செய்கின்றனர்.

நாட்டுப் பாடல்கள் சிறந்த இலக்கியத்தைப் போலவே கற்போர் நெஞ்சத்தைக் கவர்கின்றன. ஒழுங்குபட்ட ஓசை, வளமான சொல்லாட்சி, இனிய கற்பனை, தங்கு தடையின்றிக் கருத்தை வெளியிடும் தன்மை—ஆகிய யாவும் அப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. காரிகை கற்றுக் கவிபாடுவோரின் கவிதைகளைவிடச் சிறப்பான கவிதைகளைக் கல்லாத மக்கள் பாடுகின்றனர். அப்பாடல்கள் கேட்போர் நெஞ்சத்தைப் பிணித்து, இன்பமூட்டுகின்றன.

சிலர் நாட்டுப் பாடல்களை உருமாற்றியும் கூட்டி யும் குறைத்தும் தம் கவிதைகளில் சேர்த்து விடு கின்றனர். அப்பாடல்களின் இசை அமைப்பைக் கையாண்ட கவிஞர்களும் உண்டு. இன்னும் சிலர் நாட்டுப் பாடல்களின் கற்பனை வளத்தையும் கூட மேற் கொண்டுள்ளனர். சில நாட்டுப்பாடல்கள் சிறந்த கவிஞர்களையும் தடுத்து நிறுத்தி, "இவற்றைப்போல நம் பாடல்கள் இல்லையே!"— என்று எண்ணத் தூண்டி இருக்கின்றன.

ஆற்றங்கரையில் உள்ள ஆலமரத்து நிழலில் மாடுகளை நிறுத்தி விட்டு ஓய்வு கொள்ளும் சிறுவன்,

காலை இளவெயிலில் மூங்கில் இலை மீது மின்னும் பனித்துளியைக் கண்டு களிக்கின்ற ஏற்றக்காரன், ஏற்றக்காரன் பாடும் பாட்டைக் கேட்டு மகிழ்ந்து நாற்று நடும் இளமங்கை, பிடி சோற்றுக்காக ஊர் ஊராக — தெருத்தெருவாக — வீடுவீடாகச் சுற்றி அலையும் பிச்சைக்காரன், சிறிய கந்தல் துணிக்காகக் கொட்டு மேளத்தை முழக்கிக் கொண்டே தேசிங்கு ராசன் கதைபாடும் பெருமாள் மாட்டுக்காரன் — இவர்கள் எல்லோரும் நாட்டுப்பாடல்களை நமக்குத் தரும் 'கவிஞர்கள்'.

நீலவானம், அதன் கீழே அமைந்திருக்கும் பசுமை உமிழும் நிலம், வானுற ஓங்கி வளர்ந்த மலை, முத்து விளையும் கடல், மலையின் முடியையும் கடலின் அடியையும் இணைக்கும் வற்றாத ஆறுகள் ஆறு பாய்ந்து வளம் கொழிக்கும் வயல்கள், வயல் களில் பாடிப் பறந்து திரியும் பறவைகள் — இவற்றை நாட்டுப் பாடல்களாய்ப் புனைந்து பாடுகின்றனர். வரலாற்றுப் புகழ் வாய்ந்த நகரங்கள், நகரங்களில் நடைபெறும் திருவிழாக்கள், திருவிழாக்களின் சிறப்புக்குக் காரணமான தெய்வங்கள், தெய்வங்களை வழிபடச் செல்லும் மக்களின் ஆர்வம் - இவற்றையும் அப்பாடல்கள் காட்டுகின்றன.

நாட்டுப் பாடல்களில் சில, தெய்வங்களைப் புகழ்ந்து பாடுகின்றன; தேர் திருவிழாக்களைப் புனைகின்றன; நகரங்களில் அழகையும் சிற்றூர்களின் சிறப்பையும் வருணிக்கின்றன; ஆறுமலைகளின் வளத்தைப் போற்றுகின்றன. மக்கள் வாழ்க்கையில்

நிகழ்ந்துவிட்ட என்றும் மறக்க முடியாத துன்ப நிகழ்ச்சியை - பெரிய தொரு பஞ்சத்தை - துன்ப இருளில் நாட்டை மூழ்கச் செய்த பெரிய போரை- வரலாற்றை மாற்றி யமைத்த மாவீரர்களின் வாழ்க்கையை நாட்டுப் பாடல்கள் வண்ண ஓவியந் தீட்டி விளக்குகின்றன.

நாட்டுப் பாடல்களில் பலவகையான சிறப்புக்களைக் காணலாம். அவற்றில் மனித உள்ளத்தின் ஆழத்தையும், அங்கே தோன்றி எதிரொலிக்கும் பல்வேறு இதய ஒலிகளையும் காணலாம். வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் எழும் இயற்கையான எண்ணத்தின் வடிவத்தைக் காணலாம்; நாட்டிற்கு நாடு, இடத்திற்கு இடம், இனத்திற்கு இனம் வேறுபடும் வாழ்க்கை முறைகளைக் காணலாம்; தமிழ்நாட்டின் தெய்வங்களையும் விழாக்களையும் காணலாம்; ஆறு மலை வயல் தோப்பு ஆகியவற்றைக் காணலாம். பல ஆண்டுகள் இந்த நாட்டில் வாழ்ந்து வாழ்ந்து பழகிய மக்களின் இன்ப துன்பங்களையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் காணலாம்.

தமிழ் மக்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் நன்கு அறிய விரும்புவோர்களுக்கு நாட்டுப் பாடல்கள் பெருந்துணைபுரியும். எளிய மக்களிடமிருந்து பிறந்து இலக்கிய மணம்கமழும் பாடல்களை இலக்கிய அன்பர்கள் போற்றிக் கற்று மகிழ்வடையலாம்.

நாட்டுப் பாடல்களுக்கு நல்லதொரு எதிர்காலம் இருக்கிறது. அப்பாடல்களின் வாயிலாகத் தமிழக

வரலாற்றை உற்று நோக்குவோர் உள்ளனர்; காலத்திற்குக் காலம் மாறி வந்துள்ள பழக்க வழக்கங்களை அவற்றின் வாயிலாக ஆராய்வோர் இருக்கின்றனர்; மக்கள் இலக்கியம் என்று அவற்றைப் போற்றுவோர் தோன்றி விட்டனர்; அப்பாடல்களின் இசையமைப்பு வடிவம் ஆகியவற்றை நோக்க இசைக்கலைஞர்கள் முன் வந்துள்ளனர்; அவற்றில் உள்ள மொழியமைப்பு சொல்லாட்சி வட்டாரவழக்கு ஆகியவற்றைக்கவனிப்போர் பெருகி வருகின்றனர். இவ்வாறு பலவேறு நோக்கங்களுடன் நாட்டுப் பாடல்கள் பயிலப்பட்டு வருகின்றன. இத்தனை வழிகளிலும் பயன்பட்டுவரும் நாட்டுப்பாடல்களைப் பற்றிப் போதிய நூல்கள் வெளிவரவில்லை. ஏட்டில் எழுதாத கவிதைகள் பல, நாடெங்கும் உலவி வருகின்றன. நாட்டுப்பாடல்களைத் திரட்டி வெளியிடுவது நாட்டு மக்களுக்கும் மொழிக்கும் செய்யும் சிறந்த தொண்டாகும்.

நாட்டுப்புறங்கள் கவிதை மலரும் பூக்காடாய் உள்ளன. இயற்கையான சூழ்நிலையில் வாழும் கல்லாத மக்கள் நல்ல நல்ல கவிதைகளைப் புனைந்து பாடுகின்றனர். கவிதை மலரும் சோலைகளாய் அவர்கள் உள்ளம் விளங்குகின்றன. "கவிதை மலர் திரட்ட வாரீர்!" என்று தமிழக மாணவர்களை—கற்றறிந்தவர்களை—இலக்கிய அன்பர்களை—கலைச்செல்வர்களை இலக்கிய உலகம் அறை கூவி அழைக்கிறது.

## 2. வாழ்த்தும் வணக்கமும்

நாட்டுப் பாடல்களைப் படைப்பவர் தமக்குமுறை யான ஏட்டுக் கல்வியும், பள்ளிப் படிப்பும் இல்லை என்பதை முதலில் அவையடக்கமாய்ப் பாடத் தொடங்குகின்றார்.

*ஏடறியேன் எழுத்தறியேன்!*
*எழுதும்வகை நானறியேன்!*
*பாட வகையறியேன்!*
*பாட்டின் பயனறியேன்!*
*நாவிலே வந்தபடி*
*நானிங்கே பாடுகிறேன்!*

இவ்வாறு தமக்குள்ள தகுதியைப் பாடி விட்டு, கல்விக்குத் தெய்வமாகிய கலைமகளைத் துணை செய்யு மாறு வேண்டுகிறார்.

*வாணி சரஸ்வதியே! — என்*
*வாக்கில் குடி இரம்மா!*
*நாவில் குடியிருந்து — எனக்கு*
*நல்லோசை தாருமம்மா!*
*குரலில் குடி இருந்து*
*கொஞ்சடி பெற்றவளே!*

என்று கலைமகளை வேண்டிக் கொண்டு கல்லாத கவிஞர் பல நல்ல கவிதைகளைப் பாடிக் கொண்டே

போவார். அவருடைய சிறப்பான படைப்பாய் நல்ல பாடல்கள் தோன்றும்; பல வேறு வகையான உணர்ச்சிகள் கவிதையாய்ப்பிறக்கும்; கதைப் பாடல்கள் வெளிவரும்; வரலாற்றுச் செய்திகள் உருவாகும்; நாட்டு நிகழ்ச்சிகள் இலக்கிய வடிவம் பெறும்; வாழ்வில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் கவிதையாய் மலரும்.

மேலும் அவர் அவையோரை நோக்கி,

*ஆறு குற்றம் நூறு பிழை*
*அறியாமல் செய்தாலும்*
*ஐயா மனம் பொறுத்து*
*ஆதரிக்க வேண்டுகிறேன்!*

என்று பணிவுடன் கூறிப் பாடத் தொடங்குவார்.

## 3. பாரதியாரைக் கவர்ந்த பாடல்கள்

அடிமை வாழ்வையும் அந்நிய ஆட்சியையும் வெறுத்த இந்திய மக்களின் நெஞ்சத்தில், சுதந்திரத் தீ கனன்று எரிந்து கொண்டிருந்த காலம் அது. அறிஞரின் அறிவும், கவிஞரின் கவிதையும், எழுத்தாளரின் எழுத்தும், பேச்சாளரின் பேச்சும் அந்தத் தீயை எண்ணெய் வார்த்துத் தூண்டிவிட்டன. அதன் விளைவாகப் போராட்டமும் அடக்குமுறையும் வெவ்வேறு வடிவம் கொண்டு நாட்டை நிலைகுலையச் செய்தன.

இத்தகைய சூழ்நிலையில் அமரகவிஞர் பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்து வந்தார். அவர் உள்ளத்திற்கும் உணர்ச்சிக்கும் கற்பனைக்கும் நாட்டு நிகழ்ச்சிகள் யாவும் பெரு விருந்தளித்தன. அதனால், காலங் கடந்து நிற்கும் கவிதைகள் பல தோன்றின.

1912-ஆம் ஆண்டு, பாரதியார் வாழ்வில் குறிப்பிடத்தக்க ஆண்டாகும். அந்த ஆண்டில்தான் முப்பெரும் பாடல்களாகிய பாஞ்சாலிசபதம், குயில்பாட்டு கண்ணன் பாட்டு ஆகிய மூன்றும் உருவாயின.

ஒருநாள் காலை நேரம். பாரதியார் பஞ்சாலி சபதத்தை எழுதிக் கொண்டிருக்கிறார். தருமன்

சூதாட உடன்பட்டு விட்டான். சூதுக் காய்கள் உருளப் போகின்றன. கடகட என்ற ஒலி எழுப் போகின்றது. சூதாட்டத்தை வருணிக்கும் பாடல் களை எத்தகைய ஓசையில் அமைப்பது என்ற கேள்வி கவிஞர் உள்ளத்தில் தோன்றி, பலமுறை எதிரொலிக்கின்றது. சூதுக்காய்கள் உருளும் ஓசை, சூதாடுவோர் பரபரப்பாய்ப் பேசும் பேச்சொலி, வென்றவர் மகிழ்ச்சியோடு செய்யும் ஆரவாரம் ஆகிய யாவும் அவர் காதில் ஒலிக்கின்றன. இதயத் திலும் பலவகை ஓசைகள் எழுந்து, பாட்டுவாயிலாக் வெளிவரத் துடிக்கின்றன. அந்த நேரத்தில் எங் கிருந்தோ ஓர் இனிய பாடல் காற்றிலே மிதந்து வரு கின்றது:

*“மாயக் காரனம்மா! — கிருஷ்ணன்*
*மகுடிக் கார னம்மா!”*

ஆ! என்ன இனிய பாடல்! இதைக் கேட்டதும் பாரதியாரின் உள்ளம் களிப்பு மிகுதியால் துள்ளி எழு கிறது. அவருடைய பாடலுக்கு வேண்டிய பொருத்த மான ஓசை கிடைத்து விட்டது! காற்றிலே மிதந்து வந்த பாடலை நினைவிற்குக் கொண்டு வருகின்றார் அவர்.

*“மாயக் கார னம்மா! — கிருஷ்ணன்*
*மகுடிக் கார னம்மா!”*

என்று பாடிக் கொண்டே கவிஞர் கையைத்தட்டு கின்றார்; தட்டிக் கொண்டே பாடுகின்றார்! சிறிது நேரத்திற்கெல்லாம், அந்தப் பாடலின் இசை

யமைப்பு வழியாகத் தருமன் சூதாடும் பகுதிக்குரிய பாடல்கள் வெளி வருகின்றன:

*"மாயச் சூதி னுக்கே — ஐயன்*
*மன மிணங்கி விட்டான்!*

என்று தொடங்கிப் பல பாடல்கள் (பாஞ்சாலி சபதம் 083–முதல் 195-வரை) இன்னிசையோடு வெளிவருகின்றன.

பாரதியாருக்குத் தக்க நேரத்தில், காற்றிலே மிதந்து வந்து உதவிய பாடல் நாட்டுப் பாடலாகும். வயிற்றுத் தீயைத் தணிக்க—பிடி சோற்றுக்காக ஊர் ஊராக—தெருத் தெருவாக—வீடு வீடாகச் சுற்றி அலையும் பிச்சைக்காரப் பெண் ஒருத்தி பாடியபாடலே பாரதியாரைக் கவர்ந்து, புதியதோர் இசையமைப்பைத் தந்துஉதவியது. இச்செய்தியைப் பாரதியாரே (பஞ்சாலி சபதத்தின் பிற்குறிப்பில்) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"பாட்டு 183 முதல் 194 முடிய

*லால லா லால ல— லாலா*
*லால லால லாலா*

—என்ற மெட்டுள்ள சிந்துகள் தெருவில் ஊசிகளும் பாசி மணிகளும் விற்பதோடு பிச்சை எடுக்கவும் செய்கிற பெண்கள்,

*"மாயக் கார னம்மா! — கிருஷ்ணன்*
*மகுடிக் கார னம்மா!"*

—என்று பாடும் நடை. சூதாட்ட வருணனைக்கும், அதில்ஏற்படும் பரபரத்த வார்த்தைகளையும் செய்கை

களையும் விளக்குவதற்கும் இந்நடைமிகவும் பொருந்தியதென்பது எளிதிலே காணப்படும்.''

நாட்டுப் பாடல்கள் பாரதியாரை மிகவும் கவர்ந்துள்ளன. அவற்றில் அவர் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். பாரதியார் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், அவரது இயல்புகளையும் நன்கு அறிந்த யதுகிரி அம்மையார் பின்வருமாறு கூறுகின்றார்:

''பாரதியாருக்குச் சங்கீத கச்சேரிகளைக் காட்டிலும், பாம்பாட்டி, வண்ணான், நெல்குத்தும் பெண்கள் செம்படவர்கள் உழவர் இவர்களுடைய நாடோடிப் பாட்டுகள் என்றால் மிகவும் இஷ்டம்.''

பாரதியாரின் வாழ்க்கைத் துணைவியார் செல்லம்மா, ''வீதியில் மாரியம்மன் எடுத்துக் கொண்டு உடுக்கை அடிப்பவன் வந்தால் இவர் கூத்தாடுகிறார்'' என்று பாரதியாரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

பாரதியார் நாட்டுப் பாடல்களைப் பின்பற்றி எழுதிய பாடல்கள் பல உள்ளன. தமக்கு நாட்டுப் பாடல்களில் உள்ள ஈடுபாட்டைப் பின்வருமாறு பாடியுள்ளார்:

''மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில் ஊறிடுந்தேன் வாரியிலும்,
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும், நெல்லிடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்

வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணை முதலா மனிதர்
வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும்காட்டினிலும்நாளெல்லாம்நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன்!

—குயில்பாட்டு.

இவ்வாறு நாட்டுப் பாடல்களைப் போற்றிப் புகழும் கவிஞர் அவற்றை அழியாமல் காக்க வேண்டும் என்று நமக்கு அறிவுரை கூறுகின்றார். கலைகள் என்ற உரைநடை நூலில் அவர், "கும்மிப் பாட்டு, பல்லிப்பாட்டு, (பள்ளுப்பாட்டு), கிளிப்பாட்டு நலங்குப்பாட்டு, பள்ளியறைப் பாட்டு, அம்மானைப் பாட்டு, தாலாட்டுப்பாட்டு முதலிய பெண்களுடைய பாட்டெல்லாம் மிகவும் இன்பமான வர்ணமெட்டு. தமிழர்களின் தாய் அக்காள் தங்கை காதலி முதலாய இவர்கள் பாடும் பாட்டு மறக்கக் கூடிய இன்பமா? ஞாபகம் இல்லையா?" என்று கூறுகின்றார். மேலும் அந்நூலில் அவர், "பண்ணைகளில் வேலை செய்யும் பெண்கள், நெல்குத்துவோர், சுண்ணாம்பு இடிப்போர் குறிகாரி, தொம்பச்சி முதலிய வகுப்பினர் தத்தமக்கென்று தனியானமெட்டுகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேற்கூறப்பட்ட பாட்டுகளில் மிக இன்பமான சந்தங்கள் பல இருக்கின்றன. இவை கால வெள்ளத்தில் மறைந்து போகு முன்பாக ஸங்கீத வித்வான்கள் பொறுக்கி எடுத்து ஸ்வர நிச்சயம் செய்து வித்தைப் பழக்கத்திலே சேர்த்துவிட வேண்டும்" என்று உரைக்கின்றார்.[5] நாட்டுப் பாடல்

களில் சிற்சில குறைபாடுகள் இருப்பினும் அவற்றில் இலக்கியச் சுவை மிகுதியாக உண்டு என்றும், இலக்கிய அன்பர்கள் அவற்றைப் பேணிக்காக்க வேண்டும் என்றும் நமக்குப் பாரதியார் அந்த நூலி லேயே கூறுகின்றார்.* அவர், "தமிழ்ப் பெண்களின் பாட்டைக் கையெடுத்து வணங்குகிறோம். ஆனால், அதில் ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்கள் பல இருக்கின்றன. கொச்சை மொழிகளும் ரஸக் குறை வும் மலிந்த பாட்டுக்கள் என்று சொன்னோம். ஆனாலும் ஒரு கூடைப் பதரில் ஒருழக்கு அரிசியகப் படும். அதை நாம் இழந்து விடக் கூடாது. கவிதைத் தேட்டமுடையோர் நமது பெண்களின் பாட்டைத் தேடிப் பார்த்தால் சிற்சில விடங்களில் நல்ல கவிதை கிடைக்கும். நலங்குப் பாட்டு கும்மி முதலியவற்றிலே கூடச் சில இடங்களிலே முத்துப்போலவார்த்தைகள் அகப்படும். தொழிற் பெண்களின் பாட்டு மிகவும் ரஸமானது. சந்தமும் இன்பம்; ஒன்றுக்குப் பாதி நல்ல கவிதை" என்று கூறியுள்ள கருத்துக்களை நினைவில் கொண்டு நாட்டுப் பாடல்களைத் திரட்டும் பணியில் எல்லோரும் ஈடுபட வேண்டும்.

பாரதியார் நாட்டுப் பாடல்கள் சிலவற்றைக் கேட்டு எழுதி வைத்துள்ளார். பல ஆண்டுகளுக்கு முன்பே, அவர் நாட்டுப் பாடல்களைத் தொகுக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ளார்.

---

*1, 2, 3 கலைகள் - பக்கம் 92, 98, 99*
*பாரதியார் கட்டுரைகள்.*

அவர் திரட்டிய சில பாடல்கள் கீழே தரப்படுகின்றன:

1. கால் துட்டுக்குக் கடலை வாங்கிக்
காலை நீட்டிக் தின்கையிலே
என்னையவன் கூப்பிட்டே
இழுத்தடித்தான் சந்தையிலே!
தண்டை சிலம்பு சலசலென
- வாடி தங்கம்
தண்டை சிலம்பு சலசெலென.

2. சந்தையிலே மருக்கொழுந்து
சரம் சரமா விற்கையிலே
எங்களிடம் காசில்லாமல்
எங்கோ முகம் வாடிப்போச்சே!
தண்டை சிலம்பு சலசெலென
—வாடி தங்கம்
தண்டை சிலம்பு சலசெலென

3. காக்கைக் குஞ்சுக்குக் கலியாணம்
கொக்குப் பெட்டைக்கு மஞ்சாணம்
எப்போ எப்போ கலியாணம்?
காடு விளையவிட்டுக்
கண்டாங்கி நெய்யவிட்டு
கொக்கு சமைய விட்டு
குழைய விட்டே தாலி கட்டி
காக்கைக் குஞ்சுக்குக் கலியாணம்
கொக்குப் பெட்டைக்கு மஞ்சாணம்

## 4. தாய்க்குலம் வளர்த்த தமிழ்க்கவிதைகள்

மனித இனம் உள்ளவரை, ஆண்பெண் என்ற பால்வேறுபாடு இருக்கும். ஆண்பெண் என்ற வேறு பாடு உள்ள வரை, காதல் இருக்கும். காதல் உள்ளவரை தாய்மை இருக்கும். தாய்மை உள்ளவரை தாலாட்டுப் பாடல்கள் இருக்கும்.

மக்கள் குழந்தையைப் பெற்று மகிழ்ந்த அன் றைக்கே தாலாட்டு இலக்கியம் தோன்றிவிட்டது. தொடக்கமும் முடிவும் அறிய முடியாத வரலாற்றுச் சிறப்புடையது தாலாட்டு.

தமிழண்ணல், தாலாட்டுப்பாடல்களின் பெருமை யைப் பின் வருமாறு புகழ்ந்து கூறுகிறூர்:

"தாளுக வந்தமையும் மோனை எதுகையும், நினைக்க இனிக்கின்ற இலக்கிய நயங்களும், வாழ்க்கையில் தோய்ந்த அனுபவ முத்திரைகளும், நிலைத்த உண்மையும் பழகு தமிழிலே வழங்கும் உவமை முதலிய அழகுகளும் நல்லசொல்லாட்சியும் தடையில்லா நடைப்பெருமையும் நோக்கி இலக்கி யங்களை மதிப்பிடவேண்டும். தாய்மை தரும் தாலாட்டு இவ்வகையில் பெருமை பெற்று விளங்கு கிறது."

"நடையழகில் செயங் கொண்டாரேயும் இனி மையில் இளங்கோவையும் கற்பனையில் கம்பனையும் சொல்லாட்சியில் மணிவாசகரையும் நாகரிக விளக்கத்தில் சங்ககாலப் புலவர்களையும் ஒப்புமையாகப் பெற்றுப் பெருமையுடன் விளங்குகிறது தாலாட்டு!"

தாலாட்டுப் பாடல்கள் தாய்க்குலம் வளர்த்த தமிழ் இலக்கியமாகும். அப்பாடல்களில் தாய்மை உணர்ச்சியின் ஆழம், மகனைப் பற்றிய வருங்காலக் கற்பனை குறிக்கோள் உடைய உயர்ந்த சிந்தனை ஆகியவற்றைக் காணமுடிகிறது. தாய்மை இலக்கியம் நம்மை இன்பக் கடலில் ஆழ்த்தி மயங்கச் செய்கின்றது. சிறந்த ஆண் மகனைப் பெறுவதற்குத் தாய் செய்த தவங்களைப் பாடுகின்றாள்:

ஆறிரண்டும் காவேரி
அதன் நடுவே சீரங்கம்
சீரங்கம் ஆடி
திருப்பாற் கடலாடி
மாமாங்கம் ஆடி
மதுரைக் குளமாடி,
தாமரையில் நார்எடுத்துத்
தனிப்பசுவின் நெய் உருக்கி,
தூரத்துக் கோயிலுக்குத்
தூண்டா விளக்கேற்றி
எட்டாத கோவிலுக்கு
எட்டி விளக்கேற்றி
பசித்தோர் முகம்பார்த்து,
பாலாடைக்குப் பால்வார்த்து,
திங்கள் முழுகி,
சில நாள் தவமிருந்து

வெள்ளி முழுகி
வெகுநாள் தவமிருந்து
தைப்பூசம் ஆடி,
தவம் பெற்று வந்தவனே!
வெள்ளி தலைமுழுகி
வேண நாள் தவசிருந்தேன்!
தில்லைவனம் போய் முழுக
தில்லைவனக் காளியம்மா
தீர்த்து வைச்சாள் குழந்தைகளை!
மாலை அரும் பெடுத்து
மடி நிறைய சரந்தொடுத்து
மகாலட்சுமி கோயிலுக்கே
மாலை எடுத்துப் பூசை பண்ணி
மடியேந்தி நின்னுங்களே!
காலை அரும்பெடுத்துக்
கைநிறைய சரந்தொடுத்து
கனகசபை கோயிலுக்கே
கையேந்தி நின்னுங்களே!
இரும்பாலே ஊரணியாம்
இருபுறமும் தாமரையாம்!
தாமரையின் நூலெடுத்துத்
தனிப்பசுவின் நெய்யுருக்கி
வாழலையும் மாவிளக்கும்
வச்செடுத்த குஞ்சலரோ!

தவம் செய்து பெற்ற மகனைச் சீரும் சிறப்புமாய் வளர்க்கின்ருள். செல்ல மகன் வளர்வதைப் பாடுகிருள்:

சங்காலே பால் வார்த்தால்
சமர்த்துக் குறையுமென்று
இரும்பாலே பால்வார்த்தால்
எழுத்துக் குறையுமென்று

*பித்தளையால் பால்வார்த்தால்*
*பேச்சுக் குறையுமென்று*
*வெள்ளியால் பாலாடை*
*விலைபோட்டு வாங்கி வந்தேன்!*
*வெள்ளியும் வேண்டாமென்று*
*விரலாலே அள்ளி விட்டேன்!*

பாலூட்டும் சிறப்பைப் பாடிய அன்னை, மகனைத் தூங்க வைப்பது பற்றியும் நடக்க விடுவது பற்றியும் பாடுகின்றாள்:

*மண்மேல் நடக்க விட்டால்*
*மண்வந்து ஒட்டுமென்று*
*பூமியில் தவழவிட்டால்*
*புழுதி படியுமென்று*
*தரைமேல் படுக்கவைத்தால்*
*தாளாது உடம்பென்று*
*தொடைமேல் நடைபழக்கி*
*மடிமேல் தவழவிட்டேன்!*
*தொட்டிலிலே தூங்கவைத்தால்*
*தூக்கம் கலையுமென்று*
*தோளிலே தொட்டில் கட்டி*
*மார்மேலே தூங்கவைச்சேன்!*

வளரும் குழந்தையின் அழகைக் கண்டு தாய்க்கு மயக்கம் ஏற்பட்டு விடுகிறது. அந்த மயக்கத்தில் இசை வெள்ளம் புறப்பட்டு வருகிறது:

*தாழை ஒருமடலோ?*
*தாழை பூத்தாலும் ஆயிரமோ?*
*கண்ணே கமலப்பூ!*
*கண்ணிரண்டும் தாமரைப் பூ!*
*முள்ளு முருங்கையோ?*
*முருகுள்ள வாய்தானோ?*

*கண்ணே கமலமணி!*
*கந்தர் தந்த வேலுமணி!*
*வேலுமணித் தொட்டிலிலே*
*விளையாட வந்த கண்ணே!*

அழகு மயக்கத்தில் வெளிப்படும் இசைவெள்ளம் நம்மையும் அல்லவா மயக்கி விடுகிறது! பச்சை இளங்குழந்தை இந்தப் பாடலைக் கேட்டால் கண் வளரும் என்று கூறவும் வேண்டுமோ?

தன் மகன், பாண்டவர்க்குத் துணைபோன மாயவனே என்று எண்ணி எண்ணி மகிழ்கிறது அந்தப் பெற்ற மனம்:

*வனம் போன பாண்டவர்க்குத்*
*துணை போன மாயவனோ?*
*துணை போன மாயவனோ?*
*தூது சென்ற மாயவனோ?*
*தூது சென்ற மாயவனோ?*
*துவாரகை மன்னவனோ?*

வில்லாற்றலில் சிறந்து விளங்கிய விசயன் மீண்டும் வந்து தன் வயிற்றில் பிறந்திருக்கிறானோ என்றும் நினைக்கிறாள்:

*அக்கினியில் பிறந்தவளை*
*மாலையிடும் அர்ச்சுனனோ?*
*தும்பை மலரெடுத்துத்*
*துரோபதையை மாலையிட,*
*அல்லி மலரெடுத்து*
*அல்லியரை மாலையிட,*
*அரும்பு மலரெடுத்து*
*அல்லியரை மாலையிட (ப்)*

பிறந்தவனே என்று மகிழ்கின்ருள்.

தன் மகன் எப்படி வளர்ந்து, எத்தகைய சிறப்புடன் வாழ வேண்டும் என்பதைப்பற்றித் தாயுள்ளம் கனவு காண்கிறது.

பட்டுக் குடைபிடித்து,
பயிர் பார்த்து வரவேணும்!
முத்துக் குடைபிடித்து,
முளை பார்த்து வரவேணும்!

தன் செல்வ மகன் பயிர் பார்த்து வரச்சென்றிருக்கும் போது, அவன் வருகைக்காக அவனை நாடி வநத அரசர்கள் காத்திருப்பார்களாம்!

ஆனைகட்டி வாழ்கின்ற
அரசர்கள் எல்லோரும் —உன்
ஆணைகளைக் கேட்பதற்கு
அமர்ந்திருப்பார் வாசலிலே!
முத்துக் குடைபிடித்த
முடி மன்னர் எல்லோரும்
முத்துத் திறையளக்க
மொய்த்திருப்பார் வாசலிலே!

இத்தகைய பெருஞ்சிறப்புடன் தன் மைந்தன் வாழ வேண்டும் என்று அவள் கனவு காண்கிருள். இது ஒவ்வொரு தாய் நெஞ்சத்திலும் எழும் இன்பக் கனவு!

தன் மகனை 'முத்து' என்று பாராட்டுகின்ருள் தாய். எத்தனை எத்தனை வகையான முத்துக்களை வரிசை வரிசையாகக் கூறுகிருள்!

முத்தில் ஒரு முத்தோ
முதிர விளைந்த முத்தோ!
தேற விளைந்த முத்தோ
தில்லைக்கு உகந்த முத்தோ!
பாண்டிப் பெருமுத்தோ
பாட்டன்மார் ஆண்ட முத்தோ!
ஆணிப் பெருமுத்தோ
அய்யாக்கள் ஆண்ட முத்தோ!
முத்து முத்து ஆத்துக்குள்ளே
மூணுத்துப் பாய்ச்சலிலே
முக்குளிச்சு முத்தெடுக்கும்
முத்துமகன் நித்திரை போ!
ஆயிரம் முத்திலே
ஆராய்ந்து எடுத்த முத்தோ!
தொண்ணூறு முத்திலே
துணிந்தெடுத்த ஆணிமுத்தோ!
வைகை பெருகிவர
வாழ்ந்தமணல் ஊறிவர
ஊறிவந்த தண்ணியிலே
ஒட்டிவந்த கட்டிமுத்தோ!
கொட்டிவைத்த முத்தோ
குளித்த நவ ரத்தினமோ!
கட்டிக் கரும்போ
காணிக்கை ஆணிமுத்தோ!

அருகை மகன் அழுகிறன். அழுகைக்குக் காரணம் கேட்கிறள்:

அக்கரைக்கும் இக்கரைக்கும்
அரண்மனையாம் பொக்கிஷமாம்!
பொக்கிஷம் ஆளவந்த
பூமானை ஆரடிச்சா?

*மாமன் அடிச்சாரோ*
*மகிழம்பூச் செண்டாலே!*
*பாட்டி அடிச்சாளோ*
*பால்போடும் சங்காலே!*
*அத்தை அடிச்சாளோ*
*அல்லிப்பூத் தண்டாலே!*
*அடிச்சாரைச் சொல்லியழு*
*ஆக்கினையும் செஞ்சிடுவோம்!*

மகன் கூறும் விடை இது:

*ஆரும் அடிக்கவில்லை!*
*ஐவிரலும் தீண்டவில்லை!*
*மாதா மடிதேடி*
*மயங்கி அழுதேனம்மா!*
*தாயார் மடி தேடி*
*தவிச்சு அழுதேனம்மா!*

தான் பெற்ற மைந்தன் அழகில் சிறந்தவன் என்பது தாய்க்குத் தெரியும். பிறர் பார்ப்பதால் குழந்தைக்குக் கண்ணேறு (திருஷ்டி) வந்து விடுமோ என்று அஞ்சுகிருள். அந்த அச்சம் கீழ் வரும் பாடலில் வெளிப்படுகிறது:

*கண்மணியைக் காண்பதற்குக்*
*கனகூட்டம் வந்ததுபார்!*
*கண்ணேறு வந்துவிடும்*
*கதவைச் சற்று மூடுங்கள்!*

குழந்தைக்குப் பால்தர அந்த வீட்டில் பசுக்கள் பல உண்டு. பசுக்களை அன்புடன் பேணி வளர்த்து வருகின்றனர். காலையில் ஒரு பசு மேயச் செல்லு கிறது. வீட்டை விட்டு வெளியே செல்லும் பசுவை நோக்கிக் குழந்தையின் தாய்,

*அந்திக்கு வா பசுவே!*
*அமுதம் பொழி பசுவே!*

என்று கூறி வழியனுப்புகிருள்.

அந்தப் பசு எத்தகையது, எங்கே மேயச் செல்லுகிறது, எப்போது திரும்பி வரும் என்பன வற்றை அவள் கூறுகிருள்:

*மலை ஏறி மேய்ந்துவரும்*
*மணிக் கழுத்து வெள்ளைப்பசு!*
*மாலையிலே வீடு வரும்*
*மணிக் கழுத்து வெள்ளைப்பசு!*
*மணியோசை முந்திவர*
*மந்தையுடன் சேர்ந்துவரும்!*
*கழுத்துமணி ஒலிகேட்டுக்*
*கன்று துள்ளும் பால் குடிக்க!*

மாலைவேளையில் தன் கன்றை நாடி ஓடி வரும் வெள்ளைப் பசுவின் கழுத்து மணியோசை நம் காதில் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டே இருக்கிறது!

முன்பெல்லாம் அவள் தன் தாய் வீட்டுப் பெருமையைத் தானே சொல்லிக்கொண்டிருந்தாள். இப்போது அந்தப் பெருமையை எடுத்துக் கூற அவளுடைய செல்வ மகனும் வந்துவிட்டான். பிள்ளைப் பருவத்திலேயே தாய்மாமனை நன்ருக அறிமுகப்படுத்தி வைக்கிருள், தன் செல்வ மகனுக்கு! தாய்மாமனின் பெருமையும் உயர்வையும் எடுத்துக் கூறிப் பாசத்தை வளர்க்கிருள்:

*சட்டைமேல் சட்டைபோட்டு,*
*சரிகைப்பட்டு மேல்போட்டு,*

*சட்டை கழற்றுமல்*
*சபையிலே பேசுகையில்—*
*மேம்பட்டுப் பேசிஞரு*
*மேலான உங்கமாமா!*

இவ்வாறு மேம்பட்டுப் பேசும் மாமனை யார்தான் மதிக்க மாட்டார்கள்?

இப்போது மாமாவாக இருப்பவர் நாளைக்கு மாமனாராகவும் ஆகக்கூடும் அல்லவா? ஆதலின் தாய்மாமன் பெருமை குழந்தை மனத்தில் ஆழப் பதியுமாறு கூறுகிருள்:

*மாயக்காய் காய்த்துதிரும்—உங்க*
*மூத்தமாமன் வாசலிலே!*
*ஏலக்காய் காய்த்துதிரும்—உங்க*
*இளைய மாமன் வாசலிலே!*

இவ்வாறு கூறி இளைய மகனின் பெருமையையும் நினைவூட்டி வைக்கிருள். எதிர்காலத்தில் இளைய மாமனின் புகழிலும் செல்வத்திலும் பங்கு கொள்ள வாய்ப்பு ஏற்பட்டாலும் ஏற்படலாம். யார் கண்டார்கள்! எதற்கும் அறிமுகம் நல்லதல்லவா?

தாய்மாமன், குழந்தைக்குத் தந்த பரிசுகளைப் பெருமையாகக் குறிப்பிடுகிருள். அவற்றைக் குறிப்பிடும்போது அவள் வாய் செந்தமிழால் மணக்கிறது. அதைக் கேட்கின்ற நம் செவிகள் இனிக்கின்றன.

*முத்தளக்கும் நாழி—என் கண்ணே!*
*முதலளக்கும் பொன்னுழி,*
*வைத்தளக்கச் சொல்லி—உனக்கு*
*வரிசையிட்டார் தாய்மாமன்!*

பால் குடிக்கும் கிண்ணி—என்கண்ணே
பழந்திங்கும் சோனே,
தேன் குடிக்கும் கிண்ணி—கண்ணே உனக்கு,
தேர்ந்தாடப் பம்பரமோ?
ஆடுமாம் தொட்டில்—கண்ணே உனக்கு
அசையுமாம் பொன்னூசல்!
ஓடுமான் ஓட
ஒன்பதுமான் தொடர்ந்தோட(த்)

தாய் மாமன் வரிசை யிட்டிருக்கிறார்! பெருமைப் படக் கூறவா வேண்டும்?

தாழை ஒரு மடலாம்
தாழைசுற்றிப் பூ வெடுக்கும்
தர்மரோ உன் மாமன்!
வாழை ஒரு மரமாம்-என் கண்ணே!
வாழை பூக்கிறது ஆயிரமாம்!
வாழை சுற்றிப் பூவெடுக்கும்
வண்ணமயில் உன் மாமன்!
அஞ்சு சிறை எழுதி
கொஞ்சும் திரை ரெண்டெழுதி
வாராரையா உன் மாமன்!
ஆனை தருவாராம்
அஞ்சுலட்சம் கொடுப்பாராம்
அருச்சுனரோ உன் மாமன்!
அஞ்சுதலைச் செந் நாகம்
அடங்கி இருக்கும் செந்தாழை
அஞ்சாம பூப்பறிக்கும்
அருச்சுனரோ உன் மாமன்!
பத்துத் தலைச் செந்நாகம்
படர்ந்திருக்கும் செந்தாழை
பயமில்லாமல் பூப்பறிக்கும்

பாண்டியரோ உன் மாமன்!
கப்பல் அதிகாரிதான்
கடற்கரை வியாபாரிதான்!
தோணி அதிகாரிதான்
துறைமுகத்து வியாபாரிதான்!
சாதிக்களிப் பாக்கும்
சங்குவெள்ளைச் சுண்ணும்பும்
ஏலங் கிராம்பும்
இளங் கொடிக்கால் வெற்றிலையும்
அத்தனையும் கொண்டு
அறியவந்தார் அம்மானார்
கட்டி விளையாடக்
காசிச் சிண்டு மணி உனக்கு!
வைத்து விளையாட
வண்ணக் கிலுகிலுப்பை
ஓட்டி விளையாட
ஓயிலா ரயில் வண்டி!
நெற்றிக்குச் சிட்டி
நிழல் பார்க்கக் கண்ணாடி!
காலுக்குத் தண்டை
கைக்குக் கணையாழி
கொண்டு வந்து காண்பாக
கோதை கிளிக்கு அம்மானார்!

தாய் வீட்டுப் பெருமையைப் பாடிய பின், கண வன் வீட்டுப் பெருமையையும் பாடுகிறாள்:

கண்ணான புன்னை மரம்
காய் காய்க்கும் வன்னிமரம்!
காய்க்கிறது வன்னிமரம்-நீ
பேசுறது ராஜகுலம்!
ராஜகுலம் பேசவந்த
பெருமாள் திருப்பெயர்ருளோ!

வன்னிமரம் பூபூக்க
வரிசைமகன் கண்ணசர
சின்னஞ் சிறுகிளியாம்-என் கண்ணே!
சிறகெல்லாம் தங்கநிறம்!
சிறகை விரிச்சாட-நீ
செல்வமகன் கண்ணசர
வண்ணச் சிறு கிளியாம்
வால் எல்லாம் தங்கநிறம்!
வாலை விரிச்சாடா-எனப்பா
வரிசை மகன் கண்ணசர!
கோட்டைக்குள் கோட்டை கட்டி
கோட்டைக்கே சீட்டெழுத
குமரன் பிறந்தானே!
தளிர்க்கொடி ராமலிங்கம்
அன்னலிங்கம் பொன்னாலே-உனக்கு
ஆபரணம் முத்தாலே!
காசி விசுவலிங்கம்
கைநிறைந்த ராமலிங்கம்!
தெற்கே ஒருகிணறு-என்னய்யாவுக்குத்
தெருவெல்லாம் பால்கிணறு!
தேனே திரவியந்தான்
தெவிட்டாத முக்கனிதான்!
வடக்கே ஒரு கிணறு
வளைவெல்லாம் பால்கிணறு
பால் கொடுங்க பழம்கொடுங்க
-என் அப்பாவுக்கும்
பசியா வரம் கொடுங்க!
சிற்றாறும் வற்றி
சிறு கடலும் பாசிவற்றி
வருகிறதாம் பாலாறு,
பாலன் நீ பசியாற!

உழவுத் தொழில் கற்பனை வளத்தோடு பாடப் படுகின்றது. தாலாட்டுப் பாடலில் இத்தகைய சிறந்த இலக்கியம் இடம் பெற்றிருப்பது நமக்கு வியப்பூட்டு கின்றது.

வெள்ளிக் கலப்பை கொண்டு
விடிகாலம் ஏர் பூட்டி
தங்கக் கலப்பை கொண்டு
தரிசுழுகப் போறாராம்!
மாம்பழத்தைக் கீறி
வயலுக்கு உரம்போட்டு,
தேன்பாய்ந்து நெல்விளையும்
செல்வமுளார் புத்திரனே!
வெள்ளித்தேர் பூட்டி
மேகம்போல் மாடுகட்டி
அள்ளிப் படியளக்கும்
அதிட்டமுள்ளார் புத்திரனே!
சம்பா விதைபாவி
சருகு சம்பா நாத்துவிட்டு
பிடித்து விதைபாவி
பெருங்கடல் தீர்த்தம்வந்து
வாரி விதைபாவி
வைகைநதித் தீர்த்தம் வந்து
சரஞ்சரமாய் நெல்விளையும்
சமுத்திரம்போல் போர் ஏறும்!
கொத்துக் கொத்தாய் நெல் விளையும்
கோபுரம்போல் போர் ஏறும்
கட்டுக் கலம் காணும்
கதிர் உழக்கு நெல் காணும்!
அடித்துப் பொலிதூற்ற
அதுவும் கலம் காணும்!
பொன்களகு கொண்டு

பொதி தூற்றி நிற்பாராம்!
பொன்மரக்கால் கொண்டு
பொதியளந்து நிற்பாராம்!
ஆனை கட்டிப் போரடிக்கும்
அம்மானூர் சேனைதலம்
குதிரை கட்டி போரடிக்கும்
கோடிப் பேர் சேனை தலம்
மாடுகட்டிப் போரடிக்கும்
மாமுடிமார் சேனை தலம்
அம்மானூர் செய்களிலே
அவளுக்கு நெல் எடுதது
பள்ளிதனைக் கூட்டி
பதமாக அவல் இடித்து
இடைச்சி தனைக் கூட்டி
இலைபோல் அவல் இடித்து
அவல் அழகைக் கண்டதம்பி—நீ
அழுகை மறந்தாயோ!

வளமான நெஞ்சத்திலிருந்து பிறந்த வளமான கவிதைகள் இவை!

குழந்தையும் பொருள் வளமும் உடைய தாயின் தாலாட்டுப்பாடல்களை இதுவரை கேட்டு மகிழ்ந்தோம். பொருள் வளம் இருந்து, குழந்தை இல்லாத ஒருத்தியின் துன்பக் குரலைக் கேட்போம்:

வட்டிலிலே போட்ட சோற்றை
வாரித்தின்னப் பிள்ளை இல்லை!
கிண்ணியிலே போட்ட சோற்றைக்
கீறித்தின்னப் பிள்ளை இல்லை!
தண்ணிக்குப் போகையிலே
தடம் மறிக்கப் பிள்ளை இல்லை!
ஊருக்குப் போகையிலே
உடன்வரப் பிள்ளை இல்லை!

அங்காடிக் கூடைகளை
அழைத்து வரப் பிள்ளை இல்லை!
வெங்காயக் கூடை வந்தால்
விலை மதிக்கப் பிள்ளை இல்லை!
மழை பெய்த வாசலிலே
மைந்தனடி காணலையே!
பூக்கிற காலத்திலே
பூமாறிப் போனேனே!
காய்க்கிற காலத்திலே
காய்மாறிப் போனேனே!

பொருள் வளமின்றி, குழந்தையைப் பெற்று விட்டு அதனை வளர்க்க முடியாமல்-பேணிக் காக்க வழியின்றித் தவிக்கின்ற ஏழைத் தாயின் துயர் பின் வரும் பாடலில் வெளிப்படுகின்றது:

முத்துச் சிரிப்பழகா!
முல்லைப்பூ பல்லழகா!
வெத்துக் குடிசையிலே
விளையாட வந்தாயோ?
ஏழைக் குடிசையிலே
ஈரத் தரைமேலே
தாழம்பாய் போட்டுத்
தவழ்ந்தாட வந்தாயோ?
தரையெல்லாம் மேடுபள்ளம்
தவழ்ந்தால் உறுத்ாதோ?
பளிங்கால் அரண்மலையும்
பவளத்தூண் மாளிகையும்
பணக்காரன் வீடிருக்க
பஞ்சனிடம் வந்ததும் ஏன்?
பச்சரிசிச் சோளம்
பாதிநாள் பட்டினிதான்!
பசும்பால் கொடுத்துப்

பசிதீர்க்கப் பார்த்தாலும்,
பருத்தி விதை இல்லையடா!
பசு, பாலும் தரலையடா
ஆட்டுப்பால் ஊட்டிஉன்னை
ஆதரிக்கப் பார்த்தாலும்,
ஆடு கடிக்கும் மரம்
அத்தனையும் மொட்டையடா!
தொட்டால் பிசுக்கொட்டும்
துணிமூட்டை தையவிட்டு
தொட்டிகட்டி தாலாட்ட
தூக்கம் வருமோடா!
நெல்லைப் பதுக்கி வைத்து
நீட்டூரம் பண்ணிடுவோன்
கொல்லைவழி போகாமல்
குடிசை வழி வந்தாயோ?
ஏழைக் குடிசையிலே
ஏன் பிறந்தாய், செல்வமுத்தே!
எத்தனையோ சீமாட்டி
ஏங்கித் தவங்கிடக்க
என்வயிறு தான் தேடி
ஏன் பிறந்தாய், செல்வமுத்தே!
கதிரறுக்கும் நேரத்திலே
கட்டியுன்னைத் தோளிலிட்டால்
மதியத்து வெய்யிலிலே
மயக்கமுந்தான் வருகாதோ?
வயலிலே வேலை செய்வேன்!
வரப்பினிலே போட்டிடுவேன்
வயலை விட்டு ஏறுமுன்னம்
வாய்விட்டு அழுவாயோ?
சித்தாளு வேலை செய்வேன்!
கொத்தனூர் கோபிப்பார்
கொத்தனூர் கோபித்தால்
குழந்தைமனம் கோணாதோ?

## 5. சிறுவர் உலகம்

சிறுவர் உலகம் விந்தையானது. அந்த உலகத்தில் காகம் கதை சொல்லும். குயில் பாடும். மலர் சிரிக்கும். நிலவு பேசும். விண்மீன் விளையாடும். கல்லும் மண்ணும் காவியமாய் மாறும்.

இத்தகைய விந்தையான—இன்பமே நிறைந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் வாழ்ந்திருக்கிறான். இளமைப் பருவத்தை எண்ணிப் பார்த்து, பூரிப்பு அடையாதவர் யாரும் இல்லை! மான்போலத் துள்ளி, மலர்போலச் சிரித்து, தேன்போலப் பேசித் திரிந்த இன்ப நாட்களை என்று நினைத்தாலும் நெஞ்சில் இன்பவெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்.

சிறுவர் உள்ளம் கற்பனையின் தாயகம்; கவிதையின் பிறப்பிடம்; கலைகளின் கருவூலம். சிறுவர்கள் பாடும் பாடல்கள் — காற்றில் மிதந்து சென்று நாடெங்கும் உலவி வருகின்றன. அவற்றை இப் பகுதியில் காண்போம்.

*அணிலே அணிலே!*
*அழகிய அணிலே!*
*கொய்யா மரம் ஏறிவா*
*குண்டு பழம் கொண்டுவா*

*நா.—3*

பாதிபழம் என்னிடம்
பாதிபழம் உன்னிடம்
கூடிக்கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்!

ஔள் ஔள் நாய்க்குட்டி
ரோடு சுத்தற நாய்க்குட்டி
ரொட்டி தின்ற நாய்க்குட்டி
ரோஷக்கார நாய்க்குட்டி
ஜூ ஜூ நாய்க்குட்டி
துள்ளி வா நாய்க்குட்டி
இரவில் இங்கே தங்கிடு
எங்கள் வீட்டைக் காத்திடு!

கத்தரிக்காய் கத்தரிக்காய்
காம்பு நீண்ட கத்தரிக்காய்
நாராயணன் தோட்டத்திலே
நட்டுவைச்ச கத்தரிக்காய்!

சின்ன சின்ன மூக்குத்தி
சிங்கார மூக்குத்தி
அம்மா போட்ட மூக்குத்தி
அரைப்பணத்து மூக்குத்தி!

காக்கா காக்கா கண்ணுடி!
காசிக்கு ரெண்டு பொம்மாடி!
குந்த குந்த தலைக்காணி!
குதிரை மேலே சவாரி!
ஏண்டியக்கா அழுவுற?
காஞ்சிபுரம் போகலாம்!
லட்டு மிட்டாய் வாங்கலாம்!
வெள்ளைக் காரன் மெத்தை மேலே
டாம் டூம் போடலாம்!

கடலோரம் கப்பல் பார்!
கப்பல் மேலே ஆயா பார்!
ஆயா கையிலே பேபி பார்!
பேபி கையிலே தட்டு பார்!
தட்டு மேலே லட்டு பார்!
லட்டு மேலே ஈயைப் பார்!
ஈயை ஓட்டுற கையைப் பார்!
இடுப்பைச் சுற்றிப் பையைப் பார்!

மொட்டைப் பாப்பாத்தி
ரொட்டி சுட்டாளாம்!
எண்ணெய் பத்தலேயாம்!
கடைக்குப் போனாளாம்!
காசு பத்த லேயாம்!

சங்கிலிக்கும் பிங்கலிக்கும் வெங்கலக் குண்டு!
சாமியார் பண்ணிபோட்ட வெங்கலக் குண்டு!
பண்டாரந் தோப்பிலே பூவைக் காணோம்!
அறுத்துவிட்ட கோழிக்குஇரத்தத்தைக்
காணோம்!

வாடின வெற்றிலே வதங்கின வெற்றிலே!
வாய்க்கு நல்லா இல்லே!
நேற்று வைச்ச நீலப்பொட்டு,
நெற்றிக்கு நல்லா இல்லே!

காக்காவே காக்காவே—எங்க
அம்மாவைக் கண்டாயா?
வேலூர் சந்தையிலே
வேடிக்கைப் பார்க்குறாங்கோ!

*நாலு கரண்டி நல்லெண்ணெய்!*
*நாற்பத்தெட்டு தீவட்டி!*
*கள்ளன் வரான் கதவை அடை!*
*வெள்ளாட்டி வராள் விளக்கேற்று!*
*வாரார் ஐயா சுப்பையா!*
*வழியை விடு மீனாட்சி!*

"ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்ற பாட்டு எட்டுவரி, பத்து வரிகளுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும். கூடுமானவரை ஒவ்வொரு வரியோடு ஒரு வாக்கியம் முடிந்துவிட வேண்டும். நாலுவரி, எட்டு வரிகளுக்கு ஒரு வாக்கியம் இருந்தால் மூச்சுப் பிடித்துப் பாடவும் நினைவில் வைத்துக் கொள்ளவும் குழந்தைகளால் இயலவில்லை. பாட்டு வேடிக்கையாய் இருந்தால் நன்கு சுவைத்துப் பாடுகிறார்கள். தெரிந்த ஒரு பொருளைப் பற்றி எளிய சொல்லிலே, இனிய சந்தத்திலே பாடினால் மனத்திலே எளிதில் பதித்துக் கொண்டு விடுகிறார்கள். முதலில் வந்த சொற்றொடர்களே மீண்டும் மீண்டும் பல்லவிபோல் வந்தால், அவர்களது குதூகலம் அதிகமாகிறது. பூனையைப் பூனையக்கா என்றும், குரங்கைக் குரங்கார் என்றும் பாட்டிலே வைத்துப் பாடுவது; கேள்வி-பதிலில் பாட்டை அமைப்பது— இவை எல்லாம் மிகச் சிறு குழந்தைகளின் உள்ளத்தைப் பெரிதும் கவருகின்றன."*

---

* குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா.
குமுதம்—ஆகஸ்டு 10, 1971, பக்-28.

இத்தகைய இயல்புகளோடு, நாட்டுப் பாடல்களாக வழங்கிவரும் சிறுவர் பாடல்கள் உள்ளன. அவை பரம்பரை பரம்பரையாகத் தமிழகத்தில் உலவி, அழியா வாழ்வு பெற்று விட்டவை. அவற்றை இனி வரும் பரம்பரையும் பாடி மகிழும்.

*காக்கா காக்கா கண்ணுடி*
*காசுக்கு ரெண்டு பம்பாயி!*
*தட்டி ஓட்டு வண்டியை,*
*தஞ்சாவூர் போக லாம்!*
*லட்டு மிட்டாய் வாங்கலாம்*
*பிட்டுப் பிட்டுத் தின்னலாம்!*
*வெள்ளைக் காரன் மெத்தையிலே*
*தாவித் தாவிக் குதிக்கலாம்!*

என்ற பாட்டை நாட்டுப் புறத்தில் சிறுவர்கள் பாடி மகிழ்கின்றனர்.

சடுகுடு ஆட்டத்தின்போது பாடும் பாடல் இது:

*நான் தாண்டா வீரன்!*
*நல்ல முத்துப் பேரன்!*
*வெள்ளிப் பிரம் பெடுத்து*
*விளையாட வந்தேன்டா!*

கேட்பவரைச் சிரிக்க வைக்கும் பாடல்கள் சிலவற்றைக் காண்போம்:

*அப்பா சுடலை முத்து,*
*எப்போ கலியாணம்?*
*காடு விளையட்டும்;*

*கண்டாங்கி நெய்யட்டும்;*
*சிறுக்கி சமையட்டும்;*
*சித்திரை மாதத்திலே*
*செல்வக் கலியாணம்!*

*அத்திப்பழம் விற்குதடி தனக்கோட்டி!*
*அம்மாகிட்டே சொல்லாதேடி வெள்ளைப் பாப்பா!*
*மேல்மேல் கொப்பு எங்கே வைச்ச?*
*மாமன் பொட்டியிலே மறைச்சு வைச்சேன்!*

*பட்டாளத்தான் கத்தியிலே பளபளப்பில்லே!*
*பண்டாரத்தான் தோப்பினிலே பூவுமே யில்லே!*
*நேத்தறுத்த சாவலிலே ரத்தமுமில்லே—என்*
*புத்திகெட்ட மச்சானுக்கு வெட்கமுமில்லே!*

சிறுவர்கள் வேடிக்கையாகப் பாடும் பாடல்கள் உள்ளத்தைக் கவரும் தன்மை வாய்ந்தவை; கற்பனைச் சிறப்பு வாய்ந்தவை அந்தப் பாடல்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் நகைச்சுவை நிரம்பியவை. நாய்க்குட்டியின் திருமணத்தைப் புனைகின்றது ஒரு பாடல்:

*நாய்க்குட்டிக்கும் நாய்க்குட்டிக்கும் கல்யாணமாம்!*
*பூலோகமெல்லாம் கொண்டாட்டம்!*
*வாழைத் தோப்புப் பந்தலாம்!*
*வகை வகையாய்ப் பொங்கலாம்!*
*தோட்டக்காரன் வந்தானும்!*
*சறுக்கி அடிச்சி விழுந்தானும்!*

மற்ஜெருரு கலியாணப் பாடல்:

மொட்டைக்கும் மொட்டைக்கும் கல்யாணமாம்!
பூலோகமெல்லாம் கொண்டாட்டம்!
நம்ம மொட்டைக்கும் கல்யாணம்!
நாட்டு மொட்டைக்குச் சந்தோசம்!
மொட்டையும் மொட்டையும் கூடிக்கிச்சாம்!
முருங்க மரத்திலே ஏறிக்கிச்சாம்!
அங்கிருந்து குதிச்சுக்கிச்சாம்!

அடுப்பு ரெண்டா புட்டுக்கிச்சாம்!
மானம் மப்பு கட்டிக் கிச்சாம்!
மாரி கொண்டை கட்டிக் கிச்சாம்!
ஏரி என்ன கட்டிக் கிச்சாம்!
எங்க அண்ணன் உன்னைக் கட்டிக் கிச்சாம்!

பலவேறு வகையாய் வழங்குகின்ற வேடிக்கைப் பாடல் கீழே வருகின்றன:

கருங்கடலு ஓரத்திலே ஏலேலம்படி ஏலோ
கருவாடு விற்கப் போனேன் ஏலேலம்படி ஏலோ!
கறுத்த துலுக்கப் பையன் ஏலேலம்படி ஏலோ!
கண்ணுமேலே மையைப் போட்டான்
ஏலேலம்படி ஏலோ!
செங்கடலு ஓரத்திலே ஏலேலம்படி ஏலோ!
சென்னு குஞ்சி விற்கப் போனேன் ஏலேலம்படி ஏலோ!
செவத்த துலுக்கப் பையன் ஏலேலம்படி ஏலோ
சேலை மேலே மையைப் போட்டான் ஏலேலம்படி ஏலோ

கடுகிலும் கால்திட்டம் கரண்டி எடுத்து,
கால் கரண்டி எண்ணெய் கடன்வாங்கி,
என் தலையைச் சீவிக் கட்டி
என் மகள் தலையை வாரிக்கட்டி

*குறைஎண்ணெய் வைத்த இடத்தில்*
*குருட்டுக் கிழவி வந்து இடறி விட்டாள்!*
*அப்போது வழிந்த எண்ணெய்*
*ஆருய்ப் பெருகி ஏரியாய்ப் பெருகி*
*ஆழ குளமாய்ப் பெருக்கெடுத்து,*
*கடலாய்ப் பெருகி ஓடுது!*

*சின்னபொண்ணு ஆம்படையான் சீமானும்!*
*சிங்கப்பூர் கப்பலுக்குப் போனானும்!*
*அடிபட்டு உதைப்பட்டு வந்தானும்!*
*ஆக்கி வைச்ச சோற்றைத் தின்னானும்!*
*புளியா மரத்திலே ஏறினானும்!*
*கிளை ஓடிஞ்சி அவன் விழுந்தானும்!*

*கொட்டடி கொட்டடி தாழம்பூ!*
*குனிஞ்சி கொட்டடி தாழம்பூ!*
*பந்தலிலே பாவக்காய்!*
*தொங்குதுபார் ஏலக்காய்!*
*பையன் வருவான் பார்த்துக்கோ*
*பணம் கொடுப்பான் வாங்கிக்கோ*
*சுருக்குப் பையிலே போட்டுக்கோ*
*வீராம் பட்டினம் போகலாம்!*
*வெள்ளை இட்டிலி வாங்கலாம்!*
*சவுக்குத் தோப்பு போகலாம்!*
*சமைத்து வைச்சித் தின்னலாம்!*
*புளிய மரத்துக்குப் போகலாம்!*
*புளியங்கொட்டை பொறுக்கலாம்!*
*பனை மரத்துக்குப் போகலாம்!*
*பல்லாங் குழி ஆடலாம்!*

நன்றாகச் சமைக்கத் தெரியாத பெண்களைக் கேலி செய்யும் பாடல்கள் இவை:

கொட்டடி கொட்டடி ஜானகி!
குனிந்து கொட்டடி ஜானகி!
பந்தலிலே பாவக்காய்
யாரு சமைக்கிற பாவக்காய்?—எங்க
அண்ணி சமைக்கிற பாவக்காய்!
கசக்குமோ புளிக்குமோ
கலந்து கொட்டடி சர்க்கரையை!

ஒரு கொடியைத் தூக்க தூக்க
ஓராயிரம் பாவக்காய்!
ஆருபோட்ட பாவக்காய்
அண்ணிபோட்ட பாவக்காய்

ஆருபறிச்ச பாவக்காய்
அண்ணன் பறிச்ச பாவக்காய்
பாலைவிட்டுப் பொறியல் செய்தால்
பாரு இன்னுதாம் பாவக்காய்
நெய்யை விட்டுப் பொறியல் செய்தால்
நீலி இன்னுதாம் பாவக்காய்!
என்ன என்ன சொல்லுதம்மா
இலேசான பாவக்காய்!

ஒரு சீப்பு வாழைக்காய்
உலையிலே போட ரெண்டுக்காய்
சீவத் தெரியாமல்
சீமைக்கு அனுப்பினேன்
சீமையில் இருக்கிற ராணியம்மா
சீவிக் கொடுத்தாளாம்!
அரியத் தெரியாமல்
ஆரணிக்கு அனுப்பினேன்
ஆரணியில் இருக்கிற ராணியம்மா
அரிஞ்சு கொடுத்தாளாம்!

பொறிக்கத் தெரியாமல்
பொன்னேரிக்கு அனுப்பினேன்
பொன்னேரியில் இருக்கிற பொன்னம்மா
பொறிச்சிக் கொடுத்தாளாம்!
தின்னத் தெரியாமல்
குப்பையிலே கொட்டினேன்
குப்பையிலே இருக்கிற கீரைமணி
கொடி கொடியாய் ஓடிச்சாம்!

சிறுவர் பாடும் வேடிக்கைப் பாடல்களில் பின்வரும் பாடல் சுவையாக உள்ளது:

ஏண்டிக் குட்டி
என்னடி குட்டி
என்னடி செய்யறே?
பாம்புக் குட்டிக்கு
பல்லு விளக்குகிறேன்
சும்மாவா இருக்கிறேன்.
ஏண்டி குட்டி
என்னடி குட்டி
என்னடி செய்யறே
மைனு குஞ்சுக்கு
மைப் போடுறேன்
சும்மாவா இருக்கிறேன்.

சிறுவர் பாடல்களில் இனிய ஓசை, மிகவும் சிறப்பாய் அமைந்துள்ளது. அத்தகைய பாடல்களில் பொருள் சிறப்பாக இல்லை என்றாலும் கேட்கக் கேட்க இன்பமூட்டும் ஓசை மகிழ்விக்கிறது.

சம்மாங்காய்!
சவுரிக்காய்!

*பின்னல் போட்ட,*
*பீர்க்கங்காய்!*

என்னும் பாடலில் மோனை சிறப்பாய் அமைந்துள்ளது.

சில பாட்டல்களில், அடியின் இறுதியில் உள்ள சொற்கள் ஓசை நயத்தோடு அமைந்து பேரின்ப மூட்டுகின்றன.

*அம்மா பாளையம் சந்தை*
*ஆறு காசு மொந்தை!*
*குள்ளஞ் சாவடி சந்தை*
*கூழு குடிக்கிற மொந்தை!*

*அத்திப் பட்டை!*
*அரசம் பட்டை*
*நான் போறேன்,*
*ஜோலார்ப் பேட்டை!*

*அதோ பார் காக்காய்!*
*கடையிலே விற்குது சீக்காய்!*
*பொண்ணு வராள் ஜோக்கா!*
*எழுந்து போடா மூக்கா!*

*பூ பூ புளியாம் பூ!*
*பொட்டியிலே வைச்சா தாழம்பூ.*

*சித்தாத்தா அடுப்பிலே*
*கத்திரிக்காய் வேகலே!*
*மாமா வர ஜோக்குலே!*
*மல்லிகைப் பூ பூக்கலே!*

பச்சை மிளகாய் காரம்!—இப்போ
பன்னிரண்டு மணி நேரம்!
நான் பார்த்தேன் சினிமா!—எங்க
அம்மா பேரு முனிமா!

ஒலி ஒளி முதலியவற்றைத் தகுந்த குறிப்புச் சொற்களால் வெளியிடும் பாடல்கள் உள்ளன:

அத்தை வீட்டு வாசல்லே
உட்காரப் போனேன்!
அடுத்த வீட்டு நாய்,
'ளொள்' ளுன்னுச்சாம்!
கையும் காலும்
'சில்' லுன்னுச்சாம்!
கண்ணாடி வளையல்
'கல்' லுன்னுச்சாம்!

கப்பல் மஞ்சள் 'மினு மினு!'
கண்ணாடி வளையல் 'கல கல'!
மல்லிப் பூவு 'குமு குமு!'
மருக் கொழுந்து 'கம கம!'

ஒன்று முதல் பத்து வரை உள்ள எண்களைக் கற்றுக் கொள்வதற்குச் சில பாடல்கள் உள்ளன. அவற்றில் ஓசை நயமும், திரும்பத்திரும்பச் சொல்வதற்குரிய சொல்லமைப்பும் உண்டு. சில பாடல்கள் கீழே தரப்படுகின்றன:

ஒரு குடம் தண்ணீர் ஊற்றி
ஒரே பூ பூத்ததாம்!
இரண்டு குடம் தண்ணீர் ஊற்றி
இரண்டே பூ பூத்ததாம்! (பத்து வரை)

ஓராம் நாளு திங்களிலே
மான்வந்து மேயுது பார்! — புள்ளி
மயில் வந்து கூவுதுபார்! (பத்து வரை)

ஒரு கோட்டை நெல்லு தரேன்
வண்டி மாடு ரெண்டும் தாரேன்
மயிலே குயிலே கூவவாங்கோ
ஒரு கோட்டை நெல்லு வேணும்
வண்டி மாடு ரெண்டு வேணும்
மயிலும் குயிலும் கூவ மாட்டோம்! (பத்து வரை)

ஒரு மரக்கால்—பொன்னளந்து
ஒரு தோட்டம்—கரும்பு நட்டேன்!

கரும்பும் இல்லே—கணுவுமில்லே!
கணுவுக்கு ஏற்ற—வரனுமில்லே! (பத்து வரை)
ஒரு கொடியாம்—பல சரக்காம்!
முருகரோட சந்நதியாம்—சமுத்திரமாம்! (பத்து வரை)

ஒரு குதிரையாம் பக்கத்திலே!
ஒருகட்டு சிவப்பாம் பல்லக்கிலே!
சேகுவன் முன்னே நடக்கும்போது,
சிறுக்கி கும்மி அடிக்கிறாளாம்! (பத்து வரை)

வினாவும் விடையுமாக அமைந்துள்ள பாடல்கள் இனிமையாய் உள்ளன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்:

என்ன ஊர்?
மயிலாப்பூர்.
என்ன மயில்?
காட்டு மயில்.

என்ன காடு?
ஆர்க்காடு.
என்ன ஆறு?
பாலாறு.
என்ன பால்?
கள்ளிப் பால்
என்ன கள்ளி?
இலைக் கள்ளி.
என்ன இலை?
மா இலை.
என்ன மா?
அம்மா!

நிலா நிலா எங்கே போனாய்?
மண் எடுத்து வர.
மண் எதற்கு?
சொப்பு பண்ண.
சொப்பு எதற்கு?
காசு போட.
காசு எதற்கு?
மாடு வாங்க.
மாடு எதற்கு?
பால் கறக்க.
பால் எதற்கு?
பாப்பா குடிக்க.
பாப்பா எதற்கு?
ஓலைப் பாயிலே
ஓடி விளையாட!
தாழம் பாயிலே
தவழ்ந்து விளையாட!
கோரைப் பாயிலே
குதித்து விளையாட!

கொழுக் கட்டையே! கொழுக்க ட்டையே!
ஏன் வேகலே?
அடுப்பு எரியலே, நான் வேகலே!
அடுப்பே! அடுப்பே!
ஏன் எரியலே?
மழை பெய்தது, நான் எரியலே!
மழையே! மழையே!
ஏன் பேய்ஞ்சே?
வயலு காய்ஞ்சது, பேய்ஞ்சேன்!
வயலே! வயலே!
ஏன் காய்ஞ்சே?
மாடு மேய்ஞ்சது நான் காய்ஞ்சேன்!
மாடே! மாடே!
ஏன் மேய்ஞ்சே?
மாட்டுக்காரன் அவிழ்த்து விடலே
நான் மேய்ஞ்சேன்!
மாட்டுக் காரா, ஏன் அவிழ்த்து விடலே?
முதலாளி வீட்டிலே கஞ்சி ஊத்தலே
நான் அவிழ்த்து விடலே!
முதலாளி வீட்டம்மா,
ஏன் கஞ்சி ஊற்றலே!
குழந்தை அழுதது கஞ்சி ஊற்றலே!
குழந்தையே குழந்தையே ஏன் அழுதாய்?
எறும்பு கடிச்சது நான் அழுதேன்?
எறும்பே எறும்பே ஏன் கடிச்சாய்?
என் புற்றிலே கைவச்சது நான் கடிச்சேன்!

இந்தப் பாடல் சில வேறு பாடுகளுடன் பின் வருமாறு வழங்குகின்றது:

கொழுக்கட்டையே! கொழுக்கட்டையே!
ஏன் வேகலே?

*அடுப்பு எரியலே நான் வேகலே!*
*அடுப்பே அடுப்பே ஏன் எரியலே?*
*மழை பெய்தது நான் எரியலே!*
*மழையே மழையே ஏன் பெய்தாய்?*
*புல்லு வளர நான் பெய்தேன்!*
*புல்லே புல்லே ஏன் வளர்ந்தாய் ?*
*மாடு தின்ன நான் வளர்ந்தேன்!*
*மாடே மாடே ஏன் தின்னுய் ?*
*பாலு கறக்க நான் தின்றேன்!*
*பாலே பாலே நீ எதுக்கு ?*
*பாப்பா அழுதால் குடிப்பதற்கு!*
*பாப்பா பாப்பா ஏன் அழுதாய் ?*
*எறும்பு கடிச்சது நான் அழுதேன்!*
*எறும்பே எறும்பே ஏன் கடிச்சாய்!*
*என் புற்றிலே கையை விட்டால், சும்மா இருப்பேனு?*

தமிழ் நாட்டுப் பாட்டன் பாட்டிகள் தம் பேரப் பிள்ளைகளுக்கு எத்தனையோ ஆண்டுகளாகக் கதை சொல்லி வருகின்றனர்; பாட்டுப் பாடி வருகின்றனர். அந்தக் கதையையும் பாட்டையும் அவர்களுடைய பாட்டன் பாட்டிகளிடமிருந்து அவர்கள் கேட்டிருப்பார்கள். அவர்கள் முன்னோர் அவற்றை அவர்களுக்குக் கூறி இருப்பர். இப்படிப் பரம்பரை பரம்பரையாகக் குழந்தை இலக்கியம் நாட்டுப் பாடல்களாய் வாழ்ந்து வருகிறது. அவற்றை நம் முன்னோர் தேடி வைத்த செல்வம் என்று கூற வேண்டும்.

குழந்தை சோறு உண்ணும் வயதில் கற்பிக்கும் பாடல் இது :

*அகத்திக் கீரைப்பிண்ணுக்கு;*
*ஆயா கொஞ்சம் நெய் ஊற்று!*
*பிஞ்சு கத்தரிக் காய்க்குப்*
*பின்னும் கொஞ்சம் நெய் ஊற்று!*

குழந்தை உட்கார்ந்து கைகாலை அசைத்து விளையாடும் நிலையில் இப்பாட்டைப் பாடுவர்:

*குந்தா குந்தா காசு!*
*ராம குந்தா காசு!*
*மாமா தந்த காசு!*
*மாயமாய்ப் போச்சு!*

சப்பாணிப் பருவத்தில் குழந்தைகளுக்குக் கீழுள்ள பாடலைக் கற்றுத் தருவதுண்டு:

*கொண்டான் கொண்டான் குளத்திலே*
*குருவி செத்துக் கிடக்குதாம்!*
*கொண்டு வாடி முத்தம்மா!*
*குருவிச் சாறு காய்ச்சலாம்!*
*அண்டை வீட்டுக் காரிக்கு*
*அகப்பைச் சாறு வார்க்கலாம்;*
*அடுத்த வீட்டுக் காரிக்கு*
*ஐந்து அகப்பை வார்க்கலாம்!*
*எதிர்த்த வீட்டுக் காரிக்கு*
*எட்டு அகப்பை வார்க்கலாம்!*
*பக்கத்து வீட்டுக் காரிக்குப்*
*பத்து அகப்பை வார்க்கலாம்!*

நிலவைப்பற்றி எத்தனையோ பாடல்கள் தமிழில் உண்டு. குழந்தைகளுக்கு,

*நிலா நிலா வாவா!*
*நில்லாமல் ஓடிவா!*

மலை மேலே ஏறிவா!
மல்லிகைப் பூக் கொண்டுவா!

என்ற பாடல் மிகவும் ஏற்றது. எளிமையும் அழகும் ஓசையும் ஒருங்கே வாய்ந்த இப்பாடலில் கருத் தாழமும் உண்டு.

பல நாட்களுக்கு ஒரு முறையே வட்ட நில வைக் காணும் வாய்ப்பு ஏற்படுகிறது. தண்ணொளி வீசி இன்பந்தரும் நிலவு குழந்தைகளின் உள்ளத் திற்குப் பெரு விருந்தாய் அமைகிறது. வட்ட நிலவைக் கண்டதும்,

நிலா நிலா வாவா!
நில்லாமல் ஓடிவா!

என்று ஆர்வத்துடன் குழந்தைகள் அழைக் கின்றனர். நிலவின் வருகைக்குத் தடை போடுவது போல மலை கிழக்கே நிற்கிறதே! இருந்தாலும் நிலவு அதன் மீது ஏறிவந்து விட வேண்டுமாம்!

மலை மேலே ஏறிவா!

இதுவே குழந்தைகளின் வேண்டுகோள்.

நிலவு வந்ததும் மல்லிகைப் பூக்கள் மலர்ந்து மணம் வீசுகின்றன! நிலவின் வருகை, மல்லிகைப் பூவின் மலர்ச்சி—இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்த குழந்தைகள், மல்லிகைப் பூவை, நிலவு கொண்டு வருவதாகவே எண்ணுகின்றனர்:

மலை மேலே ஏறிவா!
மல்லிகைப் பூக் கொண்டுவா!

இந்த இனிய பாடல் தமிழ்க் குழந்தைகளின் செல்வம்!

குழந்தைகளின் பண்பையும் அறிவையும் வளர்க்கும் பாடல்களில் இதுவும் ஒன்று:

*தாத்தா வீட்டுக்குக் கொண்டு போக*
*அதிர்சம் வேண்டும் மக்களே!*
*ஆளுக்கொரு வேலையாய்*
*சீக்கிரமாகச் செய்யுங்கள்!*
*முதல் நான்கு பிள்ளையும்*
*'மாட்டேன்! மாட்டேன்!' என்றதாம்!*
*கடைசிப்பிள்ளை செய்ததால்,*
*அழைத்துச் சென்றாள் ஊருக்கு!*

பிள்ளையார் வழிபாடு குழந்தைப் பருவத்திலேயே தொடங்கிவிடுகிறது. குழந்தைக்குக்

*குள்ளக் குள்ளரே!*
*குண்டு வயித்தரே!*
*செல்லப் பிள்ளையாரே!*
*திருவடியே சரணம்!*

என்ற பாடலைக் கற்றுக்கொடுப்பதுண்டு.

சிறுவர்கள் விளையாடிக் கொண்டே பாடும் பாடல்கள் சில உண்டு. அவை விளையாட்டுடன் பொருத்தமாய் அமைந்துள்ளதை எண்ணும்போது நமக்கு வியப்பாய் உள்ளது.

இரவு நேரத்தில் நிலவொளியில் தெரு மணலில் விளையாடும் சிறுவர்களில் ஒருவன் கை நிறைய

மணலை அள்ளிக்கொண்டு முன்னே செல்வான். "உப்போ உப்பு! உப்போ உப்பு!" — என்று கூறிக்கொண்டே உப்பு விற்பான். அவனைப் பின் தொடர்ந்து செல்லும் சிறுவர்கள் 'எந்த ஊர் உப்பு?' என்று கேட்பார்கள். அதற்கு உப்பு விற்பவன் 'மரக்காணத்து உப்பு' என்று விடை கூறுவான். இவ்வாறு சிறுவர்களின் வினவும் விடையும் மாறி மாறி அமைந்து,

*உப்போ உப்பு!*
*உப்போ உப்பு!*
*எந்த ஊர் உப்பு?*
*மரக்காணத்து உப்பு!*

என்ற பாடல் வடிவு பெறும்.

திருமணத்தின் போதும், திருவிழாக் காலத்திலும் போடும் பந்தலுக்குள் சிறுவர்கள் வந்து சேர்ந்து விடுவர். ஒவ்வொரு பந்தல் காலையும் ஒரு சிறுவன் பற்றிக்கொண்டு நிற்பான். நடுவில் ஒருவன்,

*காயோ கடப்பங்காய்!*
*காஞ்சிபுரத்து நெல்லிக்காய்!*
*உப்போ புளியங்காய்!*
*ஊறுகாய் போட்ட நெல்லிக்காய்!*

என்று பாடிக்கொண்டே செல்வான். அவ்வாறு அவன் செல்லும்போது மற்றச் சிறுவர்கள் கம்பத்திற்குக் கம்பம் இடம் மாறி ஓடுவர். அப்போது நெல்லிக்காய் விற்கும் சிறுவனும் ஓடிப்போய், ஏதேனும் ஒரு தூணைப் பற்றிக்கொள்வான். எந்தச்

சிறுவனுக்குத் தூண் கிடைக்க வில்லையோ அவன் நெல்லிக்காய் விற்கவேண்டும்.

கார்த்திகைத் தீபத்தின்போது மாவளி சுற்றும் சிறுவர்கள் பாடும் பாட்டு மிகவும் வேடிக்கையானது.

*மாவளியோ மாவளி!*
*மாவளிக்காரன் பெண்டாட்டி*
*மரக்கால் பிள்ளை பெற்றாளாம்!*
*பார்க்கப் போன சீமாட்டி*
*பல் ஒடிந்து செத்தாளாம்!*
*எடுக்கப் போன சீமாட்டி*
*இடுப்பு ஒடிந்து செத்தாளாம்!*

என்று பாடிக்கொண்டே மாவளி சுற்றுவர்.

தை மாதம் பெரும் பொங்கலுக்கு மறுநாள் கன்னிப் பெண்கள் பலர் கூடிக்கொண்டு வீடு வீடாகச் சென்று,

*ஆடிப் பாடி வந்தோம்!*
*அரிசி பருப்பைப் போடுங்கள்!*
*கன்னிப் பெண்கள் வந்தோம்!*
*காய்கறியைப் போடுங்கள்!*

என்று பாடிக்கொண்டு போய், அரிசி, பருப்பு, காய் ஆகியவற்றை வாங்கி வந்து, கன்னிப் பொங்கல் வைப்பர். இவ்வழக்கம் பழங்காலத்தில் இருந்த தைந் நீராட்டு விழாவை நினைவூட்டுகிறது.

சிறு கற்களைத் தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடுகின்ற ஆட்டத்தில் சிறுமியர் பாடும் பாடல் இது:

பொறுக்கினேன் காட்டிலே
பொங்கலிடப் போனேன்!
வா வா என்றேன்
வாழையிலை போட்டேன்!
கிள்ளித் தெறிச்சேன்
கிருஷ்ணயில் ஊற்றினேன்!

சிறுவர்கள் வட்டமாகக் கைகோத்து நின்று கொண்டிருக்க, வட்டத்திற்கு உள்ளே ஒரு சிறுவனும், வெளியே ஒரு சிறுவனும் இருப்பர். உள்ளே இருக்கின்ற சிறுவனை, வெளியே இருப்பவன் தொட முயல்வான். அவனை உள்ளே புக ஒட்டாமல் சுற்றிலும் உள்ளவர் தடுப்பர். வெளியே இருப்பவன் சுற்றி ஓடிவந்து கொண்டே

"சங்கிலி பிங்கிலி
கதவைத் திற!"

என்று உரக்கக் கேட்பான். மற்றவர்கள்,

"நான் மாட்டேன்
வேங்கைப்புலி!"

என்பர்.

கூட்டமாக இருக்கும் சிறுவர்களில் ஒருவன் ஓடிப்போய் ஒளிந்து கொள்வான். மறைந்து கொண்டிருக்கும் சிறுவனுக்கும், மற்றவர்களுக்கும் நிகழ்கின்ற உரையாடல், பாடலாய் அமைகின்றது:

மரங்கொத்திக் குருவி
ஏன்...ஏன்...ஏன்...?
தலையை வலிக்குது!
தலைகாணி போட்டுக்கோ!

*வெற்றிலே வேணும்*
*வேப்பந்தழையை உருவிக்கோ!*
*பாக்கு வேணும்!*
*பல்லைத் தட்டிப் போட்டுக்கோ!*
*புகையிலே வேணும்!*
*குதிரைவாலைக் கடிச்சிக்கோ!*
*சுண்ணும்பு வேணும்*
*சுற்றிச் சுற்றி ஓடிவா!*

காக்கையையும் குருவியையும் அழைக்கும் நாட்டுப் பாடல்கள் பல உண்டு. வெண்ணிற உடலும், மஞ்சள் நிற அலகும் கொண்ட மலைக் கழுகைப் பார்க்கும் சிறுவர்கள் பாடும் பாடல் ஒன்று உண்டு.

*தட்டான் வீட்டிலே பொன் திருடி!*
*தட்டான் வரான் ஓடிப்போ!*

என்ற பாடலைச் சிறுவர்கள் பாடுவர். கழுகின் மஞ்சள் நிற அலகு வழங்கும் கற்பனையில் மலரும் பாடல் இது.

காற்றாடி பறக்கவிடும் சிறுவர்கள் காற்றை அழைக்கின்றனர்:

*காற்றாடி பண்ணித் தாரேன்*
*காற்றுவா! காற்றுவா!*

மழைக் காலத்தில் மரமல்லிகை பூத்துக் குலுங்கும். விடியற் காலையில் மரத்திலிருந்து மலர்கள் உதிர்ந்து கொண்டே இருக்கும். சிறுவர்கள்,

*காற்றே காற்றே பூப்போடு!*
*காற்றே காற்றே பூப்போடு!*

என்று பாடிக்கொண்டே மலர்களைப் பொறுக்கிச் சேர்ப்பர்.

வேடிக்கையான பாடல்கள் சிறுவர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்கின்றன.

*அய்யாதுரைக்குக் கலியாணம்*
*அவர் அவர் வீட்டிலே சாப்பாடு!*
*கொட்டு மேளம் கோயிலிலே*
*வெற்றிலை பாக்குக் கடையிலே*
*சுண்ணாம்பு குளையிலே!*

என்ற பாட்டு வேடிக்கைப் பாடலுக்கு நல்ல எடுத்துக்காட்டு! காக்கைக்கும் எலிக்கும் திருமணம் செய்து வைப்பதில் சிறுவர்களுக்கு விருப்பம் மிகுதி.

*காக்கைக்கும் காக்கைக்கும் கலியாணமாம்!*
*கறுத்த பெட்டியில் மஞ்சளாம்.*
*அள்ளித் தெளி சந்தனம்*
*அழகு போல மாப்பிள்ளை!*
*கொட்டுக்காரன் சப்பட்டை!*
*குதிரைக்காரன் வீரப்பன்!*
*எங்க மச்சான் பேயாடி!*
*எல்லோரும் வந்து பாருங்கோ!*

என்ற பாடல் காக்கையின் திருமணத்தைச் 'சிறப்பாகக்' குறிப்பிடுகின்றது. இப்பாடல் தஞ்சை மாவட்டத்தில் வழங்குகிறது.

சுண்டெலிக்குக் கலியாணம் நடக்கிறது. அதைக் கீழ்வரும் பாடல் சுவைபடக் கூறுகின்றது:

*சுண்டெலி ராசனுக்குக் கலியாணமாம்!*
*சோளத் தட்டுப் பல்ல(ா)க்கு ஊர்வலமாம்!*
*சிலந்தியைக் கூப்பிடுங்க கொட்டாரம்போட!*
*நண்டைக் கூப்பிடுங்க நாட்டியம் ஆட!*
*தவளையைக் கூப்பிடுங்க தாதைக்கொம்பு ஊத!*
*ஒரெலி ஓடிவந்து ஊராரை அழைக்குதாம்!*
*இரண்டெலி கூடிக்கொண்டு எழுதிப்படிக்குதாம்!*
*மூன்றெலி கூடிக்கொண்டு முகூர்த்தக்கால் நாட்டுதாம்!*
*நாலெலி கூடிக்கொண்டு நியாயங்கள் பேசுதாம்!*
*ஐந்தெலி கூடிக்கொண்டு பஞ்சாங்கம் பார்க்குதாம்!*
*ஆறெலி கூடிக்கொண்டு ஆலத்தி எடுக்குதாம்!*
*ஏழெலி கூடிக்கொண்டு கறியும் சோறும் ஆக்குதாம்!*
*எட்டெலி கூடிக்கொண்டு கொட்டாரம் போடுதாம்!*
*ஒன்பதெலி கூடிக்கொண்டு ஓமம் வளர்க்குதாம்!*
*பத்தெலி கூடிக்கொண்டு பரியங்கள் கட்டுதாம்!*

இவ்வளவு சிறப்பாய் நடக்கின்ற திருமணம் எப்படி முடிகிறது, தெரியுமா?

*எலிராசா கலியாணத்தைப்*
*பூனை வந்து பிடுங்கிக் கொண்டதாம்!*

காடை, காட்டில் இட்ட இரண்டு முட்டைகள் ஆற்று அலையில் மிதந்து, ஆவாரங் காட்டில் குஞ்சு பொரித்தன. இரு குஞ்சுகளில் மூத்தது மோழை யாகவும், இளையது காளையாகவும் உள்ளன. கீழ்வரும் பாடல் அந் நிகழ்ச்சிகளை அழகாகக் குறிப் பிடுகின்றது:

*ஆற்றிலே இரண்டு முட்டை தத்தளிக்க,*
*ஆவாரங் காட்டிலே குஞ்சு பொரிச்சு,*
*அழகான தண்ணீர் வந்து மார்கொடுக்க,*
*இளங் குஞ்சு ஏர் ஓட்ட,*
*மூத்த குஞ்சு பால் குடிக்க,*

அவை வளர்வதாய்ப் பாடல் அமைந்துள்ளது.

பட்டை நாமக்காரர் ஒருவர் சிறுவர் பாடலில் இடம்பெற்று வேடிக்கைப் பொருளாகிச் சிரிக்க வைக்கிறார்.

*பட்டை பட்டை நாமக்காரன்!*
*படியரிசிச் சோற்றுக்காரன்!*
*குண்டான் குழம்புக்காரன்!*
*குண்டு செ(ா)ம்பு தண்ணீ(ர்)க்காரன்!*

சிறுவர்கள் பாடும் வேடிக்கைப் பாடல்களில் இதுவும் ஒன்று:

*ஆகட்டும் போகட்டும்!*
*அவரைக்காய் காய்க்கட்டும்!*
*தம்பி பிறக்கட்டும்!*
*தடியாலே அடிக்கிறேன்!*

தங்கள் வீட்டிற்கு வரும் மாமனைக் கேலி செய்து சிறுபெண்கள் பாடும் பாடல்கள் இவை:

*மாமாடா மாமா*
*மாமரம் சோலை!*
*நீவரும் வேளை!*
*நீலக் கண்ணாடி!*
*சந்தனப் பொட்டு*
*சரிகைத் தலைப்பாய்!*

அம்மா பொண்ணே!
தும்பைப் பூவே!
அத்தான் வந்தால் நீ
என்ன செய்வாய்?
''கட்டி வெல்லம்
பிட்டு வைப்பேன்!
கறந்த பாலைக்
காய்ச்சி வைப்பேன்!
வண்ணப் பாயை
விரிச்சு வைப்பேன்!
பக்கத்திலே இருந்து,
பேசிக்கொண்டே இருப்பேன்!

அத்தான் வந்தாரே
என்ன சொன்னாரு?
ஆத்திலே இருக்கிற
புடலங்காயை
அறுக்கச் சொன்னாரு!
அறுத்துக் கிறுத்துப்
பொரிச்சு வைச்சேன்!
'போடி!'—என்றாரு
அடையைத் தட்டிக்
கையிலே கொடுத்தேன்!
வறட்டி என்றாரு!
பிள்ளையைப் பெற்றுக்
கையிலே கொடுத்தேன்
பொம்மை என்றாரு!

மாமா மணியக் காரா
என்னைக் கட்டிக்கோ!
மாம்பாக்கம் போய் வரலாம்
வண்டி கட்டிக்கோ!
பொரி உருண்டை வாங்கித் தாரேன்
பொண்ணைக் கட்டிக்கோ!

வெண்கலம் கலகலென்ன
    எங்கே போறீரோ— மாமா,
    எங்கே போறீரோ!
நீலகிரி மோட்டு மேலே
    நின்னு பார்த்திரோ— மாமா,
    நின்னு பார்த்திரோ!
பெண் ஒருத்தி வாராளென்று
    சும்மா பார்த்திரோ — மாமா,
    சும்மா பார்த்திரோ!

அத்திப் பழம் விற்குதோடி தனக்கோட்டி
அம்மா கிட்டே சொல்லாதேடி வெள்ளைப்பாப்பா!
மேல்மேல் கொப்பு எங்கே வைச்சே?
மாமன் பொட்டியிலே மறைச்சுவைச்சேன்!

சுண்ணும்புச் சட்டியிலே சோறுக்கி,
சுடுமூஞ்சி மாமனுக்குப் போட்டாச்சி!
என்னடி குழம்பு பொம்மனுட்டி?
கருவாட்டுக் குழம்பு காமாட்சி!

களைவெட்டு களைவெட்டு,
    கம்பஞ் சோறு!
கையை விட்டுப் பார்த்தால்
    நல்ல சோறு!
வாடா மச்சான் சாப்பிடலாம்!
வரமாட்டேன் போடி வரமாட்டேன்!

சிறுவர்கள், தம் அத்தை மகளையும் மாமன் மகளையும் கேலி செய்து பாடும் பாடல்கள் இவை:

தங்கப் பெண்ணே தாராவே!
தட்டான் கண்டால் பொன் என்பான்!
தராசில் வைத்து நிறு என்பான்!
எங்கும் போகாமல் இரு என்பான்!

வீடு பத்திகிச்சாம்;
கோழி பத்திகிச்சாம்!
பார்த்திருந்த பொண்ணுக்குப்
பாவாடை பத்திகிச்சாம்!
படுத்திருந்த மாமாவுக்கு,
தொப்பை பத்திகிச்சாம்!
எட்டிப் பார்த்த மாமிக்கு
எல்லாமே பத்திகிச்சாம்!

டிங்கிரி டிங்காலே!
மாவிடிச்சாளே!
தோசை சுட்டாளே!
பட்டணத்து மாமானுக்குப்
பத்துக் கொடுத்தாளே!
நான்போய் கேட்டதுக்கு
ஒன்னு கொடுத்தாளே!
அவள் வாழப்போறாளா!
நான் பார்க்கப் போறேனே!

## 6. ஏற்றப் பாடல்கள்

'ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப்பாட்டு இல்லை' என்பது ஒரு பழமொழி. ஏற்றம் இறைப்போர் விடியற்காலையில் இனிய ஓசையில் பாடுகின்றனர். கேட்கக் கேட்க அப்பாடல்கள் இனிக்கின்றன. உழவர்களின் வாழ்க்கையை ஏற்றப் பாடல்கள் வண்ண ஓவியம் தீட்டி விளக்குகின்றன. கீழே யுள்ள ஏற்றப் பாடல்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் வழங்குகின்றன.

மழை பெய்தவுடன் நிலத்தை உழவர்கள் உழத் தொடங்கி விட்டனர். முதலில் நாற்று விட நாற்றங்காலை உழவேண்டும். உழவர் குடியில் மூத்தவர் இளையவர்களுக்குக் கட்டளை இடுகிறார்:

*நாற்றங்காலாம் சேடை*
*பூட்டி வாடா ஏரை!*

எந்த எந்த எருதுகளை அன்றைக்கு ஏர் பூட்ட வேண்டும் என்றும் மூத்தவரே கூறுகிறார்:

*நல் எருது பில்லை;*
*நடு செலம்புக் காளை;*
*பப்பாளித்துவரை;*
*பனங்காய்க் கறுப்பு;*

*நாலு ஏரைப் பூட்டி,*
*நாற்றங்காலை ஓட்டு!*

சேடை ஓட்டியபின் நிலத்தைச் சமப்படுத்த வேண்டும் அல்லவா? பரம்பு ஓட்டும்போது எருது என்ன செய்கிறது, பார்ப்போம்:

*சந்தனப் பரம்பை*
*சாடுதாம் எருது!*

பரம்பு கூட, சந்தன மரத்தில் செய்ததாம்! வலிமை மிக்க எருதுகளுக்குத் தாம் செய்யும் உழவு வேலை கடினமாகத் தோன்றவில்லை! அதனால் அவை பரம்பையே சாடுகின்றன!

நாற்று வளர்கிறது. வளர்ந்த நாற்றைப் பறித்து நடுகின்றனர். நேற்று நட்ட நடவில் குறை இருக்கிறது. உழவர்களில் மூத்தவரே வேலையாளுக்கு இடும் கட்டளை இது:

*நட்டுவாடா நடவை!*
*வைத்துவாடா குறையை!*
*வழியோரம் தளையை,*
*நட்ட குறை நட்டு*
*வாங்கிப் போடா கூலி!* (தளை—கழனி)

உழவர்கள் நெற்பயிரோடு தொய்யா மல்லியும் வாடா மல்லியும் நட்டுப் பயிர் செய்கின்றனர். எல்லாவற்றிற்கும், ஏற்றம் போட்டு நீர் இறைக்க வேண்டும். ஏற்றக்காரர்,

*தொய்யா மல்லி நட்டேன்!*
*துறையில் ஏற்றம் போட்டேன்!*
*வாடா மல்லி நட்டேன்!*
*வாய்க்கால் ஏற்றம் போட்டேன்!*

என்று களிப்போடு பாடுகின்றார்.

ஏற்றம் இறைக்கத் தொடங்குமுன் உழவர்கள் தெய்வம் தொழுகின்றனர்; வழிபடு தெய்வம் வந்து துன்பம் வாராமல் காத்து, அருள் புரிய வேண்டும் என்று வேண்டுகின்றனர். தாம் வழி படும் தெய்வங்களும் தம்மோடு சேர்ந்து உழைக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்:

*பெருமாளே வாரீர்!*
*சிவனாரே வாரீர்!*
*சிவனும் பெருமாளும்*
*சேர்ந்து மடலேறும்!*
*அரியும் சிவனாரும்*
*அமர்ந்து மடலேறும்!*

வைகறைப் பொழுது. இன்னும் கதிரவன் எழ வில்லை. இலை மீதும், புல் மீதும் அழகிய பனித் துளிகள் முத்து முத்தாய் விளங்குகின்றன. பனித் துளிகளைப் பற்றி எழுகிறது ஏற்றப் பாடல்:

*மூங்கில் இலை மேலே*
*தேங்கும் பனி நீரே!*
*கோவை இலை மேலே*
*கொள்ளும் பனி நீரே!*
*பாவை இலை மேலே*
*படரும் பனி நீரே!*
*வாழை இலை மேலே*
*வளரும் பனி நீரே!*

பனித்துளிகள் மட்டுமின்றி, இலுப்பை மரத்தில் பிஞ்சுகளை உலுக்கும் வௌவால்களும் பாட்டில் இடம் பெறுகின்றன:

இலுப்பையிலே வெளவால்
உலுக்குது இளம்பிஞ்சை!
கொல்லையிலே வெளவால்
கோதுது இளம்பிஞ்சை!

கதிரவன் இப்போது வெளியே வந்து விட்டான்; தன் சுடு வெங்கதிர்களை எங்கும் பரப்பி விட்டான். நேரம் ஆக ஆக வெய்யில் மிகுகின்றது. ஏற்றம் இறைப்பவர்,

வெய்யிலின் கொடுமை
வேகுதென் உடம்பு!
கானலின் கொடுமை
கன்றுதென் உடம்பு!

என்று பாடி வெயிலின் கொடுமையைப் புலப் படுத்துகிறார்.

வெயில் கொளுத்துகிறது! மழையோ பெய்ய வில்லை! ஏற்றம் இறைப்போர் உழைப்பால் களைத்து விடுகின்றனர். அவர்கள்,

ஏழை எல்லாம் கூடி,
இறைப்பு இறைக்கப் போறோம்!
மாசி எல்லாம் கூடி,
மழை அனுப்ப வேண்டும்! (மாசி—மேகம்)

என்று மேகத்தினிடம் முறையிட்டு மழை தருமாறு வேண்டுகின்றனர்!

தன்னுடன் ஏற்றம் இறைக்கும் சிறுவர்கள் உழைப்பின் மிகுதியால் களைத்துப் போவதை அறிந்த ஏற்றக்காரர் அவர்களுக்கு ஊக்கமூட்டு கிறார்.

*முன் மிதிக்கும் தோழா!*
*என்ன வேணும் பாலா!*

என்று ஏற்றக்காரர் கேட்கிறார். அதற்கு அவன்,

மோரும் கூழும் ஆறு
மொந்தை ஆறு போதும்!

என்று கூறுகிறான்.

பின்னால் மிதிக்கும் சிறுவனை நோக்கி,

*பின் மிதிக்கும் தோழா!*
*என்ன வேணும் பாலா!*

என்று ஏற்றக்காரர் கேட்கிறார். அதற்கு அத் தோழன்,

*சாறும் சோறும் ஆறு*
*சட்டி ஆறு போதும்!*

என்று விடை தருகிறான்.

அவர்களுக்கு வேண்டியவை எல்லாம் மொந்தை நிறைய மோரும் கூழும், சட்டி நிறைய சாறும் சோறும்! அவற்றிற்காக அல்லவா இவர்கள் இப்படி உழைக்கின்றனர்!

பயிர் வளர்கிறது. தண்ணீர் நிறைய இறைக்க வேண்டியுள்ளது. பயிர் செழித்து வளர்வதைக் கண்டு பூரிக்கின்ற உள்ளத்திலிருந்து, எழுகிறது பாடல்:

*வாங்குதடா தண்ணீ!*
*வளருதடா சம்பா!*

கதிர் உழக்கு நெல்லு,
கட்டுக் கலம் காணும்!

தண்ணீரை மிகுதியாக உட்கொண்டு வளர்கின்ற சம்பா நெல்லின் கதிர் ஒன்று உழக்கு நெல் தருமாம்! கட்டு ஒன்று கலம் நெல் தருமாம்! பின் குறைவு என்ன!

வளர்ந்து வரும் பயிருக்கு மிகுதியாக நீர் பாய்ச்சுகின்றனர். முன்பெல்லாம் இந்தக் கழனிக்கு இத்தனை ஏற்றச்சால் இறைத்தால் போதும், என்ற எண்ணிக்கை உண்டு. ஆனல் இப்போது எண்ணிக்கையே இல்லாமல் இறைக்க வேண்டியுள்ளது:

எண்ணிக்கையும் உண்டோ,
இறைக்கிற தனைக்கு?
பாட்டுகளும் உண்டோ,
பாய்கிற தனைக்கு?

இருந்தாலும் கணக்கிட்டு இறைக்கவேண்டும் என்று ஏற்றக்காரர் வற்புறுத்துகிறார்:

எண்ணிக்கை குறைஞ்சால்
ஏருது ஒரு மூலை!
பாட்டிலே குறைஞ்சால்
பாயாது ஒரு பக்கம்

ஏற்றம் இறைத்தபடியே மடை மாறி விட்டு வருமாறு ஏற்றக்காரர் வேலைக்காரனை ஏவுகிறார்:

பாய்ந்த மடைமாற
பண்ணைக்காரா போடா!

உடனே வேறு ஒருவர்,

*பண்ணைக் காரன் போனால்*
*கன்ன வர மாட்டான்!*

*(பண்ணைக்காரன்—வேலைக்காரன். கன்ன—சீக்கிரம்)*

என்று கூறுகிறார்.

உடனே ஏற்றக்காரர் பண்ணைக்காரன் தம்பியை மடை மாறும்படிக் கூறுகிறார்:

*பண்ணைக்காரன் தம்பி,*
*சின்ன பையா, போடா!*
*சின்ன பையா, போடா!*
*சீக்கிரமா வாடா!*

சின்னப் பையனும் அந்த வேலையைத் தட்டிக் கழிக்கிறான். அவன்,

*மரளவு தண்ணீர்,*
*மாறமாட்டேன் ஆண்டே!*
*இடுப்பளவு தண்ணீர்*
*எடுக்கமாட்டேன் ஆண்டே!*
*கழுத்தளவு தண்ணீர்*
*கட்டமாட்டேன் ஆண்டே!*

என்று கூறி மறுத்து விடுகிறான்.

ஏற்றம் இறைப்போர் சோர்ந்து போகின்றனர்: ‘‘இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இறைக்க வேண்டுமோ? நெல் எப்போதுதான் விளையப் போகிறதோ!’’ அவர்கள் குறிப்பை அறிந்து கொண்ட ஆண்டை (தலைவர்),

*என்னடா விசாரம்?*
*ஏறுடா மடலே!*
*பாருடா பயிரை!*

என்று கூறி இன்னும் சில நாட்களே இறைக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

ஏற்றத்தின் மீதிருப்பவர் பயிரைப் பார்த்து விட்டுப்,

*பார்த்த பயிரெல்லாம்*
*பாதி கதிரோடே!*
*மோட்டுத் தலைரெண்டும்*
*முடியக் கதிரோடே!*

என்று கூறுகிறார்.

சில நாட்களுக்குப் பிறகு ஆண்டையிடமிருந்து ஆணை பிறக்கிறது:

*தின்னுங் கதிரானல்*
*தூக்கி வாடா கோலே!*
*காய்ச்சுங் கதிரானல்*
*கழற்றி வாடா கோலே!*

"தின்பதற்கும், காய்ச்சுவதற்கும் தக்கவாறு கதிர் முற்றிவிட்டால் நீர் இறைக்க வேண்டியதில்லை! ஏற்றக்கோலைக் கழற்றி வந்துவிடு" என்று கூறி விடுகிறார் தலைவர்.

நிலம் உழுது, நீர் பாய்ச்சி, விதை விதைத்து, முளை பார்த்து, களை எடுத்து, விளைவு கண்டு, மகிழ் வெய்தி, கதிர் அறுத்து, களம் சேர்த்துப் பயன்

பெறும் உழவர்களின் வாழ்வை ஏற்றப் பாடல்கள் எவ்வளவு அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன!

உழவுத் தொழிலை மட்டுமின்றி, உழவர்களின் அக வாழ்வையும் சில ஏற்றப் பாடல்கள் குறிப்பிடு கின்றன. அவர் உள்ளத்தில் தோன்றும் இன்ப துன்ப உணர்ச்சிகளையும், வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளையும் வேறு சில பாடல்கள் குறிப் பிடுகின்றன.

மனைவியுடன் உறங்கிக் கொண்டிருக்கும் காளை ஒருவனை ஆண்டை விடியற்காலம் ஏற்றம் இறைக்க வருமாறு அழைக்கிறார். அப்போது விழித்துக் கொண்டு வெளியே வந்த அவன் மனைவியை நோக்கி ஆண்டை,

ஏதோடி நல்லாளே!
எழுப்போடி உன் ஆளை

என்று கூறுகின்றார். "இதோ உள்ளே போய் எழுப்பி அனுப்புகிறேன்! சற்றுப் பொறுங்கள்!" என்று அவள் கூறுவாள் என்று ஆண்டையும் நாமும் எதிர்பார்க்கிறோம். ஆனால்,

எழுப்பிவிட்ட நேரம்
இறைத்துவிட லாமோ?
தூங்கிவிட்ட நேரம்
துரவு உலர்ந்து போமோ?
படுத்திருந்த நேரம்
பயிர் உலர்ந்து போமோ?

என்று கேட்டு விடுகிறாள் அவள்! அவளுடைய கணவனின் அருமை அவளுக்கல்லவோ தெரியும்?

பின்னர் அவன் மெல்ல எழுந்து ஏற்றம் இறைக்கப் புறப்படுகிறான். தன் மனைவியை ஏற்றம் இறைக்கும் இடத்திற்கு குளிக்க வருமாறு அழைக்கிறான்:

*நான் இறைக்கப் போறேன்,*
*மாமரத்தின் கீழே!*
*நீ குளிக்க வாடி,*
*பூ மரத்தின் கீழே!*
*நான் இறைக்கும் தண்ணீர்*
*பூ மணக்கும் பெண்ணே!*
*நீ குளிக்கும் மஞ்சள்*
*நிறங் கொடுக்கும் தோழி!*

அவன் விரும்பிய வண்ணமே அவள் அங்கே குளிக்கச் செல்லுகின்றாள். அவனும் அவளும் இன்ப மொழி பல பேசிக் களிக்கின்றனர். அவர்கள் காதலால் கட்டுண்டு மகிழ்வது பண்ணை வேலைக்கு இடையூறாக இருக்கிறது. அதை உணர்ந்த ஆண்டை அவனை நோக்கி,

*இருக்க வாடா வந்தாய்,*
*சிறுக்கி மடி மேலே?*
*தூங்க வாடா வந்தாய்*
*தோழி தொடை மேலே?*
*தோழி தொடை ரெண்டும்*
*வாழை இளந் தண்டோ?*

என்று கடிந்து பேசுகிறார்.

உழுதொழிலைக் காலமெல்லாம் செய்து செய்து ஓய்ந்துபோன கிழவர்களும் சாகும்வரை உழைக்க வேண்டி இருக்கிறது! இது இந்த நாட்டின் நிலை!

விடியற் காலையில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும் வேலைக்காரக் கிழவனை ஆண்டை ஏற்றம் இறைக்க வருமாறு அழைக்கிறார்.

*"எழுந்திரேன் கிழவா!*
*விடிஞ்சது பொழுது!*
*விடிஞ்சு பொழுதானால்,*
*வெய்யில் உறையாதோ?*
*காய்ஞ்ச மானமானால்,*
*கானல் அடியாதோ?"*

கிழவர் மறுக்கவா முடியும்?

ஏற்றம் இறைப்போர் கூலிக்கு வேலை செய்வதுண்டு. "நெடுநாள் மழை பெய்யாமல் குளம் குட்டைகள் எல்லாம் வறண்டுவிட்டால் என்ன செய்வது?" என்ற ஏக்கம் அவர்களுக்கு எழுவதுண்டு:

*ஏரி ஒருமாதம்*
*எட்டல் இறையாதோ?*
*குட்டல் இறையாதோ*
*கூடி ஒரு மாதம்?*
*தாங்கல் இறையாதோ*
*தள்ளி ஒரு மாதம்?*
*தாங்கல் வற்றிப்போனால்,*
*நாங்கள் ஏது செய்வோம்?*

இவ்வாறு ஏக்கம் கொள்ளும் அவர்கள் வேறு தொழிலை மேற்கொள்ளத் தயங்கவில்லை என்பதையும் அவர்களே கூறுகின்றனர். கேட்போம்:

*கூடை முறங் கட்டி,*
*போவோம்; படப் போவோம்!*

முச்சில் முறங்கட்டி,
முன் தெருவில் போவோம்!

நீர் நிலைகள் வறண்டுபோன காலத்தில் ஆற்றில் ஊற்றுத் தோண்டி, கால்வாய் கட்டி வயலுக்கு நீர் கொண்டு வருவர். ஆறு கட்டச் செல்லும் ஒருவன் தன் மனைவியிடம்,

ஆறு கட்டப் போறேன்,
சோறு கட்டித் தாடி!

என்று கேட்கிறான். அதற்கு அவள்,

சோற்றுக்கென்ன மாற்று,
சொல்லிப் போங்கள் அத்தான்!

என்று கேட்கிறாள்.

தோட்டத்திலே கீரை,
தோப்பிலுள்ள மாங்காய்,
ஆற்றிலுள்ள வாளை,
அழகு வரால் கன்னு,
சேற்றில் உள்ள ஆரா,
சிதறி மேயும் கெண்டை,
முட்டை யிடும் கோழி
முழங்கி வரும் சேவல்.

என்று பெரிய பட்டியல் தருகிறான். நீர் வற்றிப் போன பிறகு குளம், குட்டை ஏரிகளில்கிடைக்கும். மீன்கள் அவர்களுக்கு உணவாகின்றன.

# 7. கவிதை விளையும் கழனி

தமிழ் நாட்டுக் கழனிகளில் நெல்லும் கரும்பும் வாழையும் மட்டும் விளையவில்லை. செந்தமிழ்க் கவிதைகளும் விளைகின்றன. உழவுதொழில் செய்கின்ற மக்கள் பலவகையான இனிய பாடல்களைப் பாடுகின்றனர்.

ஏர் உழும்போது,

*அடிமடை நன்செய்*
*முதல்மடை வாய்க்கால்*
*அறுபதுகாணி அகலம்*
*எழுபதுகாணி நிகளம்*
*சேறு புரட்டியல்லோ*
*சிறுமணி நாத்துவிட்டேன்.*

என்ற பாடல் பாடப்படுகிறது.

*சங்குபோல் நெல்விளையும்!*
*சமுத்திரம்போல் போர் ஏறும்!*
*முத்துப்போல் நெல்விளையும்*
*மூவுலகும் போர் ஏறும்!*
*காலாலே மடை தள்ளி*
*கழனி எல்லாம் நீர் பாய்ச்சி,*
*சோற்றால் மடையடைப்போம்!*

என்பது தஞ்சைத் தரணியில் பாடப்படும் ஏர்ப் பாட்டு.

மின்சாரம் எங்கும் பரவுதற்குமுன், பயிர்த் தொழில் ஏற்ற நீரை நம்பி இருந்தது. ஏற்றம் இறைக்கின்றபோது பல பாடல்கள் தோன்றின. ஏற்றப் பாடல்கள் சிலவற்றைக் காண்போம்:

ஏற்றம் இறைக்கின்ற தொழில், கடவுள் வாழ்த்துடன் தொடங்குகின்றது. ஏற்றம் இறைப்பவர் தாம் வழிபடு தெய்வங்களை நினைத்து வணங்குகின்றார்:

*நல்ல மழை காலம்.*
*பிள்ளையாரே வாரீர்!*
*பிள்ளையாரே வாரும்*
*பெருமாளே வாரும்*
*பெருமாளே வாரும்*
*சிவனாரே வாரும்*
*சிவனும் பெருமாளும்*
*சேர்ந்து வரவேணும்!*
*குருவும் பெருமாளும்*
*கூடிவரவேணும்!*
*அரியும் சிவனாரும்*
*சரியாய் வரவேணும்!*
*கந்தருடைய பாதம்*
*காலையில் மறவேன்!*

நீர் நிலைகளின் இயல்பும், அவை இருக்கின்ற சூழ்நிலையும் பாடலில் வெளிப்படுகின்றன:

*தொண்ணூரோட எட்டு*
*தோப்படித் துரவோ!*
*மாமர நிழலோ*

மல்லிகைத் துலாஞே
நெல்லிக்காய் மடலோ
நேர்ந்த முட்டுக் கோலோ!

ஏற்றத்தின் பலவேறு பகுதிகள்—நீர் இறைக்கப் பயன்படுகின்ற கருவிகள் பற்றி ஏற்றக்காரர் பாடுகின்ருர்:

எண்பதியால் எட்டு
எண்ணி மொள்ளக் கிண்ணம்
இடறி மொள்ளச் சாலு
ஊன்றி மொள்ளக் கோலு
உலாவி மொள்ளச் சாலு
தண்ணீ(ர்) மொள்ளத் தாம்பு
தடவி மொள்ளத் தோண்டி!

ஏற்றக் காரரின் மனேவியை நோக்கி ஒருவர்,

"தொண்ணூ றேட எட்டு
தோட்டக் காரப் பெண்ணே—உன்
வீட்டுக்காரர் எங்கே?"

என்று வினவுகின்ருர். அதற்கு அவள்,

வீட்டுக்குப்புறவே—ரெண்டு
ஏற்றமும் கிணறும்!
இறைக்குருர் கணவர்!
மேலண்டை துலாத்தில்—முன்னே
மிதிக்குருர் கணவர்!
கத்தரியாம் தோட்டம்
கலக்கிருராம் ஏற்றம்!
முள்ளங்கியாம் தோட்டம்
முறைக்கிணறு ஏற்றம்!"

என்று விடை கூறுகின்றாள். ஏற்றம் இறைக்கின்ற தொழிலும், நீர்பாய்ந்து விளைகின்ற தோட்டப் பயிரும் மிக அழகாய்ப் பாடலில் இடம் பெற்றுள்ளன.

ஏற்ற நீர் பாய்ந்து விளைகின்ற நெல்லின் வகைகளை,

*குத்து முத்துச் சம்பா*
*குடமல்லிச் சம்பா*
*மல்லிகைச் சம்பா*
*மணமுள்ள சம்பா*
*சிறுநெல்லு சம்மா*
*சீரகச் சம்பா*

என்று ஏற்றக் காரர் பாடுகின்றார்.

ஏற்றம் இறைப்பவர் தன்னுடன் பணி செய்யும் சிறுவனை நோக்கி,

*எண்பதியால் எட்டு*
*எங்கேடா பிறந்தாய்?*
*எங்கேடா பிறந்தாய்?*
*கண்மணி கரும்பே!*

என்று கனிவுடன் கேட்கின்றார். அதற்கு அவன்,

*காஞ்சியில் பிறந்தேன்!*
*கம்மையாய் வளர்ந்தேன்*
*செஞ்சியில் பிறந்தேன்*
*செல்லமாய் வளர்ந்தேன்*
*அவியூரில் பிறந்தேன்*
*அன்பாக வளர்ந்தேன்!*

என்று விடை கூறுகின்றான்! அன்பும் பாசமும் பிணைந்து நிற்க இணைபிரியாமல் தொழில் செய்யும்

பின்பு உழவர்களிடம் இருப்பதை இந்தப் பாடல் வெளிப்படுத்துகின்றது.

ஏற்றம் இறைப்பவர், மற்றவர்களுடன் எல்லையற்ற அன்புடன் அளவளாவுகின்றார்:

"என்னைப்பாரும் தோழா!
கண்ணைப் பாரும் ஐயா!
காதைப் பாரும் ஐயா!
கழுத்தைப் பாரும் பாலா!
தோளைப் பாரும் அழகா
தொடையைப் பாரும் மச்சம்
மனத்தைப் பாரும் பூவை!
மயிரைப் பாரும் அழகை!

ஆழமான அன்புள்ளத்திலிருந்து வெளிப்பட்ட அருமையான பாடல் இது!

தம்முடைய ஆண்டை, பாசத்தோடும் பண்போடும் தம்மிடம் இருந்து, தமக்கு வேண்டியவற்றை எல்லாம் தருவதால் வேலை செய்யும் பணியாட்கள்,

காசாப் படியளந்தால்
கனநேரம் ஆகுமென்று
நெல்லாப் படி அளந்தால்
நெடுநேரம் ஆகுமென்று
சோறாப் படியளக்கும்
சுவாமியார் பண்ணையிது.

என்று புகழ்கின்றனர்.

நீர் நிலைகளைச் செப்பிடச் செல்பவர் தம் மனைவியிடம்,

"அறுபதியால் எட்டு
ஆறுகட்டப் போறேன்
ஆறு கட்டப் போறேன்
சோறு கட்டும் பெண்ணே!
கொண்டம் கட்டப் போறேன்
கூழு கொண்டு வாடி!
கால்வாய் வெட்டப் போறேன்
கஞ்சி கொண்டு வாடி".

என்று கூறி விடைபெறுகின்றார். அப்போது அவர் துணைவி,

"சோற்றுக் கென்ன மாற்று?
சொல்லிப் போ என் தோழா!"

என்று கேட்கிறாள். உடனே பட்டியல் தருகின்றார், தோழர்:

"ஆற்றுக்குள்ளே ஆரா
அழகு வரால் கண்ணு
சேற்றுக்குள்ளே ஆரா
சிதறிமேயும் கெண்டை
தோட்டத்திலே கீரை
தோப்புக்குள்ளே மாங்காய்
ஆற்று ஓரம் வாழை
அறுத்துக்கோடி பெண்ணே!"

மாடு, உழவரின் செல்வம். மாட்டை அவர்கள் கண்ணும் கருத்துமாய்ப் பேணி வருகின்றனர். மாட்டின் வளத்தை, ஏற்றப் பாடல் போற்றுகின்றது. ஏற்றக்காரர்,

"இளமணியைக் கட்டி
மலைநடுவே சாய்ச்சேன்!

பசுமணியைக் கட்டி,
பாதை வழியே சாய்ச்சேன்!
இளைய மணிமாடு
மலை குலுங்க மேயும்!
மண்ணை திரச்சாயும்
குன்னதிர மேயும்
குளமதிரச் சாயும்!
கன்றுகள் கதறும்
காளைகள் புலம்பும்

என்று தம்மிடம் உள்ள மாடுகளின் வளத்தைப் பெருமையோடு பாடுகின்றார்.

நிலத்தில், ஆடுகளை மடக்கி வைத்துச் சாணம் சேர்ப்பதுண்டு. ஆடுகளை மேய்க்கும் இடையரை நோக்கி நிலத்துக்காரர்,

"இளங்காட்டு இடையா
கிடையை ஓட்டி வாடா!"

என்று ஆணையிடுகின்றார். அதற்கு இடையர்,

"கிடை வராது அண்ணே
குட்டி ஆடு ரொம்ப!
குட்டி ஆடு ரொம்ப
கூண்டு வாராதண்ணே!
வறட்டு ஆடு ரொம்ப
வழியே வாராதண்ணே!"

என்று கூறிவிடுகின்றார்.

உழவுத் தொழில் செய்யப் பல கருவிகள் வேண்டும். அவற்றைச் செய்து தரும் தொழிலாளர்கள் உழவர்களுக்குத் தக்க நேரத்தில் உதவிசெய்ய

வேண்டும். ஏற்றங்காரர், தமக்குத் தேவையான தோல் வடத்தைக் கொண்டு வந்து தருமாறு தோட்டியின் மனைவியிடம் கூறுகின்றார்.

"தொண்ணூறோட எட்டு
தோட்டிப் பெண்ணே வாடி
தோட்டிப் பெண்ணே வாடி
தோல்வடம் கொண்டாடி!"

அதற்கு அவள்,

*கொண்டு வரேன் ஆண்டே!*
*தோலை ஊற வைத்து*
*வாருகள் வகுந்து*
*வண்ண வடம் போட்டு*
*கொண்டு வரேன் ஆண்டே!*

என்று விடை கூறுகின்றாள். தோட்டி, வடம் தராமல் காலந்தாழ்த்திவிட்டதாய்க் கோபித்துக் கொள்ளும் ஆண்டையிடம்,

*"அறியாதவன் தோட்டி*
*அடிக்கப் போறீர் ஆண்டே!*
*தெரியாதவன் தோட்டி*
*திட்டப் போறீர் ஆண்டே!"*

என்று பணிவாய்ப் பேசுகின்றாள் தோட்டியின் மனைவி.

இதே பாடல், செங்கல்பட்டு மாவட்டத்தில் சில வேறுபாடுகளுடன் பின் வருமாறு வழங்கிவருகிறது:

*தோட்டிப் பெண்ணே, நல்லி*
*தோல் வடம் கொண்டாடி!*

தோட்டி இல்லே, ஆண்டே!
ஊர்க்கணக்கன் சொல்ல
ஓலே கொண்டு போனுன்!
தோட்டி வரட்டும்'னு
தோலே ஊறப் போட்டு,
வாருடன் வகுந்து,
வண்ணக் காயல் ஒட்டி,
வைக் கோலிலே கட்டி,
வண்டி மேலே போட்டு,
வருகிறேனே ஆண்டே!

ஏற்றப் பாடல்கள் உழவர் வாழ்வை விளக்கும் ஓவியம் என்பதை மேலே காட்டிய பாடல்கள் உணர்த்துகின்றன.

## 8. காதல் வாழ்க்கை

நாட்டுப்புறத்தில் வாழும் எளிய மக்களின் நெஞ்சத்தில் தூய காதல் மலர்ந்து மணம் வீசுகின்றது. காடு கழனிகளில் வேலை செய்யும்போது, ஆணும் பெண்ணுமாய்ப் பழகி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்கின்றனர். அவர்கள் காதலுக்குப் பணமோ, சாதியோ, சமூகக் கட்டுப்பாடோ மிகுதியாகத் தடை போடுவதில்லை. அவர்கள் காதல் நெஞ்சத்தின் எதிரொலி நாட்டுப் பாடல்களில் தெளிவாகக் கேட்கின்றது.

*முன்னாலே போறவரே!*
*முண்டாசுக் காரரே!*
*பின்னாலே வாரேன்;*
*பேசாமல் போறீரே!*
*ஏங்கி ஏங்கி வாராளே*
*ஓம்புள்ளே சுப்பாயி!*
*ஏன் என்று கேளாயோ-ஏ சுப்பா!*
*வாழ்ந்தாலும் வாழணும்!*
*வகையோட வாழணும்!*
*தாழ்ந்தாலும் தாழணும்!*
*தரமுடனே தாழணும்!*
*சொன்னாயே சொன்னாயே*
*சொக்கவைக்கச் சொன்னாயே!*

*சொன்னபடி செஞ்சாயா?-ஏ சுப்பா*
*சொன்னபடி செஞ்சாயா?*

என்று சுப்பாயி சுப்பனைக் கேட்கின்றாள். அதற்குச் சுப்பன் கூறும் விடை இது:

*பின்னாலே வாரபுள்ளே!*
*செவத்த புள்ளே சுப்பாயி!*
*முன்னாலே என்ன சொன்னேன்?*
*ஏ, புள்ளே சுப்பாயி!*
*தன்னாலே பின்னாலே*
*வாரபுள்ளே சுப்பாயி!*
*சொன்னாலே செஞ்சிடுவேன்!*
*ஏ புள்ளே.சுப்பாயி!*

என்று சுப்பன் உறுதிமொழி கூறுகின்றான். உடனே சுப்பாயி,

*கதுரருவா கையில் வச்சுச்*
*சதுராடிப் போற மச்சான்!*
*வெதையும் வெதைச் சாச்சு!*
*ஊரடங்கும் வேளையிலே*
*உள்ளங்கள் கூடையிலே*
*என்னென்ன சொன்னாய் நீ!*
*ஏங்கவைச்சு நிக்காயே!*

என்று முன்பு சொன்னவற்றை எல்லாம் நினைவூட்டுகின்றாள்.

*ஆடியிலே ஆடை வாங்கி*
*ஆவணியிலே தாவணி வாங்கி*
*ஆடியிலே தேருபார்ப்போம்—பூவு*
*சூடியே சுத்திடுவோம்!*

என்று கூறிப் பொறுத்திருக்குமாறு சுப்பன் கூறுகின்ருன். மேலும்,

தை பிறந்தால், வழி பொறக்கும்
தரணி எல்லாம் பூ பூக்கும்
சம்பா நெல்லுக் குத்திடுவோம்!
கம்மாஞ்சோறு தின்னுடுவோம்!
கட்டான கட்டுக் கட்டி
பட்டான பட்டுக் கட்டி
சிட்டாகச் சேலைகட்டி—கண்ணைக்
கொட்டாம பாத்திடுவோம்!
[1]மருதை பார்த்திடுவோம்
[2]குருதை வாங்கிடுவோம்!
[3]விருதை போயிடுவோம்—கூடி
இருகை சேர்த்திடுவோம்!

என்றெல்லாம் கூறி அவளைக் கற்பனை உலகத்திற்கு அழைத்துச் செல்கின்ருன்.

கிடைப்பதற்கு அரிய சுப்பாயி தனக்குக் கிடைத்ததை எண்ணிக் களிக்கிருன் சுப்பன். அந்தக் களிப்பில் மலர்கின்றது பாடல் :

ஆனமலை யோரம்
பறவைக்கு நான் கண்ணி வைச்சேன்!
பறவைவிழும் கண்ணியிலே
பருவப்புள்ளே நீ விழுந்தாய்!
தேடிப் பிடிச்சேனே!
கிடைக்காத மாங்கனியே!
பாடிப் புவழ்ந்தாயே!
பருவப்புள்ள சுப்பாயி;

1. மதுரை 2. குதிரை 3. விருதுநகர்

தான் மஞ்சள் அறைச்சுக் குளித்தபோது மதிலேறிப் பார்த்ததை நினைவூட்டி, தன்னைக் கைவிடாதே என்று வேண்டிக்கொள்கிறான் சுப்பாயி:

*மஞ்சளறைச்சுக் குளிக்கையிலே*
*மதிலேறிப் பார்த்த மச்சான்!*
*கண்ணைக் கொடுத்தாயே;*
*கணக்கறிஞ்சு சிரிச்சாயே!*
*பாடிக் கெடுக்காதே—ஏ மச்சான்*
*வாடியே போயிடுவேன்.*

தன் காதலியின் சிறப்பைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றான் ஒருவன்:

*ஓடுகிற தண்ணீரின்*
*உள்ளே மணல் சேறுண்டு!*
*சந்திரர்க்கு மாசுண்டு*
*சற்றே கறுப்புமுண்டு!*
*ஆலால கண்டருக்கு*
*அண்டங் கறுப்புமுண்டு*
*மயிரே கறுப்பொழிய*
*மற்றக் கறுப்புமில்லை*
*புருவம் கறுப்பொழியப்*
*பின்னே கறுப்புமில்லை!*

தன் காதலியைப் பிரிந்து தன்னால் வாழ இயலாது என்பதை உறுதியாக எடுத்துக் கூறுகின்றான்:

செத்து மடிஞ்சாலும்
செலவழிஞ்சு போனாலும்
செத்த இடந்தனிலே
செங்கழுநீர்ப் பூ பூப்பேன்.

மாண்டு மடிஞ்சாலும்
வைகுந்தம் போனாலும்
மாண்ட இடந்தனிலே
மல்லிகைப்பூ பூப்பேன்!
பஞ்சணை மெத்தையிலே
படுக்கை மலர் நான் ஆவேன்!
கொண்டைக்குப் பூ ஆவேன்
கொசகத்திற் பையாவேன்!
நெற்றிக்குப் பொட்டாவேன்!
நீலவிழி மையாவேன்!
முந்தாணித் தொங்கலிலே
முள்ளாகி ஒட்டுவேன்யான்!
காலுக்கு மெட்டாவேன்!
கைவளையல் நான் ஆவேன்!

களவு ஒழுக்கத்தில் ஈடுபட்டுள்ளாள் அவள். களவு ஒழுக்கத்தைக் கைவிட்டு நாடறிய உற்றார் உறவினர் அறியத் திருமணம் செய்து கொண்டு வாழுமாறு மூதாட்டி ஒருத்தி அவளுக்கு அறிவுரை கூறுகின்றாள் :

சிற்றாற்றங் கரை தனிலே
சிறுமணல் கொழிக்கும் பெண்ணே!
உற்றார் அறியாமல்
உறவாட வல்லயோ?
தட்டார் அறியாமல்
தாலி பண்ண வல்லயோ?
அடுப்புப் புகையாமல்
ஆக்கிவிட வல்லயோ?

என்று கேட்பதில்தான் எத்தனை பொருள் அடங்கி யுள்ளது!

தன் அத்தை மகனைக் கேலி செய்து பாடுகின்றாள் ஒருத்தி :

பாட்டைப் படிச்சுவச்சு
பானையிலே போட்டுவச்சேன்!
பாட்டறியா அத்தைமகன்
பானையோடு தூக்கினானே!
கதையைப் படிச்சுவைச்சு
கலயத்திலே போட்டுவைச்சேன்!
கதையறியா அத்தைமகன்
கலயத்தோடே தூக்கினானே!

அதைக் கேட்டிருந்த அத்தை மகன் அவளைக் கேலி செய்து பாடுகிறான் :

அத்தை மகள் மத்தாணி
அவல் இடிக்கிற குந்தாணி!
மாமன் மகள் மத்தாணி
மா இடிக்கிற குந்தாணி!

கணவனுக்கு மனைவி அறுசுவை உணவை ஆக்கி அன்புடன் உண்பிக்கின்றாள் :

பண்டத்தைக் கழுவி,
பனிநீர் உலைவார்த்து
முத்துப்போல் சோறு
வடித்தாள் இளங்கொடியாள்!
அத்தி விறகொடித்துத்
தித்திக்கப் பால்காய்ச்சிப்
புத்துருக்கு நல்லநெய்யும்
பொன்போல் பருப்புகளும்
அதிரசமும் தேன்குழலும்
அறுசுவைப் பண்டங்களும்

*பத்துவிதக் கறியும்*
*பதினெட்டுப் பச்சடியும்*
*எட்டுவகைக் கறியும்*
*இயல்பான பல குழம்பும்*
*முப்பழமும் சர்க்கரையும்*
*அப்பளமும் தான் படைத்து*
*ஆயாசம் தீரவே*
*பாயாசம்தான் கொடுத்தாள்.*

புல் விற்பவள் மீது காதல் கொண்ட வண்டிக் காரன் அவளைக் கண்டபோது பாடுகிருன் :

*ஆரடி, பில்லுக்காரி!*
*அறுகம் பில்லு கூடைக்காரி!*
*புல்லுவிலை சொல்லடி நீ*
*சொந்த வண்டி மாமனுக்கு!*

தன் காதலிக்குக் கள்ளிப் பூ கொண்டுவர முயன்ற காதலன் பாடுகிருன் :

*சதுரக் கள்ளி மலையோரம்,*
*சாய்ந்திருக்கும் திருகுகள்ளி!*
*திருகுகள்ளி பூவெடுக்க*
*திரிஞ்சேனேடி சேனகாலம்!*

காதலியை நினைத்து உருகுவதாக அவன் பாடுகிருன் :

*வாழைப் பழத்தாளே!*
*வலதுகைச் சர்க்கரையே!*
*உள்ளங்கைத் தேனே!*
*உருகுறேன்'டி உன்னாலே!*

அவள் வாழுமிடம் மிகவும் காவல் உடையது. அவளை அடைய வழி என்ன என்று அவளையே அவன் கேட்கிருன் :

*“அரிஅரி! கருப்பஞ்சோலே!*
*அதிலொரு பையன் காவல்*
*முத்தாப்புச் செட்டி காவல்*
*முதலியார் தம்பி காவல்*
*இத்தனே காவலிலே*
*எப்படி வருவேன் பெண்ணே!*

இதற்கு அவள் கூறும் விடை இது :

*“வெற்றிலே கைப்பிடிச்சு*
*வெறும்பாக்கைத் தாள் அடக்கி,*
*சுண்ணும்பு இல்லே’ன்னு*
*சூதாடி வாடா!”*

இந்தப் பாடலேக் கார்த்திகை மாதம், தீபம் வைப்பதற்கு முன் பத்து நாளும் இரவில் சிறுவர்கள் மணியடித்துக் கொண்டு ஊரைச் சுற்றிப் பாடி வருவர்.

இரவு நேரத்தில் தன் காதலியைச் சந்திக்கிருன் காதலன். அவள் காதில் இருந்த பொன்னேலே கழன்று அவனுடைய நீளமான கூந்தலில் (ஆண்களும் கூந்தல் வளர்ப்பதுண்டு) தொத்திக் கொள்கிறது. இருவரும் பிரிந்து விடுகின்றனர். காலேயில் மீண்டும் அவள் அவனேச் சந்திக்கிருள். குளத்திற்குப் போய்த் தண்ணீர்க் குடத்தோடு திரும்பி வருகையில் சந்திக்கிருள். அவள் அவனே நோக்கி

*எண்ணெய்த் தலேயழகா!*
*இருகாது முத்தழகா!—உன்*
*வண்ணமான கூந்தலிலே*
*வந்ததொரு பொன்னேலே!*

என்று கூறுகிருள்.

அன்று இரவே அவன், அந்தத் தோட்டத்திலேயே அதைக் கவனித்து விட்டான். பொன்னுேலயை எடுத்துத் தோட்டத்தில் இருந்த பாகற் கொடியில் சுற்றி வைத்துவிட்டு வந்து விட்டான். அதை அவன் கூறுகிருன்.

*தண்ணீர்க் குடத்தாளோ!*
*தாமரைப்பூ நிறத்தாளே!*
*பின்னுலே பாகற்கொடி;*
*பூத்திருக்கும் பொன்னுேலே!*

பொன் ஏரியில் தூண்டில் போட்டு மீன் பிடிக்கும் தூண்டில்காரனிடம் உள்ளத்தைப் பறிகொடுத்த ஒருத்தி,

*ஏரியும் பெரி(ய) ஏரி!*
*இரு கரையும் பொன் ஏரி!*
*பொன் ஏரிக் கரை மேலே*
*போட்டானே தூண்டி(ல்) முள்ளு!*
*தூண்டிலுக்கு மீன் ஆனேன்!*
*தொடை பருமன் வாளையானேன்!*
*வாளையை இழுத்தானே!*
*வாளை மீனும் நான் ஆனேன்!*

என்று இன்ப உணர்வு வெளிப்படக் கூறுகின்ருள்.

ஆற்றுக்குக் குடிதண்ணீர் கொண்டுவரச் செல்லும் ஒருத்தியை வழியில் அவள் காதலன் சந்திக்கிருன். அவளை நோக்கி,

*ஆற்றுக் காடி போறே*
*ஊற்றுத் தண்ணீர் மொள்ள?*

என்று கேட்கிருன். அதற்கு அவள்,

*ஆற்றங்கரை தாண்டி*
*அக்கரைக்குப் போறேன்?*

என்று கூறுகிருள்.

*அக்கரையும் தண்ணீர்,*
*சர்க்கரையே பெண்ணே!*

என்று கூறி அவளைக் குறிப்பால் தடுத்து நிறுத்திக் கொள்கிருன். அவனுடைய குறிப்பை அவள் உணர்ந்து கொள்ளாமலா இருக்கிருள்!

அந்தப் பெண் எண்ணெய் விற்பவள்; குடி தண்ணீர் கூடச் சிலபோது விற்பதுண்டு. அவளிடம் அவள் காதலன்,

*எண்ணெய் கூறி விற்கும்*
*இள வாணியப் பெண்ணே!*
*எண்ணெயில் ஒளிவோ*
*பெண்ணே உன் அழகு?*
*தண்ணீர் கூறி விற்கும்*
*தலைவாணியப் பெண்ணே!*
*தண்ணீரில் ஒளிவோ*
*தாமரைப் பூச் செண்டே!*

என்று இன்ப மொழிகளில் இனிக்க இனிக்கப் பேசுகிருன்!

காளை ஒருவனிடமிருந்து கட்டற்றுக் கிளம்பி வருகிறது ஒரு காதற் கவிதை. தன் உள்ளத்தைக் கிளறி விட்டவளை நோக்கிப் பாடுகிருன்:

*ரோட்டோரம் வீட்டுக்காரி!*
*ரோசாப் பூச் சேலைக்காரி!*

*காதோரம் கொண்டைக்காரி!*
*கையலேப்பில் கெட்டிக்காரி!*
*ஓட்டரம் பூவே — நீயே*
*ஓசந்திருக்கும் தாழம்பூவே!*

இப்படிப் பேசி அவள் நாணத்தைப் போக்கி அவளைத் தனக்கு உரியவளாக்கிக் கொண்டான்.

அவன் இப்போது வயலை உழுது கொண்டிருக்கிறான். அவள் அந்த வழியாகச் செல்லுகின்றாள். சென்று களை எடுக்கப் போகிறாள். போகிறவள் சும்மா போகவில்லை! அவனை வம்புக்கு இழுத்து விடுகிறாள்:

*"முன்னேரு பின்னேரு!*
*இரண்டுந் தனது ஏரு!*
*முன்னேரு பிடிச்சவரு*
*முறைக்கு மச்சான்!"*

என்று பேசுகிறாள். அவனோ பேசவில்லை! அவன் மட்டும் தனியாக இருந்தால் அல்லவா பேச முடியும்? அவனுடன் வேறொருவன் உழுது கொண்டிருக்கிறானே! அவள் மீண்டும்,

*கட்டி உழவுக்குள்ளே*
*கருத்த ஆளு நல்ல ஆளு!*
*இந்தவழி போற என்னை*
*ஏறிட்டுப் பார்த்தால் என்ன?*

என்று வெளிப்படையாய்க் கூறி விட்டாள். அவனோ மீண்டும் தயங்கினான். பேசவில்லை! "இப்படியும் ஓர் ஆண் பிள்ளை இருப்பானா?" என்று எண்ணியவாறே,

'கண்ணு'ன்னு ஒரு வார்த்தை
கனிந்து அவர் அழைத்தால்
பெண்பிள்ளை நானும்
பேச மறுப் பேனு ?

என்று தன் குறையைச் சொல்லித் தீர்த்து விட்டுப் பக்கத்து வயலில் இறங்கிவிட்டாள், களை எடுக்க!

பெண் உள்ளத்தின் வலிமையால் அல்லவா ஆண் உள்ளத்தில் அலைபாயும் காதல் உணர்ச்சி வடிவம் பெறுகிறது? அவனுக்கு இப்போது துணிவு பிறந்துவிட்டது! அவளை நோக்கி,

எண்ணெய்த் தலையழகி!
எழுத்தாணி மூக்கழகி!
கண்ணாடி வளைவி போட்டு
களை எடுக்க வந்த புள்ளே !
கண்ணாடி மின்னலிலே—உன்
களை எடுப்பும் பிந்துதடி!

என்று அஞ்சாது கூறிவிட்டான்!

இப்போது அவன் கிணற்றில் கவலை கொண்டு நீர் இறைக்கிறுன். அந்தப் பக்கம் வந்த அவள்,

மலை மேலே கிணறுவெட்டி,
மாங்காய்மரம் சாலை வைத்து,
மாமன் மகன் இறைக்கும் தண்ணீர்
அத்தனையும் மாங்காய்ப் பழம்!
குன்னுமேலே கிணறு வெட்டி,
கொய்யாமரம் சாலை வைத்து,
மாமன் மகன் இறைக்கும் தண்ணீர்
அத்தனையும் கொய்யாப் பழம் !

என்று கூறினுள்.

அதைக் கேட்ட அவன்,

*மஞ்சள் ஒரு பலமாம்!*
*மருக்கொழுந்து இருபலமாம்!*
*கொண்டை ஒரு புறமாம்!*
*கெண்டை விழி இருபுறமாம்!*
*வெத்திலே போட்ட புள்ளே*
*விறுவிறுன்னு வந்த புள்ளே*
*நாக்குச் சிவந்த புள்ளே*
*நான் தான்'டி உன் புருஷன்!*

இவ்வாறு சொல்லி உறுதி கூறிவிட்டான்! வேறு என்ன வேண்டும் அவளுக்கு?

சின்னஞ்சிறு வயது முதல் ஒன்ருய் விளையாடிப் பழகிய காதலர் இருவர் வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளை இனிக் காண்போம்.

அவனுடன் ஒன்ருய் விளையாடிப் பழகிய அவள் இப்போது வீட்டிற்குள்ளே இருக்கிருள். பல ஆண்டுகளுக்குப் பிறகு அவன் அவளைச் சந்திக்க வாய்ப்பு ஏற்படுகிறது. அவள் உள்ளமும் உடலும் வளர்ந்திருப்பதைக் கண்டு வியப்படைகிருன் அவன். அவளைக் கண்டு வியப்பில் மூழ்கிய அவன்,

*பூவாடை தோணுதடி!*
*புதுக்காற்று வீசுதடி!*
*பாவாடை கட்டையிலே*
*பழகியதை ஏன் மறந்தாய்?*

என்று தன் ஆற்ருமையை வெளிப்படுத்துகிருன். அவளுடைய அழகு அவன் ஆவியையே கொண்டு விட்டதாக அவன் கூறுகின்ருன்:

*கோடாலிக் கொண்டையிலே*
*வாடாமல்லி பூவுவச்சி*
*ஆடாமல் அசையாமல்*
*ஆவியைக் கொன்னு கொண்ட!*

ஆண்மையை அடிமைப் படுத்தும்போது தானே பெண்மை வெற்றி பெற்றதாய்க் கூறமுடியும்? பெண்மை தன்னை வென்றதை அவனே ஒப்புக் கொள்கிறான்.

அவள் நெல் அறுக்கப் போகிறாள். அவன் நெல்லிமரக் காவலுக்குச் செல்கிறான். அவன் அவளைச் சந்திக்கக் 'குறியிடம்' கூறும்படிக் கேட்கிறான்:

*புள்ளி போட்ட ரவிக்கைக்காரி!*
*புளியங் கொட்டை சேலைக்காரி!*
*நெல்லறுக்கப் போகும்போது — நான்*
*நெல்லிமரக் காவலடி!*
*கஞ்சிக் கலயங் கொண்டு*
*கருக்கரிவாளை தோளிலிட்டு*
*அறுப்பறுக்கப் போகும்போது — உன்*
*இருப்பிடத்தைச் சொல்லிடடி!*

'பகற் குறி' யிடத்தில் அவளைச் சந்தித்த அவன், இரவிலும் குறியிடம் ஏற்படுத்தி அவளைச் சந்திக்க வருவதாய்க் கூறுகின்றான்:

*ஆற்றிலே தண்ணீர் வர*
*ஆள் இறங்காத் தண்ணீர் வர*
*நீச்சலிலே நான் வருவேன்!*
*நீலக்கிளி தூங்காதே!*

அவள் அவனுக்காகக் காத்திருக்கிருள். இரவில் எத்தனையோ தடைகள் அவர்களுக்கு! முழுநிலவு வெளிப்பட்டுப் பகல் போல் காய்கிறது.

சோளப் பொறி மத்தியிலே
சுட்டுவைத்த தோசையைப் போல்
தோன்றும் இந்தச் சோதிநிலா!

வானத்தில் தோன்றி விளங்கும் வட்ட நிலாவுக்குப் புலவர்கள் எத்தனையோ உவமைகள் சொல்லி இருக்கிருர்கள்! கல்லா இளம் பெண்ணின் உள்ளத்தில் ஒரு புதிய உவமை தோன்றுகிறது. அவள் நன்ருக அறிந்து பழகிய ஒரு பொருளை உவமை கூறுகிருள்: 'சோளப் பொறி மத்தியிலே சுட்டு வைத்த தோசையைப் போல்' விண்மீன் களின் நடுவினில் வட்ட நிலா தோன்றுகிறதாம்! இதற்குமுன் இந்த உவமையை யார் சொன்ஞர்கள்? எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது, இந்த உவமை!

சோதி நிலா தோன்றியது மட்டுமல்ல; தாய் வேறு தூங்காதிருக்கிருள்! தனக்கு ஏற்பட்டுள்ள தடைகளை எண்ணிச் சலித்துக் கொள்கிருள்:

சோதி நிலா மறையுமட்டும்,
தாய் படுத்துத் தூங்குமட்டும்,
சொன்ன குறிபார்த்து
சேர்ந்திருப்பான் என்துரையை
சேரக் காலம் எப்பவரும்?

அகப்பொருள் இலக்கியத்தின் சாயல் மேலே காட்டிய பாடலில் அமைந்திருப்பது வியப்பாய் உள்ளது.

இரவில் அவளை அவன் சந்தித்த போது நினைவுப் பரிசு ஒன்று தந்தாள். அந்தப் பரிசு என்ன என்பதை அவனே கூறுகிறான், கேட்போம்:

*மாலை கொடுத்தக்கால்*
*வாடிப் போம் என்று சொல்லி*
*திரு நீறு தந்தக்கால்*
*சிந்திப்போம் என்று சொல்லி*
*திருக்காது கொப்பைச்*
*சிறப்பாகத் தந்தாளே!*

வட ஆர்க்காடு மாவட்டதில்—சவ்வாது மலையில் வாழ்வோர், பல காதல் பாட்டுகளைப் பாடுகின்றனர். அவற்றுள் ஒன்று:

*ஆற்றிலே மீன்பிடிக்கிற*
*அம்மா பெண்ணே! — உன்*
*பேச்சுக்குத் துணைவரட்டுமா?*

இரவு நேரத்தில் அவன் அவளைத் தேடிக் கொண்டு குறி இடத்திற்கு வருகிறான்:

*கொல்லையிலே கொய்யாமரம்! — அவள்*
*கொண்டையிலே தாழம் பூவாம்!*
*தாழம் பூ வாசங்கண்டு — அவன்*
*தடவி வரான் சாமத்திலே!*

அவள் கொண்டையிலே இருக்கும் தாழம்பூவே அவள் இருக்குமிடத்தை அவனுக்கு அறிவிக்கின்றது. தாழம் பூ மணம் அவனுக்கு வழிகாட்டியாக உதவுகின்றது!

தன் உள்ளங் கவர்ந்த மாமனைப் பற்றிக் குமரிப் பெண் ஒருத்தி, கும்மிப் பாடலில் பாடுகின்றாள்.

மாமனின் தோற்றம் நடையுடை ஆகியவை பாடலில் நன்கு வெளிப்படுகின்றன. இனிய ஓசையுடைய சிறந்த சொற்களால் காதல் உணர்ச்சி, வண்ண ஓவியம் தீட்டி விளக்கப் படுகின்றது.

*சின்னஞ் சிறு பொண்ணு நானையா—பழம்*
*தித்திப்பு சர்க்கரை தேனையா!*
*வடக்கே பார்த்த தலைப்பாயாம்! — அவர்க்கு*
*வாசற் படிமேலே நித்திரையாம்!*

*நாகூராருக்கு இளையவரு! — பொண்ணே*
*நல்ல சாத்திரம் கற்றவரு!*
*முடிச்சு வைச்ச தலையப்பா*
*முன் உருவைச்ச குல்லாயாம்!*

*கோங்கு போல வளர்ந்தவரு!*
*கொத்து சரப்பளி தந்தவரு!*
*மாரு பெருத்த நம்ம மாமன்*
*மலாறு போட்டு நடந்தவரு!*

*முன் கையை நீட்டி வளையலிட்டு—ஒரு*
*முன்னூறு பேருக்கு நெல்அளந்து*
*கண்ணாடி போட்டுக் கணக்கெழுதிப் — பார்க்கும்*
*காரியக் காரன்டி நம்மமாமன்!*

*ஏருத மலையில் ஏற்றுவாரு — சாமி*
*ஏற விட்டு ஏணி வாங்குவாரு!*
*புன்னை மரத்துமேல் ஏறுவாரு — கிட்டே*
*பூப்பறித்து மேலே போடுவாரு!*

*சாந்து மாலை சவ்வாதுமாலை — நல்ல*
*சரிகைக் கட்டின வில்லி மாலை!*
*சாந்து அறைக்கிற பொண்ணைக் கண்டால்*
*சன்னலிலே கையை நீட்டுவாரு!*

இடிஞ்ச கோட்டை இடிகோட்டை — சாமி
எந்திரமான வனங்கோட்டை
என்றைக்குக் கோட்டை கட்டுவாரோ?
அன்றைக்கு மஞ்சள் குளிப்போமே!

கடல் நடுவே வலையை வீசி மீன் பிடிக்கின்ற மீனவன் ஒருவன், தன் காதலியை நினைத்துக் கொண்டு,

மஞ்சள் முகம் மினுமினுக்க
மருவுதாடி மாலை நேரம் — ஏ, பிள்ளே!
காலையிலே போன மச்சான்
காணமின்னு பார்க்கிறயா — ஏ, பிள்ளே
காணமின்னு பார்த்துகிட்டு,
கதவோரம் நிற்கிறயா — ஏ, பிள்ளே!

என்று பாடுகின்ருன்! காதலி நிற்கின்ற நிலையைக் கற்பனை செய்து பார்க்கிருன்!

ஏற்றப் பாடல்களில் காதல் காட்சிகள் பல இடம் பெறுகின்றன. ஏற்றம் இறைக்கின்ற இளைஞன், தான் கண்ட மங்கையைப் புகழ்ந்து பாடுகின்ருன்:

ஓடையிலே கண்டேன்
தாழை இளம் பூவை!
தண்ணீரிலே கண்டேன்
தாமரைப் பூச் செண்டை!
ஆழத்திலே கண்டேன்
அல்லி இளம் பூவை!
தூரத்திலே கண்டேன்
துத்தி இளம் பூவை!
ஓடை வடியாமல்—பூவை
ஓடிப் பறிப்பேனு!

நீர் இறைக்கின்ற ஓடை, வடிந்து விடுகின்றது. அவளை அவன் சந்தித்துக் காதல் மொழி பேசிக் களிக்கின்ருன்!

நாடி வந்தேன் பெண்ணே!
நாயகியே உன்னை!
தேடிவந்தேன் பெண்ணே!
தேன் மொழியே உன்னை!
பார்க்க வந்தேன் பெண்ணே!
பாவையரே உன்னை!

குறிசொல்லும் குறத்தியிடம் கூறி, தன் காதல் நிறைவேறுமா என்று கேட்க விரும்புகிருள் ஒருத்தி:

எண்ணமும் எழுத்தும்
சொல்லுவாள் குறத்தி!
சோழ மந்திரத்தால்
பாடுவாள் குறத்தி!

அத்தான், மாமன் முறை உள்ளவர்கள், இளம் பெண்களைக் கேலி செய்து பாடுவதுண்டு. ஏற்றக் காரர்,

கல்லாங் குத்து ஓரம்
கன்று மேய்க்கும் பெண்ணே! — உன்னைக்
கட்டிப் போக வரான்!
எருது மேய்க்கும் பெண்ணே—உன்னை
இட்டுப் போக வரான்!

என்று பாடுகின்ருர், மேலும்,

நாணயமோ பெண்ணே! — உன்
வாணியனுர் எண்ணெய்!
வண்ணுன் துகில் ஆடை
சேணியன் புடவை

செட்டிக்கடை மஞ்சள்
கைக்கோளன் புடவை
ஆட்டக்காரன் சின்னான்
அழைக்கின்றான்டி உன்னை!

என்று கேலி செய்கின்றார். ஒரு பெண்ணின் களவொழுக்கத்தைத் தெரிந்து கொண்டவருக்கு, அந்தப் பெண் கூறும் விடையை ஏற்றப் பாடல் கூறுகின்றது:

“ஏண்டி குசப்பெண்ணே!
இடையனோடு போனே?”
பால் கொடுப்பான் என்று
இடையனிடம் போனேன்!
மோர் கொடுப்பான் என்று
மொந்தை கொண்டு போனேன்!
மந்தை மாடுகளை
மடக்கிவரச் சொன்னான்!
மந்த்த மாடுகளை
மடக்கிக் கொண்டு வந்தேன்!

என்று அவள் கூறியபின், தன்னைப் பற்றி யாரிடமும் எதுவும் கூற வேண்டாமென்று ஏற்றக்காரரைக் கேட்டுக் கொள்ளுகின்றாள்:

சொல்லாதீங்க மாமா! — நான்
சொப்புப் பண்ணித் தாரேன்!
ஏறிவிளையாட
எருது பண்ணித் தாரேன்!
குந்தி விளையாட
குதிரை பண்ணித் தாரேன்

என்று விளையாட்டுச் சிறுமியாகிய அவள் ஏற்றக் காரரையும் விளையாடும் பருவத்தினராய் எண்ணி விடுகின்றாள்!

ஒரு பெண்ணுக்குச் சீமந்த கலியாணம் செய்யப் போவதை ஏற்றப்பாடல் குறிப்பிடுகின்றது:

*ஆனந்தமே பெண்ணே!*
*சீமந்தமாம் நாளை!*
*சீமந்தமாம் நாளை!*
*செல்வக் கலியாணம்*
*செய்யப் போறோம் நாளை!*

கோரைப் பெட்டி செய்து விற்கின்ற பெண்ணிடம் ஒருவன் பேசுகின்றான்; பெட்டிவிலை கேட்கின்றான். அவனது உட்கருத்தைப் புரிந்துகொண்ட அவள், குறிப்பாக விடை கூறிவிடுகின்றாள். பின் வரும் தெம்மாங்குப் பாடலில் அந்த நிகழ்ச்சி இடம் பெறுகின்றது:

*"ஆற்றிலே கோரை வெட்டி*
*அழகழகா பொட்டி பின்னி,*
*தூரத்து சந்தைக்குத்*
*துயரமற்றுப் போறபெண்ணே!*
*பொட்டி விலை சொல்லடி*
*பொட்டி பணம் நான் தாரேன்!"*

*பங்காரு பெட்டி இது!*
*பணம் தண்டலுக்குப் போறப் பெட்டி!*
*வில்லங்க பொட்டி இது!—உன்னால்*
*விலை மதிக்க முடியாது!*

# 9. திருமணப் பாடல்கள்

திருமண நிகழ்ச்சிகளையும், அங்கு நடத்கும் பல்வேறு சடங்குகளையும் கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கும் நாட்டுப் பாடல்கள் மிகச் சிறப்பாக குறிப்பிடுகின்றன. மணமக்களை வாழ்த்தும் பாடல்கள் கருத்தாழம் உடையவை.

*நாளது குறித்து*
*நல்விருந் துண்டு*
*வாழ்வது மங்கைக்கு*
*மனமது குளிர்ந்து*
*நாளைத் திங்கள்*
*நற்கலி யாணம்!*

என்று தொடங்கும் பாடல் திருமண நிகழ்ச்சிகளை முறையாகக் குறிப்பிடுகின்றது.

*பிடிபிடி வெற்றிலை!*
*பிடிதனிற் பிடித்து*
*பாக்கு வெற்றிலை*
*பலபேர்க்குக் கொடுத்து,*
*அன்னமும் தேனும்*
*அனைவோர்க்கும் கொடுத்து,*

தொடங்குகின்றனர் திருமணத்தை. பின்னர்,

*மிக்க மாப்பிள்ளையை*
*விரிதனில் இருத்தி,*
*பெரிய கலத்தில்*
*பிரபல மாக*
*உரிய அரிசி*
*ஒரு மூன்று வள்ளம்*
*முக்காலி தன்னில்*
*முகூர்த்தமாய் வைத்து,*
*பாரிய வெல்லம்.*
*பாக்கு வெற்றிலையும்*
*வரிசை குறையாமல்*
*மதிப்புடன் வைத்து*

செய்ய வேண்டிய சடங்குகளை எல்லாம் செய்கின்றனர். அடுத்த நிகழ்ச்சியாக,

*நாற்காத முள்ள*
*நகரிலுள்ள பந்தலுக்கு*
*ஐங்காத முள்ள*
*அகலமுள்ள பந்தலுக்கு*
*அன்னங்கள் நின்று*
*அலங்கரிக்கும் பந்தலுக்கு*
*தும்பிகள் நின்று*
*துவண்டாடும் பந்துலுக்கு*
*வண்டுகள் நின்று*
*மனங்குளிரும் பந்துலுக்கு*
*இன்பமுடன் மாப்பிள்ளையை*
*இருத்தினர் மணவறையில்!*

இனி, மணமகளை அழைத்து ஆடை அணி தந்து சிறப்பிக்கின்றனர்:

*இணையோங்கு மங்கையரை*
*ஏந்திழையைத் தானழைத்து,*

மந்தாரை மல்லிசையும்
மருக்கொழுந்து மாலையிட்டு,
சந்தனம் புனுகு
சவ்வாது மிகப்பூசி
முல்லை இருவாட்சி
மூனைமுறியாச் சண்பகப்பூ
தண்டைமாலை கொண்டைமாலை
ஆடை ஆபரண
அலங்கிருதம் செய்தபின்பு
பொட்டுமிட்டுப் பொன்முடித்துப்
போதவே அலங்கரித்து,
பட்டமினிக் கட்டினார்
பாரிலுள்ள தாமரைக்கு!

பெரியோரும், உற்றார் உறவினரும் தேவரும் சூழ்மி இருக்கத் திருமணம் சிறப்பாக நடக்கின்றது.

திட்டமுடன் பேழைதனில்
சோறு நிறை நாழிவைத்து
நட்டுமுட்டுத் தான்முழங்க
நாட்டார் சபைக்குவந்து
அத்தனை பேரும்
அனைவோரும் வந்திறங்க,
தாய்மாமன் முன்னே
தவறாமல் பொட்டுமிட்டு
ஆடை ஆபரணம்
அழகுடன் பூண்டு
அம்மி வலமாக
அரசாணி முன்னாக
ஆயிரம் பெருந்திரி
அதுவும் வலமாக
தாக்கரசு நாட்டி
நல்ல முகூர்த்தமிட்டு

பேய்க்கரும்பு நாட்டி
பிரமனது வைத்து,
சந்திரரும் சூரியரும்
சபையோரும் தானறிய
இந்திரனார் நல்லதங்கை
இணையோங்க மாலையிட்டான்!

திருமணத்திற்கு வந்த பெரியோர் மணமக்களை வாழ்த்துகின்றனர்:

ஆல்போல் தழைதழைத்து
அருகதுபோல் வேரூன்றி,
மூங்கில்போல் கிளைகிளைத்து
மூசியாமல் வாழ்ந்திருக்க!
பார்த்தவர்கள் எல்லோரும்
பதினாறும் பெற்றெடுக்க
கேட்டவர்கள் எல்லோரும்
கிளைகோத்திரமாய் வாழ்ந்திருக்க!

திருமணமானபின், பெண்கள், மணமக்களை உட்காரவைத்துப் பாட்டுப் பாடுவர்; மணமகன் தங்கை மணமகளைக் கேலி செய்தும், மணமகள் தங்கை மணமகளைக் கேலி செய்தும் பாடுவர். மணமகளின் தங்கை பாடும் பாட்டு இது:

சம்பந்தம் சம்பந்தம்—எங்கள்
தலைமுறையாய்ச் சம்பந்தம்!
சம்பந்தம் செய்யவந்த
சமர்த்தன்மார் கோடியுண்டு!
பெண்ணின் பெருமைகளும்
பேரன்மார் வீரியமும்
பணத்தின் பெருமைகளும்
பாட்டன்மார் கீர்த்திகளும்

மேலான உத்தியோகம்
மேலெழுந்த தன்குலந்தான்!
பேரான உத்தியோகம்
பேஷ்கார் தாசில்தார்
இவர்கள் குலத்துதித்த
ஏந்திழையை மாலையிட
என்னபாடு பட்டார்
இந்திரனார் உங்கள் அண்ணன்!

என்று பாடி, மாப்பிள்ளை பட்டபாட்டை இன்னும் விரிவாக எடுத்துரைக்கின்றாள்:

மாமா மகளையே
மாலையிட வேணுமென்றார்!
இல்லையென்று சொன்னால்,
ஏற்றிடுவேன் சந்நியாசம்
காவி நனைப்பேன் என்றார்!
காசிக்கும் போவேன் என்றார்!
மாமா மகளையே
மாலையிட வேணுமென்றார்!
எனக்குத் தரவேணும்
இதுவே தருணம் என்றார்!
வேறே பெண்வேண்டாம்
வேண்டாம் காண் கல்யாணம்
அசலூரு பெண்ணுக்கு
ஆசையில்லை என்றுசொன்னார்!
பால்செம்பெடுப்பேன் என்றார்!
பரதேசம் போவேன் என்றார்!

அத்தானைக் கேலி செய்து மைத்துனி பாடல் இது:

கவலையால் அத்தான்
கன்னியாரி சென்றீரோ
கன்னியாரி தேவியிடம் — உங்கள்
கவலையை மொழிந்திரோ?

கல்கண்ட இடமெல்லாம்
காணிக்கை இட்டீரோ!
காணக் கருங்குழலாள்
கன்னிகையாள் எங்கள் அக்காள்!
வீணைதனை எடுத்து
விரலால் ஒலி எழுப்பி
உத்தமியாள் பாடுவதை
ஒதுங்கி நின்று கேட்டீரோ!
பைங்கொடியாள் பாடுவதைப்
பதுங்கி நின்று கேட்டீரோ!
பாட்டின் அழகிலே
பைங்கொடியே வேணுமென்றீர்!
குரலின் இனிமையிலே
குலக்கொடியே வேணுமென்றீர்!
உங்கள் இரக்கத்தைப் — பார்த்து
எல்லோரும் சம்மதித்தோம்!
ஈசன் அருளால் — எங்கள்
ஏந்திழையைக் கைப்பிடித்தீர்!
செய்தோமே கல்யாணம்
சிரஞ்சீவி யாய் இருங்கள்!

என்று வாழ்த்துடன் முடிகிறது பாடல்.

## 10. பிறந்த பெண் போகின்றாள்!

திருமணமானபின் மணப்பெண் தாய்வீட்டை விட்டுத் தன் புதுவீட்டிற்குப் போகின்றாள். தன்னைப் பெற்று வளர்த்துச் சீராட்டி வந்த தாய் தந்தையரை விட்டுப் போகின்றாள்; பிறந்த ஊரை மறந்து உற்றார் உறவினரைப் பிரிந்து போகின்றாள்; உடன் பிறந்தாரையும் தோழியரையும் பிரிந்து புதிய சூழ்நிலைக்குப் போகின்றாள். போகின்ற இடத்திலே அவள் பெருமையோடு வாழ வேண்டும், சிறப்போடு வாழ வேண்டும் என்ற வேட்கையோடு உறுதியான நம்பிக்கையோடு போகின்றாள்; நம்பிக்கையான எதிர் காலத்தை நோக்கி ஒவ்வொரு அடியையும் மெல்லமெல்ல எடுத்து வைத்துக்கொண்டு போகின்றாள்; ஆயிரம் ஆயிரம் உணர்ச்சி வெள்ளம் அலைமோத, எண்ணற்ற நினைவலைகள் பின்னிப் படர, சொற்களால் சொல்ல முடியாத இன்பமும், துன்பமும் கலந்த நினைவோடு அவள் போகின்றாள். பிறந்த வீட்டைப் பிரிந்துவரும் துன்பம் ஒருபுறம்! எதிர்கால வாழ்வோடு கலந்து மகிழும் இன்பம் ஒருபுறம்!

ஒலையக்கா கொண்டையிலே
ஒருசாடு தாழம்பூ!

தாழம்பூச் சிற்றாடை
தலைநிறைய முக்காடு!
தான்போட்ட சிந்தாக்கை
தான்கழற்ற மாட்டாமல்
தாயோடு சீராடி
தான்போறாள் ஓலையக்கா!

பிறந்த வீட்டிலிருந்து இவ்வாறு புறப்படுகின்றாள் ஓலையக்கா.

நாழிநாழி நெல்லுகுத்தி
நடுக்கிணற்றில் பொங்கல்வைத்து
நாட்டாரைக் கூட்டமிட்டு
நடந்து போறாள் ஓலையக்கா!
கும்பந் தலையிலே
கோடாலி தோளிலே!
வன்னி மரம்பிளக்க
வருகிறாளாம் ஓலையக்கா!

தாய் வீட்டார் தந்த வரிசைகளையும் பரிசுப் பொருள்களையும் எடுத்துக் கொண்டு புறப்படுகின்றாள்.

ஓலையக்கா கொண்டையிலே
ஒருசாடு தாழம்பூ!
தாழம்பூச் சுற்றிவரத்
தாம்பாளங் கொட்டிவரக்
கட்டை தளதளென்ன
கண்ணாடி மினுமினுக்க,
பொழுது தளதளென்ன
புறப்பட்டாளாம் ஓலையக்கா!
அஞ்சடுக்குச் சட்டுவமாம்!
அரும்பேத்த மண்டபமாம்!
கொண்டெடுக்க மாட்டாம
குடிபோகிறாள் ஓலையக்கா!

சாடு—கூடை.

குதிரை முதல் கோழிவரை எல்லாப் பொருள்களேயும் எடுத்துக் கொண்டு கொத்தளத்தார் குடை பிடிக்கச் செல்கின்ருள்:

பொரும்பி யடியிலே
பொறிக்கோழி மேய்கையிலே
பொரும்பி யலேகொட்ட
போருளாம் ஓலேயக்கா!
தகரை யடியிலே
தன்கோழி மேய்கையிலே
தகரையலே கொட்டத்தான்
தான்போருள் ஓலேயக்கா!
அவரை சலசலன்ன
ஆடிமீன் ஓடிவர
குதிரை எல்லாம் கொஞ்சிவரக்
கொத்தளத்தார் குடைபிடிக்க
மேளுட்டு ஓலேயக்கா
மேற்கே குடிபோருள்!

தாய்வீட்டார் இவ்வளவுசீர்வரிசை தந்தும், ஓலே யக்காவின் நெஞ்சம் நிறையவில்லே. மஞ்சளும் மாலே யும் சேலேயும் குறைவாக உள்ளன என்று மயங்கு கின்ருள்; சிணுங்குகின்ருள்:

மஞ்சள் அறுபதென்பாள்
மயிர்க்கோதி முப்பதென்பாள்!
மஞ்சள் குறைச்சலென்னு
மயங்குருளாம் ஓலேயக்கா!
மாலே அறுப தென்பாள்
மயிர்க்கோதி முப்பதென்பாள்!
மாலே குறைச்சலென்னு
மயங்குருளாம் ஓலேயக்கா!

சீலே அறுபதென்பாள்
சிற்றுடை முப்பதென்பாள்!
சீலே குறைச்சலென்னு
சிணுங்குறாளாம் ஓலேயக்கா!

தான் பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்த சீர் வரிசைகளை எல்லாம் புகுந்த வீட்டுப் பந்தலிலே கொண்டுவந்து வைக்கின்றாள்:

பாக்குப் பதின்கலமாம்!
பச்சரிசி முக்கலமாம்!
எண்ணெய் இருநாழி;
இளந்தேங்காய் பத்தெட்டு;
இத்தனையும் கொண்டுவந்து
இறக்கினாள் பந்தலிலே!

பந்தலிலே புதுமணல் பரப்பிச் சீர்வரிசைகளை எடுத்து வைக்கிறாள்:

கடுகாம் சிறுமிளகாம்!
காரணத்துக் கற்பூரமாம்!
நடுவே மணல் பரப்பி
நல்லோலே புல்லோலே
நாட்டுப் பனையோலே
பேழைகொண்டு வருவாளாம்!

புது வீட்டில் குடிபுகுந்து ஓலேயக்கா சமைக்கத் தொடங்குகிறாள்:

முச்சிவைத்து முறம்வைத்து
மூன்றிற்கு ராட்டைவைத்து,
பானை கரி கழுவி,

*பன்னீர் உலே வைத்து,*
*தென்னல் அரிசியைத்*
*தீட்டிச் சமைத்துவைத்து*
*ஆக்கினுள் சோறுகறி*
*அலரிப்பூத் தன்னிறமாய்!*
*பொங்கினுள் சோறுகறி*
*பொரசம்பூத் தன்னிறமாய்!*

இவ்வாறு பெண் ஒரு வீட்டில் பிறந்து வளர்ந்து தக்க வயது வந்ததும் இன்னொரு வீட்டிற்கு வந்து தன் வாழ்க்கையை அங்குள்ளவர்களோடு பிணைத்து அவர்களோடு கலந்து விடுகின்றுள்! மலையிலே பிறக்கின்ற ஆறு கடலில் கலந்து விடுவது போன்றது இது!

இப்பாடல்கள் யாவும் கொங்குமாவட்டத்தில் வழங்குகின்றன.

## 11. கண்ணீரில் பூத்த கவிதை மலர்கள்

ஒப்பாரிப் பாடல்கள் கண்ணீரில் பூத்த கவிதை மலர்கள். துன்புற்று நலியும் பெண் உள்ளத்தில் பிறக்கும் அப்பாடல்கள் கேட்பவர் நெஞ்சத்தை நெகிழச் செய்கின்றன.

அருமையாய் வளர்ந்த பெண் ஒருத்தி சின்னஞ் சிறு வயதிலேயே கணவனை இழந்துவிடுகிருள். அவள் நெஞ்சத்திலிருந்து எழும் துன்ப அலைகள் பாடலாய் உருப்பெறுகின்றன.

*பவளம் விளைஞ்ச தென்னு*
*பக்கத்திலே வைத்திருந்து,*
*பவளம்விலை வந்ததென்று*
*பதறிவிலை கூறினீரே!*
*முத்து விளைஞ்சதென்னு*
*மூலையிலே வைத்திருந்து,*
*முத்துவிலை வந்ததென்று*
*முடிவிலை கூறினீரே!*

என்று அவசரமாய்த் திருமண ஏற்பாட்டைச் செய்து விட்டதை எண்ணி வருந்துகின்ருள். தான் வளர்ந்த

அருமைப்பாட்டை நினைக்க நினைக்க அவளுக்கு எல்லையற்ற துன்பம் பெருகுகின்றது:

*பள்ளிக் கூடமிருந்து*
*படித்துவரும் நாளையிலே,*
*ஒருபணத்துச் சித்தாடை*
*உடுத்தி விளையாடையிலே,*
*உருண்டை மணிகட்டி*
*ஓடி விளையாடையிலே,*
*தண்டை சிலம்பமிட்டுத்*
*தவழ்ந்து விளையாடையிலே,*
*கணக்குகளைக் கருதிக்*
*காரியமாய்ப் பார்க்கையிலே*
*மாமன் மகள் என்று*
*மருவில்லாப் பெண்வளர்ந்தேன்;*
*அம்மான் மகள் என்று*
*அருமையாய்ப் பெண்வளர்ந்தேன்!*

இவ்வளவு அருமையாய் வளர்த்து மிக விரைவில் திருமணம் முடித்த பின் தனக்கு நேர்ந்துவிட்ட துன்பத்தைப் பாடுகின்றாள்:

*தாலிக்கு அரும்பெடுத்த*
*தட்டானும் கண்குருடோ?*
*சேலைக்கு நூலெடுத்த*
*சேணியனும் கண் குருடோ?*
*பஞ்சாங்கம் பார்க்கவந்த*
*பார்ப்பானும் கண்குருடோ?*
*எழுதினவன் தான் குருடோ*
*எழுத்தாணி கூர் இல்லையோ?*
*கட்டிய சேலை இன்னும்*
*கசங்கி மடியவில்லை!*

வச்ச பூ இன்னம்
வாசம் குறையவில்லே!
மஞ்சள் கலேயவில்லே
மடிப்புக் குலேயவில்லே!
தாலி கொண்டுவந்த
தட்டானும் போகலேயே
மாலே கொண்டுவந்த
வயிராவி போகலேயே!
பந்தல் பிரிக்கலேயே!
வந்தசனம் போகலேயே!
கலியாணப் பானேகளும்
கழுவிக் கவுக்கலேயே!
பணியராம் சுட்ட சட்டி
பாதிமணம் போகலேயே!

கணவனும் தானும் சில ஆண்டுகள் வாழ்ந்த பின் கணவனே இழந்த ஒருத்தி பின் வருமாறு புலம்புகிருள்:

சோறு சுடுதுண்ணு
துகில் எடுத்து ஆத்திவந்தேன்!
பாலு சுடுதுண்ணு
பட்டு எடுத்து ஆத்தி வந்தேன்!
சின்ன வயதில் என்னேச்
சீரழித்துப் பார்த்தீரே!
கன்னி வயதில் என்னேக்
கற்பழித்துப் பார்த்தீரே!
என்னேக் கெடுக்க என்று
எதவாய் வளர்ந்தீரே-என்
வாழ்வைக் குறைக்கவென்று
வளர்ந்தும் இருந்தீரே!
பத்து பிராயத்திலே-நான்

*பால் குடிக்கும் நாளையிலே*
*ஆணழகர் மாலையிட்டு-என்னை*
*அழகாக வைத்திருந்தீர்!*
*கட்டழகர் மாலையிட்டு-என்னைக்*
*காட்சியுடன் வைத்திருந்தீர்!*
*காட்சி குலைத்துவிட்டு-இப்போ*
*கர்த்தன் பதி நடந்தீர்!*
*மகிழ்ச்சி குலைத்துவிட்டீர்-என்னை*
*மண்மேல் படுத்திவிட்டீர்*
*கொண்ட அருமை என்னே-இப்போது*
*கோலம் வந்த நேர்த்தி என்னே!*

கணவனும் மனைவியுமாய்க் கூடி வாழும் அன்பு வாழ்க்கையில் மலரும் இன்ப மலர்கள் குழந்தைகள். குழந்தைகளைப் பெற்று மகிழ்ந்து வாழும் நாட்களில் குழந்தையை இழந்து வருந்துபவர் உண்டு. குழந்தையை இழந்தவருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு அது. குழந்தையை இழந்த தாய் நெஞ்சம் ஓலமிடுகின்றது:

*பிள்ளையில்லா வாழ்வு*
*பேய் வாழ்வு என்று சொன்னோம்!*
*பூமியிற் புரண்டழுதேன்*
*புழுவாய்த் துடித் தழுதோம்!*
*பின்னிப் பின்னிச் சொல்லியுந்தான்*
*பிடிக்க வந்தான் கேட்கலையே!*
*அழைக்க வந்த எமனுக்கு*
*அனேக திரவியமும்*
*ஆனைவிடாய் தாரமின்னம்!*
*அனேக திரவியமும்*
*ஆனைவிடாய் தேவையில்லை*
*அழகான மைந்தனை*

அழைக்க வருவமின்னுன்!
ஈகடிக்கச் சம்மதியோம்!
எமன் வரச் சம்மதித்தோம்!
காற்றடிக்கச் சம்மதியோம்
காலன் வரச் சம்மதித்தோம்.

கடவுள் தன் குழந்தைக்கு நீண்ட வாழ்நாளைத் தரவில்லை என்று துன்புறுகின்ருள் தாய்.

தாயார் வயித்திலே
சனித்தநாள் செல்லாச்சா
தவமுனிவர் தன்னிடத்தில்
தவம் வாங்கி வந்த
தவனை சரியாச்சா?
அழகை எழுதினவன்
ஆயுசை எழுதலையே!
ஆயுசை எழுத
அசத்திட்டு இருந்தானு?
வடிவை எழுதினவன்
வயதை எழுத
மறந்திட்டு இருந்தானு?

குழந்தையின் அழகையும் வளர்ந்த அருமையையும் எண்ணி உருகுகின்ருள் தாய்:

கால் அழகும் கை அழகும்
கட்டைவிரல் லெட்சணமும்
தோள் அழகும் கால்அழகும்
சுண்டுவிரல் லெட்சணமும்
நீலமுழிக் கண்கள்ரெண்டும்
திலக்கறையான் திங்கவிட்டோம்!
மைல முழிக் கண்கள் ரெண்டும்

மண்கறையான் திங்கவிட்டோம்!
கோலமுழிக் கண்கள் ரெண்டும்
குழிக்கறையான் திங்கவிட்டோம்!

தன் குழந்தையை அழகிய கிளி என்றும், அதனைக் கூவும் பருவத்தில் - பறக்கும் காலத்தில் இழந்து விட்டதாய்க் கூறித் தாய் வருந்துகிருள்.

அன்னக் கிளியே!
ஆடும் பசுங்கிளியே!
ஆலிலைத் தொங்கலிலே
ஆடும் பசுங்கிளியே!
அன்னக் கிளிவளர்த்து
ஆடையிலே தப்பவிட்டோம்!
கொஞ்சும் கிளி வளர்த்துக்
கூவையிலே தப்பவிட்டோம்!
பச்சைக் கிளியே!
பறக்கும் பசுங்கிளியே!
பச்சைக் கிளி தொங்கலிலே
பறக்கும் பசுங்கிளியே!
பொன்னங் கிளி வளர்த்துப்
போகவிட்டு ஏங்கி நின்ளும்!
பச்சைக் கிளிவளர்த்துப்
பறக்கையிலே தப்பவிட்டோம்!

திருமணமாகும் பருவத்தில் காளையாய் விளங்கிய தன் மகனை இழந்துவிட்ட தாய்,

கன்னியரைக் கைபிடிச்சா
கணபாவம் சுத்துமின்னு
மங்கையரை மாலையிட்டா

*மாபாவம் சுத்துமின்னு*
*தன் பாவம் கொண்டு*
*தனிவழியே போனனே!*

என்று இரங்குகின்ருள். மணந்து, பூத்து, காய்த்துப் பொலிய வேண்டிய தன் மகனை இழந்தவளின் ஏக்கம் பெரிது! மிகப் பெரிது!

தாய் இறந்த சேதி கேட்டு மகள் நெஞ்சம் புலம்புகின்றது. உடனே சென்று காணத் துடிக்கின்ருள் அவள். விரைந்து செல்லும் மோட்டார் ஏறிச் செல்ல விரும்புகின்ருள்.

*சங்கு மணியடிக்கும்*
*சமர்த்துள்ள மோட்டாரு!*
*மோட்டாரு மேலே ஏறி*
*முன்னே வரக் காணேனே!*
*குண்டு மணியடிக்கும்*
*கோபமுள்ள மோட்டாரு!*
*மோட்டாரு மேலே ஏறி*
*முன்னேவரக் காணேனே!*
*வேணு மணியடிக்கும்*
*வேகமுள்ள மோட்டாரு!*
*மோட்டாரு மேலே வந்து*
*விழுந்தழுவக் காணேனே!*

சீரும் சிறப்புமாய் வாழ்ந்த தன் தாய் இறந்து விட்ட மாயத்தை எண்ணி வருந்துகிருள்.

*தங்கக் கட்டிலுண்டு-*
*என்னைப் பெற்ற மாதாவே!*

*தாழம்பூ மெத்தையுண்டு!*
*தாழம்பூ மெத்தையிலே*
*தாயார் படுத்திருப்பாய்!*
*தாயாரே நீ போன*
*தடமும் தெரியலையே!*
*மாணிக்கக் கட்டிலுண்டு-*
*என்னைப் பெற்ற மாதாவே!*
*மல்லிகைப் பூ மெத்தையுண்டு!*
*மல்லிகைப் பூ மெத்தையிலே*
*மாதா படுத்திருப்பாய்!*
*மாதாவே நீ போன*
*மாயை தெரியலையே!*

பூவோடு, பொட்டோடு, மஞ்சளோடு, மங்கல நாணேடு இறந்துவிட்ட தாயின் அருகே இருந்து மகள் புலம்புகின்ருள்:

*பொட்டோடே மையோடே*
*பிறந்த கொடியோடே*
*போடுசரப் பட்டோடே*
*பூந்தோப்பு மாலைவந்து*
*பொய்கையிலே நீர்மோந்து*
*பூமியிலே நீராடி*
*பொட்டியிலே பொன்கழற்றி*
*பொறுமை உள்ளார் கைகொடுத்து*
*பூவோடே தீ கலக்க*
*புண்ணியங்கள் செய்த ஆத்தா!*
*மல்லிகைப் பூவோடே*
*மடிப்பொசந்த பட்டோடே*
*வரிசை முத்துக் கையாலே*
*மலர் வாங்கிப் போன ஆத்தா!*
*செடிகள் மணமணக்க*

சித்தாடை திப் பறக்கச்
செடி எல்லாம் பால் வடிய
செல்லத் தீ கொண்ட ஆத்தா!
மஞ்சக் கழுத்தோடே
மடிநிறைஞ்ச பூவோடே
மன்னவர்க்கு முன்னாலே
வைகுந்தம் போனியம்மா
தாலிக் கழுத்தோடே
தலைநிறைந்த பூவோடே
தனஞ்சயற்கு முன்னாலே
தனிப்பட்டுப் போனியம்மா!

'செத்த பிணத்திற்கும் சீர் இட்டு அழு' என்பது பழமொழி. மஞ்சள் குங்குமத்தோடு இறந்துவிட்ட அன்னையை வாண வெடிகளுடன் எடுத்துச் சொல்லுகின்றனர். அந் நிகழ்ச்சியைப்பாடல் ஓவியம் எழுதிக் காட்டுகின்றது:

பச்சைக் கிளி எழுதிப்
பாங்கான வேட்டெழுப்பி
பார்வதியாள் போய்ச் சேர்ந்த
பாதை தெரியலையே!
வீதியிலே போறவர்கள்
வெள்ளிரதம் ஏதென்பார்!
வீமருட அம்மை செத்து,
வெள்ளிரதம் போகுதென்பார்!
தரையிலே போறவர்கள்
தங்கரதம் ஏதென்பர்!
தருமருட அம்மைசெத்து,
தங்கரதம் போகுதென்பார்!
முக்குக்கு முக்கு
முடிமன்னர் தோள் மாற்ற

சந்திக்குச் சந்தி
சரிமன்னர் தோள் மாற்ற
தீர்த்தக் கரையிலே
தீவெளிச்சம் யாதென்பார்!
சீராமர் அம்மை செத்து
தீப்பட்டு வேகுதென்பார்!
ஆற்றங் கரையிலே
அனல் வெளிச்சம் யாதென்பார்!
அருச்சுனர் அம்மைசெத்து
அனல்பட்டு வேகுதென்பார்!

தாய் இருந்தவரை பிறந்த பெண்ணுக்கு சீர் இருந்தது; பிறந்த இடத்தில் மதிப்பு இருந்தது. தாய் இறந்த பின்பு, உடன்பிறந்த அண்ணனின் அன்பும் குறைகின்றது; அண்ணனுக்கு வாழ்க்கைத் துணைவியாக வாய்த்தவளும் பிறந்த பெண்ணை மதிக்கவில்லை:

கத்தரியும் பாவலும்
கலந்து படர்ந்த இடம்!
கருணர் அம்மை போனவுடன்
கசந்தோம் பொறந்த (இ)டத்தை!
வெள்ளிரியும் பாவலும்
வீசிப் படர்ந்த இடம்!
வீமர் அம்மை போனவுடன்
வெறுத்தோம் பொறந்த (இ)டத்தை!
வேலியிலே வெள்ளறுகு
வீமரோ எம்பொறப்பான்!
வீமருக்கு வந்தவள்—எங்களை
விலையா மதிக்கலையே!
கள்ளியிலே வெள்ளறுகு
கருணரோ எம்பொறப்பான்!
கருணருக்கு வந்தவள்—எங்களைக்
காசா மதிக்கலையே!

பிறந்த பெண்ணின் நிலை இதுவானால், அவள் வயிற்றில் பிறந்த பிள்ளைகளை யார் கவனிக்கப் போகின்றனர்?

*மானம் இருட்டி*
*மழை இருட்டி வந்தாக்கா(ல்)—இந்த*
*மாதளம் பூத்திண்ணையிலே—எங்கள்*
*மக்களருமை யார் அறிவார்?*
*பூமி இருட்டி,*
*பொழுதிறங்கி வந்தாக்கா(ல்)—இந்த*
*பூப்போலத் திண்ணையிலே—எங்கள்*
*பிள்ளையருமை யார் அறிவார்?*

மதிப்புத் தராத வீட்டிற்குப் பிறந்த பெண் போக விரும்பவில்லை! பிறந்து வளர்ந்த வீட்டில் இன்று அவளுக்குக் கால் வைக்க இடமில்லை!

*பூத்த முருங்கைதான்!*
*பொன்பதித்த மாளிகைதான்*
*பொன்பதித்த மாளிகைதான்!*
*பொன்பதித்த மாளிகையில்*
*போய்இறங்க நீதியில்லை!*
*காய்த்த முருங்கைதான்!*
*கல்பதித்த மாளிகைதான்*
*கல்பதித்த மாளிகையில்*
*கால்வைக்க நீதியில்லை!*

பிறந்த வீட்டிற்குக் கரும்பாக இருந்த பிறந்த பெண் இன்று வேம்பாக மாறிவிட்டாள்.

*சித்தகத்தி யானோம்!*
*சில நாள் கரும்பானோம்!*
*முற்றும் கசப்பானோம்!*

முற்றத்து வேம்பானேம்!
வேணுமென்ற காலத்தில்
வேம்பும் கரும்பானேம்!
வேண்டாத காலத்தில்
கரும்பும் கசப்பானேம்!

முன்பெல்லாம் தாய்வீட்டை நம்பி, வளமான எதிர்காலம் தனக்கு உண்டு என்று மனம் மகிழ்ந்திருந்தாள். இன்று...?

ஆத்திலே ஊத்துத் தோண்டி
அழகு சம்பா நாத்துவிட்டேன்!
ஆத்திலே ஊற்று வற்றி
அழகு சம்பா வாடுதய்யோ!

இன்று அவள் ஆசையில் மண் விழுந்துவிட்டது! எதிர்காலம் பற்றிய இன்பமான கற்பனைகள் தகர்ந்து விட்டன!

தாய் உயிருடன் இருக்கும்போதே, அவள் பெற்ற மகள் இறந்துவிடுகிருள். வயது முதிர்ந்த தாய் இருக்க, வாழவேண்டிய மகள் இறப்பது எத்தகைய துன்பமான நிலை! மகளைப் பறி கொடுத்தத் தாய்,

தேரோடும் வீதியிலே
நீ பெற்ற மக்களைத்
தேடிவரப் போனயோ!
தேடிப் பிடித்துக் கொண்டு
தெருவில் வரக் காணேனே!
மாடு ஓடும் வீதியிலே
நீ பெற்ற மக்களை
மறித்துவரப் போனயோ!

*பார்த்துப் பிடித்தணைத்துப்*
*பக்கம் வரக் காணேனே!*

என்று புலம்புகின்றாள்.

முன்பு மகளை இழந்து வருந்திய தாய், இப்போது கணவனை இழந்து விட்டாள். கணவனை நோக்கி,

*முறுக்குத் திருப்பலகை*
*மூணுவரான் கைப்பலகை!*
*மூத்த மகள் இல்லாமல்*
*முடியலையோ உன் தேரு?*
*அரக்குத் திருப்பலகை*
*அஞ்சுவரான் கைப்பலகை!*
*ஆசைமகள் இல்லாமல்*
*அசையலையோ உன் தேரு?*

என்று கேட்டு அழுகின்றாள்.

முன்னோர் தேடி வைத்த சொத்து எதுவும் இல்லாமல் தன் முயற்சியாலே முன்னுக்கு வந்த ஒருவர் இறந்துவிடுகின்றார். அவர் மனைவி,

*அப்பன் முதலுமில்லை!*
*அய்யாக்கள் சொத்துமில்லை!*
*மூந்தி முதலுமில்லை!*
*முப்பாட்டன் சொத்துமில்லை!*
*தன் புத்தியாலே*
*தகுந்த குடியானார்!*
*எட்டுக் கடை பார்ப்பார்!*
*எதிர்த்தகடை மேல்பார்ப்பார்!*
*எட்டுலட்சம் கொண்டுவரும்*
*இந்திரரைத் தப்பவிட்டேன்!*

*பத்துக் கடை பார்ப்பார்!*
*பழைய கடை மேல்பார்ப்பார்!*
*பத்துலட்சம் கொண்டு வரும்*
*பாண்டியரைத் தப்பவிட்டேன்!*

என்று தன் துயரத்தை வெளிப்படுத்துகின்றாள்.

அக்காளும் தம்பியுமாய் இன்பமாக வாழ்ந்த குடும்பத்தில் தாய் இறந்து விடுகின்றாள். உலகம் அறியாதசிறுவனை எண்ணி— அவன் எதிர்காலத்தை எண்ணி—பாதுகாப்பார் இல்லாத அவன் நிலையை எண்ணி அக்காள் வருந்துகின்றாள். தன் தம்பியின் நிலையைத் தாயிடம் முறையிட்டு அழுகின்றாள்.

*பானையிலே தண்ணீ(ர்) மொண்டு*
*— எனைப் பெற்ற அம்மா,*
*நீங்க போகும்*
*பாதையிலே வைச்சேன்னு*
*— உங்களுக்கு அந்தப்*
*பானை நிழல் காக்கும்— நீ பெற்ற*
*பாலகனை யார்காப்பார்?*

தன்னைப்பேணிக் காப்பவரும் இல்லையே என்றும் புலம்புகின்றாள்.

*சொம்பிலே தண்ணீ(ர்) மொண்டு*
*— என்னைப் பெற்றீரே*
*நீ போகும்*
*சுடலையிலே வைச்சேன்னு*
*— உங்களுக்கு அந்தச்*
*சொம்பு நிழல் காக்கும்—நீ பெற்ற*
*சுந்தரியை யார்காப்பார்?*

தாயை இழந்து தவிப்பவருக்கு, எல்லோரும் ஆறுதல் கூறுகின்றனர். அவர்கள் கூறுகின்ற ஆறுதல் மொழிகளால் தன் துன்பம் நீங்கவில்லை என்கிறாள் அவள்:

பழனி மலை யோரம்
பட்டணத்து ரோட்டோரம்
— எனைப் பெற்ற அம்மாவைக்
காணோமின்னு நான்
பாவியழுது வந்தேன்!—இந்தப்
பட்டணத்தில் உள்ளவர்கள்
...“உங்க அம்மா போல,
படம் எழுதித் தாரோம்!” என்றார்
படமெல்லாம் சேர்ந்தாலும்—
எனைப் பெற்ற
பாங்கி போல ஆகுமா—இந்தப்
பாவி குறை நீங்குமா?
செஞ்சி மலை யோரம்
சீரங்கத்து ரோட்டோரம்
— எனைப்பெற்ற
சீதையைக் காணோம் என்று—நான்
சுற்றி அழுது வந்தேன்!
செஞ்சி ஜனமெல்லாம்
— “உன் அம்மா போல,
சிலை எழுதித் தாரோம்!” என்றார்.
சிலை எல்லாம் சேர்ந்தாலும்
— எனைப் பெற்ற
சீதைபோல ஆகுமா! — இந்தச்
செல்வி குறை நீங்குமா?
ராமர் கட்டி மேடையிலே
ரயில் போகும் வீதியிலே
— என்பிறப்புச் சேனைகளா,

*ராணி நான் நின்னழுதால்—இந்த*
*ராஜ்ஜியமும் தானழுவும்!*

தாய் இருந்த போது, தாய் வீட்டில் தனக்கு இருந்த உரிமை, கிடைத்த சுகம் ஆகியவற்றை எண்ணிப் பார்க்கின்றாள்:

*உரிமை ரயில் ஏறி—நான்*
*ஒரு மணிக்கு வீடு வந்தால்*
*— எனைப் பெற்ற அம்மா,*
*நீ பெற்ற செல்விக்கு*
*வீடு திறந்திருக்கும்!*
*ஊஞ்சலிலே பால் ஆறும்!*
*காலை ரயில் ஏறி*
*கால் மணிக்கு வீடு வந்தால்*
*— என்னைப் பெற்ற அம்மா,*
*உன் செல்விக்கு*
*கதவு திறந்திருக்கும்!*
*கட்டிலே பால் ஆறும்!*

தன் நெஞ்சத்தில் நிரம்பிக் கிடக்கும் துன்பத்தையும், அவலம் நிறைந்த வாழ்க்கையையும் சொல்லி அழும் போது வடிக்கின்ற கண்ணீர் வெள்ளம் குளத்தை நிரப்பும்; கடலை நிரப்பும் என்று பாடுகின்றாள்:

*குங்கும வில்வமரம்*
*கோயில் மதில் ஓரம்—நான்*
*குந்தி அழுதேன் என்றால்*
*குளத்தங்கரை நீரோடும்!*
*சந்தன வில்வமரம்*
*சாமி மதில் ஓரம்*
*— என்னைப் பெற்ற அம்மாவே,*

*சாய்ஞ்சி அழுதேன் என்றால்*
*சமுத்திரம் நீரோடும்!*

தன் துன்பமான வாழ்க்கையைப் பாடினால், புருக்களும் வருந்தும் என்று பாடுகின்றாள்:

*சங்கஞ்செடி சங்கம் புதர்*
*சமுத்திரத்து ராமர் புரு!*
*— என் சரித்திரத்தைச் சொல்லி*
*நான் அழுதால்,*
*சமுத்திரத்து ராமர் புரு*
*சாதம் எடுக்கப் போவதில்லை!*
*ஈச்சஞ்செடி ஈச்சம் புதர்*
*ஏலகிரி ராமர் புரு*
*— என் எழுத்தைச் சொல்லி*
*நான் அழுதால் அந்த*
*ஏலகிரி ராமர் புரு*
*இரை எடுக்கப் போவதில்லை!*

ஆற்றோரமும் குளத்தோரமும் உள்ள சுடுகாட்டில் வேகின்ற சவத்தைப் பார்த்துப் பாடியபாடல் இது:

*ஆற்றிலே கூட்டமென்ன!*
*அலரி விருட்சமென்ன!*
*அதிகார ராமர் பட்டி—அங்கே*
*அனல் போட்டு வீசுதம்மா!*
*குளத்திலே கூட்டமென்ன!*
*கம்பல் வெளிச்சமென்ன!*
*கொலைகார ராமர் பட்டி*
*கொழுந்தோடி வீசுதம்மா!*

உறவினரில் திருமணம் முடிக்காமல் தன்னை அயலாருக்கு மணம் முடித்ததை எண்ணி வருந்து

கின்றாள். அயலாருக்கு வாழ்க்கைப்பட்ட அவள், தன் தாயை நொந்து கொள்கின்றாள். மிகவும் அவ சரப்பட்டு—பொறுத்திருந்து பார்க்காமல் திருமணம் முடித்ததைச் சொல்லிப் புலம்புகின்றாள்:

*கொத்து எலுமிச்சை!—நான்*
*கோத்திரத்து நல்பவழம்!—என்னைக்*
*கோக்க முடியலேன்னு—அம்மா, எனக்குக்*
*குறையும் மெத்த வைச்சிங்களா?*
*சாதி எலுமிச்சை!—நான்*
*சமுத்திரத்து நல் பவழம்!—என்னைச்*
*சுமக்க முடியலேன்னு—எனக்குச்*
*சதிமோசம பண்ணிங்களா?*
*கடுகும் சீரகமும்*
*கலந்து விதைச்சிங்களா?*
*— அம்மா, நான்*
*காந்தாளக் காரின்னு—எனக்குக்*
*கடக்க ஊர் பார்த்தீங்களா?*
*வெந்தயமும் சீரகமும்*
*வீசி விதைச்சிங்களா!—நான்*
*வேதாளக் காரின்னு—எனக்கு*
*வேறே ஊர் பார்த்திங்களா?*
*குளத்துப் பசரெடுத்து,*
*கொடிப் பசரு தொன்னை தைச்சி*
*— அம்மா, இன்னிக்கு,*
*குழந்தையாகும் நாளையிலே—என்னைக்*
*குமுற வைக்கப் போறீங்களா!*
*ஆற்றுப் பசரெடுத்து,*
*அடிப்பசரு தொன்னை தைச்சி*
*— அம்மா, நான்*
*ஆளாகும் நாளையிலே—என்னை*
*அலைய வைக்கப் போறீங்களா!*

நெருக்கமான உறவில் தன்க்குத் திருமணம் செய்திருந்தால், எல்லாவகையான பெருமைகளும் ஏற்பட்டிருக்கும்; தூரத்து உறவு ஆதலால்—புதிய தொடர்பு ஆதலால் தன்னை ஒருவரும் மதிக்கவில்லை என்று மனம் நொந்து பாடுகின்றாள்:

*செஞ்சி மரப்பாச்சி—*
*எங்க அம்மா வீட்டில்,*
*சுவர் மேலே கண்ணாடி! — நான்*
*சீரழிஞ்ச மங்கையின்னு—என்னைச்*
*சேனை மிதிக்கலையே! — இந்தச்*
*செல்லி குறை நீங்கலையே!*
*வைய புரட்டாசி*
*வடக்கத்தியார் தை நோன்பு*
*—இன்னிக்கு நான்*
*வழியோட இருந்தால்*
*வருந்தி அழைப்பாங்க—எனக்கு*
*வரிசையிட்டுப் பார்ப்பாங்க!—நான்*
*வழிதவறிப் போனேன் —என்று*
*வருத்தி அழைக்கலையே!—பாவிக்கு*
*வரிசையிட்டுப் பார்ப்பார் இல்லே!*
*திங்கள் புரட்டாசி*
*தேசத்தார் தை நோன்பு*
*—சரியாய் இருந்தால் என்னைத்*
*தேடி அழைப்பாங்க!*
*சீரிட்டுப் பார்ப்பாங்க!—நான்*
*சரிதவறிப் போனேன்னு*
*தேடி அழைப்பார் இல்லே—எனக்குச்*
*சீர் இட்டுப் பார்ப்பார் இல்லே!*

தாய் வீட்டில், இனிமேல் தனக்குச் செல்வாக்கு இருக்காது என்பதை எண்ணி வாடுகின்றாள் பிறந்த பெண்:

*தவலையிலே தண்ணீ(ர்) மொண்டு*
*—எனைப் பெற்றவரே!*
*தாழம்பூ ஏடு கட்டி—எனக்குத்*
*தவலை உருண்டதம்மா!—நீ பெற்ற*
*தாழம்பூ வாடுதம்மா!*
*லோட்டாவிலே தண்ணீ(ர்) மொண்டு*
*ரோஜாப்பூ ஏடுகட்டி*
*லோட்டா உருண்டதம்மா—நீ பெற்ற*
*ரோஜாப்பூ வாடுதம்மா!*
*சாணியைப் பரப்பியல்லோ*
*சாமந்திப் பூ நாற்று விட்டோம்—எங்கள்*
*சாணி சறுக்குதையா!*
*சாமந்திப் பூ வாடுதையா!*
*மணலை நிரப்பியல்லோ*
*மல்லிகைப்பூ நாற்று விட்டோம்*
*மணலும் சறுக்குதையோ!*
*மல்லிகைப் பூ வாடுதையோ!*

ஆண்குழந்தை பெற்றெடுத்த தாய், அதனைச் சீராட்டிப் பாராட்டிப் போற்றி வளர்க்கின்றாள். வளர் பிறைபோல் வளர்ந்து வந்த பிள்ளை, திடீரென்று இறந்து விடுகின்றது. பிள்ளையைப் பறி கொடுத்த வள் நெஞ்சத்திலிருந்து துன்பவெள்ளம் கரை புரண்டு வெளியே வருகின்றது:

*மடியிலே கிளிவளர்த்து,*
*மதிலோரம் விட்டு வைச்சேன்!*
*மதிலோரம் விட்ட கிளி*
*மாயமாய் மறைஞ்சதடா!*
*கையிலே கிளி வளர்த்து*
*காட்டிலே விட்டு வைச்சேன்!*
*காட்டிலே விட்ட கிளி*
*காணாமற் போனதடா!*

பாடு பல பட்டுச் சிலைபோலப் பேணி வளர்த்த மகனை இழந்த தாயின் கண்ணீரிலிருந்து பூத்த கவிதை மலர்கள் இவை:

*ஆழக் குழிதோண்டி*
*அரிசி போல மண் எடுத்து—நான்*
*ஆகாத சீமைக்கு*
*—மகனே உன்னை,*
*அழகுச் சிலை உண்டுபண்ணி*
*அல்லி இருந்து தேம்புறேண்டா!*
*சின்னக் குழிதோண்டி*
*—நான் பெற்ற செல்வமே!*
*சீரகம் போல் மண் எடுத்து,*
*செல் அரிச்ச மண்ணுக்கு,*
*செப்புச்சிலை உண்டு பண்ணி*
*சிவலோகம் போறியா—*
*உன்னைப்பெற்ற*
*சீதையும் தேம்புறேண்டா!*

கவணனை இழந்து கைம்மைக் கோலத்துடன், தன் பிள்ளைகளோடு வாழ்கின்ற ஒருத்தி, தனக்குத் தொல்லைதரும் பங்காளியை வெறுத்துப் பாடுகின்றாள்:

*பனை மரத்திலே ஏறுவானா!—அவன்*
*பாம்பு கடிச்சிச் சாவானா!*
*தென்னை மரத்திலே ஏறுவானா!—அவன்*
*தேளு கடிச்சிச் சாவானா!*

மனிதன் தனியாக வாழ்ந்து விட முடியாது. அவன் சமுதாயத்தோடு சேர்ந்து வாழும் இயல்புடையவன். அவனுக்கு நண்பன் என்றும், அண்ணன் தம்பி என்றும், மாமன் மைத்துனன் என்றும்

உறவு பெருகிக் கொண்டே போகும். மனிதன் தனக்கு உரிய துணை தேடவும், உறவு தேடவும் பெரிதும் முயல்கின்றான். நல்ல துணைவர்கள் கிடைத்து விட்டால் மகிழ்கின்றான். இன்றேல் வருந்துகின்றான். ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் தக்க உறவினர்களைத் தேடிக் கொள்ள முயல்கின்றனர். பெண் ஒருத்தி,

> *ஊரை வளைச்சாலும்*
> *உற்ற துணையாகவில்லை!*
> *நாட்டை வளைச்சாலும்*
> *நல்ல துணையாகவில்லை!*

என்று தன் குறையைப் பாடுகின்றாள்.

வாழ்க்கை என்பது துன்பத்தின் நிலைக்களன். இதை உணர்ந்த ஒருத்தி,

> *நித்தம் ஒரு துக்கம் வந்து—என்*
> *நெஞ்சைப் பிளக்குதம்மா!*
> *நெஞ்சைப் பிளந்து பார்த்தால்—அங்கே*
> *நீலம் படிந்திருக்கும்!*
> *மாதம் ஒரு துக்கம் வந்து—என்*
> *மார்பைப் பிளக்குதம்மா!*
> *மார்பைப் பிளந்து பார்த்தால்—அங்கே*
> *மாசு படிந்திருக்கும்!*

பெண்களுக்குத் தாய் வீட்டின் மீதுள்ள பற்றும் மதிப்பும் இவ்வளவு என்று சொல்ல முடியாது. உடன் பிறந்தவர் தம்மை மதிக்கவில்லை என்றால், பெண்களின் மனம் மிகவும் வருந்தும்.

குடும்பத்தில் ஏற்பட்ட ஏதோ ஒரு சண்டை காரணமாக உடன் பிறந்தாளைத் தன் வீட்டிற்கு வரவேண்டாமென்று அண்ணன் கூறிவிடுகிருன். அது அந்தப் பெண்ணின் உள்ளத்தைப் பெரிதும் தாக்கிவிடுகிறது. அவளுடைய துன்பம் பாட்டாய் வெளிப்படுகிறது:

*சாதிப் பெருங்காயம்!—நான்*
*சமுத்திரத்து நல்வாளை!*
*சாதியில் பழுதென்று—உங்கள்*
*சாக்கடையில் வேண்டாமென்றீர்?*
*கொத்துப் பெருங்காயம்!—நான்*
*கோத்திரத்து நல்வாளை!*
*குலத்தில் பழுதென்று—உங்கள்*
*கோட்டையிலே வேண்டாமென்றீர்?*

இவ்வாறு பாடியபின் தாய் வீட்டுப் பெருமைகளைப் பாடுகிருள்:

*தங்கச் சிலைக் கதவு*
*நான் பிறந்த மதுரையிலே!*
*தட்டித் திறந்தக்கால்,*
*தவனம் பொடி மணக்கும்!*
*இரும்புச் சிலைக்கதவு*
*என்னைப் பெற்ருர் வாசலிலே*
*இருபக்கம் பொன்கதவு!*
*இருத்தித் திறந்தக்கால்*
*ஏலம் பொடி மணக்கும்!*

தாய் உயிருடன் இருந்தபோது, தான் பெற்று மகிழ்ந்த பரிசுகளைக் கூறுகின்ருள்:

*ஆடி வரிசையுண்டு!—எனக்கு*
*அடிப்பாலைச் சோறுண்டு!*
*பொங்கல் வரிசையுண்டு!—எனக்குப்*
*புதுப்பாலைச் சோறுண்டு!*
*செஞ்சிக் கிலுகிலுப்பை,*
*சீரங்கத்துக் கண்ணாடி!*
*—என்னைப் பெற்ற அம்மா,*
*சிவப்பைச் செதுக்கி வைத்துச்*
*சீர்ப்பாதம் செய்திடுவாள்!*
*வைரக் கிலுகிலுப்பை*
*வையசத்துக் கண்ணாடி!*
*—என்னைப் பெற்ற அம்மா,*
*வைரம் செதுக்கிடுவாள்*
*வரிசையிட்டுப் பார்த்திடுவாள்!*
*பிளந்த விறகு வரும்!*
*பெட்டியிலே நெல்லு வரும்!*
*பெட்டி நெல்லை அவிச்சிக்கொட்ட,*
*பெண்ணை யாற்றுத் தண்ணீர்வரும்!*
*வாழும் மகள் எனக்கு*
*வண்டியிலே நெல்லு வரும்!*
*வண்டி நெல்லை அவிச்சிக்கொட்ட*
*வாணியாற்றுத் தண்ணீர் வரும்!*

தாய் இருந்தபோது சீர்வரிசைகள் குறைவறப் பெற்று மகிழ்ந்த அவள், தாய் இறந்தபின் எல்லாவற்றையும் இழந்துவிட்டாள். அவள் இரு வேறு நிலைகளையும் எண்ணி எண்ணிப் பார்க்கின்றாள். துன்பம் அவள் நெஞ்சத்தைக் கவ்வுகிறது; கண்ணீர் பெருகுகின்றது. கண்ணீரில் மலர்கின்றன கீழ்வரும் கவிதை மலர்கள்:

*ஆலிலை பறித்து,*
*அரும்பாலே மாலைகட்டி,*

*அஞ்சடுக்கு மாளிகையில்*
*அல்லி போல நானும் வந்து,*
*அஞ்சாறு நெல்லுக்கு*
*அவதிப்பட்டு நிற்கலாமோ?*
*கோவை இலை பறித்துக்*
*கோட்டைச் சுற்று வாசலுக்குக்*
*கோபத்தை அடக்கி வந்தேன்!*
*குறுணி நெல்லு பஞ்சமாச்சு!*
*சனம் பெருத்த வாசலிலே*
*சரஸ்வதி நான் பெண் பிறந்தேன்!*
*சரஸ்வதி நான் சிந்தும் கண்ணீர்*
*சமுத்திரத்தில் போய்ச் சேரும்!*
*சமுத்திரத்து மச்சமெல்லாம்*
*கண்ணும் உறங்காது;*
*இரை எடுத்து உண்ணாது!*

மாமியார் மெச்ச வாழ்ந்த மருமகள் அவள். இப்போது மாமி இறக்கும் தருவாயில் இருக்கிறாள். அன்றுவரை தனக்குச் சமைக்கும் பொறுப்பைத் தராமலும், எவ்வளவு அரிசி போட்டுச் சமைக்க வேண்டும் என்ற அனுபவத்தை ஏற்படுத்தாமலும் இருந்துவிட்ட மாமியை நோக்கி,

*ஆதண்டங் காட்டை வெட்டி,*
*அவசரமாய்ப் போற அத்தை!*
*ஆனைமுடி ராசனுக்கு—நான்*
*அரிசி எவ்வளவு போடட்டும்!*

என்று கேட்கிறாள். இந்தப் பாடலில் அவள் பேதைமையும், மாமியின் மீது கொண்டிருந்த அன்பும் வெளிப்படுகின்றன.

ஆயிரங்காலத்துப் பயிர் என்று எண்ணிச் செய்யும் திருமணம் சிலரது வாழ்வையே குலைத்துப் பாழாக்கி விடுவதுண்டு. மணமகனே பிணமகனாகி மணப்பறையே பிணப்பறையாய் ஒலித்து, வாழ்த்தொலிபோய் அழுகையொலி மிகுவதுண்டு.

திருமணம் ஆன மறுநாளே மணமகன் இறந்துவிடுகிறான். மணமகளின் உள்ளத்தில் குமுறி எழும் துன்ப நினைவுகளைக் கீழுள்ள பாடல்கள் கேட்போர் நெஞ்சத்தை இளகச் செய்யும் வகையில் குறிப்பிடுகின்றன:

*முகூர்த்தக் கால் நட்ட இடம்*
*மோடு மறையவில்லை!*
*பந்தக் கால் நட்டஇடம்*
*பள்ளம் மறையவில்லை!*
*பஞ்சாங்கம் பார்க்க வந்த*
*பார்ப்பானும் கண் குருடோ?*
*பூத்த மரத் தடியில்*
*பூவை நான் நின்றழுதால்*
*பூத்த மரம் இரங்கும்*
*பூமாறி நின்றுவிடும்*
*காய்த்த மரத்தடியில்*
*கன்னி நான் நின்றழுதால்*
*காய்த்த மரம் இரங்கும்*
*காய் மாறி நின்றுவிடும்!*

சின்னஞ்சிறு வயதில் தனக்கு மாலையிட்டுச் சிறப்போடு வைத்திருந்த கணவன் இறந்துவிட்டபோது பெண் உள்ளம் புலம்பும் புலம்பல் இது:

*பத்துப் பிராயத்திலே,*
*பால் குடிக்கும் வேளையிலே,*
*ஆண் அழகர் மாலையிட்டீர்!*
*அழகாக வைத்திருந்தீர்!*
*மல்லிகைப் பூங்கட்டிலிலே—நான்*
*மனமகிழ்ந்து தூங்காமல்*
*காட்சி குலைத்து விட்டீர்!—இப்போ*
*கர்த்தன் பதிநடந்தீர்!*

கூடையின் கீழே இருந்த பாம்பு கடித்து இறந்து விட்ட கணவனை எண்ணிப் புலம்புகின்றாள் ஒருத்தி:

*அத்தை பெற்ற அருங்கிளியே!*
*அம்மான் துரைத்தனமே!*
*குற்றமற்ற கோவலரே!*
*கோயில் துரை மகனே!*
*கூடைக்குக் கீழிருந்து*
*குறு நாகம் தீண்டலாமோ?*

மகனை இழந்த தாய் நெஞ்சம் புலம்பும் புலம்பல் இது:

*கல்லாலே கப்பல் செய்து,*
*கடலிலே விட்டேனடா!*
*கல்லாலே செய்த கப்பல்,*
*கரை வந்து சேரதெப்போ?*
*மரத்தாலே கப்பல் செய்து,*
*மடுவிலே விட்டேனடா!*
*மரத்தாலே செய்த கப்பல்,*
*மறுபடியும் வாரதெப்போ?*
*கப்பல் கவிழ்ந்ததென்று,*
*கன்னத்தில் கை வைத்தழுதேன்!*

இதுவரை எந்தச் சிறு துன்ப நிகழ்ச்சியும் நடந்தறியாத தன் வீட்டில் 'சாவு' நேர்ந்துவிட்டதே என்றும் அவள் புலம்புகிருள்:

குண்டு நுழையாத
குமணனுடை கோட்டையிலே
குண்டு நுழைந்த தென்ன!
கூட்டம் வந்து சேர்ந்ததென்ன!
கத்தி நுழையாத
கர்ணனுடை வாசலிலே
கத்தி நுழைந்ததென்ன!
கன கூட்டம் வந்ததென்ன!

செல்வச் சிறப்போடு வாழ்ந்த கணவனை இழந்த பெண் ஒருத்தியின் உள்ளத்தில் பொங்கி எழும் துன்ப உணர்ச்சி பாட்டு வடிவம் பெறுகிறது. பிணமாகிக் கிடக்கும் கணவனின் அருகே இருக்கும் அவள், தன் கணவனின் உயர்வையும் அழகையும் செல்வச் சிறப்பையும் எண்ணிப் பார்க்கிருள்:

பூசுந் திருநீறு,
பொட்டிலிடுங் கண்ணுடி!
பூசி வெளியே வந்தால்,
பொன்னுங் கிளி பறக்கும்!
புதுக் 'காரு' வந்து நிற்கும்!
சாத்துந் திருநீறு,
சரிபார்க்கும் கண்ணுடி!
சாத்தி வெளியே வந்தால்,
தங்கக் கிளி பறக்கும்!
தனிக் 'காரே' வந்து நிற்கும்!
கையே கணக்கெழுதும்;—உங்க
கருத்த விழி சூதாடும்!

*விரலே கணக்கெழுதும்;—உங்க*
*வெள்ளை விழி சூதாடும்!*

அவர்கள் வீடு மிகவும் பாதுகாப்பானது. அதற்குள் எமன் எப்படி நுழைந்தான் என்று அவள் வியப்படைகின்றாள்:

*இரும்பாலே கோட்டையில்ல—நம்மவாசல்*
*எமன் வந்தான் எந்தவிதம்?*
*கல்லாலே கோட்டையில்ல—நம்மவாசல்*
*காலன் வந்தான் எந்த விதம்?*

உடல் நலங் குன்றினாலும் பிணி வந்தாலும் வீட்டில் உள்ள வசதிகளால் உடல் நலம் பெற வழியுண்டு:

*பூங்கா வனமில்ல—நம்ம வாசல்*
*புதுத் தண்ணீர் பொய்கையில்ல!*
*புதுத் தண்ணீர் பொய்கையிலே*
*பிணி வந்தால் விலகாதோ?*
*நந்த வனமில்ல—நம்ம வாசல்*
*நல்ல தண்ணீர் பொய்கையில்ல!*
*நல்ல தண்ணீர் பொய்கையிலே*
*நலங் குறைந்தால் தீராதோ?*

இவ்வாறு இருந்தும் அவள் கணவன் உடல் நலம் பெறாமல் இறந்து விட்டான்!

வீட்டின் சிறந்த அமைப்பையும், கணவன் இல்லாமல் இனி அந்த வீட்டில் தான் வாழப் போகும் வெறு வாழ்வையும் எண்ணி எண்ணி அஞ்சுகிறாள்:

பத்தரங்கு மாளிகையும்,
பக்கம் ஒரு சாவடியும்,
எட்டரங்கு மாளிகையும்,
எதிரே ஒரு சாவடியும்,
ஐந்தரங்கு மாளிகையும்,
அருகே ஒரு சாவடியும்,

சிறப்பாக இருப்பதை நினைக்கிருள்.

ஆக்கும் அடுக்களை தான்
அனல் போகும் மே வீடு!
ஆக்கி வெளியே வந்தால்—என்னை
அரசனற்ற பாவி என்பார்!
பொங்கும் அடுக்களை தான்
புகை போகும் மே வீடு!
பொங்கி வெளியே வந்தால்—என்னைப்
புருசனற்ற பாவி என்பார்!

என்று பலவாறு எண்ணி இரங்குகின்ருள்.

பத்தரங்கு மாளிகை இருந்தென்ன! பக்கம் ஒரு சாவடி இருந்தென்ன! எட்டரங்கு மாளிகை இருந்தென்ன! எதிரே ஒரு சாவடி இருந்தென்ன! ஐந்தரங்கு மாளிகை இருந்தென்ன! அருகே ஒரு சாவடி இருந்தென்ன! ஆக்கும் அடுக்களைகள் இருந்தென்ன! அனல் போகும் மே வீடு இருந்தென்ன! அங்கே அவள் கணவன் மட்டும் இல்லையே!

கணவனை இழந்தவள் கணவனை மட்டுமா இழந்தாள்? மஞ்சள் இழந்தாள்! குங்குமம் இழந்தாள்! பொட்டிழந்தாள்! பட்டிழந்தாள்! பூ இழந்தாள்! பொன் இழந்தாள்!

*வெள்ளி முழுக்கிழந்தேன்!*
*வேடிக்கைப் பொட்டிழந்தேன்!*
*திங்கள் நோன்பிழந்தேன்!*
*சிங்காரப் பட்டிழந்தேன்!*
*செவ்வாய் முழுக்கிழந்தேன்!*
*சிங்காரப் பொட்டிழந்தேன்!*
*பூமாலை தொடுங் கை*
*புழுதி போட்டுத் தேய்க்கணுமே!*
*மஞ்சள் தொடுங் கை*
*மணல்போட்டுத் தேய்க்கணுமே!*

என்று இழந்த வாழ்வைச் சொல்லித் தீர்த்துக் கொள்ளுகிருள்!

கணவனை இழந்த ஏழைப்பெண்ணின் நெஞ்சத்தில் தோன்றும் துன்ப நினைவுகளை இங்கே காண்போம்.

கணவன் இறந்த பின் அவளுக்கு மல்லிகையும் மருக்கொழுந்தும் விற்றுப் பிழைக்கும் நிலை வந்து விட்டது. கைம்பெண்ணுகிய அவள், மல்லிகை மலரையும் மருக்கொழுந்தையும் கையால் தொடவும் அஞ்சுகிருள்:

*மதுரைக்குப் போகலாமோ?*
*மல்லி விலை கூறலாமோ?*
*மன்னவனைத் தோற்ற*
*மாபாவி இருக்கலாமோ?*
*கொழுந்தைத் தொடலாமோ?*
*கொழுந்து விலை கூறலாமோ?*
*கொண்டவனைத் தோற்ற*
*கொடும்பாவி இருக்கலாமோ?*

*குத்தாலம் கொர நாடு*
*கொழுந்து விற்கப் போனாலும்,*
*கொண்டவனைத் தோற்ற கொடும்பாவி*
*கொழுந்தைத் தொடுவேனோ?*
*கொழுந்துவிலை கூறுவேனோ?*
*மஞ்சநல்லூர் கூடநல்லூர்*
*மருகு விற்கப் போனாலும்,*
*மன்னவனைத் தோற்றமாபாவி*
*மருகைத் தொடுவேனோ?*
*மருகு விலை கூறுவேனோ?*

**பாட்டும் எதிர்ப்பாட்டும்**

ஒப்பாரி பாடும் போது ஒருவர் குறை சொல்ல அதை மற்றவர் மறுக்கப் பாடல் தொடர்ந்து செல்வதுண்டு. இத்தகைய ஒப்பாரிப் பாடல்களில் துன்பச் சுவை மிகுந்திராமல்—இறந்தவரை எண்ணி ஏங்கும் ஏக்கம் இல்லாமல், பாடுவோருடைய பெருமையும், குறை நிறையும், இன்ப துன்பமும் வெளிப்படும்.

இன்ப துன்பங்களை ஆரத் துய்த்து, ஆயிரம் பிறை கண்டு, வாழ்வின் பல்வேறு நிலைகளை அறிந்து, பேரன் பேர்த்தி எடுத்த பெரு மூதாட்டி ஒருத்தி இறந்து விட்டாள். அம் மூதாட்டியின் மகளும் மருமகளும் பாடும் ஒப்பாரிப் பாடல் போட்டிப் பாடலாக அமைகிறது.

அந்த மூதாட்டி மகன் வீட்டில் காலமாகி விட்டாள். வெளியூரிலிருந்து மகள் வருவதற்கு முன்னமே சவத்தை எடுத்து விட்டனர். மகள்

வந்து பலவாறு புலம்பி அழுகிருள். அதைக் கேட்டுக் கொண்டிருந்த மருமகள் எவ்விதக் குறையும் இல்லாமல் தன் அத்தையை அனுப்பி விட்டதாய்க் கூறி மகளின் முனைப்பை மோதுகிருள்:

*மஞ்ச கட்டி திண்ணையிலே—என் அத்தை*
*மாண்ட யின்னு சேதி கேட்டு*
*மங்கை தலை விரிச்சேன்—மங்கைக்கு வாய்ச்ச*
*மன்னவரும் கொள்ளி வைக்க!*

இதைக் கேட்ட மகள் தன் தாயின் சவத்தைத் தான் வருமுன் எடுத்திருக்கக் கூடாது என்கிருள்:

*தங்க மரக்கால் கொண்டு*
*தாழம் பூ 'ரோட்' டேறித்*
*தங்க மகள் வாரான்னு*
*சவங் கிடந்தால் ஆகாதோ?*

தாயின் சவத்திற்குத் தான் பூமாலை கொண்டு வந்திருப்பதையும் கூறுகிருள்:

*மறுசலைத் திறந்து*
*மறு சம்பா நெல் எடுத்து,*
*மங்காம பச்சை குத்தி,*
*மலரப் பொரி பொரிச்சு,*
*மனசுக்கோர் பூவெடுத்து,*
*மங்கை அழுது வந்தால்,*
*மறிச்சு நின்னு பார்ப்பாங்க!*

என்று கூறிவிட்டு, எடுத்துச் செல்லும் சவத்தை நிறுத்தும்படி கூறுகிருள்:

*பச்சைப் புள்ளே காரி—*
*என்னைப் பெற்ற அம்மா!—நான்*

*பல சோலிக்காரியம்மா!*
*பாடையை நிறுத்தம்மா!—என்*
*பாதரவைச் சொல்லியழ!*
*தேரை நிறுத்தம்மா!—உன்*
*திருமுகத்தை நான் பார்க்க!*

இவ்வாறு இறந்து விட்ட தாயிடமே முறை யிடுகிருள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த மருமகள்,

*கல் நெஞ்சி வாரா*
*கடத்திவிடு பொய்த்தேரை!*
*நெட்டூரி வாரா*
*நிறுத்தாதே பொய்த்தேரை!*

என்று சொல்லுகிருள்.

இவ்வாறு அவர்கள் பேச்சில் வெளிப்பட்ட முரண்பாடு மெல்ல மெல்ல வளர்ந்து விடுகிறது. வளர்ந்து பகையாகிச் செயலிலும் வெளிப்படுகிறது. இழவு விழுந்த வீட்டில் நடக்கும் எந்த நிகழ்ச் சிக்கும் மகளுக்குத் தொடர்பு இல்லாமல் செய்து விட்டாள் மருமகள். அதனுல் மகளின் மனம் பெரிதும் வருந்துகிறது. அந்த வருத்தத்தை அவளே கூறுகிருள்:

*எட்டு சுற்று கற் கோட்டை!*
*இனம் பெருத்த ஐ கோர்ட்டு!*
*இனத்திலே சேராமல்*
*இளைய மகள் துண்டுபட்டேன்!*
*கடுகு புரண்டு வரும்!—*

*என்னைப் பெத்தாரு வாசலிலே—*
*கல்லாத்துத் தண்ணீ(ர்) வரும்!*
*கல்லாத்துத் தண்ணீரிலே—எனக்குக்*
*கை கழுவ நீதமில்லை!*
*முளகு உருண்டு வரும்!*
*முல்லையாத்துத் தண்ணீ(ர்) வரும்!*
*முல்லையாத்துத் தண்ணீரிலே—எனக்கு*
*முகம்கழுவ நீதமில்லை!*
*கொம்போடு மாங்காய்*
*குலுங்கப் பழுத்தாலும்,*
*குலையில் பிறந்த மகள்*
*குனிந்தெடுத்தால் தெண்டனையோ?*

இதைக் கேட்ட மருமகள் சும்மா இருந்துவிடவில்லை! தான் பிறந்த இடம், வாழ்க்கைப்பட்ட இடத்தைக் காட்டிலும் தாழ்ந்ததல்ல என்றும், தான் எவ்வளவுதான் பணிந்து போனாலும் பொல்லாப்பு விளைகிறதே என்றும் மருமகள் சலித்துக் கொள்ளுகிருள்.

*தங்கஞ் சிறுவீடு*
*சனம் பெருத்த ஐ கோர்ட்டு!*
*சனமே பெரிதென்று,*
*சமுத்திரத்தில் பெண்பதித்தார்!*
*ஆல மரத்தோரம்*
*அடி சாய்ந்த நெல்லி மரம்!*
*ஆங்காரத்தை உள்ளடக்கி—ஆண்ட*
*அரண்மனையே போனாலும்,*
*ஆனை நெருஞ்சி*
*அப்புதே தேகமெங்கும்!*
*குளத்தின் கரையோரம்*
*கொடி சாய்ந்த நெல்லி மரம்!*

கோபத்தை உள்ளடக்கி,
கொண்ட இடம் போனாலும்!
குதிரை நெருஞ்சி
குத்துதே தேகமெங்கும்!

இவ்வாறு சொன்னவற்றை எல்லாம் மகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை! அவளும் தன் பெருமையைப் பேசுகின்றாள். தான் கொண்டு வந்த 'நீர்மாலை' யின் சிறப்பை எடுத்து மொழிகிறாள்:

மதுரையிலே செம்பெடுத்து,
மல்லிகைப் பூ ஆரங் கட்டி,
மதுரை சனத்தோடு
மகிழ்ந்து வரும் நீர் மாலை!
கொச்சியிலே செம்பெடுத்துக்
கொடி மல்லி ஆரங் கட்டிக்
கொச்சிச் சனத்தோடு
குலுங்கி வரும் நீர்மாலை!

அத்தகைய சிறப்போடு வந்த தனக்குப் பெருமை இல்லை, சிறப்பில்லை என்பதை மகள் நன்றாகச் சுட்டிக் காட்டுகிறாள்:

தெற்கே குலை சாயத்
திண்ணையிலே நெல் காயத்
தென்னாட்டுப் பட்சி எல்லாம்
தின்று பசி யாறுகையில்—
வடக்கே குலை சாய
வாசலிலே நெல் காய
வட நாட்டுப் பட்சி எல்லாம்
வந்து பசி யாறுகையில்,
வயிற்றில் பிறந்த மகள்
வழி மறித்து நின்றழுதேன்!

யார் யாரோ உண்டும் தின்றும் பசியாறும் போது பிறந்த பெண்ணின் வயிறு காய்ந்தால் அவளுக்குப் பற்றி எரியாதா?

போதை இளம் பெண் ஒருத்தி தான் இறந்து விட்டால் யார் யார் எப்படி எப்படி அழுவார்கள் என்பதைக் கற்பனை செய்து பார்க்கிறுள்:

நீலகிரி மோட்டு மேலே
நின்னு நின்னு மழை பெய்ய!
மோட்டு மேலே வெள்ளம் வர;
மோட்டு மேலே போகும் போது,
கால் வழுக்கி நானும் விழ—

கால் வழுக்கி விழுந்து இறந்து விடுகிருளாம்! பிறகு என்ன நடக்கிறது என்று காண்போம்:

அம்மாவுக்கு ஆள் அனுப்ப,
முன் தானையை விரித்துவிட்டு
முகத்தின் மீது போட்டழுவாள்!
அக்காவுக்கு ஆள் அனுப்ப,
பம்பை தலே விரிச்சி
பாடை மீது போட்டழுவாள்!
அண்ணனுக்கு ஆள் அனுப்ப,
அந்திக் கடை திறந்து,
ஆகாசப் பட்டெடுப்பான்!
பட்டெடுத்து வரும்போது,
பட்டணமும் கூட வரும்!

பிறந்த பெண்ணுக்குக் கோடி எடுத்துக் கொண்டு அண்ணன் இப்படி வருவானும்!

தன் மீது அளவற்ற அன்பு கொண்டவர்கள் எல்லோரும் இவ்வாறு அழுது புலம்புவார்கள் என்று அவள் எதிர்பார்க்கிருள். ஆனுல், அன்பே சிறிதும் இல்லாத அண்ணி மட்டும் என்ன செய்வாள் என்பதை அவளே கூறுகிருள்:

*அண்ணிக்கு ஆள் அனுப்ப,*
*வாய்க்கரிசி கொண்டுவந்து,*
*வழி நெடுக கல் பார்ப்பாள்!*
*வாய்க்கரிசி தீர்ந்து போக*
*வந்த வழி திரும்பிடுவாள்!*

அன்பில்லாத அண்ணி இப்படிச் செய்வாள் என்று கூறிப் பழி தீர்த்துக்கொள்கிருள்!

கணவனே இழந்து விட்டவள் நெஞ்சத்திலிருந்து வெளிப்படுகின்ற துன்ப வெள்ளம் பாட்டாய் வருகின்றது:

*வைரமுடி மன்னவர்*
*வைரத்தால் தாலியிட்டார்!*
*வைர முடிமாள*
*வைரத்தாலி நீங்கலாச்சு!*
*பொன்னு முடிராசர்*
*போட்டாரு பொன்தாலி*
*பொன்னு முடிசாயப்*
*பொன்தாலி நீங்கலாச்சு!*
*முல்லைப்பூ பந்தலிலே*
*முல்லை அரும்பெடுக்க*
*ஏணி வைத்து ஏறுகையில்*
*ஏணி சறுக்கலாச்சு!*

*கடைசிப் படி கால்வைக்கக்*
*கால் இடறிச் சாயலாச்சு!*

கிணற்றில் விழுந்து இறந்து விட்ட தன் பேரனைப் பற்றி, பாட்டி பாடிய பாடல்:

*தங்கத்துறை ராசாவே—நீ*
*தண்ணியிலே போவாதேன்னு*
*பன்னி பன்னி சொன்னேனே—இந்தப்*
*பாவி சொல்லைக் கேட்டாயோ!*
*பல்விளக்கப் போகையிலே*
*பவழப்படி சறுக்கிச்சோ!*
*பவழப்படி சறுக்கையிலே*
*பாவிஎமன் வந்தானே!*
*முகம்கழுவப் போகையிலே*
*முத்துப்படி சறுக்கிச்சோ!*
*முத்துப்படி சறுக்கையிலே*
*மூர்க்கஎமன் வந்தானே!*

தாயை இழந்தவளின் துன்பம், ஒப்பாரிப்பாடல்களில் வெளிப்படுகின்றன. மகள், இறந்த தாயின் நற்பண்புகளை எண்ணிப் பார்க்கிறாள்:

*சந்திரர்க்கும் நல்லவள்*
*சாலை நிழலாவாள்*
*சவுக்க மரத் தோப்பாவாளர்*
*சந்திரர்க்கும் சூரியர்க்கும்*
*சாந்தமுள்ள சொல்லாவாள்*
*சூரியர்க்கும் நல்லவள்*
*சோலை நிழலாவாள்*
*துத்திப்பூ தோப்பாவாள்*
*சூரியர்க்கும் சந்திரர்க்கும்*
*சொந்தமுள்ள சொல்லாவாள்.*

*எல்லோர்க்கும் நல்லவளாய்*
*இருக்க நிழலாவாள்*
*இலுப்பை மரத் தோப்பாவாள்*
*இந்திரர்க்கும் சந்திரர்க்கும்*
*சொந்தமுள்ள சொல்லாவாள்!*

தந்தைக்கு முன், தாய் இறந்திருந்தால், பூவோடு -பொட்டோடு பொலிவுடன் சென்றிருப்பாளே என்று ஏங்குகின்ருள் மகள்:

*வெள்ளிப் படிகள்*
*விளங்க மதிச்சிருந்தாள்!*
*வீமர்க்கு முன்போக*
*வெகுதவங்கள் செய்யவில்லை!*
*தங்கப் படிகள்*
*சரியா மிதிச்சிருந்தாள்*
*தருமர் குலம் வாழ்ந்திருந்தாள்*
*தருமர்க்கு முன்போக*
*தவங்கள்மெத்த செய்யவில்லை!*
*பொன்னும் படிகள்*
*பொருந்த மதிச்சிருந்தாள்*
*பெருமாளுக்கு முன்போக*
*பெருந்தவமும் செய்யவில்லை!*

தாய் இறந்து தெய்வமாகிவிட்டாள்; தெய்வங்கள் வாழ்கின்ற இடத்திற்குச் சென்று விட்டாள்! என்ற மகளின் நம்பிக்கை, பாடலில் வெளிப்படுகிறது:

*கல்லு மலையோரம்*
*கழுகு மலைச் சாரலிலே*
*கந்தர் இருக்குமிடம்*
*கன்னி வள்ளி தூங்குமிடம்*

காந்தி மல்லி பூக்குமிடம்
கயிலாசம் சென்ருயோ!
வெள்ளி மலையோரம்
வீர மலைச் சாரலிலே
வீமர் இருக்குமிடம்
மெல்லி வள்ளி தூங்குமிடம்
வெள்ளரளி பூக்குமிடம்
மேலோகம் சென்ருயோ!
தங்க மலையோரம்
தண்ணி மலைச் சாரலிலே
தருமர் இருக்குமிடம்
தங்கை வள்ளி தூங்குமிடம்
தங்க அரளி பூக்குமிடம்
தாயே நீ சென்ருயோ!

பாடை கட்டி, செய்யும் சடங்களையும் மற்ற நிகழ்ச்சிகளையும் பாடல் குறிப்பிடுகின்றது:

மாயவரம் மயிலுரதம்
புவனகிரி பொன்னுரதம்
தஞ்சாவூர் தங்க ரதம்
கும்பகோணம் குயிலு ரதம்
நாலு ரதமும் கூடி
வெள்ளியாலே கொள்ளி பண்ணி
வெங்கலத்தால் தண்டைபண்ணி
செங்காடு வெட்டி
சிவந்த சிராப்பிளந்து—நம்ம
சீராளர் கொள்ளி வைத்தால்
சீமை கிடுகிடுன்னும்
கடுங்காடு வெட்டி
கனக்க சிராப்பிளந்து—நம்மைக்
கட்டினவர் கொள்ளி வைத்தால்

*காடு கிடுகிடுன்னும்!*
*பொண்ணு இறக்கூடை*
*புதுச்சம்பா வாய்க்கரிசி—நீங்க பெத்த*
*பொண்ணுவர நேரஞ்செல்லும்*
*பிணத்தை நிறுத்திடுங்கோ!*
*பொன் விளக்கு ஏத்திடுங்கோ!*
*தங்க இரப்புக் கூடை*
*தனிச்சம்பா வாய்க்கரிசி—நீங்க பெத்த*
*தங்கம் வர நேரம் செல்லும்!*
*சவத்தை நிறுத்திடுங்கோ!*
*தங்க விளக்கு ஏத்திடுங்கோ!*
*சீயக்கா அரப்பு கொண்டு*
*சீயாழி மோளம் கொண்டு*
*ஏழுமலை ஏறி*
*இளநீர் கண்திறந்து*
*திருவாரூர் சாலையிலே—நீங்க*
*தீக் கலந்து வேகையிலே*
*தீயும் விலகலையே—உங்க*
*திருமுகம் பார்க்கலையோ!*

தாயும் தந்தையும் இருந்து, ஒரு பெண்ணுக்குத் திருமணம் நடந்தால் அந்தத் திருமணம் பலவகையில் சிறப்பாய் அமையும். பிறந்த பெண்ணின் மனம் கோணாமல் சீர்வரிசைகளை எல்லாம் பெற்றோர்கள் செய்வார்கள்.

தாய் தந்தையார் இறந்து போய், ஒரு பெண்ணுக்கு அண்ணன்மார் தயவால் திருமணம் நடைபெற்றால், அவர்களுடைய நிலை தன் பெற்றோரை எண்ணி எண்ணி ஏங்குவதாக இருக்கும்! அந்த நிலையில் அவளைப்போற்றுவாரும் புகழ்வாரும் இருக்கமாட்

டார்கள்: மற்றவர் ஏதோ கடமைக்காகச் செய்வார்களே ஒழிய முழுமனத்தோடு செய்யமாட்டார்கள். சீர்வரிசைகள் குறைந்துவிடும்!

இத்தகைய துன்பநிலை ஒரு பெண்ணுக்கு அமைந்து விடுமானால், அவள் தன் பெற்றோர் இருந்தால் எவ்வாறு இருந்திருக்கும் என்று எண்ணி மனம் புழுங்குவாள். இருவேறு நிலைகளை ஒப்பிட்டுக் கலங்குவாள்.

ஒரு கன்னிப் பெண்ணின் வாழ்க்கையில் இத்தகைய துன்பநிலை ஏற்பட்டு விடுகின்றது. அவள் தன் நெஞ்சில் அலைகளைக் கவிதையில் வெளிப்படுத்துகின்றாள்:

*பொன்னு இளமுருங்கை—நானு*
*போற்றுவார் உண்டானால்*
*பொன்னாகக் காய்ச்சிருப்பேன்*
*பூத்தமரமாய் இருப்பேன்!*
*போற்றுவார் இல்லாமல்*
*பொன்னும் காய்க்கவில்லை!*
*பூத்த மரம் ஆகவில்லை!*
*புழுதி பட்டு நிற்கிறேனே!*
*தங்க இளமுருங்கை—நானு*
*தாங்குவார் உண்டானால்*
*தங்கமாய்க் காய்ச்சிருப்பேன்*
*தளிர்த்த மரமாய் இருப்பேன்*
*தாங்குவார் இல்லாமல்*
*தங்கமும் காய்க்கவில்லை*
*தளிர்த்த மரம் ஆகவில்லை!*
*தவிடுபட்டு நிற்கிறேனே!*

தாய் இறந்து விட்டதால் ஒருத்திக்கு எத்தனையோ நன்மைகள் விளையவில்லை. தெருவில் வளையல் விற்பவன் கூட அவளுக்கு வளையல் விலை கூற மறுத்து விடுகிறான்:

வளையல் விற்கும் செட்டிமகன்
வளையலோ வளையல் என்ன
வாசல் வழி திறந்து
வளையல் விலை சொல்லும் என்றேன்!
வளையல் விலை சொல்ல
மாதா வரட்டும் என்றால்
மாதா மடிந்து போய்
மாசம் பல ஆச்சு என்றேன்
வளையல் விலை சொல்லாமல்
வழி நடந்தான் செட்டிமகன்!

கன்னிப் பெண்ணின் உள்ளத்தில் நிரம்பியுள்ள ஏக்கத்தை, ஏமாற்றத்தை மிகத் தெளிவாக இப்பாடல் விளக்குகின்றது.

## 12. உலகம் பலவகை

உலகில் எத்தனையோ வகையான மக்கள் வாழ்கின்றனர்; அவர்களுடைய உள்ளங்களும் பலவகையானவை; உள்ளத்திற்கேற்ப வாழ்க்கையும் பலவகையாய் உள்ளன. மக்களின் பல்வேறு வகையான வாழ்க்கையில் மலர்ந்த பாடல்களும் பல்வேறு வகையாய் உள்ளன. உலக அனுபவம் மிக்க தந்தை தன் மகனுக்குக் கூறும் சிறந்த அறிவுரை இது:

*இல்லையென்று ஒருவர்கிட்ட*
*இரப்பதற்கு போகாதே!*
*கொடுப்பாரை விலக்காதே!*
*கோள்சொல்லித் திரியாதே!*
*கட்டிவைத்த முதல் அழிய*
*கச்சவடம் பண்ணாதே!*
*செட்டியாய்ப் பிறந்தவர்க்குத்*
*திரவியமே தெய்வமப்பா!*

இழவு விழுந்த வீட்டிற்கு அழ வந்த மாமியும் மருமகளும் ஒப்பாரி பாடிக் கொண்டே பாட்டுடன்

பாட்டாய், இழவு விழுந்த வீட்டுத் தோட்டத்தில் உள்ள பாகற்காயை அறுத்துக்கொண்டு போகத் திட்டமிடுகின்றனர்.

*பந்தலிலே பாகற்காய்*
*பார்த்துஅறு மாமியாரே!*

என்று மருமகள் நினைவூட்டுகின்றாள்.

*போகும்போது அறுக்கலாம்*
*பொறுத்திரு மருமகளே!*

என்று விடை கூறுகின்றாள் மாமி. இருவர் பாட்டையும் கேட்டுக் கொண்டிருந்த வீட்டுக்காரி,

*விதைக்காக விட்டிருக்கிறேன்,*
*விரலாலே தொடாதே!*

என்று அவர்களுக்குத் தடை போடுகின்றாள். இழவு விழுந்த வீட்டில் நடக்கும் பேச்சு இது. இத்தகைய உள்ளம் படைத்த மக்கள் மிக இழிந்தவர்கள்! நாடாண்ட பெருந்தலைவர் இறந்து பிணம் இருக்கும் போதே பதவிக்குப் போட்டி இடுவது இத்தகைய உள்ளம்தான்! குடும்பத் தலைவர் உயிர்விட்டவுடன் பணத்தைப் பங்கிட்டுக்கொள்ள போராடுவது இத்தகைய உள்ளம்தான்! எதிர்பாராத விபத்தில் சிக்கி மாண்டவரின் சட்டைப் பையையும் தேடிக் காசு எடுப்பது இந்தகைய உள்ளம் தான்!

நல்ல குறி சொல்லும் குடு குடுப்பைக்காரன் தன் கையில் உள்ள சிறிய உடுக்கையை ஆட்டிக் கொண்டே விரைந்து பாடும் பாடல் சுவையானது.

*காளி, கபாலி, மகாசூலி, மகேஸ்வரி!*
*கருணை செய்ய ஓடிவா என்னம்மா!*
*ஆலில் துயின்ற மாலின் சகோதரி*
*வாலை மனோன்மணி! மேல மலையாளம்*
*வாழும் பராபரி! பாலன்முன் ஓடிவா!*
*வா சக்கம்மா! ஓடிவா வாவாவா!*

என்று பாடிக்கொண்டே நல்ல குறி சொல்வான் குடு குடுப்பைக்காரன். நல்ல வாக்குச் சொல்லிப் பிறரை மகிழ்வித்துப் பிழைக்கின்ற வாழ்வு, அவனுடையது.

குறி சொல்லிப் பிழைக்கும் குறத்தியும் இவ்வாறே பெண்களை மகிழ்வித்து நல்ல குறி சொல்லி வாழ்பவள்.

*குறியொன்னு கேட்கலையோ,*
*கொம்பனைய பெண்டுகளே!*
*வாழாத பெண்டுகளை*
*வாழவைக்க மருந்துண்டு!*
*சண்டை கெலிப்பதற்கு*
*சாரக் குளிகை யுண்டு*

என்று பாடிக்கொண்டே தன் கலைத்திறனைப் புகழ்வாள்.

தமிழகத்தில், நூற்று இருபத்தெட்டுப் பேர் சட்ட சபையில் இருந்தபோது, அச்சபையை வெறுத்த ஒருவர் உள்ளத்தில் தேங்கிக் கிடந்த வெறுப்புணர்ச்சி எல்லாம் பாட்டில் வெளிப்படுகிறது.

*எண்ணத்தில் நூறுடனே*
*இருபத்தெட்டு பேர்களுண்டு!*

*பண்டத்தில் ஏதுமில்லை;*
*பகட்டினில் மயக்காதீர்!*
*சவுகரியம் அற்றசபை!*
*சட்டசபை மட்டசபை*
*இச் சபையின் ஸ்தாபிதத்தால்,*
*எய்தும்பயன் யாதுமில்லை!*

இரண்டாம் உலகப் பெரும்போர் நடந்து கொண்டிருந்தபோது உலகம் முழுவதும் போரில் ஈடுபட்டுத் தவித்தது. எல்லா நாடுகளும் போர்க் களமாக மாறின. மக்கள் அனைவரும் போரில் பங்கு கொண்டனர்.

தமிழ்நாட்டு இளைஞர் பலர், படையில் சேர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றனர். வெளிநாடுகளில் இருந்த தமிழ் மக்கள் பல துன்பங்களை அடைந்தனர். மக்களின் நெஞ்சத்தில் என்றும் நீங்காத பல நினைவுகளை — எண்ண அலைகளை உண்டாக்கி விட்டது அந்தப் பெரும்போர். அக்காலச் சூழ் நிலையும், போர் நிகழ்ச்சிகளும் தமிழகத்தில் வழங்கும் நாட்டுப் பாடல்களில் இடம் பெற்று அழியா வாழ்வு பெற்று விட்டன.

படையில் சேர்ந்த இளைஞன் கடல் கடந்து பல நாடுகளுக்குச் செல்லப் போவதாய்க் கூறுகின்றான்:

*பேபி சரோஜா!—நானு*
*வாருக்குப் போறேன்!—நீ*
*வருத்த படாதே!*
*தண்ணீர் மேலே போனால்—நான்*
*தந்தி அடிச்சிடுவேன்!*

அப்போது போர்வாகனங்கள் நாடெங்கும் நடமாடின. சின்னஞ்சிறிய ஊர்களில் கூட வெள்ளைக் காரப் பெண்கள் நீலக் கண்ணாடி அணிந்து உலவினர். அக் காட்சியைக் கீழுள்ள பாடல் குறிப்பிடுகின்றது:

*கம்பேனி ரோட்டிலே*
*கும்பேனி சைக்கிள்*
*காற்றாய்ப் பறக்கலாச்சே!*
*ஓட்டை வீட்டிலே*
*நீலக் கண்ணாடிக்காரி*
*பார்க்க முடியலாச்சே!*

ஓய்வு ஒழிச்சலின்றி நடக்கின்ற போரைச் சீக்கிரம் முடிக்குமாறு படைவீரர்களைப் பொது மக்கள் வேண்டுகின்றனர் :

*ஜாக்கிரதையாய் இருங்க!—சண்டை*
*சீக்கிரமாய் முடியுங்க!*

அண்ணனும் தங்கையும் அன்போடு வாழ்ந்து வருகின்றனர். தங்கைக்கு இப்போது திருமணம் நடக்கப் போகிறது! அண்ணன் தன் அன்புத் தங்கைக்குச் சீர் வரிசை, நகை நட்டு, அணி மணி ஆகியவற்றைக் குறைவின்றித் தருகிறான்; அண்ணன் வாயாலேயே அவற்றைக் கேட்போம்:

*மாலை என்ன மாலை?*
*மல்லிகைப் பூ மாலை!*
*மாலை நல்ல மாலை!*
*மருக்கொழுந்து செண்டு!*

*சேலை நல்ல சேலை!*
*செங்கழனிச் சாயம்!*
*கூறை நல்ல கூறை*
*குண்டுமணிச் சாயம்!*
*தாலி நல்ல தாலி*
*தட்டான் கைராசி!*
*ஒன்றரைப் பணமாம்!*
*கண்ணாடி நிறமாம்!*
*கைவளையும் காப்பும்*
*கன்னோடே பாங்கு!*
*மூக்குத்தியும் பொட்டும்*
*மேற்கத்தியான் பாங்கு!*

இவ்வளவு சீரும் நகையும் கொடுத்த அண்ணன் தங்கைக்கு வாழ்த்துக் கூறுகிறான்:

*எக்காலும் பொருந்தி*
*திக்கெல்லாம் வளர்ந்து*
*திக்கெல்லாம் வளர்ந்து*
*திசை எல்லாம் வாழ்ந்து*

தங்கை சிறப்படைய வேண்டும் என்று மனங் குளிர வாழ்த்தி மகிழ்கின்றான்.

திருமணத்தின் போது, நலங்குப் பாடல்களைப் பெண்கள் பாடுவதுண்டு. பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரைக் கேலி செய்தும், மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரைக் கேலி செய்தும் பாடுவதுண்டு. கீழே உள்ள நலங்குப் பாடல் மாப்பிள்ளையைக் கேலி செய்கின்றது:

*கோவைப் பழம் போல*
*எங்கள் பெண்ணழகு!—இந்தக்*
*கோண மூஞ்சி மாப்பிள்ளைக்கு*
*நலங்கிட வாரும்!*
*எலுமிச்சம் பழம் போல*
*எங்கள் பெண்ணழகு!—இந்த*
*எரி மூஞ்சி மாப்பிள்ளைக்கு*
*நலங்கிட வாரும்!*

*கும்ப கோணத்து ஜட்ஜ் என்று*
*பெண் கொடுத்தோம்!*
*குப்பை வாரிமேஸ்திரி என்று*
*தெரியாமல் போச்சே!*

திருமணமான பின், முதல் முறையாக மணப் பெண் தாய்வீடு செல்லுகிறாள். அவளிடம் அணி மணிகள் மிகுதியாக உள்ளன. அவற்றை அவள் தங்கை பார்த்துவிட்டு வியப்படைகிறாள்.

*காலிலே கொலுசு இருக்கு*
*ஏதடியக்கா ஏது?*

என்று கேட்கிறாள். அதற்கு அவள்,

*மாலையிட்ட போது எனக்கு*
*மாமன் போட்ட கொலுசுடி!*

என்று கூறுகிறாள்.

இப்படியே காப்பு, காதோலை, வளையல் முதலியவை பற்றிப் பல பாடல்கள் எழும்.

கணவனும் மனைவியுமாக வாழும் அன்பான குடும்பம் அது!

கணவன் சந்தைக்கு புறப்படுகிருன்; மனைவிக்கு என்னென்ன தேவை என்பதை அறிந்து கொள்ள விரும்புகிருன்; மனைவியின் தோழியை அறிந்து வருமாறு கூறுகிருன். தோழி வந்து மனைவியைக் கேட்கிருள்.

*என்ன குறைச்சன்னு*
*சொல்லேண்டி பொன்னம்மா!*

அதைக்கேட்ட மனைவி தோழியிடம்,

*சீப்பு குறைச்சன்னு*
*சொல்லேண்டி கண்ணம்மா!*

என்று கூறுகிருள்!

இவ்வாறே கண்ணுடி, சோப்பு, மஞ்சள், பூ முதலிய பொருள்களைப் பற்றிப் பாடல்கள் தோன்றும்.

கழனிகளில் வேலை செய்யும் பெண்கள் நாற்று நடும் போதும், களை எடுக்கும் போகும் இத்தகைய பாடல்களை இனிமையாகப் பாடுகின்றனர்.

தமிழ் நாட்டுக் கழனிகளிலும் கவிதை விளைகிறது!

வயல்களில் களை எடுக்கும்போது பெண்கள் செவிக்கினிய பாடல்களைப் பாடிக்கொண்டே வேலை

செய்கின்றனர். வயல்களில் இவர்கள் வேலையில் ஈடு பட்டிருக்கும்போது பாடும் இனிய பாடல்கள் மலைப் பிளவுகளில் சென்று எதிரொலிக்கின்றன. இத்தகைய பழக்கம் இம்மக்களிடையே தொன்று தொட்டு இருந்து வருகிறது! பயிரின் வளர்ச்சிக்கு இசை பெரிதும் துணை செய்கின்றது என்ற நம்பிக்கை இந் நாட்டு உழவர்களிடம் உண்டு. அதிலும், எழில் மிகுந்த இளமங்கையர் பாடும் இன்னிசையால் பயிர் செழித்து வளர்ந்து நல்ல விளைச்சலைத் தருகின்றது என்று அனுபவம் முதிர்ந்த உழவர்கள் கருதுகின்றனர். பல வகையான நாட்டுப் பாடல்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகின்றன. அவற்றில் பெரும்பான்மையான பாடல்கள் காற்ருல் அசைந்தாடும் பயிர்களின் அழகையும், மலைச்சரிவுகளில் பூத்துக் குலுங்கும் வண்ண மலர்களின் எழிலையும் புனைந்து பாடுகின்றன.

பாடிக்கொண்டே வேலை செய்யும்போது உழவர்கள் தம் உடல் உழைப்பையும் வேலையின் கடுமையையும் மறந்து விடுகின்றனர். "வயல்களுக்கு உரமிடுவது நல்லது. அதைவிடப் பயிர்களுக்கு இசையூட்டுவது நல்லது" என்று இங்குள்ள உழவர்கள் கருதுகின்றனர்.

கணவன் மனைவியுமாய் வாழ்கின்ற அனைவரும் மனமொத்த காதலராய் வாழ்கின்றனர் என்று கூற முடியாது. கணவனுல் புறக்கணிக்கப்படுவோர் உண்டு; அவர்கள் வாழ்வில் துன்ப இருள் மூடி

விடுவது உண்டு. "நம் வாழ்வில் விடிவெள்ளி தோன்ருதோ?" என்று அவர்கள் கலங்குவதுண்டு. அந்தக் கலக்கத்திலிருந்து சில பாடல்கள் பிறக்கின்றன.

தன் கணவனுல் புறக்கணிக்கப்பட்ட ஒருத்தியின் நெஞ்சத்திலிருந்து வெளிப்படும் துன்ப அலைகள் பாட்டாய் உருவெடுக்கின்றன. அவள் தன் கணவனை நோக்கி,

*வெள்ளி நிலவெரிக்க*
*வீதியிலே நான் படுக்கத்*
*தள்ளிக் கதவடைக்கச்*
*சம்மதமோ உங்களுக்கு?*

என்று கேட்டுக் குறையிரந்து பணிந்து நிற்கின்ருள். வானத்தில் வெள்ளி நிலவெரிப்பதை நினைவூட்டுகின்ருள்; அது தன்னைச் சுடுவதைக் கூருமல் கூறுகின்ருள்; அவள் வீட்டில் தனியாகப் படுப்பதால், படுக்கையறை வீதியாகத் தோன்றுவதைக் குறிப்பிடுகின்ருள். தனியே விட்டுக் கதவடைத்துச் செல்வது கணவனுக்குச் சம்மதமா என்று கேட்டு இரங்குகின்ருள்.

கட்டழகியாக விளங்கும் தன்னைப் புறக்கணித்து விட்டு வேறு ஒருத்தியுடன் உறவாடுவதை எண்ணி வருந்திய அவள்,

*பாடுங்குயில் இருக்க*
*பனங் காட்டைத் தேடலாமோ?*

*சித்திரம் போல் நானிருக்க*
*தேச வழி போகலாமோ?*

என்று கேட்கிருள். தன் கணவன் பெயர் கெடுவதை எண்ணி நோகின்ருள். "இனியாவது திருந்தி வாழக் கூடாதா?" என்கிருள்:

*சித்திரம்போல் நானிருக்க*
*தேச வழி போகலாமோ?*
*தேச மெல்லாம் பொல்லாப்பு*
*திரிஞ்ச நாள் போதாதோ?*

கணவன் செய்த குற்றத்தை எல்லாம் மன்னித்து மறந்து விடுவது தமிழ் நாட்டுப் பெண்களின் தனிப் பண்பல்லவா?

*குளிச்ச மஞ்சள் கன்னத்திலே!*
*கூடுவது எக்காலம்?*
*பாச மெல்லாம் ஒங்கமேலே!*
*பரிதவிச்சேன் உங்களாலே!*
*சோறு கறி செல்லாமல்*
*சுக்காய் உணருறேனே!*
*வஞ்சிக் கொடி எஞ்சாமி!*
*வந்தணைத்தால் சோறு செல்லும்.*

என்று, வாழத் துடிக்கும் அவள் கூறுகின்ருள்.

இல்லறம் இனிது நடைபெறப் பொருள் வேண்டும். பொருள் வளம் குன்றிய வாழ்க்கை சுவையற்றிருக்கும். அதிலும் பொருள் இல்லாத குறையை எண்ணி ஏங்குபவர் வாழ்க்கை இன்னும் துன்பமானது. குடும்பப் பெண்ணுக்கு வறுமை

பற்றிய நினைப்பு இருக்குமானால் வாழ்க்கை கசந்து விடும். செல்வம் கொழிக்கும் குடும்பத்தில் பிறந்த பெண் வறுமை மிக்க குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு வருந்தினால் அந்த வருத்தம் மிகப் பெரியதாக இருக்கும்.

செல்வக் குடியில் பிறந்த பெண்ஒருத்தி ஏழை ஒருவனுக்கு வாழ்க்கைப்படுகின்றாள். வறுமைத் துன்பம் அவளை வருத்துகின்றது. கூலிக்கு நெல் குற்றியும் குப்பைகள் சுமந்தும் வாழக்கூடிய நிலை ஏற்பட்டு விட்டது. அவள் உள்ளத்தில் பொங்கி எழும் துன்ப நினைவுகளைக் கீழே உள்ள பாடல் குறிப்பிடுகின்றது:

*"ஏழைக் கிருந்தேனே,*
*இலவங் கிளி போல!*
*பாவிக் கிருந்தேனே,*
*பச்சைக் கிளி போல!*
*ஏழைக்கு நான் பெண்டு!*
*கூலிக்கு நான் குத்த,*
*குப்பைகள் சுமக்க—"*

என் வாழ்க்கை கழிகிறதே என்று துன்புறுகிறாள்.

கணவனோடு வாழும் ஒருத்தியின் கூடா ஒழுக்கத்தைக் குறிப்பிட்டுக் கண்டிக்கிறது இப்பாடல்:

*கறுப்புத் துணி அறிவாள்!*
*கள்ள வழி தானறிவாள்!*
*கணவன் சரியாய் இருந்தால்*
*கள்ள வழி நடப்பாளோ?*

நள்ளிரவில், கறுப்புத் துணி உடுத்துக் கள்ள வழியில் நடப்பவளின் ஒழுக்கத்தை வெறுக்கின்றது இப்பாடல். மேலும், அவள் கணவனையும் குறை கூறுகின்றது.

தமிழில் உள்ள அகத்திணைப் பாடல்கள் தலைவன், பரத்தையரை நாடிப் பிரிவதை மட்டுமே பாடுகின்றன. கணவனோடு வாழும் மனைவியின் கூடா ஒழுக்கத்தைத் தமிழ்ச் சான்றோர்கள் நினைக்கவும் அஞ்சினர்; அத்தகைய கூடா ஒழுக்கத்தைப் பாடாது ஒதுக்கினர். ஆனால், வடமொழியில் மனைவியின் கூடா ஒழுக்கத்தைப் பாடும் பாக்கள் உண்டு. காளிதாசர் போன்ற பெருங் கவிஞர்களும் அத்தகைய பாடல்களைப் பாடியுள்ளனர். தமிழில் அத்தகைய பாடல்களுக்கு — அறம் உணர்ந்த சான்றோர் இயற்றிய இலக்கியங்களில் இடமில்லை. ஆனால், நாட்டுப் பாடல்கள் அந்தத் தூய தமிழ் மரபைப் போற்றவில்லை. வாழ்க்கையில் உள்ளதை உள்ளவாறே பாடும் பண்புடையவை அவை. இருப்பினும் மேலே காட்டிய பாடல், கறுப்புத் துணி உடுத்துக் கள்ளவழி நடப்பவளைக் கண்டிக்கின்றது; அவள் கணவனைக் குறை கூறுகின்றது.

செல்வர் வாழும் செழுமனைகளில், சோற்றுக்காகப் பணி புரியும் எளிய மக்களின் நிலை மிகவும் இரங்கத்தகது. அத்தகைய மக்களின் நெஞ்சத்தில் தோன்றும் எண்ண அலைகள், துன்பக் குரலாய் வெளிப்பட்டு, பாட்டாய் உருவெடுக்கிறது:

*சோறு நிறைந்த வாசலிலே*
*சொன்ன வேலை செய்தாலும்,*
*சோறு பெரிசு!*
*சொன்ன வேலை சின்னது!*

பிள்ளை இல்லாக் குறையை ஏற்றக்காரர் ஒருவர்,

*பிள்ளை இல்லை என்று*
*பெருந் தவங்கள் செய்தோம்!*
*குழந்தை இல்லை என்று*
*கோடித் தவம் செய்தோம்!*

என்று பாடி வெளிப்படுத்துகிறார்.

பல ஆண்டுகளுக்கு முன், ஏற்பட்ட பெரும் பஞ்சம் ஒன்றைக் கீழ் வரும் பாடல் குறிப்பிடுகின்றது:

*வெள்ளி தெற்கோட*
**வேந்தன் வடக்கோட*
*கள்ளியிலே நீர்வற்றி*
*கற்றாழை சோறுவற்றி*
*சக்கிலி உளி விற்று*
*ஆண்டி சங்கு விற்று*

பெரிதும் துன்புற்றனராம்!

தன்னோடு வீணாகச் சண்டையிடுபவளை எண்ணி எண்ணி, ஒருத்தியின் மன எரிச்சல் பாட்டாய் உருவெடுக்கிறது.

---

*வேந்தன்—வியாழன்

*நான் ஒருத்தி வாசல்*
*போய் மிதித்த தில்லே!*
*யார் ஒருத்தி நம்மை*
*ஏவலிட்டுக் கொண்டாள்!*
*ஏவலிட்ட வீடு*
*எருக்கு முளேயாதோ!*
*கூச்சலிட்ட வீடு*
*கொல்லே வழி யாமோ?*
*மாடு கட்டும் கொட்டாய்*
*மந்தை வெளி யாமோ?*
*கன்று கட்டும் கொட்டாய்*
*கழுதை புரளாதோ?*

சீரும் சிறப்புமாக வாழும் அண்ணன் தம்பி களால் தனக்கு ஒன்றும் நன்மை இல்லே என்று எண்ணி, பிறந்த பெண் ஒருத்தி மனம் வெதும்பு கின்ருள்:

*அண்ணன் வாழ்ந்தென்ன?*
*அளகாபுரி ஆண்டென்ன?*
*தம்பி வாழ்ந்தென்ன?*
*தர்மபுரி ஆண்டென்ன?*
*தென்னே செழித்தென்ன?*
*தென் மதுரை வாழ்ந்தென்ன?*
*வாழை செழித்தென்ன?*
*வட மதுரை வாழ்ந்தென்ன?*

குளத்திற்குத் தண்ணீர் கொண்டுவரச் சென்ற பெண்ணின் குடத்தைக் கவர்ந்து கொள்ள எண்ணிய ஒருவன்,

*அழைக்கிருள் உன் தோழி*
*குளக்கரைமேல் உன்னே!*

என்று கூறுகிறான். அதை உண்மை என்று நம்பி அவள் குடத்தை அங்கேயே வைத்துவிட்டு அக்கரைமேல் சென்று பார்க்கிறாள். அங்கே யாரு மில்லை! குளத்தில் இறங்கிப் பார்த்தபோது குடமும் இல்லை! முன்பு அங்கே இருந்த ஆளும் இல்லை! அவள் நெஞ்சத்தில்,

*அழைத்த குரல் கேட்டு,*
*எடுத்த குடம் போட்டு,*
*எதிரேப் போயி நின்றேன்!*
*அழைத்தவரைக் காணோம்!*
*அழகுக் குடம் போச்சே!*
*கூப்பிட்டவரைக் காணோம்!*
*குடபல்லாயும் போச்சே!*
*எங்கள் மாமி கேட்டால்*
*ஏது சொல்லப் போறேன்?*

என்ற துன்ப நினைவுகள் எழுகின்றன. மாமியிடம் வந்து,

*எட்டி மொண்டேன் தண்ணீர்,*
*இடறி விட்டேன் மாமி!*
*தாவி மொண்டேன் தண்ணீர்*
*தவறி விட்டேன் மாமி!*

என்று கூறித் தப்பித்துக் கொள்கிறாள்.

தண்ணீர் கொண்டுவரக் குளத்திற்குப் புறப்படு கிறாள் ஒரு சிறுமி. அவளுடைய தாய் விரைவில் வருமாறு அவளிடம் கூறுகிறாள். அதற்கு அச்சிறுமி,

*குளத்தருகே குண்டுமல்லி*
*கொத்துக் கொத்தாய்ப் பூத்திருக்கும்!*
*குண்டுமல்லிப் பூ முடிக்கப்*
*பின்னும் கொஞ்சம் நேரமாகும்!*

என்று கூறுகின்றாள். குளத்தருகே பூத்திருக்கும் குண்டு மல்லிகைப் பூவைக் கொய்து, பூ முடித்து வர, நேரம் சிறிது கூடுதலாக ஆனாலும் தாய் கோபிக்கக் கூடாது என்று அச்சிறுமி எதிர்பார்க்கிறாள்.

ஆற்றுக்குச் செல்லும் மற்றொரு சிறுமி,

*ஆற்றருகே அடுக்கலரி*
*அடுக்கடுக்காய்ப் பூத்திருக்கும்!*
*அடுக்கலரிப் பூ முடிக்கப்*
*பின்னுங் கொஞ்சம் நேரமாகும்!*

என்று கூறுவதாய் அமைந்துள்ளது வேறொரு பாடல்.

பூ முடித்துப் பொலிவு பெற்றுச் சிறப்பதில் எத்தனை ஆசை இச்சிறுமிகளுக்கு!

மாலையில் வீடு திரும்புவதாய்க் கூறிச் சென்றான் அவள் கணவன். ஆனால் இரவு நேரம் வந்ததும் அவன் ஏனோ வரவில்லை. "தன் கணவன் இன்னும் வரவில்லையே!" என்ற ஏக்கத்தால் அவள் அந்த வழியாக வருபவர்களை நோக்கி,

*ஆற்றுக்கு அந்தப்புறம்,*
*அஞ்சாறு தென்னை மரம்!*

*வச்சமரம் பார்க்கப் போன*
*மச்சான் வரக் கண்டீர்களோ!*

என்று வினவுகிருள். தன் கணவன் சென்றிருக்கும் இடம் — தென்னை மரம் வைத்துள்ள தோட்டம் ஆற்றுக்கு அந்தப்புறம் இருக்கிறது. அதுதான் அவள் கவலைக்குக் காரணம்! "ஆற்றில் புது வெள்ளம் வந்துவிட்டதா? அதனுல் இறங்கிவர முடியாமல் அங்கேயே இருக்கிருரா? ஆற்று வெள்ளத்தில் இறங்கியபின் ஏதேனும் துன்பம் நேர்ந்து விட்டதா?"

வறுமை வந்த போதிலும், கடன் வாங்கி வாழக் கூடாது என்ற உறுதி கொண்ட ஒருவன் தன் மனைவியிடம்,

*ஆக்க உலை வைத்து,*
*அரிசிக் கடன் கேட்டு,*
*பொங்க உலை வைத்துப்*
*போய்க் கடன் கேட்டு,*
*ஆக்க வேண்டாம் பெண்ணே!*
*அரிசிக் கடன் வேண்டாம்!*

என்று கூறுகிருன். 'கடன் இல்லாத கஞ்சி கால் வயிறு போதும்' என்று எண்ணுகிருன் அவன்!

ஒரு வீட்டின் சமையலறைக்குள் புகுகின்றது பொல்லாத பூனை ஒன்று! அங்கே யாருமில்லை. பூனை இடையூறு எதுவுமின்றி 'விருந்து'ண்ணத் தொடங்கி விடுகிறது! தயிர், பால் ஆகியவற்றை குடித்து மகிழ் கின்றது! அதோடு நின்றதா? பானைகளையும் உருட்டி

உடைக்கின்றது. வாயை நாக்கால் நக்கிக் கொண்டே வெளியேறி, வீட்டுக் கூரையை அடைகின்றது. வீட்டுக்குரியவள் அப்போதுதான் வந்து பார்க்கிருள். பக்கத்து வீட்டுக்காரியிடம் நிகழ்ந்ததைச் சொல்லி வருத்தப்படுகிருள்:

*நாத்தனுரே, பெண்ணே!*
*ஏச்சுதோடி பூனே!*
*பாலேயுங் குடித்துப்*
*பால்பானே யுடைத்து,*
*மோரையும் குடித்து*
*மொந்தையும் உடைத்து,*
*தயிரையும் குடித்துத்*
*தயிர்ப்பானே யுடைத்து,*
*வீட்டின் மேலே ஏறி*
*விட்டதோடிப் பூனே!*
*இளேய மைத்துனர்க்கு*
*ஏது சொல்லப் போறேன்!*
*மூத்த மைத்துனர்க்கு*
*மோருக் கெங்கே போவேன்!*
*தன் எசமானுக்குத்*
*தயிருக்கு எங்கே போவேன்!*

பிச்சைகரரப் பெண் ஒருத்தி, தனக்குத் திருமணம் நிகழப் போவதாயும், அதற்கு உதவி செய்யவேண்டும் என்றும் வேண்டுகிருள்:

*ஏழைக்குக் கல்யாணம்—அம்மா*
*ஏசாதே பேசாதே—அம்மா*
*உன்னுட்டம் பெண்ணுக்கு—அம்மா*
*உதவிகள் செய்திடு—அம்மா*
*காலணு அரையணு—அம்மா, அது*
*கால்காசு, அரைக்காசு—அம்மா!*

நிலையாமை எண்ணம் வேரூன்றி விட்டவர் உள்ளத்திலிருந்து பிறக்கின்ற பாடல்:

*என்றைக் கிருந்தாலும்*
*மண்ணுக் கிரை தானே!*
*நாளைக் கிருந்தாலும்*
*சொல்லுக் கிடந்தானே!*
*பின்னைக் கிருந்தாலும்*
*பேச்சுக் கிடந்தானே!*

கொடிய நஞ்சுடைய நாகப் பாம்பிற்கு நல்ல பாம்பு என்று மக்கள் பெயர் இட்டுள்ளனர். அதனைக் கொல்வது பாவம் என்கிறது ஏற்றப் பாடல்:

*நாகத்தைக் கொல்லாதே!*
*பாவத்தைத் தேடாதே!*
*நாகம் என்ன செய்யும்*
*நம்ம விதி மாண்டால்?*
*நம்ம விதி மாண்டால்*
*பிரமன் என்ன செய்வான்?*
*எழுத்துக் கட்டளையை*
*எமன் என்ன செய்வான்?*

படை வீரனாய்ப் போர்க்களத்திற்குச் சென்ற ஒருவனின் முடிவைப் பாடுகின்றது பாடல்:

*தண்டுக் கவன் போயி*
*குண்டுபட்டு மாண்டான்!*
*கூடப்போன தோழன்*
*கொண்டு வந்தான் சேதி!*

காட்டு விலங்குகளை வேட்டையாடிப் பிழைக்கின்ற வேடனைக் குறிக்கின்றது பின்வரும் பாட்டு:

*மூங்கிலோடா காடு*
*முண்டனோடா வேடன்!*
*தாங்கலோடா கொல்லை*
*தனிக்குதோடா பன்றி*
*பற்றி படுமென்று*
*பதுங்கி இருந்தான் வேடன்!*
*அம்பெடுத்தான் வேடன்*
*அடி பிடித்தான் மானை!*
*வில்லெடுத்தான் வேடன்*
*விட்டெறிந்தான் மான்மேல்*
*கல் எடுத்தான் வேடன்*
*கால் ஒடித்தான் மானை!*

துவரை வாங்கச் சென்றவர் ஏமாந்து விட்டதைப் பாடுகின்றார்:

*தோழி உங்கள் நாட்டில்*
*துவரை கொள்ளப் போனேன்!*
*பாவி உங்கள் தாயார்,*
*பணத்தைக் கையில் தாங்கி,*
*பதர் அளந்து போட்டாள்!*

குடும்பம் நடத்தும் பெண், அரிசி பருப்பு முதலிய பண்டங்களைக் கடன் கேட்பதைக் குறைவாய் மதிப்பிடுகின்றது ஒரு பாடல்:

*ஆக்க உலை வைத்து,*
*அரிசி கடன் கேட்டாள்!*
*பொங்க உலை வைத்து,*

*புளி மிளகாய் கேட்டாள்!*
*பக்க உலை வைத்து*
*பருப்புக் கடன் கேட்டாள்!*

'கடன் இல்லாத கஞ்சி கால் வயிறு போதும்' என்பது ஒரு பழமொழி. அடிக்கடி கடன் கேட்பதை அக்கம், பக்கத்தார் வெறுப்பார். கடன் வாங்கி வாழ்பவர், மக்கள் நடுவில் புகழோடு இருக்க முடியாது!

ஆடை வெளுக்கின்ற — சலவைத் தொழிலாளி பற்றி வழங்குகின்ற பாடல் இது:

*தோணிக்கு வடக்கே*
*மாணிக்க மலையாம்!*
*மாணிக்க மலையாம்*
*மகமேரு கிரியாம்!*
*தோப்புகள் அதிர,*
*தப்புறானே வண்ணான்!*
*பாறைகள் அதிர,*
*பாடுறானே வண்ணான்!*
*குன்றுகள் அதிர,*
*கூவுறானே வண்ணான்!*

மலையும் சோலையும் மிகுந்திருக்கும் இடத்தில் உள்ள நீர்நிலைகளில் ஆடையைத் துவைக்கின்ற வண்ணான் பாடுகின்ற பாட்டின் விளைவுகளைக் குறிப்பிடுகின்றார் ஏற்றக் காரர்.

தீய சகுனங்களைப் பட்டியல் போட்டு கூறுகின்றது ஏற்றப் பாடல்:

*வாலுள்ள குருவி*
*வலியன் தடையாச்சு!*

கொடியிடும் பூனே
குறுக்கே வரலாச்சு!
கட்டு சுருளோலே
கணக்கன் எதிராளுன்!
பனம்பட்டை நெருப்பு,
பக்கத்திலே கண்டேன்!
எருமூட்டை நெருப்பு,
எதிரே வரக்கண்டேன்!
மட்டையுள்ள சாரை
மாருடனே போச்சு!
ஒத்த நாலு பார்ப்பான்
எதிரே வரக் கண்டேன்!
மொட்டைத் தலே முண்டை
மூளி எதிராளுள்!

செஞ்சிக்கோட்டை, தேர் ஓடும் காஞ்சிநகர், சென்னேப்பட்டினம் — ஆகியவற்றை ஏற்றப் பாடல்கள் சிறப்பிக்கின்றன:

செஞ்சி நகர் வாழ
செல்லக் கொடியேற!
செஞ்சியைப் போல் கோட்டை
சீமையிலும் இல்லே!
சீமையிலும் இல்லா
வரிவரியாய்க் கொம்மை
வகை வர்ணக் கோட்டை!
கோட்டை கொத்தளமாம்
கோடிப் பொன் வருமாம்!
காஞ்சி நகர் வாழ,
கம்பக் கொடிஏற!
இன்னும் காஞ்சி வாழ
ஈஸ்வரன் தேர்ஓட!

*சொன்னப் பட்டணமாம்!*
*சேனபொன் வருமாம்!*
*வெள்ளி உருக்கி வார்த்த*
*வெள்ளேக்காரன் கோட்டை!*

திருமணமாகாத தம் அண்ணன்மாரைத் திருமணம் செய்து கொண்டு இன்பமாக வாழுமாறு மகளிர் சிலர், கன்னிப் பெண்களுக்கு அறிவுரை கூறுகின்றனர்:

*ஒருமலேச் சந்திலே நாங்கள் குடி இருப்போம்!*
*ஒரு கட்டுத் தாழம்பூ நாங்கள் முடிப்போம்!*
*சந்தனக் கட்டையை வெட்டி அண்ணன் கொடுப்பார்!*
*சாதியிலே ஒரு பூ நாங்கள் முடிப்போம்!*
*வாங்களேன் கன்னிகளா வந்திடுங்கோ!*
*வாதாடி சூதாடிப் பூ முடிப்போம்!*

தன் கணவனுக்காக, நண்டும் புளியங்காயும் கலந்து கறிசமைத்த ஒருத்தி பாடும் தெம்மாங்குப் பாடல் இது:

*நண்டே நண்டே செங்கால் நண்டே!*
*நான் போற இடத்துக்கு நீ வராயா?*
*உயிர் இருக்க ஓடு இருக்க உன்னேப் பிளந்து,*
*ஒரு மரத்துப் புளியங்காயைத் திருவிக் கொட்டி,*
*கன்னி யான் கலத்தைக் கழுவி வைச்சி*
*வரகரிசி பருக்கை வடிச்சி கொட்டி*
*வருவான் வருவான்னு நான் பார்த்தேன்!*
*வரவே காணேம் வழிச்சிக்கினேன்!*
*தொடுவான் தொடுவான்னு நான் பார்த்தேன்!*
*தொடவே காணேம், நான் தொட்டுக்கினேன்!*

ஒரு சிற்றூரில், சிறிய குடும்பத்தில் பிறந்தபெண் ஒருத்தியை அவள் விரும்பாத ஒருவனுக்குத் திரு மணம் செய்து கொடுத்து விடுகின்றனர். அவளை மணந்து கொண்டவன் வேறு யாருமில்லை; அவளு டைய தாய்மாமன்தான்! தாய் மாமனை அவளுக்குப் பிடிக்கவில்லை! மேற்குத் திசையில் உள்ள வளமற்ற ஊரில் வாழ்ந்து கொண்டு, வெங்காயம் விற்றுப் பிழைப்பவன் அவன்! அவனைப் பற்றி,

*வெங்காயம் விற்ற பைய*
*மேற்கத்தி பள்ளி பைய*

என்று தன் ஆத்திரம் தீரப் பேசுகின்றாள். தகுதியில் லாத அவன் தன்னை மணந்து கொள்ள வந்தானே என்று ஆத்திரம் அடைகின்றாள்:

*வெங்காயம் விற்ற பைய*
*மேற்கத்திப் பள்ளி பைய*
*பெண்ணுக்கு வந்தானும்!*
*பெண்ணுக்கு வந்தானும்!*

என்ற நான்கு வரிகளில்தான் எத்தனை வெறுப்பு தேங்கி நிற்கிறது.

அவன் வந்து பெண் கேட்டதும் உடனே தருவ தாக அப்பன் அண்ணன் தம்பி ஆகியோர் ஒப்புக் கொள்ளவில்லை! அவர்கள் மறுக்கின்றனர். மறுத் துப் பேசிய அவர்களைப் பெருமையுடன் குறிப்பிடு கின்றாள்:

*ஆனைக் குடைக்காரன்—எங்கப்பன்*
*ஆகாதுன்னு சொன்னுங்க!*

*குதிரைக் குடைக்காரன் — எங்கண்ணன்*
*கூடாதுன்னு சொன்னுங்க!*
*சுண்டு வில்லுக்காரன் — எங்க தம்பி*
*தூர நிற்கச் சொல்லிவிட்டான்!*

இவ்வளவு பேரும் மறுத்தபோது,எப்படித் திருமணம் நடந்தது? அதற்கு யார் காரணமாக இருந்தார்? வேறுயாரும் இல்லை; அவளுடைய தாய்தான்! பெற்று வளர்த்துச் சீராட்டிய தாய்தான்! தாய்வீட்டு உறவு போய்விடக் கூடாதே என்று, தாய் அமைதியாகச் செய்த ஏற்பாடு; எதுவும் பேசாமல் தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டாள்: அன்றைக்குத் தாய் என்ன செய்தாள்? வந்த விருந்தினர்க்கு உட்காரப் பாய் விரித்தாள்! 'பெண் உண்டு' என்று கூருமல் கூறி விட்டாள். பேசாத தன் தாயை "ஊமைத் துரைச் சாணி" என்று வேதனையுடன் — வெறுப்புடன் குறிப்பிடுகின்ருள்:

*ஊமைத் துரைச்சாணி — எங்க அம்மா*
*உண்டுன்னு பாய் விரிச்சாள்!*

அந்த நாளை அவளால் மறக்க முடியுமா? அது அவள் வாழ்வில் மறக்க முடியாத நாள்!

# 13. மலரும் மாலையும்

## மழைப்பாட்டு

தமிழ் மக்களில் பெரும்பாலோர், பயிர்த் தொழிலை நம்பி வாழ்ந்து வருகின்றனர். பயிர்த் தொழில் மழையை நம்பி நடந்து வருகின்றது. மழை இல்லை என்றால் பயிர் இல்லை; விளைவு இல்லை; மக்களுக்கு வாழ்வில்லை; வளமில்லை. ஆதலின் பயிர்த் தொழில் செய்வோர், மழை தவறாது பெய்யவேண்டும் என்று விரும்புகின்றனர். தெய்வத்தை வேண்டுகின்றனர். ஏற்றம் இறைக்கும் உழவர்கள் பாடும் பாடல் இது:

*எப்போ மழைபெய்யும்?*
*எப்போ மழைபெய்யும்?*
*கால மழைபெய்தால்*
*கற்பூரம் விளையும்!*
*கற்பூரம் விளைந்தால்,*
*கந்தருக்கு உதவும்!*
*வேண மழை பெய்தால்*
*வெற்றிலை விளையும்*
*வெற்றிலை விளைந்தால்*

வேலவர்க்கு உதவும்!
ஏழைஎல்லாம் கூடி
இறப்பு இறைக்க போறோம்!
மாசி எல்லாம் கூடி
மழை அனுப்ப வேணும்!

நிலத்தை உழும்போது உழவர் பாடும் பாடல் இது:

நல்ல மழை பேயவேணும்!
நாடு செழிக்க வேணும்!
கொல்லை மழை பேயவேணும்
கொடும்பாவி சாகவேணும்!
கூழு கொதிக்க வேணும்!
குழந்தை பசியார வேணும்.

நீர்நிலைகளை நம்பி, நெற்பயிர் இட்டவர் மழை பெய்யாததால் நீர்நிலை வற்றுவதைக் கண்டு வருந்துகின்றார்:

குளத்தைக் குறுக்கடைச்சி
குள்ளன் சம்பா நாற்றுவிட்டேன்!
குளத்துத் தண்ணீர் வற்ற வற்ற
குள்ளன் சம்பா வாடுதையா!
வாய்க்காலைக் குறுக்கடைச்சி
வாடஞ்சம்பா நாற்று விட்டேன்
வாய்க்கா(ல்) தண்ணீ(ர்) வற்ற வற்ற
வாடஞ்சம்பா வாடுதையா!
ஆற்றைக் குறுக்கடைச்சி
அழகு சம்பா நாத்துவிட்டேன்
ஆற்றுத் தண்ணீ(ர்) வற்ற வற்ற
அழகுசம்பா வாடுதையா!

பெற்றோர்களின் கவலையை அறிந்த சிறுவர்கள்,

*எங்க காட்டுக்கு மழையே வா!*
*எருக்கங் காட்டுக்கு மழையே வா!*
*கள்ளிக் காட்டுக்கு மழையே வா!*
*கற்றாழை காட்டு மழையே வா!*

என்று மழையை அழைக்கின்றனர்.

*கொட்டைப்பாக்கு நறுக்கித் தரேன்!*
*கோயில் மணி ஆட்டித் தரேன்!*
*சோ என்று மழையே பெய்!*

என்று பாடுகின்றனர்.

இவ்வாறு வருந்துகின்ற துயரம் தீரப் பெருமழை பெய்கின்றது. மழையில் நனைந்து கொண்டே சிறுவர்கள்,

*ஓடோடும் தண்ணீர்!*
*உருண்டோடும் தண்ணீர்!*
*பள்ளத்தைக் கண்டால்,*
*பாய்ந்தோடும் தண்ணீர்!*

என்று பாடிக்கொண்டே ஆடுகின்றனர்.

மழை பெய்யும்போது சிறுவர்கள் பாடும் பாடல்களில் இதுவும் ஒன்று:

*மழை பெய்யுது மழைபெய்யுது*
*நெல்லை வாருங்க!*
*ரெண்டுபடி நெல் எடுத்து*
*முறுக்கு சுடுங்க!*
*ஏர் ஓட்டுற மாமனுக்கு*

*எண்ணி வையுங்க!*
*சும்மா இருக்கிற மாமனுக்கும்*
*சுட்டு வையுங்க!*

## பனைமரம் பேசினால்—!

பனைமரத்தைப் பற்றி பொருள்பொதிந்த பாடல் ஒன்று உள்ளது. நீண்டு, வளர்ந்து நிற்கின்ற பனைமரத்தைப் பார்க்கின்ற ஒருவர்,

*நெட்ட நெட்ட பனைமரமே!*
*நீ வளர்ந்த நேர்த்தி என்ன?*

அவருக்கு விடை கூறி விளக்குகின்றது பனைமரம்:

*கட்டும் கயிறானேன்!*
*காலு கட்டும் துன்பானேன்!*
*தூரத்துப் பொண்களுக்கு,*
*தூதுஓலை நான் ஆனேன்!*
*காதத்துப் பெண்களுக்கு,*
*காதுஓலை நான் ஆனேன்!*
*இளைப்போடு வருபவர்க்கு*
*இளநுங்கு நான் ஆனேன்!*
*வெந்நீர் வைச்சி ஊற்ற*
*விறகுகள் நான் ஆனேன்!*

பனைமரத்தின் அடிமுதல் முடிவரை உள்ள எல்லாப் பகுதிகளும் பயன் உள்ளவை. பனைமரம், பயனுள்ள மரம். எல்லார்க்கும் நல்லவை செய்கின்ற நல்ல மரம்!

பனைமரம், தன்னால் ஏற்படும் பயன்களைக் கூறுவதாய்ப் பின்வரும் பாடலும் வழங்குகின்றது:

*பனைமரமே பனைமரமே*
*ஏன் வளர்ந்தாய் பனைமரமே?*
*நான் வளர்ந்த காரணத்தை*
*நாட்டாரே சொல்லுகிறேன்!*
*படுக்கப் பாய்நான் ஆவேன்*
*பயனுள்ள உறிதருவேன்!*
*மாடுகட்ட கயிறாவேன்!*
*மக்களுக்குத் தொழில் தருவேன்!*
*பசித்து வரும் மக்களுக்கு*
*பழுத்த பழம் நான் தருவேன்!*
*வீடுகட்ட மரமாவேன்!*
*விறகாகப் பயன்படுவேன்!*
*கோடை வெயில் காலத்திலே*
*குளிந்த நுங்கு நான்தருவேன்!*
*இத்தனைக்கும் உதவி என*
*என்னை இறைவன் படைத்திட்டான்!*
*ஏரிக்கரை மீதினிலே*
*எந்நாளும் வீற்றிருப்பேன்!*

## இரயில் பாட்டு

இரயில் வண்டியைப் பற்றி, நாட்டுப்பாடல்கள் சில வழங்குகின்றன. எளிய நாட்டுப் புறத்து மக்களின் உள்ளத்தில், புகைவண்டி தோற்றுவித்த உணர்ச்சியலைகளை அந்தப் பாடல்கள் நன்றாக வெளிப்படுத்துகின்றன.

இருப்புப்பாதை அருகே ஏற்றம் இறைப்பவர், இருப்புப் பாதை தந்தி இரயில்வண்டி ஆகியவற்றைப் பற்றிப் பாடுகின்றார்:

*இருபதியால் எட்டு!*
*இருப்பான மலையை*
*இடித்தான் வெள்ளைக் காரன்!*
*இடித்தான் வெள்ளைக்காரன்!*
*கல்லான மலையை,*
*கண்டித்தானே ரெண்டாய்!*
*பொன்னான மலையை*
*பொளந்தான் வெள்ளைக்காரன்!*

என்று வெள்ளைக்காரர் முதன் முதலில் மலையைப் பிளந்து ரயில் பாதை அமைத்ததைப் பாடுகின்றார் ஏற்றக் காரர்.

இருப்புப் பாதையில், இரயில் வண்டி போகும் அழகை ஏற்றக்காரர் பாடுகின்றார்:

*தந்திகளைப் பாய்ச்சி*
*வண்டிகளை விட்டான்!*
*போகுது பார் வண்டி*
*பூமிகள் அதிர!*
*சின்ன துரை வண்டி*
*சேலம் சில்லா போகும்!*
*பெரிய துரை வண்டி*
*புதுச்சேரி போகும்!*

ஒரு தெம்மாங்குப் பாடலும், இரயில் வண்டியைப் புகழ்கின்றது. புகைவண்டியுடன் தொடர்புடைய பல

வேறு நிகழ்ச்சிகளை அந்தப் பாடல் வண்ண ஓவியம் தீட்டி விளக்குகின்றது:

*போட்டாண்டி வெள்ளைக் காரன் புதுரோட்டு!*
*புதுமையா(ய்) உண்டுபண்ணு* ரயில் வண்டி!*
*கருங்கடலும் செங்கடலும் ஒண்ணாய்க் கூட,*
*காற்றாய்ப் பறக்குதுபார் ரயில் வண்டி!*
*காதத்திலே வண்டி காணுதுபார்!*
*கைகொட்டி மரமெல்லாம் சாயுதுபார்!*
*முற்றினை முருக்க மரக் காட்டை வெட்டி*
*மூணு ஆளு, ரயில்வண்டி செப்பனிட்டு,*
*அசல கொசல வண்டி வருதுபார்!*
*அன்னூர் டேசன்லே** தங்குது பார்!*
*பெட்டி நிறைஞ்சிருக்கும் ஜனங்கலெல்லாம்!*
*புகைவந்து அடையுதுபார் ஜன்னலெல்லாம்!*
*நேருக்கு நேர்பார்த்தான் வெள்ளைக்காரன்!*
*நேராய்த் திரும்பிவிட்டான் ரயில்வண்டி!*

இருப்புப் பாதையில், ஒலியெழுப்பிக் கொண்டு வருகின்ற வண்டியை 'அசல கொசல வண்டி' என்று குறிம்பிடுகின்றது பாடல்.

## கப்பல் பாட்டு

செஞ்சியைச் சுற்றியுள்ள நாட்டுப் புறங்களில் கப்பல் பாட்டு வழங்கி வருகின்றது. புதுவைத் துறை

---

*உண்டுபண்ணு - உண்டு பண்ணினான் - உண்டாக்கினான்.

**தென் ஆர்க்காடு மாவட்டத்தில், செஞ்சியருகே உள்ள புகைவண்டி நிலையம்.

முகத்திலும் சென்னைத் துறைமுகத்திலும் தங்கும் கப்பல், கப்பல் தரும் சரக்கு, சரக்கை மதிப்பிடும் வணிகரின் இயல்பு ஆகியவை பாடல்களில் இடம் பெறுகின்றன.

*நாழி ஒன்னுக்கு நானூறு கப்பல்*
*நாள்தோறும் தப்பாமல் தினம்வந் திறங்கும்!*
*சீருடைய படித்துறைக்கு கப்பல் வரும் சேதி*
*சென்ன பட்டணம் கோட்டை சனங்களெல்லாம் கேட்டு,*

*பூரித்து ஆனந்தம் சந்தோசம் ஆகி,*
*புதுமைகளைப் பார்க்க அந்தக் கரைதனிலே நிற்கும்!*
*வேணுமென்ற சரக்குகளை வேணும்படி கொள்ள,*
*பேரான பேறுபெற்ற சென்னபுரி ஆளும்*
*பெரியதுரை சின்னதுரை எல்லாரும் கேட்டு,*
*நாடாளும் இங்கிலீசுக் கொடிக்காரர் எல்லாம்*
*நாலாயிரம் துரைமக்கள் ஒண்ணுகக் கூடி*
*ஏழாயிரம் யோசனை செய்து எழுந்தோடி*
*போகுதையா கப்பல் கரைதனிலே ஏலேலோ!*

ஏற்றப்பாட்டு, புதுச்சேரியில் வந்து நிற்கும் கப்பலையும், சரக்குகளையும் குறிப்பிடுகின்றது:

*நாற்பதியால் எட்டு*
*நாட்டம் புதுச்சேரி*
*நாட்டந் துரைக் கப்பல்*
*வந்த சரக்கென்ன*
*வாள்மிளகு சுக்கு*
*வந்திறங்கும் கப்பல்*
*ஏலரிசி சுக்கு*
*ஏந்திவரும் கப்பல்*
*முத்து வந்திறங்கி*

*பட்டணம் பரவி*
*முத்து வந்த சேதி*
*செட்டி மகள் கேட்டு,*
*கூறினான் விலைக்கு*

கப்பலிருந்து வந்த முத்தை வாங்க வந்தவர் விலைபேசுகின்றார்:

*சொள்ள முத்து ரெண்டும்*
*சொல்விலே குறையேன்!*
*பழுத்த முத்து ரெண்டும்*
*பணத்திலே குறையேன்!*

தமிழ் மக்களில் பலர், கப்பல் ஏறி வெளிநாடுகளில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். வெளிநாடுகளில், போர்ப்படை வீரராகி போரில் கலந்து கொண்டு இறந்தவர் உண்டு. ஏற்றப்பாடலில் இந்த நிகழ்ச்சி இடம் பெறுகின்றது.

*ஐம்பதியால் எட்டு*
*அநேக நாளாய்ப் பெண்ணே!—உன்*
*கணவன் எங்கே காணோம்?*

என்று ஒருவர் கேட்பதற்கு அந்தப் பெண் கூறும் விடை இது:

*கப்பல் ஏறிப் போனான்*
*குண்டு பட்டு மாண்டான்!*
*கூடப் போன தோழன்*
*கொண்டு வந்தான் சேதி!*

## விடுகதைப் பாடல்கள்

தொல்காப்பியம், விடுகதையைப் பிசி என்று குறிப்பிடுகின்றது. பழந்தமிழ் நூல்கள் நொடி என்று

கூறுகின்றன. உரையாசிரியர்கள், தம் காலத்தில் வழங்கி வந்த விடுகதைப் பாடல்களை எடுத்துக் காட்டியுள்ளனர். தமிழகமெங்கும் பல நூறு விடு கதைப் பாடல்கள் இன்றும் வழங்கிவருகின்றன. ஒப்பிட்டுக் கூறும் திறன், சிந்தனையூட்டும் குறிப்புச் சொல், அழகான உருவகம் ஆகியவற்றை விடு கதைப் பாடல்களில் காணலாம்.

ஆயிரம் ஆயிரம் தேனீக்கள் கூடிக் கட்டுகின்ற தேன்கூடு, தேன் திரட்டும் ஒருவரால் சிதைவதுபற்றி,

*ஆயிரம் தச்சர் கூடி*
*அழகான மண்டபம் கட்டி*
*ஒருவன் கண் பட்டு*
*உடைந்ததாம் மண்டபம்.*

—என்ற அழகான பாடல் வழங்கி வருகின்றது. பலாப்பழத்தைப் பற்றி,

*அப்பன் சொரியன்*
*ஆத்தாள் சடைச்சி*
*அவர்கள் பிள்ளைகள்*
*சர்க்கரைக் கட்டிகள்*

—என்ற விடுகதை வழங்குகின்றது. தேனைப் பற்றி, தஞ்சாவூர் மாவட்டத்தில வழங்கும் விடுகதைப் பாடல் இது:

*தண்டை கொலுசுக்காரி*
*தாவார வீட்டுக்காரி*
*அவளைத் தொடுவானேன்*

*அவஸ்தைப் படுவானேன்*
*கச்சேரி வாசலிலே*
*கைகட்டி நிற்பானேன்?*

தேங்காயைப் பற்றிய விடுகதைப் பாடல்கள்:

*குயவன் செய்யாத பாண்டம்*
*வண்ணான் வெளுக்காத வெள்ளை*
*மழை பெய்யாத தண்ணீர்.*

*உடம்பெல்லாம் மயிர் உண்டு;*
*குரங்கும் அல்ல!*
*உச்சியில் குடுமியுண்டு;*
*மனிதனும் அல்ல!*
*முக்கண் படைத்திருக்கும்*
*சிவனும் அல்ல!*

தூண்டில் முள்ளில் உள்ள புழு, துள்ளிவருகின்ற மீனை நோக்கிப் பாடுவதாய் ஒருபாடல் அமைந்துள்ளது:

*சல சலன்னு வருபவரே!*
*சலியாமல் வருபவரே!*
*உனக்கு ஆகாதவர்*
*உள்ளே இருக்கிறார்*
*எனக்காக வந்து*
*மாட்டிக் கொள்ளாதே!*

சுவையான—வேறு வேறு வடிவங்களையுடைய விடுகதைப் பாடல்கள் கீழே தரப்படுகின்றன:

*பச்சைப் பச் சென்றிருக்கும்*
*பாகற் காயும் அல்ல!*
*முள்ளு முள்ளாய் இருக்கும்*
*பலாக்காயும் அல்ல!*

உள்ளே வெறுத்திருக்கும்
தேங்காயும் அல்ல!
உருக்கினுல் நெய் ஒழுகும்
வெண்ணெயும் அல்ல!

—ஆமணக்குக் காய்.

ஆள் இறங்காத கிணற்றிலே
ஒரு மயில் இறங்குது!
குண்டு கதிரைக்கு
முழுநீட்டு வாலு!

—அகப்பை.

காயும் கோணைக்காய் கொள்ளடா மைத்துனு!
கதையும் விடுவித்தேன் சொல்லடா மைத்துனு!

—கொள்ளுக்காய்.

பர்வதமலை மேலே அறுபது குரங்கு
அதன் அதன் தலைமேலே பிடி பிடி மயிர்

—தென்னை மரம், தேங்காய்.

ஓட்டுத் திண்ணையிலே
பட்டுப் புடவை காயுது

—மூக்குத்தி.

உரித்து விட்ட குருவி
ஊருக்குப் போகுது!

—புளி.

இரண்டு வீட்டுக்கு ஒரு தூலம்

—மூக்கு.

கண்டு பூ பூக்கும்
காணுமல் காய் காய்க்கும்

—வேர்க்கடலை.

கண்டு காய் காய்க்கும்
காணாமல் பூ பூக்கும்

—அத்தி.

சிவப்புப் பையிலே
சில்லறைக் காசு!

—மிளகாய்.

வட்ட வட்ட குருவி
வால் இல்லாக் குருவி
ஊர் சுற்றும் குருவி
உருண்டோடும் குருவி

—பணம்.

தண்ணீரிலே தங்கம்
செடியிலே சிவப்பு
மரத்திலே கோணை

—மீன், மிளகாய்ப்பழம், புளியங்காய்.

இரண்டு வினாக்களுக்கு ஒருவிடை அமையுமாறு அமைத்துப் பாடுவது இருசொல் அலங்காரம். அவற்றுள் சில கீழே தரப்படுகின்றன:

ஆலிலை பழுப்பதேன்
இராவழி நடப்பதேன்

—பறிப்பாரற்று.

எருக்கிலை பழுப்பதேன்
எருமைக் கன்று சாவதேன்

—பாலற்று.

இளமை அழிவதேன்
ஈசுவர பறப்பதேன்

—தாதுபோய்.

## வேடிக்கைப் பாடல்கள்

ஏற்றப் பாடல்களில் சில வேடிக்கையான கருத்துடையவை உள்ளன. அவை பொருட் சிறப்பில்லாதவை; வெறும் பொழுது போக்காகமட்டும் பாடப்படுபவை. அவற்றுள் சில:

*தொப்பை வெள்ளை யானை*
*கப்பல் ஏறிப் போமோ?*
*காலு வெள்ளை யானை*
*கடைத் தெருவில் போமோ!*
*நெற்றி சிட்டி யானை*
*நித்தம் படப் போமா!*

*ஆனை கட்டும் மரம்*
*தேடி வெட்டப் போறேன்!*
*பாக்கு மரம் வெட்டி,*
*பாறை மேலே நட்டு*
*யானைகளைக் கட்டி,*
*பாணங்களை விட்டோம்!*
*குதிரைகளைக் கட்டி,*
*குண்டுகளைப் போட்டோம்!*
*ஆனைகள் போராட,*
*பாணங்கள் மேலோட!*
*குதிரைகள் போராட,*
*குண்டுகள் மேலோட!*

*முத்தன் செத்தான் என்று*
*கட்டை வெட்டப் போனேன்!*
*காடெல்லாம் திரிஞ்சேன்!*
*கள்ளிக் கட்டை வெட்டி,*
*காயப் போட்டு வந்தேன்!*
*எருக்கங் கட்டை வெட்டி*
*எடுத்துக் கொண்டு வந்தேன்!*

*முத்தனே எடுங்கோ!*
*மோளத்தை அடியுங்க!*
*வண்ணானே அழையுங்க!*
*வாய்க் கரிசி போட!*

இவை செங்கல்பட்டு மாவட்டத்தில் வழங்கிவருகின்றன.

## உலக்கைப்பாட்டு

முற்காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்த பெண்கள், நெல், தினே முதலியவற்றை உரலில் இட்டுக் குற்றும்போது, சிலபாடல்களே இசையோடு பாடினர். அவற்றை, வள்ளேப்பாடல்கள் (உலக்கைப் பாடல்கள்) என்பர். திருமணமான பெண்கள், தம் தலேவர்களின் பெருமையையும், தலேவர்களுக்கு உரிய மலேயின் வளத்தையும் பாடினர். சிறுமியர்கள் தம் பெற்ருேரையும் நாடாண்ட மன்னனேயும் வழிபடும் தெய்வத்தையும் போற்றிப் பாடினர்.

குறுந்தொகை(89), கலித்தொகை(40, 41, 42 43), சிலப்பதிகாரம் (59), பெருங்கதை (2, 14:50-52), திருவாசகம் (திருப்பொற் சுண்ணம்) ஆகிய நூல்களில் வள்ளேப் பாடல்களேப் பற்றிய செய்திகள் உள்ளன. பரணி நூல்கள், பாட்டுடைத் தலேவனேப் புகழ்ந்து பேய்கள் வள்ளேப் பாடல்களேப் பாடுவதாய்க் கூறுகின்றனர்.

யாப்பருங்கலக் காரிகையில் (9) மேற்கோளாக வரும்,

"பொன்ஞர மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேன் என்று ஊழ்உலக்கை பற்றினேற்கு—என்னே,
மனனெடு வாய்எல்லாம் மல்குநீர்க் கோழிப்
புனல்நாடன் பேரே வரும்".

என்ற பாடல் வள்ளைப்பற்றி நமக்கு அறிவிக்கின்றது. சோழ மன்னன்மீது காதல் கொண்ட பெண், அவன் தன்னை மணந்து கொள்ளாததால் அவன் பெயரையும் நினைக்கக் கூடாது என்று உறுதியாய் இருக்கின்ருள். ஆனுல் உலக்கை எடுத்துக் குத்தும் போது, அவளை அறியாமலேயே சோழன் புகழை வள்ளைப் பட்டாய்ப் பாடத் தொடங்கி விடுகிருள். அதை நினைத்து அவள் வருந்துகின்ருள்!

இக்காலத்திலும் நாட்டுப் புறங்களில் வள்ளைப் பாடல்கள் சில ஒலிக்கின்றன. வட ஆர்க்காடு மாவட்டத்தில் வழங்குகின்ற வள்ளைப் பாடல்கள் இவை:

கம்பு இடிக்கும்போது
கம்பம் ஏறிப் பார்த்த மாமன்!
மாமன் கண்ணு என்ன கண்ணே!—எனக்கு
மாவு இடிக்க முயலையே!
சோளம் இடிக்கும் போது
சுவர் ஏறிப் பார்த்த மாமன்!
மாமன் கண்ணு என்ன கண்ணே!—எனக்கு
மாவு இடிக்க முடியலையே!

பச்சை நெல்லு குத்தி
பச்சரிசி மாவிடிச்சி
பணியாரம் சுட்டு வைச்சேன்!
பணியாரம் தின்னும்போது,

பார்வை என்மேலே!—மாமனுக்குப்
பார்வை என்மேலே!

## ஒயில் கும்மி

ஒயில் கும்மியாட்டத்தில் குறவனும் குறத்தியுமாய் வேடம் புனைந்த இருவர் பாடும் பாடல்கள் சுவை மிகுந்தவை. அப்பாடல்கள் வினவும் விடையுமாக அமைந்துள்ளன.

**குறவன் :**

பொட்டு மேலே பொட்டு இட்டு
போக்கிரியை மாலை யிட்டேன்!
பொட்டுக் கலைந்ததென்னடி?
—ஏ சந்திரலேகா!
பொய் புரட்டு நடந்த தென்னடி?

**குறத்தி :**

பெற்றவள் இருக்கும்போது
பிசகுவந்து நேருமோடா!
நெற்றி வேர்வை பட்டு அல்லோ
—ஏ மாமா
நீலப் பொட்டுக் கலைஞ்சு போச்சுடா!

**குறவன் :**

ஒன் சைடு ரவிக்கை ஒன்று
உனக்கு நான் வாங்கி வந்தேன்
ஓரம் கிழிஞ்ச தென்னடி!
—ஏ சந்திரலேகா,
உனக்கு வந்த மோசம் என்னடி?

**குறத்தி :**

தெருப்பக்கம் திண்ணையிலே
தெரியாமல் தூங்கிவிட்டேன்
பெருச்சாளி கடிச்சதோடா
—ஏ மாமா,
பிசகு ஒண்ணும் செய்யலேடா!

**குறவன் :**

சரிகைப் புடவை கட்டி
சந்திரன் போல் வந்த பெண்ணே!
சைடு கிழிஞ்ச தென்னடி
—ஏ சந்திரலேகா
சைடு கிழிஞ்ச தென்னடி?

**குறத்தி :**

ஆடிமாசம் அமாசையிலே
அடுப்பு வேலே செய்ய வந்தேன்
ஆணிபட்டுக் கிழிஞ்சு போச்சுடா!
—ஏ மாமா
ஆத்திரமும் உனக்கு ஏனடா!

**குறவன் :**

மழுங்கக் கொண்டையிட்டு
மாயவரம் போன பெண்ணே
சைடு கலேஞ்ச தென்னடி
—ஏ சந்திரலேகா
சொல்லடி நீயும் பெண்ணே!

**குறத்தி :**

கும்பகோணம் கடைத் தெருவே
கொண்டை ஊசி வாங்கப் போனேன்

*கும்பல் நெருக்கத்திலே*
*—ஏ மாமா,*
*கொண்டை கலேஞ்சு போச்சுடா!*

**குறவன் :**

*கும்ப கோணம் போன போது*
*கொலுசு வாங்கிப் போட்டேனடி*
*கொலுசு போன விவரம் என்னடி?*
*—ஏ சந்திரலேகா*
*உனக்கு வந்த மோசம் என்னடி?*

**குறத்தி :**

*மதுராந்தகம் போனபோது*
*மாட்டு வண்டி ஏறும்போது*
*மடுக்கென விழுந்து போச்சுடா*
*—ஏ மாமா*
*மாறு பாடாய்ப் பேசாதேடா!*

## பெண்ணுக்கு ஏவல் செய்யும் பேதை.

பெண்ணடிமை வெறுக்கத்தக்கது. பெண் ஆணுக்கு அடங்கி அடிமைபட்டும் வாழக் கூடாது. ஆணுக்கு அஞ்சி அஞ்சி வாழ்கின்ற பெண்ணின் வாழ்க்கை துன்பம் நிறைந்தது. அதுபோலவே, பெண்ணுக்குஆண் அடிமைப்பட்டு வாழ்தல் தகாது. ஆணும் பெண்ணும் ஒத்து, சம உரிமையுடன் வாழ்தல் வேண்டும்.

பெண்ணாசையால் தாழ்ந்து நிற்கின்ற ஆணின் நிலே, கேவலமானது. பெண்ணுக்கு அடங்கி ஏவல் செய்கின்ற ஆணின் நிலேயை நாட்டுப் பாடல் ஒன்று

படம் பிடித்து விளக்குகின்றது. மறைமுகமாகக் கேலி செய்கின்றது. ஆணை, அடிமை கொள்ள விரும்பும் பெண் உள்ளத்தின் பிற்போக்கை நன்கு விளக்குகின்றது:

**ஆண் :**

*ஆத்தோரம் நிலமிருக்கு—பெண்ணே!*
*அஞ்சு காணி எழுதித் தரேன்!*
*அஞ்சு காணி நிலத்தை வைச்சு—கண்ணே*
*ஆனந்தமாய் வாழ்ந்திடலாம்!*

**பெண் :**

*நஞ்ச புஞ்ச இருந்தா மட்டும்—மாமா*
*எங்கிருந்து தங்கிடுவேன் மாமா*
*தங்குதற்கு இடம் சொல்லு மாமா*
*சந்தோசமாய் வந்துடுவேன்!*

**ஆண் :**

*கடல்போல வீடிருக்கு—பெண்ணே*
*கடைசி வீட்டை எழுதித்தாரேன்!*
*கடை வீட்டில் குடியிருந்தால்—கண்ணே*
*கண்ணைப்போல் பாதுகாப்பேன்!*

**பெண் :**

*மாமனாரு தண்ணி மொண்டு—மாமா*
*மாமியாரு சோறு பொங்கி*
*நாத்தனாரும் பரிமாற—மாமா*
*நானும் வந்து தின்ன வேணும்!*
*படுக்க நல்ல பாயைப் போட்டு*
*பக்கத்திலே நீ யமர்ந்து*
*விசிறி எடுத்து வீசவேணும்—மாமா*
*வேணுமின்னு கால் பிடிக்கணும்!*

## 14. தெய்வப் பாடல்கள்

நாட்டுப்புற மக்கள் எதையும் தெய்வத்தை நினைத்து வணங்கித் தொடங்குகின்றனர்; கோயிலில் திருவிளக்கு ஏற்றி வைத்து வணங்கி, பின் வருமாறு பாடுகின்றனர்.

*திருவிளக்கு நாயகியே!*
*தேவி கன்ன னூராளே!*
*மணிவிளக்கின் மேலிருந்து*
*மாதாவே கொஞ்சுமம்மா!*
*விளக்கிற் குடியிருந்து,*
*மெல்லியரே கொஞ்சுமம்மா!*
*திருவிளக்கின் மேலிருந்து,*
*தேவியரே கொஞ்சுமம்மா!*

திருவிளக்கில் தெய்வம் குடி இருந்து நன்மை செய்து வருவதாய்த் தமிழ் நாட்டு மக்கள் பரம்பரை பரம்பரையாக நம்பி வழிபட்டு வருகின்றனர். அத்தகைய நம்பிக்கையில் மலர்ந்ததே அப்பாடல்.

பிள்ளையாருக்குப் பலவகையான தின்பண்டங்களைப் படைத்து வழிபடுவது வழக்கம். பிள்ளையார் அவற்றை வயிறார உண்ணுவதாய்க் கீழ்வரும் பாடல் குறிப்பிடுகின்றது.

*கடலைபொரி அவல்பயறு*
*கரும்பும் இளநீரும்*
*கற்கண்டு சீனியுடன்*
*அப்பம் அதிரசமும்*
*வடைதோசை பணியாரம்*
*வரிசைப் பலாச்சுளையும்*
*வாகான எள்ளுருண்டை*
*குடவயிறு தனில்நிறைய*
*அமுதுகொள்ளும் பரனே.*

என்று பிள்ளையாரை அன்புடன் அழைத்துத் தம் குறையை எடுத்துரைப்பர்.

தெய்வம் மனித உருவில் வருவதாயும், தம் கண் முன் நடப்பதாயும் மக்கள் நம்புகின்றனர்.

*தங்கப் பிரம்பெடுத்துத்*
*தாவி நடந்தாராம்!*
*வெள்ளிப் பிரம்பெடுத்து*
*வீசி நடந்தாராம்!*

என்ற பாடல் அத்தகைய நம்பிக்கையில் மலர்ந்த தாகும்.

அழகர்மலைத் தேரோட்டமும், காவடி விழாவும் காண்பவர் கண்ணைக் கவரும் வகையில் அமைகின்றன. அவற்றைக் கண் குளிரக் கண்ட ஒருவர்,

*ஆறுகால் நூறு சட்டம்*
*அழகர் மலைத் தேரோட்டம்!*
*வெட்டவெளிப் பொட்டலிலே*
*ஆறுலட்சம் காவடியாம்!—நான்*

தேர்பார்க்க வேணுமின்னு
தேங்குதய்யா காவடியும்!

என்று உணர்ச்சி பொங்கப் பாடுகின்றார்!

சீதைக்கும் இராமருக்கும் நடைபெறும் திருமண விழா, பாடலில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது:

*சீதைக்கும் ராமருக்கும்
சீரான கல்யாணம்!
காசி விசிறிவரும்
கல்யாண ராமருக்கே!
சீர்காழி மேளம்வரும்!
சிதம்பரத்து மாலைவரும்!
சத்திரமாம் சாவடியாம்!
தங்கத்தால் கூடாரமாம்!*

தெய்வங்களைப் போற்றிப் பாடுகின்ற ஏற்றப் பாடல்கள் பல உள்ளன. அவற்றில் பக்தி மணம்கமழ் கின்றது; தெய்வீகத் தன்மை தேங்கி நிற்கின்றது; தூய உணர்வு நிரம்பி வழிகின்றது.

இருள் நீங்கு முன்னரே — பொழுது புலர்வதற்கு முன்னரே விழித்துக் கொண்ட அடியவர்,

"இருள் எப்போ ஒழியும்
இருள் எப்போ ஒழியும்!
பொழுதெப்போ விடியும்
பொழுதெப்போ விடியும்!
பூ எப்போ மலரும்
பூசைக்கு உதவும்!

காய் எப்போ கனியும்
கந்தருக்கு உதவும்!

என்று பாடுகின்றார்.

ஏற்றம் இறைக்கத் தொடங்குவதற்கு முன்னால் பாடும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இவை:

நல்ல மழை காலம்
பிள்ளையாரே வாரீர்
பெருமாளே வாரீர்
சிவனாரே வாரீர்
சிவனும் பெருமாளும்
சேர்ந்து ரதம் ஏற!
குருவும் பெருமாளும்
கூடி ரதம் ஏற!
குருவுடைய பாதம்
கோடிநாள் மறவேன்!
இராமரிட பாதம்
நாழியிலே மறவோம்!
சொக்கரிட பாதம்
எக்காலம் மறவோம்!
வேலருடைய பாதம்
விடிகாலம் தொழுவேன்!
பரமசிவம் பாதம்
படுக்கையில் மறவேன்.
ஆதிசிவன் பாதம்
அனுதினம் மறவேன்!
சொக்கருடை பாதம்
எக்காலும் மறவேன்
யாரை மறந்தாலும்
ஊரை மறவேனே!
அண்டையிலே வாழும்
அய்யனாரை மறவேன்!

ஏற்றப் பாடல்களில் பலவேறு பொருள்களைப் பாடிக் கொண்டே நடுவில் தெய்வங்களைப் பாடுவதும் உண்டு.

**கண்ண பெருமானை,**

*மாயவா கோவிந்தா*
*கேசவா முகுந்தா*
*கருடன் ஏறும் மாயா*
*கலிக்கு அவதாரா*
*கிருஷ்ணு வாசுதேவா*
*கீர்த்தியான கண்ணு!*

என்றும், இலட்சுமணரையும் வியாசரையும்,

*நற்பதியால் எட்டு*
*நாமத்தில் அழகர்*
*லட்சுமணப் பெருமாள்*
*லட்சுமணப் பெருமாள்*
*வேதத்தில் அழகர்*
*வேத வியாசர்*

என்று பாடுகின்றனர்.

கோலாட்டப் பாடல்களில் பின்வருமாறு முருகனை வாழ்த்திப் பாடுகின்றனர்.

*கந்தா கடம்பா இடும்ப குமாரா*
*கதிர்வேல் முருகா வாவா!*
*கான வள்ளியைச் சிறை எடுத்த*
*கனக ரவி குலா வாவா!*
*தேனும் தினை மாவும் தின்ற*
*தேசிங்கு நாதா வாவா!*

*தேசிங்கு நாதா வாவா!*
*நாரதர் சொன்ன வார்த்தைப் படி*
*நாடியே வனத்தில் வாவா!*
*வேங்கை மரமாக நின்ற*
*ஞான வடிவேலா வாவா!*

கந்தரைப் போற்றும் இனிய பாடல், கேட்போர் உள்ளத்தை மகிழ்விக்கும் வகையில் உள்ளது:

| | |
|---|---|
| *ஒரு சுற்றும்!* | *கந்தர்,* |
| *வேப்பமரம்* | *அரோகரா!* |
| *தோப்படிலே* | *அரோகரா!* |
| *சிம்மாதனம்* | *அரோகரா!* |
| *சிற்றுடுக்கை* | *அரோகரா!* |
| *சிறு பிரம்பு* | *அரோகரா!* |
| *மண் உடுக்கை* | *அரோகரா!* |
| *மணிப்பிரம்பு* | *அரோகரா!* |
| *தாளு கத்தை* | *அரோகரா!* |
| *தடிப் பிரம்பு* | *அரோகரா!* |
| *சேதி சொல்ல* | *கந்தர்,* |
| *வருதெப்போ* | *அரோகரா!* |

பிள்ளையார் பெருமையைப் போற்றிக் கூறுகின்றது பின்வரும் பாடல்:

*பிள்ளையார் நம் பிள்ளையார்!*
*பெருத்த தொந்திப் பிள்ளையார்!*
*அரச மரத்து நிழலிலே*
*அமர்ந்திருக்கும் பிள்ளையார்!*
*வேலனுக்கு அண்ணனாய்*
*வீற்றிருக்கும் பிள்ளையார்!*
*பிள்ளையாரைத் தொழுது நாம்*

*பெருஞ்செயல்கள் தொடங்கினால்,*
*உள்ளாரச் செயல் எல்லாம்*
*உயர்வாய் முடியும் அறிவீரே!*

மாரியம்மையை ஏற்றப் பாடல் போற்றிப் புகழ்கின்றது. மாரியம்மையின் திருவிழாவையும் கொலுவையும் பின்வரும் ஏற்றப் பாடல் சிறப்பிக்கின்றது:

*மாரியம்மா தாயே!*
*வாடியம்மா ஊரை!*
*நாழி எண்ணெய்ப் பந்தம்*
*நடுத் தெருவில் குடும்பம்*
*குடும்பத்தலங்காரி*
*கொலு விருப்பாள் மாரி*
*வேப்பஞ் சேலைக்காரி*
*வெளிப்பட்டாளாம் மாரி*
*நாட்டுக் கலங்காரி*
*நல்ல முத்து மாரி*
*ஊருக் கலங்காரி*
*உத்தமி பாஞ்சாலி!*

காளியைப் பற்றி வழங்குகின்ற பாடல் இது :

*தலையூர் காளிக்கு*
*சங்கரலிங்கம் ஏதுபண்ணுன்?*
*தங்க ஊசி கொண்டு*
*தாழ்ந்த மலர் எடுத்தான்!*
*வெள்ளி ஊசி கொண்டு*
*வெடிச்ச மலர் எடுத்தான்!*
*தூக்கி வைத்த காலுக்குத்*
*துத்திபூச் சல்லடமாம்!*
*மண்டியிடும் காலுக்கு*
*மல்லிகைப்பூச் சல்லடமாம்.*

## வீரர் வழிபாடு

போரில் இறந்துபோன வீரர்களுக்கு நினைவுச் சின்னமாய் நடு கல் நட்டு வழிபட்டனர் முற்காலத்து மக்கள். வட ஆர்க்காடு மாவட்டத்தில் நடு நற்கள் நிறைய உள்ளன. அவற்றை வேடியப்பன் கோயில் கள் என்பர். செங்கம் பகுதியில் வேடியப்பனைப் போற்றும் பாடல் இது:

*ஆற்றங்கரை வேடுவனே!*
*அதிகாரம் பெற்றவனே*
*துண்டு தடிகாரா*
*தூரப்போன வல்லவனே*
*வில்லில் மிகுந்தவனே*
*வேடுவனே யான் சரணம்*
*சர்வம் சரணமப்பா!*
*சாட்சாங்க தெண்டனிட்டேன்*
*ஆறுதப்பு நூறுபிழை*
*அடியேன் யான் செய்தாலும்*
*அப்பா மனம் பொறுத்து*
*அனைவரையும் காத்தருளும்!*
*வெள்ளைக் குதிரை யேறி*
*வெளிப்பட்டு வரவேணும்*
*வெண்கலத் தமுக்குப் போட்டு*
*வீசி நீ வரவேண்டும்!*

சிற்றூர்களில் நடக்கும் விழாவையும் கூத்தையும் சில நாட்டுப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. தெய்வங் களைப் பாடும் பாடல்கள் பல உண்டு. அத்தகைய பாடல்களில் இலக்கியச் சுவையும் நயமும் மிகுதியாக உள்ளன.

ஒரு சிற்றூரில் திருவிழா சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. பலவகைக் கூத்தும், ஆட்டமும் நடைபெறுகின்றன. அவற்றைக் காண ஓர் ஏழைச் சிறுவன் விரும்புகிறான். போய்ப் பார்க்கத் தன் தாயிடம் ஒப்புதல் கேட்கிறான்:

*ஊரில் அம்மன் கூத்து!*
*உற்ற சடல் ஆட்டம்!*
*மாரியம்மன் கூத்து!*
*மற்ற சடல் ஆட்டம்!*
*அம்மா! பொம்மலாட்டம்*
*ஆட்டிவைப்பான்; போறேன்!*

ஊரில் நடக்கின்ற அம்மன் கூத்தையும் சடல் ஆட்டத்தையும் பொம்மலாட்டத்தையும் கண்டு களிக்க அந்த ஏழைச் சிறுவனுக்குத்தான் எவ்வளவு ஆசை! "குழந்தாய்! போய்ப் பார்த்துவிட்டு உடனே வந்து விடு" என்று தாய் கூறுவாள் என நாம் நம்புகிறோம். ஆனால்,

*பொம்ம லாட்டம் பார்க்கப்*
*போகப் பொழுதில்லை!*

என்று கூறி மகனின் விருப்பத்திற்கு அணைபோட்டு விடுகிறாள். ஏமாற்றத்தினால் அந்த ஏழைச் சிறுவன் உள்ளத்தில் துன்ப நினைவலைகள் எத்தனை எழுந்தனவோ!

திருவிழாவில் மலர்மாலையைப் பூண்டு விளங்கும் மாரியம்மனைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறது இப்பாடல்:

*செடியைச் சுற்றி பூப்பொறுக்கிச்*
*செண்டு மாலை கட்டிச்*

*செண்டு மாலை கனக்குன்னு*
*தயங்குறுளே மாரி!*
*மல்லையைச் சுற்றி பூப்பொறுக்கி*
*மலர்ந்த மாலை கட்டி*
*மலர்ந்த மாலை கனக்குன்னு*
*மயங்குறுளே மாரி!*

ஆற்றங்கரைமீது பூசை கொள்ளும் தெய்வங்களைக் கீழுள்ள பாடல்கள் குறிப்பிடுகின்றன.

*வடக்கே இறங்கி மழைபெய,*
*வாணியாற்றுத் தண்ணீர்வர,*
*வாணியாற்றங் கரை மேலே—*
*வள்ளியம்மா பூசை கொண்டாள்!*

*தெற்கே இறங்கி மழைபெயச்*
*செய்யாற்றுத் தண்ணீர் வரச்*
*செய்யாற்றங் கரை மேலே—*
*செல்லியம்மா பூசை கொண்டாள்!*

பிள்ளையார்க்குப் பல வகையான தின்பண்டங்களைப் படைக்கப் போவதாக ஒருவர் பாடுகிறுர்:

*எண்ணும் பிள்ளையார்க்கு*
*என்னென்ன படைப்போம்!*
*பச்சரிசி தேங்காய் பயறு பணியாரம்*
*கொள்ளுடன் துவரை*
*கோதுமை கடலை*
*முள்ளுடன் பலாக்காய்*
*முறித்த இளங் கரும்பு*

ஆனையடி போல
அதிரசங்கள் நூறு
குதிரை முகம் போல
கொழுக்கட்டைகள் நூறு
பன்றியடிபோல
பைத்துருண்டை நூறு
எள்ளுருண்டை நூறு
இத்தனையும் சேர்த்து
வடக்குமலை ஏறி
வாழை இலை அறுத்து
வண்ணப் பிள்ளையார்க்கு
வகையுடன் தருவோம்!
தெற்குமலை ஏறி
தேக்கிலை பறித்து
செல்லப் பிள்ளையார்க்கு
சீருடன் தருவோம்!

திருவண்ணாமலைக்குச் சென்று அண்ணாமலையாரைக் கண்டு வழிபட விரும்பும் அடியவர் பின் வருமாறு பாடுகின்றார்.

இருள் எப்போ விலகும்
பொழுதெப்போ விடியும்!
பொழுதெப்போ விடியும்!
பூ எப்போ மலரும்
சிவன் எப்போ வருவார்
வரம் எப்போ தருவார்
வரத்திற்கு நான் போறேன்
வழியை மறிக்காதே!
வழியை மறித்தாலோ!
வரங் குறைந்துபோகும்!
தவத்துக்கு நான் போகிறேன்

*தடத்தை மறிக்காதே*
*தடத்தை மறித்தாலோ*
*தவங்குறைந்து போகும்!*
*அண்ணுமலைக்கு*
*எண்ணு விளக்கு*
*திருவண்ணுமலைக்குத்*
*தூண்டா விளக்கு*
*துளசி மணிமாலை*
*தொடுத்து நான்வைத்தேன்!*

திருத்தணி முருகரை வழிபட மக்கள் கூட்டம் சென்றுகொண்டிருக்கிறது. அதை அடியவர் ஒருவர் காண்கிருர். அவர் உள்ளம், அக்கூட்டத்துடன் கலந்து சென்று தணிகை மலையை அடைய விரும்புகிறது:

*இருக்கிருர் முருகர்,*
*திருத்தணி மலைமேல்!*
*போவுது சனங்கள்,*
*பொன்மலையை நோக்கி!*
*நடக்கும் மனு* வெல்லாம்*
*வடக்கு மலை தண்டம்!*
*போகும் மனு வெல்லாம்*
*பொன்மலைக்கே தண்டம்!*

இப்போது அந்த அடியவர் அக்கூட்டத்தோடு கலந்து திருத்தணிகை வந்து விட்டார்! தணிகை மலையைக் கண்டவுடன் முருகரை எவ்வெவ்வாறு வழிபட வேண்டும் என்று அவர் விரும்புகிருர் என்பதை அவரே கூறுகிருர், கேட்போம்:

---

*மனு—மக்கள் கூட்டம்.

*முத்தேங்காய் உடைத்து,*
*முருகரை அழைப்பேன்!*
*வேணது கலப்பேன்!*
*வேலரை அழைப்பேன்!*

தம் அழைப்புக்கு இணங்கி முருகர் வருவார் என்று உறுதியாக அவர் நம்புகிருர்:

*திருத்தணி முருகர்*
*வழித்துணை வருவார்!*

காஞ்சிபுரம் சென்று பார்க்க வேண்டும் என்று விரும்பும் தன் மனைவிக்குக் கணவன் பின் வருமாறு கூறுகின்ருன்:

*இருடி, பெண்ணே போவோம்,*
*கருட சேவை பார்க்க!*
*வேப்ப மரத் தெருவில்*
*வேடிக்கையும் பார்ப்போம்!*
*கெங்கள மண்டபம்,*
*கேளிக்கையும் பார்ப்போம்!*

இப்போது கணவனும் மனைவியும் காஞ்சிபுரத்திற்கு வந்து, கருடசேவையைக் கண்டு களிக்கின்றனர். கணவன் தன் மனைவியை நோக்கி,

*ஆற்றிலே வசந்தம்*
*ஆடுருர் கடம்பர்!*
*மத்தாப்பு வெளிச்சம்*
*மன்னவரும் பார்க்க!*

என்று கூறி, ஆற்றில் கடம்பர் வசந்தம் ஆடுவதைக் காட்டி மகிழ்கிருன். மன்னவரும் கண்டுகளிக்

கும் மத்தாப்பு வெளிச்சம் அவனைக் கவர்ந்து விடுகிறது!

மறுநாளும் திருவிழா உண்டு! "நாளைக்கு என்ன அத்தான் சிறப்பு?" என்று கணவனைக் கேட்கிறாள் மனைவி. அதற்கு அவன்,

*காலையில் பெருமாள்*
*தேரின் மேலே வருவார்!*
*அந்திக்கு வருவார்!*
*ஆனை மேலே ஏறி!*

என்று கூறுகின்றான். தேர் மீதும் ஆனை மீதும் வருகின்ற தெய்வங்களை,

*சேவிச் சோ மானால்*
*சேன பலன் உண்டு!*
*கும்பிட் டோ மானால்*
*கோடிப் பலன் உண்டு*

என்று கூறி, 'நாளைக்கும் இங்கேயே தங்கி இருந்து காண்போம்!' என்று குறிப்பாகக் கூறி விளக்குகின்றான்!

தென் ஆர்க்காடு மாவட்டத்தில், செஞ்சி நகரைச் சுற்றியுள்ள சிற்றூர்மக்கள், பாடுகின்ற கும்மிப் பாடல்களில் ஐயனார் திருவிழாவைப் பற்றிய வருணனைகள் உள்ளன. அவை நம் கண்முன் திருவிழாக் காட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்தி விடுகின்றன. அவற்றைக் காண்போம்:

*வாங்களேண்டி அம்மா, வாங்களேண்டி!—நல்ல*
*வண்ணைக் குளத்துக்கு வாங்களேண்டி!*

தேரும் திருநாளும் பாருங்கடி—அம்மா
தேவரைக் கண்டு வணங்குங்கடி!
சக்கரம் வந்து சமைஞ்சிருக்க—அம்மா
சபையோர்கள் வந்து வடம்புடிக்க
அப்போ புறப்பட்டு தங்கச்சியும்
அக்காளும் வாராங்க தேருபார்க்க!
மஞ்சள் நிறத்தாலே பொட்டு வைச்சு
மாதுளம் பூவாலே சேலை கட்டி
சீராளன் தங்கையும் வாராளாம்
சேர்ந்து கும்மி அடியுங்கடி!
உருட்டி கட்டின மெத்தையிலே
உள்ளே சமமான மேடையிலே
அப்போ புறப்பட்ட அக்காளும்
வாராளாம் இப்போ தெப்பம் பார்க்க!
சத்திரக் கோட்டை வாசற்படி
தாளம் ஒருபுறம் ஆடிவர
இரத்தினக் கோட்டை தெரியுதடி
எட்டி நடங்கோடி மாதரசே!
கூவாத சேவல் எடுத்துக் கொண்டு
கும்மி கொட்டி பானை தூக்கிக் கொண்டு
கூட்டம் கூட்டமாய் நடக்கிற
கூத்தாண்ட தேரையும் வந்து பாரு!
கருப்புக் குதிரை கடிவாளம்
கட்டிக் கிடக்குது குவாத்திலே*
தீவட்டி மத்தாப்பு வாண வேடிக்கை
எங்கும் துவங்குது குவாத்திலே
வண்டி கருப்பூரம் வந்தாலும்—சாமி
உனக்கும் எனக்கும் எட்டாதம்மா!
அரை நாழிக் குள்ளே எரிகிற
ஐயன் திருநாளை வந்துபாரு!

---

* குவாத்திலே—கூவம் ஆற்றிலே.

தெய்வங்கள் இருக்கும் திருக்கோயில்களைத் தேடி, அடியவர்கள் செல்லுவதைச் சில பாடல்கள் குறிப்பிடுகின்றன. பின்வரும் தெம்மாங்குப் பாடல் முருகன் திருத்தலத்தைப் போற்றுகின்றது:

*சின்ன சின்ன ஏந்திரமாம்!*
*சதுரமான கோபுரமாம்!*
*கோபுரத்து மேல் முருகா!*
*என்ன புஷ்பம் சாத்தலாம்?*
*மல்லிகைப் பூ மருக்கொழுந்து*
*மலர்ந்த புஷ்பம் சாத்தலாம்!*

ஏற்றப் பாடல்கள், அடியவர்கள் திருக்கோயிலைத் தேடிச் செல்லும் நிகழ்ச்சிகளை மிகச்சுவையுடன் பாடுகின்றன.

*நாற்பதியால் எட்டு*
*நாங்களும் வருவோம்,*
*பாங்கான மலைக்கு!*
*கும்பலாய் வருவோம்!*
*கோவிந்தர் மலைக்கு!*
*திரும்பியே வருவோம்!*
*திரும்பியே வருவோம்*
*திருவண்ணு மலைக்கு!*

என்ற பாடல் எண்ணி மகிழும் வகையில் உள்ளது.

கங்கைக்கும் காவிரிக்கும் சென்று தீர்த்த நீராடி வருவதற்கு ஆவல் மிகுதியாக இருந்தும், அந்த ஆறுகள் நெடுந்தொலைவில் இருப்பதால் அடியவர் ஒருவர், எளிமையான முறையில் வழிபாடுகள் நிகழ்த்தி ஆறுதல் பெறுகின்ருர்:

*அறுபதியால் எட்டு*
*ஆறுதா ரம் பெண்ணே!*
*போகப் பொழுதில்லே!*
*நீர் எடுத்து வாடி*
*நேர்த்தி பண்ணிப் போவோம்!*
*தண்ணீர் கொண்டு வாடி*
*தானம் பண்ண இடத்தில்—ஒரு*
*தண்ணீர்ப் பந்தல் வைப்போம்!*
*பூ எடுத்து வாடி*
*பூசை பண்ண இடத்தில்—ஒரு*
*பூஞ்செடியை வைப்போம்!*

கணவனும் மனைவியும் ஒத்த மனம் உடையவராய் இருந்து வழிபாடு செய்வதைக் காட்டுகிறது இந்தப் பாடல்.

கருத்து வேறுபாடு உடைய கணவனையும் மனைவியையும் காட்டுகிறது ஏற்றப் பாடல் ஒன்று. கணவன் தன் மனைவியை நோக்கி,

*மா அரையும் பெண்ணே!*
*மயிலம் பார்க்கப் போவோம்!*
*சாதம் கட்டு, பெண்ணே!*
*சாமி பார்க்கப் போவோம்!*
*பூ முடியும் பெண்ணே!*
*பூசைக்கு நாம் போவோம்!*

என்று கூறுகின்றான். அதற்கு மனைவி,

*மா அரைக்க மாட்டேன்*
*மயிலத்துக்கு வர்லே!*
*பூ முடிக்க மாட்டேன்!*

*பூசைக்கு நான் வரலே!*
*சாதம் கட்ட மாட்டேன்*
*சாமி பார்க்க வரலே!*

என்று கூறி மறுத்து விடுகின்றாள்.

உடன்பாடு இல்லாத மனைவியுடன் வாழ்பவர் உள்ளத்தில் கவலையும் ஏக்கமும் தோன்றி விடுகின்றன. தெய்வ வழிபாட்டிற்குத் தன் மனைவி துணையாக இல்லையே என்று வருந்துகின்றார்:

*சொக்கர் இதோ வரார்*
*சொக்கருக்குச் சாதம்*
*எப்ப சமைப்பாளோ!*
*வேலவர்க்குச் சாதம்*
*விடிய சமைப்பாளோ!*
*கந்தர் இதோ வரார்*
*கந்தருக்குச் சாதம்*
*கடிய சமைப்பாளோ!*
*வேலவர்க்குச் சாதம்*
*விடிய சமைப்பாளோ!*
*புள்ளி மயில் ஏறி,*
*புருசர் இதோ வரார்*
*கான மயில் ஏறி*
*கந்தர் இதோ வரார்!*
*கந்தருக்குச் சாதம்*
*கடிய சமைப்பாளோ!*

வாழ்க்கைத் துணைவி, ஒத்து நடக்காதபோது பூசை எங்கே? வழிபாடு எங்கே? திருக்கோயில் சென்று காண்பது எங்கே?

## மாரியம்மன்

கண்ணகி வழிபாடு தமிழகத்தில் இன்றும் நடைபெற்று வருகிறது, ஊர்தோறும் கண்ணகி கோயில் உள்ளது. இது வியப்பூட்டும் செய்தியாக இருக்கலாம். ஆனால், வரலாற்றுக்கண்கொண்டு உற்று நோக்கும்போது மாரியம்மை என்ற பெயருடன் கண்ணகி இருப்பது புலனாகும்.

ஆடி மாதம் வெள்ளிக்கிழமை மதுரை கண்ணகியால் எரிக்கப்பட்டது. கண்ணகி மறைந்த பின், பல ஆண்டுகள் பாண்டிய நாட்டில் மழை இன்மையால் பஞ்சம் ஏற்பட்டது; மக்களிடையே அம்மை நோய் பரவியது. அதனால் பாண்டிய மன்னன் கண்ணகியை வழிபட்டுத் திருவிழாச் செய்தான். அதன்பின் நாடெங்கும் நல்ல மழை பெய்தது; மக்கள் செழித்தனர். காலப்போக்கில் கண்ணகி விழா தமிழகத்தின் மற்றப் பகுதிகளிலும் இலங்கையிலும் பரவி, ஆடி மாதத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இது சிலப்பதிகாரம் கூறும் செய்தியாகும்.

இன்று இவ்வாறு விழா எடுக்கும் வழக்கம் தமிழ் நாட்டில் உள்ளது. மாரி என்ற சொல்லுக்கு மழை என்பது பொருள். கண்ணகி தன் கணவனையே தெய்வமாகத் தொழுது, மழையைப் பெய்யென்று ஆணையிட்டுப் பெய்விக்கும் ஆற்றல் படைத்த பெண் தெய்வம். ஆதலின் தமிழ்நாட்டு மக்கள் அவளுக்கு மாரியம்மை என்றே பெயரிட்டனர். மழை இல்லாத

வறட்சிக் காலத்தில் வெப்பமிகுதியால் தோன்றும் வைசூரியை (மாரி) அம்மை நோய் என்று குறிப்பிடு கின்றனர். மேலும் சில வடிவில் உள்ள மாரியம்மை யின் கால்களில் சிலம்புகள் இருப்பதைக் காணலாம். ஆண்டுதோறும் மாரியம்மன் விழா ஆடிமாதம் வெள் ளிக்கிழமையன்று ஊர்தோறும் நடைபெற்று வரு கின்றது. அந்த விழாவில் சிலம்புகளைக் கையில் ஏந்தி விளையாடும் வழக்கம் இன்றும் உள்ளது.

இவற்றையெல்லாம் நோக்கும்போது மாரியம் மையே கண்ணகி; மாரி கோயிலிலே கண்ணகி கோயில்; மாரி வழிபாடே கண்ணகி வழிபாடு என்ற உண்மை தெளிவாகப் புலப்படுகின்றது.

இலங்கை வாழ்மக்கள், இன்றும் பல திருவிழாக் களைக் கண்ணகி நினைவாகச்செய்து, கண்ணகியை வழிபட்டு வருகின்றனர். இதனை அந்தனிஜான் அழகரசன் (மட்டக்களப்பு) பின்வருமாறு விளக்கு கின்றார். (இலங்கை மட்டக்களப்பு தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் மதிப்பீடு (1976) பக். 37, 38):

கொம்பு விளையாட்டு:- கொம்பு விளையாட்டு என்பது ஒரு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இருவேறு பிரிவுகளாகப் பிரிந்து இவ் விளையாட்டைச் செய்வர். இக் கொம்பு விளையாட்டு கண்ணகி வழிபாட்டுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையசமயக் கலையாகவே விளங்குகிறது. பொதுவாகக் கண்ணகி அம்மன் சடங்குகள் நடைபெறும் காலப்பகுதியிலேயே இவ் விளையாட்டும் இடம்பெறும். இவ்விளையாட்டு ஏன்

எழுந்தது என்பதற்கு நீதி தவறிக் கோவலனைக் கொலை செய்வித்த பாண்டிய மன்னனைப் பழிவாங்கவும், மதுரையை எரியூட்டியும் சினம் தணியாத கண்ணகியின் சினத்தைத் தணிப்பதற்கும், அவளைக் குளிர்விப்பதற்குமாக இடையர் குல இளைஞர் ஒரு காதல் கலந்த விளையாட்டாக கொம்பு விளையாட்டை செய்தனர் எனக்கூறப்படுகிறது. இவ்விளையாட்டைத் தொடங்குமுன்னர் — அக் கிராமத்தை வடசேரி, தென்சேரி என அழைப்பர். வடசேரியைக் கோவலன் கட்சி, சாமி கட்சியென்றும், தென்சேரி கட்சியை கண்ணகி கட்சி என்றும், அம்மாள் கட்சி என்றும் கூறுவர். நோய் துன்பங்களினின்றும் நீங்கி, மழை வளமும் செல்வமும் ஏற்பட வேண்டுமென்பதற்காகவே இந்தக் கலையாடலை மக்கள் கண்ணகி வழிபாட்டுடன் சேர்த்துச் செய்கின்றனர்.

குரவை:- மட்டக்களப்பில் கிராமங்கள் தோறும் நடைபெறும் சமய விழாக்களிலும், மங்கள நிகழ்ச்சிகளான கலியாணவீடு, பூப்பு நீராட்டு விழா போன்றவற்றிலும் குரவை போடுதல் இடம் பெறுகிறது. கண்ணகி வழிபாட்டுடன் அதிகம் தொடர்புடையதாகக் குரவை காணப்படுகிறது. நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டு பெண்கள் கண்ணகி அம்மன் சடங்கு நடைபெறும் காலங்களில் குரவை அயர்வர். மட்டக்களப்பில் உள்ள முஸ்லீம் பெண்கள் கூட மங்கள நிகழ்ச்சிகளில் குரவையொலி செய்கின்றனர். மட்டக்களப்புத் காடுகளிலும், மலைச்சாரல்களிலும் வாழும் குறவர் குலத்தாரும் கட்குடிக்தாடும் போது குரவை இடுதலைக் காணலாம்.

தமிழகத்தில் ஊர்தோறும் மாரியம்மன் கோயில் உண்டு. வெள்ளிக்கிழமை அங்கே சிறப்பாகப் பூசைகள் நடக்கும். ஆடி மாதத்தில் அத் தெய்வத்திற்குப் பெரிய திருவிழா நடக்கும். பூசாரிகள் சிலம்புகளை எடுத்து இனிய ஒலி எழுப்பிப் பாடி ஆடுவர்; வேப்பிலை கட்டிக் கரகம் எடுப்பர். விழா நடக்கும் காலங்களிலும் பூசை செய்யும் வேளையிலும் மரியம்மன்மீது பலவகையான தோத்திரப் பாடல்களைப் பூசாரிகள் பாடுகின்றனர். மாரியம்மன் பாடல்களைப் பாடும் முன் நாமகளை வேண்டுகின்றனர்.

*வாணி சரஸ்வதியே!—என்*
*வாக்கில் குடி இரம்மா!*
*நாவில் குடி இருந்து—எனக்கு*
*நல்லோசை தாருமம்மா!*
*குரலில் குடி இருந்து—நீ*
*கொஞ்சடி பெற்றவளே!*
*நாவு தவறாமல்—எனக்கு*
*நல்லோசை தருமம்மா!*

என்று கையில் உள்ள உடுக்கையை மெல்லத்தட்டிக் கொண்டு பாடத் தொடங்குவர்.

பாடும்பாட்டில் குற்றங்குறை இருந்தாலும் பொருத்தருள வேண்டுமென்று மாரியை வணங்குகின்றார் பூசாரி ஒருவர்:

*அறியாதான் பாடுகின்றேன்*
*அம்மை திருக்கதையை!*
*தெரியாதான் பாடுகின்றேன்*
*தேவி திருக்கதையை!*

ஏடறியேன் எழுத்தறியேன்
ஏழையம்மா உன்அடிமை!
பாட வகை அறியேன்!
பாட்டின் பயன் அறியேன்!
பேரும் அறியேன்
பெற்றவளே என் தாயே!

என்று பணிவுடன் வேண்டிய பின்னர்,

வேப்பிலையாம் பொன்கரகம்
வீதிவிளை யாடிவர
ஆயிரம் கண்ணுடையாள்
அலங்காரி வாரும் அம்மா!
பதினாயிரம் கண்ணுடையாள்
பராசக்தி வாருமம்மா!

என்று வருந்தி அழைக்கின்றார் பூசாரி.

மாரியம்மன் விழாவில் கரகம் எடுப்பர். பல கரகங்களின் சிறப்பைக் குறிக்கின்றது பாடல்:

மூணு கரகம் அம்மா
முத்தான பொன்கரகம்!
ஐஞ்சு கரகம் அம்மா
அசைஞ்சாடும் பொன் கரகம்!
ஏழு கரகம் அம்மா
எழுந்தாடும் பொன்கரகம்!
பத்துக் கரகம் அம்மா
பதிஞ்சாடும் பொன்கரகம்!

மாரியம்மனுக்குச் சூட்டியுள்ள அணிமணிகள் காண்பவர் உள்ளத்தைக் கவர்கின்றன.

பட்டு பளபளக்க
பாடகக் கால் சேருட
முத்து மொளமொவென்ன
மோதிரக் கால் சேருட
தாழும் குறக் கூடை
தனிக்கட்டும் பொன்னுலே!

மாரியம்மனின் கொலு அழகைப் புனைகின்றது பாடல்:

ஓராம் படித்தளமாம்
ஓலைப்பூ மண்டபமாம்!
ஓலைப்பூ மண்டபத்தில்
உத்தமி கொலுவிருந்தாள்!
இரண்டாம் படித்தளமாம்!
இரத்தின சிம் மாதனமாம்!
இரத்தின சிம் மாதனத்தில்
இருந்தரசு தான் புரிவாள்!
மூன்றும் படித்தளமாம்!
முத்துமணி மண்டபத்தில்
முத்துமணி மண்டபத்தில்
முத்தழகி கொலுவிருந்தாள்!
நான்காம் படித்தளமாம்
நவரத்தின மண்டபமாம்!
நவரத்தின மண்டபத்தில்
நாயகியும் வந்தமர்ந்தாள்!
ஐந்தாம் படித்தளமாம்!
அழகுமணி மண்டபமாம்!
அழகு மணி மண்டபத்தில்
ஆத்தாள் கொலுவிருந்தாள்
ஆறும் படித்தளமாம்
அலங்கார மண்டபமாம்!

*அலங்கார மண்டபத்தில்*
*ஆச்சியரும் கொலுவிருந்தாள்!*

என்று இவ்வாறு பத்துவரை அடுக்கிப் பாடுவர்.

அத்தகைய அழகியகொலுவினில், எத்தனையோ தெய்வங்கள் கூடிக் கொலுவிருக்கின்றன.

*ஆத்தாள் கொலுவினிலே*
*ஆர்ஆர் வீற்றிருந்தார்?*
*குழந்தை வடிவேலன்*
*குமரேசன் வீற்றிருந்தார்!*
*தோகை மயில் ஏறும்*
*சுப்ரமணியர் வீற்றிருந்தார்*
*சிங்க வாகனம் ஏறும்*
*தேவி கொலுவிருந்தாள்!*
*ஊர் காக்கும் காளி*
*உத்தமியாள் கொலுவிருந்தாள்!*
*வள்ளியொடு தெய்வானை*
*மகிழ்ந்து கொலுவிருந்தாள்!*
*வாமுனியும் செம்முனியும்*
*வந்து கொலுவிருந்தார்!*
*காத்தான் கறுப்பனெடு*
*கட்டழகர் வீற்றிருந்தார்!*

படமெடுத்து ஆடும் நல்ல பாம்புகள் மாரியம்மன் மீது சுற்றி வளைந்து கிடக்கின்றன. அவற்றைப் புனை கின்றது பாடல்:

*அஞ்சு தலைநாகம்*
*கொஞ்சிவிளை யாடுதம்மா!*
*பத்துத் தலைநாகம்*
*பதிஞ்சிவிளை யாடுதம்மா!*

செந்தலை நாகம்
சேர்ந்துவிளை யாடுதம்மா!
கரிய தலைநாகம்
காக்குதம்மா உன்கோயில்!
ஆபரமாய்ப் பூண்டாய்
அழகுள்ள பாம்பையெல்லாம்!
நாகம் குடைபிடிக்க
நல்லபாம்பு தாலாட்ட!
சேடன் குடை கவிக்க
செந்நாகம் வட்டமிட!
வட்டமிட வீற்றிருந்தாய்
மாரியம்மா என்தாயே!
மார்மேல் ஒருநாகம்
மடிமேல் புரண்டாட!
தோள்மேல் ஒருநாகம்
துடைமேல் புரண்டாட.
தோள்மேலும் மார்மேலும்
வண்ண மடிமேலும்
கொஞ்சி விளை யாடுதம்மா
கோபமுள்ள மாரியம்மா!

மாரியம்மைக்குக் கரகம் உண்டு; வேப்பிலை உண்டு; சூலம் உண்டு; சிலம்பு உண்டு; பிரம்பு உண்டு; உடுக்கை உண்டு; பம்பை உண்டு. அவற்றை எல்லாம் மிக அழகாக வருணிக்கின்றது பாடல்:

கரகம் பிறந்ததம்மா
கன்னனூர் மேடையிலே
வேம்பு பிறந்ததம்மா
விசயநகர்ப் பட்டணத்தில்!
சூலம் பிறந்ததம்மா

*துலங்குமணி மண்டபத்தில்*
*அலகு பிறந்ததம்மா*
*அயோத்தி நகர்ப் பட்டணத்தில்!*
*சிலம்பு பிறந்ததம்மா*
*சிவலிங்கப் பாறையிலே!*
*பிரம்பு பிறந்ததம்மா*
*பிச்சாண்டி சந்நிதியில்!*
*உடுக்கை பிறந்ததம்மா*
*உத்திராட்ச பூமியிலே!*
*பம்பை பிறந்ததம்மா*
*பளிங்குமா மண்டபத்தில்!*

இப்பாடல்களை பூசாரிகள் உடுக்கை அடித்து, சிலம்பு ஆட்டிக்கொண்டு ஆடிப்பாடும்போது கேட்டு மகிழவேண்டும். அப்போதுதான் இப்பாடல்களில் உள்ள இன்பம் புலப்படும்.

## 15. எழுதாத கதைகள்

நாட்டுப் பாடல்களில், சில சிறுகதைகள் வழங்கி வருகின்றன. அவை வாய்மொழிவாயிலாக எழுதாத இலக்கியமாய் நாடெங்கும் உலவுகின்றன. அக்கதைகளைக் கேட்டறிந்து, எழுத்து வடிவில் வெளியிடுதல் சிறந்த இலக்கியப் பணியாகும்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில்,
குறுகுறுத்தான் மலைமேலே
குயில் போன்ற குரலைக் கேட்டு,
கொண்டவனைக் கிணற்றில் தள்ளி,
குன்றேறிப் பார்க்கும்போது
குயில் போன்ற குரல் உடையான்
குருடனாய் இருக்கக் கண்டாள்!

என்றகதை வழங்கி வருகின்றது. கதை நிகழ்ச்சியை மிகச் சுருக்கமாக வெளியிடுகின்றது இப்பாடல். அம் மாவட்டத்தில் வேறொரு கதையும் நாட்டுப்பாடல் வடிவத்தில் வழங்கி வருகின்றது.

கன்னிப் பெண் ஒருத்திக்கு மூன்று அண்ணன் மார் இருக்கின்றனர். அவர்கள் உழுதுண்டு வாழும் குடியைச் சேர்ந்தவர்கள். அம்மூவரும் உழவுத் தொழில் செய்யும்போது அந்தக் கன்னிப்பெண்

அவர்களுக்குச் சோறு எடுத்துக் கொண்டு போவாள். ஒருநாள் அப்பெண் தன் அண்ணன்மாருக்குச் சோறு கொண்டு போகும்போது, ஓர் ஆற்றைக்கடக்க வேண்டியிருக்கிறது. ஆற்றில் இறங்கிச் செல்லும் போது, பெரிய வாளைமீன் ஒன்று அவளைக் கடித்து விடுகின்றது. அந்தப் பெண் வீட்டிற்கு வந்து, வாளைமீன் தன்னைக் கடித்ததைக் கூருமல், சின்ன அண்ணன் அடித்ததாகக் கூறுகின்ருள். கொடுமை மனம் கொண்ட அவள் பெற்ருேர் சின்ன அண்ணனைக் கொன்றுவிடுகின்றனர்.

ஆண்டுகள் சில கடந்துவிட்டன. இப்போது அந்த பெண்ணுக்குத் திருமணம். அவளுக்குப் பூ எங்கும் கிடைக்கவில்லை. எங்கெங்கோ பூவைத் தேடி அலைகின்றனர். கடைசியில் சின்ன அண்ணனைப் புதைத்த இடத்தில், முளைத்த பூச்செடிகளில் மலர்கள் கொத்துக் கொத்தாய்ப் பூத்திருப்பதைக் காண்கின்றனர். அம்மலர்களை ஆவலுடன் பறிக்க கைகளை நீட்டுகின்றனர். "பறிக்காதே, நில்!" என்று ஒரு குரல் கேட்கின்றது. அதைத் தொடர்ந்து இறந்து விட்ட சின்ன அண்ணனின் குரல் பாடுகின்றது:

*"வாளை அடிச்சிருக்க*
*வடதேசம் போயிருக்க*
*சின்னண்ணன் அடிச்சான்னு*
*சொன்னுளே பொன்னுருவி!*
*பொன்னுருவி கொண்டைக்குப்*
*பூவும் கொடுப்பேனே?*
*பூவழகு பார்ப்பேனே?*

*மாலே கொடுப்பேனே?*
*மார் அழகு பார்ப்பேனே?*
*கொடும்பாவி கொண்டைக்கு*
*என் பூ நிறக்குமா?"*

என்று தடை போட்டு விடுகின்றான் இறந்து போன அண்ணன்.

தாஞ்சாவூர் மாவட்டத்தில், ஒருபெண் கணவனுக்கு துரோகம் செய்து, கூடா ஒழுக்கம் கொண்டு அதனால் துன்புற்று மடிந்த கதை ஒன்று நாட்டுப் பாடல் வடிவத்தில் வழங்கி வருகின்றது.

அவள் வாழும் ஊர், பெரிய ஆற்றங்கரையில் உள்ளது. அவள் சட்டி, பானை செய்து விற்றுப்பிழைக்கும் குயவனுடன் கூடா ஒழுக்கம் கொண்டுள்ளாள். அக்குயவன் ஆற்றின் மறுகரையில் வாழ்கிறான். ஒரு நாள் இரவு அவள் ஆற்றைக் கடந்து சென்று குயவனைச் சந்திக்கிறாள். திரும்பி வரும்போது ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது. அதைக் கண்ட குயவன் அவள் ஆற்றைக் கடந்து செல்ல பெரிய மண்சால் ஒன்றை மிதக்கவிட்டு, அதைபற்றிக் கொண்டு அக்கறைக்குச் செல்லுமாறு கூறுகின்றான். அவளும் அவ்வாறே மண்சாலின் உதவியால் ஆற்றைக் கடந்து வருகின்றாள். மண்சால் சரியாக வேகாததால் கரைந்து நீரில் மூழ்கி விடுகிறது. அதனால் அவள் தன்கைகளால் சிறிது நீந்துகிறாள். கைகள் சோர்கின்றன. அப்போது நாணல் ஒன்று நிற்பது தெரிகிறது. அதை அவள் ஆவலுடன்

பற்ற முயல்கின்ருள். ஒழுக்கம் கெட்ட அவளுக்கு நாணலும் கைகொடுக்க மறுத்து விடுகின்றது. இந்நிகழ்ச்சிகளை நாட்டுப்பாடல் மிக அழகாகக் குறிப்பிடுகின்றது.

*மண் சாலு பண்ணும்,*
*மதி கேடா என் குயவா!*
*உன்சால் இருகாதம்!*
*கை நீச்சு முக்காதம்!*
*இன்னும் இரு காதம்!*
*இனி நீந்தப் போவதில்லை!*
*நட்டாற்றில் நிற்கும்*
*நாணலே கை கொடுப்பாய்*
*நாடறிந்த கள்ளிக்கு*
*நான்தானோ கைகொடுப்பேன்!*

பறவை விளங்குகளைப் பற்றிய கதைகளும் நாட்டுப் பாடல்களில் அமைந்துள்ளன. அவை கேட்பதற்கு மிகவும் சுவையாக உள்ளன. கற்பனை இன்பம் ததும்பும் கதைப் பாடல்கள் எளிய உயிர்களின் வாழ்க்கையும் மக்கள் உற்று நோக்கி இருப்பதை உணர்த்துகின்றன. அவை வாழும் முறையை அறிந்து அவற்றின் இன்ப துன்பங்களில் பங்குகொள்ளும் மனநிலை மக்களுக்கு இருப்பதை அப்பாடல்கள் நமக்கு அறிவிக்கின்றன. சின்னஞ்சிறு உயிர்களை மக்கள் நிலைக்கு உயர்த்திப் பாடும்போது வெளிப்படும் கேலி மிகுந்த — குத்தலான நகைச்சுவை ஒரு வகையான கிளுகிளுப்பை உண்டாக்குகின்றது. மிட்டாயை வாயிலிட்டுச் சுவைக்கும்போது அதன் ஓரம்

கள் மெல்ல உறுத்துவதால் ஏற்படும் இன்ப உணர்ச்சியை அப்பாடல்களிலிருந்து நாம் பெறுகின்றோம்.

ஆணும்பெண்ணுமாய் இணைந்து காதல் வாழ்வு நடத்திய இரண்டு தவளைகளைப் பற்றிய பாட்டு ஓவியம் ஒன்று திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்குகின்றது. அப்பாடலுக்குப் பின்னணியாக உள்ள கதை நிகழ்ச்சி மிகவும் சுவையானது.

தவளைகள் இரண்டும் காதல் மொழிகள் பேசிக் கொண்டு தத்தித் தத்தி விளையாடி வருகின்றன. அவற்றின் வழியில் நெடுஞ்சாலை ஒன்று குறுக்கிடுகிறது: அதைக் கடந்து அப்புறம் சென்று விடவேண்டும் என்பது தவளைகளின் ஆர்வம். தம் பயணத்திற்கு இடையூறாக ஏதேனும் வருகின்றதா என்று இரண்டும் சுற்றும் முற்றும் பார்க்கின்றன. மாட்டு வண்டியோ — லா ரி யோ — பஸ்ஸோ — சைக்கிளோ எதுவுமே வரவில்லை.

> சாலையைக் கடப்பதற்கு ஏன் தயங்கவேண்டும்?
> தயக்கத்திற்குக் காரணம் இல்லாமல் இல்லை

நெடுஞ்சாலையில் எருமைக் கூட்டம் ஒன்று ஆடி அசைந்து வந்து கொண்டிருக்கிறதே! "எத்தனை பெரிய கரிய உடல்கள்! வலிமை வாய்ந்த கால்கள்; ஏதேனும் ஒரு எருமைக் காலின் கீழே அகப்பட்டுக் கொண்டால்?"

"உயிர் தப்ப முடியுமா? உடல்தான் உருவத்தோடு கிடைக்குமா?"

பெண் தவளை இவ்வாறு எண்ணித் தயங்கித் தயங்கி நின்றது. நின்று ஆண் தவளையின் முகத்தைப் பார்த்தது!

ஓர் ஆணின் முன்னால் பெண் இவ்வாறு தயங்கி நிற்கலாமா? தன் முன்னால் தன் காதலி தயங்கி உயிருக்கு அஞ்சி ஒதுங்கி நிற்பது தன் ஆண்மைக்கே இழுக்கு என்று ஆண் தவளை எண்ணியது. "எருமைகள் ஆடி அசைந்து மெல்ல வருவதற்குள் சாலையைக் கடந்து விடவேண்டாமா?" தன் காதலனின் துணிச்சலைக் கண்டு பெண் தவளை மகிழவில்லை! அதற்கு மாருக வருந்தியது; கலங்கியது.

"எருமைக் காலின் கீழே அகப்பட்டுக் கொண்டால் — !" என்று எண்ணிப் பார்த்தபோது துக்கம் நெஞ்சை அடைத்தது பெண் தவளைக்கு!

எவ்வளவோ சொல்லித் தடுத்துப் பார்த்தது!

ஆண் தவளை கேட்கவே இல்லை! பெண் தவளைக்கு முன்னே விருப்புடன் தத்திச் தத்திச் சென்றது.

பெண் தவளை இனிமேல் தனியே நிற்கமுடியாது. வேறு வழியின்றிப் பின் தொடர்ந்தது.

சாலையின் குறுக்கே பாதிதூரம் கடந்தாகி விட்டது!
அதோ, எருமைக் கூட்டம் நெருங்கி விட்டதே!
ஆண், மிக வேகமாகப் பாய்ந்து செல்கிறது!
பெண் மெல்ல மெல்லப் பின்தங்கிச் செல்கிறது!

எருமைகளின் காலடி ஓசை உரக்கக் கேட்கிறது:

"கடக் கடக் ... டக் ... டக்!"

எதையும் பொருட்படுத்தாமல் முன்னேறிக் கொண்டிருந்தது ஆண் தவளை.

"ஐயோ!"

ஆண் தவளை துன்பக்குரல் எழுப்பியது.

எருமைக் கால்களின் நடுவே சிக்கிக் கொண்ட ஆண்தவளை துள்ளிப் பாய்ந்தது. மறுநொடியில் ஓர் எருமைக்காலில் கீழே அகப்பட்டுக் கொண்டு நசுங்கியது.

பெண்தவளை, சற்றுத் தொலைவில் இருந்து கொண்டே அத்தனை நிகழ்ச்சிகளையும் கவனித்து விட்டது!

இனிமேல் என்ன!

நிகழக் கூடாதது நிகழ்ந்து விட்டது!

எருமைக் கூட்டம் சென்று விட்டபின், அருகே சென்று காதலன் உடலைக் கனிவுடன் நோக்கியது; துன்புற்றது; துடித்தது. பிணத்தைக் காத்துக் கிடந்தது.

சிறிது நேரத்திற்குள் சிற்றெறும்புக் கூட்டம் வந்து விட்டது! மாண்டுகிடக்கும் தவளையின் உடலை மொய்க்கத் தொடங்கி விட்டது!

பெண் தவளே பதைத்தது!

காதலனின் பொன்னுடல் புண்பட்டதோடு, சிற்றெறும்புகள் கூடி அதை அரிக்கத் தொடங்கி விட்டன!

இந்தநிலே கண்டு துன்பக்குரல் எழுப்பி ஒப்பாரி பாடத் தொடங்கி விட்டது.

*"சித்தெறும்பு அரிக்கச்*
*செத்துத்தான் போனீகளோ!"*

அப்போது காக்கை ஒன்று அங்கு வந்து தவளேப் பிணத்தைக் கொத்திக் கொண்டு பறந்தது.

பெண் தவளே அதைக் கண்டு,

*"கறுப்புக் குதிரை யேறி,*
*கைலாசம் போறீகளோ!"*

என்று இரங்கிப் புலம்பியது.

எங்கிருந்தோ கருடன் ஒன்று வந்து காக்கையின் வாயிலிருந்த தவளேயை ஒரே அடியாக அடித்துக் கொண்டு பறந்து சென்றது.

உடனே பெண் தவளே

*"சிவப்புக் குதிரை யேறி,*
*சிவலோகம் போறீகளோ!"*

என்று அந்த நிகழ்ச்சியைப் பாட்டில் அமைத்தது.

தன் காதலன் கறுப்புக் குதிரையும், சிவப்புக் குதிரையும் மாறி மாறி ஏறிக்கொண்டு போவதைப் பெண் தவளை எவ்வளவு பெருமையோடு பாடுகிறது!

இந்த நாட்டுப் பாடல் எண்ண எண்ண இனிக்கிறது. என்ன என்னவோ உணர்ச்சிகளை உண்டாக்குகின்றது; துன்பம் கலந்த கேலி — இன்பம் கலந்த ஏளனம்-அழுகை கலந்த சிரிப்பு ஆகிய அத்தனை உணர்ச்சிகளையும் அலையலையாய் இந்தப் பாடல் எழுப்புகின்றது.

ஆள்காட்டி என்னும் ஒரு வகையான குருவி, குறவனிடம் சிக்கிக் கொண்டு துன்புற்றுக் கண்ணீர் வடிக்கிறது. அந்த வரலாற்றைப் பின்வரும் பாடல் குறிப்பிடுகின்றது:

*அக்காட்டி அக்காட்டி*
*எங்கெங்கே நீ போனே?*
*கல்லைத் தொளைச்சி—நான்*
*கடல் நடுவே முட்டையிட்டேன்!*
*இட்ட முட்டை நாலு*
*பொரிச்சதோ மூணு*
*மூத்த குஞ்சுக்கு இரைதேட*
*முக்காதம் போய் வந்தேன்!*
*இளைய குஞ்சுக்கு இரைதேட*
*இருகாதம் போய் வந்தேன்!*
*நடுக்குஞ்சுக்கு இரைதேட*
*நாற்காதம் போய் வந்தேன்!*
*அப்போ,*
*மாயக்குறத்தி மகன்*
*மாபாவிச் சண்டாளன்*

விரிச்சி வச்சான் கண்ணியல்லோ!
காலுரெண்டும் கண்ணியிலே
இறக்கை ரெண்டும் மாரடிக்க!
நான் அழுத கண்ணீரு
ஆறுப் பெருகி
குளமாய்ப் பெருகி
கடலாய்ப் பெருகி
இஞ்சி வேரோடி
எழுமிச்சந் தூரோடி
மஞ்சளுக்குப் பாய்ந்து
மறுகுதப்பா கண்ணீரு!

செஞ்சிக்கோட்டையை ஆண்ட தேசிங்கு ராசன் கதையைப் பெருமாள் மாட்டுக்காரர்கள் பாடிக் கொண்டு வருகின்றனர். அவர்கள் நாடு நாடாய், ஊர் ஊராய், தெருத் தெருவாய், வீடு வீடாய்ச் சென்று அந்த வீர காவியத்தைப் பாடிப் பரப்புகின்றனர். கொட்டு மேளத்துடன் அவர்கள் ஆவேசமாகப் பாடும்போது, அந்தப் பாடலில் ஈடுபடாமல் யாராலும் இருக்க முடியாது.

தேசிங்கு ராசன் பாராசாரிக் குதிரை மீது அமர்ந்து சவாரி செய்வதைக் கீழே உள்ள பாடல் குறிப்பிடுகின்றது:

குதிரை போகும் வேகத்தாலே
பூமி குலுங்குது பார்!
பர்வதங்கள் படபடவென்று
பதறி நடுங்குது பார்!
காடு மலைகள் செடிகள் எல்லாம்
கலங்கி நடுங்கிடவே

மலைகள் இடிந்து தவிடு பொடியாய்
மண்மேல் விழுந்திடவே
ஆறு குளங்கள் மடுக்கள் எல்லாம்
அதிர நடுங்குது பார்!
ஐங்காத வழிக்கு அப்புறமிருக்குது
அந்த மேகக் குதிரை!
ஐந்நூறு காதம் பஞ்சபுரவி
ஆகாயம் போகுது பார்!
அசுவம் போகும் வேகத்தாலே
அலையுது உலகமெல்லாம்!
மேகம் கிளம்பி வாயைத் திறந்து
மின்னல் கக்குது பார்!
மின்னல் வெளிச்சம் தன்னில்பாயுது
வேகமான குதிரை!

குதிரையின் வேகத்தைப் பாட்டின் மிடுக்கான ஓசையே உணர்த்தி விடுகிறது!

நவாப்பின் மீது போர் தொடுக்க தேசிங்கு ராசன் கிளம்பி, தன் தாயிடம் விடைபெறப் போகிறான். அப்போது அவன் தாய்,

நீ பிறந்தது வெள்ளிக்கிழமை
மகனே தேசிங்கு!
உன் குதிரை பிறந்தது வெள்ளிக்கிழமை
ராசா தேசிங்கு!
சண்டை பிறந்தது வெள்ளிக்கிழமை
மகனே தேசிங்கு!
இன்றைக்கிருந்து நாளைக்குப் போடா
ராசாதேசிங்கு!

என்று கூறித் தடுக்கிறாள். அதற்கு வீரன் தேசிங்கு,

*ஆறிலும் சாவு நூறிலும் சாவு*
*என்னைப் பெற்ற தாயே!*
*பிறந்த அன்றைக்கே சாவு இருக்கிறது*
*என்னைப் பெற்ற மாதா!*

என்று கூறிவிட்டுப் போர் புரியச் சென்று விடுகிறான்.

நல்லதங்காள் கதை தமிழ் மக்கள் நெஞ்சத்தில் ஆழப் பதிந்துவிட்ட வாய்மொழிக் காவியம். கூழுக்குக் கவி பாடித் திரியும் பிச்சைக்காரிகள் அக் கதையை ஓசை நயத்துடன் உருக்கமாகப் பாடிக் கொண்டு வருகின்றனர்.

திருமணமான பிறகு நல்லதங்காளுக்குப் பல வகையான சீதனங்களைக் கொடுக்கின்றனர்:

*பட்டி நிறைந்திருக்கும்*
*பால் பசுக்கள் சீதனமாம்!*
*ஏரி நிறைந்திருக்கும்*
*எருமைகள் சீதனமாம்!*
*மேட்டுக் கழனியிலே*
*முதற் கழனி சீதனமாம்!*
*பள்ளக் கழனியிலே*
*பயிர்க்கழனி சீதனமாம்!*
*இத்தனை சீதனமும்*
*பெற்றாள் இளங்கொடியும்!*
*இன்னம் உண்டு சீதனங்கள்*
*எங்கள் இளங்கொடிக்கு!*
*உட்கார்ந்து மோர் கடைய*
*முக்காலி பொன்னாலே!*
*சார்ந்திருந்து மோர் கடையச்*
*சாருமணை பொன்னாலே!*

நல்லதங்காள் நாட்டிலே பஞ்சம் வந்து விடுகிறது. பன்னிரண்டு ஆண்டுகள் மழையே பெய்ய வில்லையாம்! அந்தப் பஞ்சத்தைப் பாடல் அழகாகக் குறிப்பிடுகின்றது:

*மரக்கால் உருண்ட பஞ்சம்!*
*மன்னவனைத் தோற்ற பஞ்சம்!*
*நாழி உருண்ட பஞ்சம்!*
*நாயகனைத் தோற்ற பஞ்சம்!*
*தாலி பறி கொடுத்துத்*
*தனிவழியே நின்ற பஞ்சம்!*
*கணவனைப் பறி கொடுத்துக்*
*கைக் குழந்தை விற்ற பஞ்சம்!*

நம் நாட்டில் வழங்கும் புராணக் கதைகளை எளிய நடையில், இனிய தமிழில் பாடும் பாடல்கள் சிலவற்றைக் காண்போம்:

ரதி—மன்மதன் பாடல் மிகவும் உருக்கமானது. இளவேனிற் காலத்தில் தமிழ் நாடெங்கும் 'காமன் பாடல்' ஒலிக்கும். அதை ஒட்டித் திருவிழாவும் கொண்டாடுவர். இதையே வடநாட்டில் "ஹோலிப் பண்டிகை" யாகக் கொண்டாடுகின்றனர்.

சிவபெருமானின் கடுமையான தவத்தைக் கலைக்க மன்மதன் செல்ல முற்படுகிறான். அதை அறிந்த ரதிதேவி தான் முன்னாள் இரவு கண்ட தீக்கனவுகள் பலவற்றைக் கூறித் தடுக்கிறாள்:

*கொல்லையில் வாழை மரம்*
*குலையோடு சாயக் கண்டேன்!*

*வாசிக்கும் மண்டபங்கள்*
*வெளவால் அடையக் கண்டேன்!*
*பூசிக்கும் மண்டபங்கள்*
*புழுதி படியக் கண்டேன்!*

விரிசடைக் கடவுள் திரிபுரம் எரித்த கதையும், காஞ்சிபுரத்தில் உமையம்மை தழுவ, சிவலிங்கம் குழைந்த கதையும் நாட்டுப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

சிவபெருமான், திரிபுரங்களை எரிக்கப் பூமியைத் தேராகக் கொண்டு கிளம்புகின்றார். அந்தப் பெரிய தேருக்கு,

*தேவரெல்லாம் கூடித்*
*தேர்ச் சக்கரமானார்!*

என்று ஏற்றப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

கீழ்வரும் பாடலில் உமை தழுவச் சிவலிங்கம் குழைந்த கதை மிகவும் அழகாய் அமைந்துள்ளது:

*உலகுக் கெல்லாம் மாதா*
*உமையவள் ஒருத்தி!*
**கம்பன் மனையாட்டி*
*காமாட்சி உமையாள்!*
*ஆற்றுமணல் சேர்த்து,*
*அரனைப் பூசை செய்தாள்!*
*சேர்த்து மணல் வாரிச்*
*சிவனைத் துதி செய்தாள்!*

---

*ஏகம்பன் என்பதன் முதற்குறை.

*கம்பா நதி வெள்ளம்*
*கரை புரண்டு போக,*
*உமையவள் பயந்து,*
*தழுவினுள் சிவனே!*
*கைவளையல் ரெண்டும்*
*சாமி மேல் அழுந்த—*

என்று பாடல் தொடர்ந்து செல்லுகிறது!

ஆயர்பாடியில் குறும்புச் செயல்கள் பல செய்து கொண்டு, வளர்ந்து வரும் கண்ணனை ஆயர் குல மகள் ஒருத்தி கையும் களவுமாகப் பிடித்துக்கொண்டு விட்டாள். அவனை வெளியே இழுத்து வந்து பெண்கள் நடுவில் நிறுத்துகிருள். அப்போது இடைச்சி ஒருத்தி,

*கொண்டுவா கொண்டுவாடி—கோபாலனை இங்குக்*
*கொண்டுவா கொண்டுவாடி!*
*பாலைக் குடிக்கிறான்டி—கோபாலக் கண்ணன்*
*பானையை உடைக்கிறான்டி!*
*மோரைக் குடிக்கிறான்டி—கோபாலக் கண்ணன்*
*மொந்தையை உடைக்கிறான்டி!*
*புன்னைமரம் ஏறுறான்டி—கோபாலக் கண்ணன்*
*புல்லாங் குழல் ஊதுறான்டி!*
*கொண்டுவா கொண்டுவாடி—கோபாலனை இங்குக்*
*கொண்டுவா கொண்டுவாடி!*

என்று கூறுகிருள். இந்தப்பாடல், கள்வனைப் பிடித்து விட்ட மகிழ்ச்சியும், அவன் ஆய்ச்சியரிடம் சரியான தண்டனை பெறப் போகிருன் என்பதை எண்ணி மகிழும் உணர்ச்சியும் அந்தப் பெண்ணின் உள்ளத்தில் நிறைந்திருப்பதை உணர்த்துகின்றது.

திருச்சி மாவட்டத்தில் முத்தரையர்கள் வாழ்கின்றனர். இவர்களுக்குத் தமிழகத்தின் வீர வரலாற்று நிகழ்ச்சிகளில் பங்குண்டு. அஞ்சா நெஞ்சமும், போர்த்திறனும் மிக்கவர்களாக இவர்கள் முற்காலத்தில் விளங்கினர் என்பது வரலாறு கூறு உண்மை. தம் முன்னோர்கள் போரில் பயன்படுத்திய வாள், வேல், ஈட்டி முதலிய போர்க் கருவிகளை இவர்கள் இன்றும் வழிபடுகின்றனர். இவர்கள் பாடும் நாட்டுப் பாடல்கள் வீரம் செறிந்தவையாய், போர் நிகழ்ச்சிகளைக் குறிப்பவையாய் உள்ளன.

ஒரு வீரன் போர்க் களத்தை நோக்கி விரைந்து செல்வதைக் கீழுள்ள பாடல் குறிப்பிடுகிறது:

*மனிதர் கண்டால் பேசாமல்*
*மாடு கண்டால் விலகாமல்*
*தண்ணீர் கண்டால் குடிக்காமல்*
**தாவு கண்டால் குனியாமல்*

அந்த வீரன் விரைந்து செல்கிறான். சென்று போர்க்களத்தில் புகுந்து, வாளை வீசுகிறான். அவன் வாளை வீசும் போது,

*முன் வீச்சில் ஆயிரம் பேர்*
*பின் வீச்சில் ஆயிரம் பேர்*

இறந்ததாகப் பாடல் குறிப்பிடுகின்றது.

மக்கள் தம் காலத்தில் வாழ்ந்து தமக்காக உயிர் விட்ட வெற்றி வீரர்களையும் தலைவர்களையும்

---

*[தாவு—தாழ்ந்த மரக்கிளை]

மறவாமல் போற்றுகின்றனர். வாய்மொழியாக வழங்கி வரும் பாடல்களில் அவர்களின் புகழ் மண்டிக் கிடக்கின்றது. கோவை மாவட்டத்துக் கும்மிப் பாடல்களில் சின்னமலை என்னும் வீரனின் புகழ் பரவிகிடக்கிறது.

*பட்டத்துக் கத்தி பளபளெனச்-செல்லும்*
*பாளையக் காரரை முன்னடக்கி*
*வெட்டும் துரைமகன் சின்னமலை-வரும்*
*வேடிக்கை தன்னையும் பாருங்கடி!*
*பூனைக் குலமென வெள்ளைப்படையோடப்*
*பூரித்து வீரப் புலி போலச்*
*சேனைக் கதிபதி சின்ன மலைவரும்*
*தீரத்தை வந்துமே பாருங்கடி!*
*கட்டுக் கடங்காத காளைகளைப் போலக்*
*கட்டிப் பிடித்துக் கவலையுடன்*
*வெட்டிச் செயங்கொண்ட சின்னமலை—தன்னை*
*வெள்ளைக் காரர்கொண்டு போவதைப் பார்!*

என்று கும்மிப் பாடல் நீண்டு செல்லுகின்றது!

கதைப்பாடல்கள் பலவற்றைப் பிச்சைக்காரர்களும் பெருமாள் மாட்டுக்காரர்களும் பாடுகின்றனர். பஞ்சபாண்டவர்கள் வனவாசம் செய்தபோது அவர்கள் சுற்றியலைந்த காட்டை,

*காடை இழையும் வனம்*
*கரடி புலி தூங்கும் வனம்*
*சிட்டு இழையும் வனம்*
*சிறுத்தை புலி தூங்கும் வனம்!*
*பாம்பு புரளும் வனம்*
*பாண்டவர்கள் போன வனம்!*

என்று பாடல் வருணிக்கின்றது.

இல்லாததைப் பெற ஆசைப்பட்டு இருந்ததை யும் இழந்த நரியின் கதையை நாட்டுப் பாடல் அழகாகக் கூறுகின்றது.

*மந்தை வெளி தனிலே*
*மாட்டிறைச்சி தான் இருக்க-ஒரு*
*குள்ள நரி கண்டு*
*குடுகு டென்று ஓடிவந்து,*
*மாட்டிறைச்சி தன்னை*
*வகையாகக் கவ்விக் கொண்டு*
*ஆற்றங் கரையோரம்*
*அடுத்து வரும்போது—*

என்ன நடந்தது என்பதைக் கூறுகின்றது பாடல்.

*இடதுபுறம் இருந்து*
*எழும்பியே தண்ணீரில்*
*வாளைமீன் துள்ளி*
*வலதுபுறத்தில் விழப்*

பார்த்திருந்த குள்ள நரி என்ன செய்தது என் பதைக் காண்போம்.

*வாய்க் கறியை நிலத்தில் வைத்து*
*வாளை மீனைப் பிடித்திடவே*
*வாளை மீன் தப்பி*
*வைகை யாற்றில் தான்விழவே*
*நிலத்தில் வைத்த இறைச்சிதன்னை*
*நின்றதொரு செம்பருந்து*
*காலில் இடுக்கிக் கொண்டு*
*கானகமே போனதுவாம்!*

குள்ளநரியின் நிலையைப் பாடல் அழகாகக் குறிப்பிடுகின்றது.

*அப்போது குள்ளநரி*
*அடைவாகத் தான்பார்த்து,*
*மாட்டிறையும் போச்சு*
*வாலை மீனும் போச்சென்று*
*வானத்தைப் பார்த்து*
*மதிமறந்து நின்றதுவாம்!*

இக் கதைப் பாடல், அபிமன்னன் சுந்தரிமாலை என்னும் வாய்மொழி இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது.

## சேவல் பாட்டு

மாலை நேரம். காக்கை குருவிகளெல்லாம் தம் தம்கூட்டிற்குத் திரும்பி வருகின்றன. மேயச் சென்ற மாடுகள் வீடுநோக்கி வருகின்றன. கோழிகள் எல்லாம் இருப்பிடத்திற்கு வந்து விட்டன. ஆனால் ஒரு சேவல் மட்டும் இன்னும் வந்து சேரவில்லை. அதனை மிக்க கவனத்தோடு வளர்த்தவள் அதனைத் தேடத் தொடங்குகின்றாள்:

*என்சேவல் போன இடம்*
*எனக்குத் தெரியாதே!*
*என் தன் துரை ரங்கசாமி*
*என்னசொல்லு வாரோ*
*என்னசொல்லு வாரோ*
*அவர்க்கிஷ்ட முள்ளசேவல்!*
*இஷ்டமுள்ள சேவல்தன்னை*
*எவளோபிடித் தாளே!*

சேவலே எவ்வளவு அருமையாக வளர்த்து வந்தாள் என்பதைக் கூறி அத்தகைய சேவலே யாரோ பிடித்துக் கொண்டார்களே என்று வருந்துகின்ருள்:

*நல்லசிறு தொட்டில்கட்டி*
*நான்வளர்த்த சேவல்!*
*நான்வளர்த்த சேவல்தன்னை*
*நஷ்டமிட்டவள் யாரோ!*
*தங்கத்திலுல் சலங்கைகட்டி*
*தரையில்விட்ட சேவல்!*
*தரையில்விட்ட சேவல்தன்னை*
*சாத்தி வைத்தவள் யாரோ!*
*முத்துமணி கட்டி என்தன்*
*முன்னேவிட்ட சேவல்!*
*முன்னேவிட்ட சேவல்தன்னை!*
*மூடிவிட்டவள் யாரோ!*
*பவழமணி கட்டிஇப்போ*
*பார்த்துவிட்ட சேவல்.*
*பார்த்துவிட்ட சேவல்தன்னை*
*பதுக்கிவைத்தவாள் யாரோ!*
*காதுகுத்தி கடுக்கனிட்டு*
*கடையில்விட்ட சேவல்!*
*கடையில்விட்ட சேவல்தன்னை*
*கண்டழைத்தவள் ஆரோ*
*கொண்டைதனில் குப்பிகட்டி*
*குலாவவிட்ட சேவல்!*
*குலாவவிட்ட சேவல்தன்னை*
*கொண்டுபோனவள் யாரோ!*

சேவலின் உடல் அழகையும் நடை அழகையும் குரல் இனிமையையும் புகழ்ந்து. அத்தகைய சேவலே

யாரோ பிடித்துக் கொண்டார்களே என்று வருந்து கிருள்.

*பச்சை இறக்கை பளபளென்ன*
*பறந்துவரும் சேவல்!*
*பறந்துவரும் சேவல் தன்னைப்*
*பார்த்தணைத்தவள் ஆரோ!*
*துத்திப்பூ வர்ணமுள்ள*
*துரைசாமியின் சேவல்!*
*துரைசாமியின் சேவலுக்குச்*
*சூதுசெய்தவள் ஆரோ!*
*வர்ணமயில் ரேகைமின்ன*
*வளரும் என்தன் சேவல்!*
*வளரும் என்தன் சேவல்தன்னை*
*வழிமறித்தவள் யாரோ!*
*அஞ்சுவர்ண நிறமுடைய*
*அன்னநடைச் சேவல்*
*அன்னநடைச் சேவல்தன்னை*
*அடக்கிக் கொண்டவள் யாரோ!*
*கூவும்குயில் தொனியுடனே*
*கூவிவரும் சேவல்*
*கூவிவரும் சேவல்தன்னை*
*கூப்பிட்டவள் யாரே!*

சேவல் பல வேறு தெருக்களில் சென்று மேய்ந்து வருவதை நினைத்துப் பார்க்கின்ருள்.

*அரசர்கள் வீதிதன்னில்*
*ஆடிவரும் சேவல்!*
*ஆடிவரும் சேவல்தன்னை*
*அடக்கிவிட்டவள் யாரோ!*
*வேளாளர் வீதிஎங்கும்*

விளையாடிவரும் சேவல்
விளையாடிவரும் சேவல் தன்னை
விரும்பிக்கொண்டவள் யாரோ
பட்டணத்து வீதிஎங்கும்
பாய்ந்துவரும் சேவல்
பாய்ந்துவரும் சேவல்தன்னை
பதுக்கிவிட்டவள் யாரோ!
பூவின் கடைப் புழுதிதனில்
புரண்டுவரும் சேவல்
புரண்டுவரும் சேவல்தன்னை
பிடித்துவைத்தவள் யாரோ!
பெரியகடை வீதிஎங்கும்
பேர்எடுத்த சேவல்
பேர்எடுத்த சேவல்தன்னை
பிடித்துவைத்தவள் யாரோ!

காளி போன்ற தெய்வங்களுக்கு நேர்ந்து கொண்டு விட்டுவைத்த சேவலை யாரோ பிடித்து விட்டார்களே என்று வருந்துகிறாள்:

காளியிட கோயிலுக்கு
கனமாய்விட்ட சேவல்!
கனமாய்விட்ட சேவல்தன்னை
கட்டி வைத்தவள் யாரோ!
அங்காளம்மன் கோயிலுக்கு
அடுமைவிட்ட சேவல்!
அடுமைவிட்ட சேவல்தன்னை
அடக்கிக்கொண்டவள் யாரோ!
காத்தான் கறுப்பனுக்கு
காட்டிவிட்ட சேவல்!
காட்டிவிட்ட சேவல்தன்னைக்
கட்டிவைத்தவள் யாரோ!

பலவேறு இடங்களிலும் தேடிப் பார்த்துவிட்டு, தன் சேவல் வீடு வந்து சேர அருள்புரியுமாறு தெய்வங்களை வேண்டுகிருள்.

*மாயமலை பழனி, வடி*
*வேலா! கிருபை செய்வாய்!*
*மனது குறை வையாமலே*
*வந்திட நீ செய்வாய்!*
*காளிமக மாயிஉன்தன்*
*கடிமலர்த்தாள் போற்றி!*
*கலங்கிடாமல் சேவல்தன்னைக்*
*கடுகிவரச் செய்வாய்!*

## வேலனும் வள்ளியும்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒயில் கும்மிப் பாடலாக திணைப் புனம் காக்கும் வள்ளி கதை வழங்கி வருகின்றது. இலக்கியச் சுவை மிகுந்த அக் கதை பின்வருமாறு அமைந்து உள்ளது.

*செம்பவளக் கால் நாட்டி—அதில்*
*சிறந்த தவளங்கள் பூட்டிக்*
*கம்பலைப் பொன்மணி நிரப்பி—மிகக்*
*கனம்பொருந்தும் தழை பரப்பி*
*பருத்த குமிழாணி வைத்து—வள்ளி*
*பாதம் வைக்க ஏணி வைத்து*
*ஏணிதனில் பாதம் வைத்து—மெள்ள*
*ஏறவள்ளி மனம் வைத்துப்*
*பேணியவள் பரணி ருந்தும்—வள்ளி*
*பெற்றியுடன் வளம் பொருந்தும்!*

இத்தகைய அழகான பரண்மீது இருந்து கொண்டு வள்ளி திணைப் புனங் காக்கின்ருள்.

அசையாத பரண் ஏறி—அந்த
அன்னை வள்ளி மனந் தேறி
திசையை நோக்கிப் பார்த் திடுவாள்—வள்ளி
தெய்வங்களைக் கும் பிடுவாள்!
வரிசை அண்ணன்மார் போக—அங்கே
வள்ளியும் பாங்கியு மாக
விரைந்து கையில் கவண் சேர்த்தாள்—வள்ளி
விளைந்த தினைப்புனம் காத்தாள்!

வள்ளி தினைப்புனம் காக்கும் திறனையும் தன் வேலையில் அவளுக்கு இருக்கும் ஈடுபாட்டினையும் பின்வரும் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

பாங்கியரைப் பிரியாமல்—நெஞ்சில்
பல நினைவும் குறி யாமல்,
தீங்கு வரச் செய்யாமல்—கிளி
தினைக் கதிரைக் கொய் யாமல்
வீசும் கவண்மா றாமல்—அம்மன்
வேற்று முகம்பா ராமல்
காசலையப் பரண் மீது—நின்று
காத்தாளே குறமாது!

வள்ளி கவண் வீசிக் கல்லெறியும்போது ஆடை அணிகள் குலைகின்றன; கையும் மெய்யும் அசைகின்றன:

இரு தனங்கள் அசைந் தாட—உண்டை
எறிந் தாளே கவண் ஓட.
பருவ முகிற் குழல் சரிய—வள்ளி
பண்புடனே கவண் எறிய
கையில் வளை கலக லென்ன—வள்ளி
கவண் எறிந்தாள் உடல் பன்ன

*மெய்யில் இட்டபணி துலங்க—உண்டை*
*வீசுகிருள் கவண் இலங்க*
*அஞ்சுகப் பெண்குரல் போடக்—கேட்டு*
*அன்னங்கள் வந்திசை பாட*
*வஞ்சி இடை துவள நின்ருள்—அம்மன்*
*மணிக் குரலால் ஒல மிட்டாள்!*

திணைப் புனங் காக்கும் வள்ளிக்குத் துணையாகக் குயிலும் மயிலும் அன்னமும் பூவையும் அங்கே சூழ்ந்து நிற்கின்றன.

*பூங்குயில்கள் சூழ்ந்து மொய்க்க—அன்னம்*
*பூவைகளும் வந்து மொய்க்க*
*மாங்குயில்கள் இசை பாடப்—புள்ளி*
*மயில் அன்னமும் நடமாட*
*செப்புச் சிலைக் கண்ணாலே—அம்மன்*
*திணைப் புனங் காத்திருந்தாளே!*

திணைப்புனத்தில் வள்ளியை மணந்து கொண்ட வேலனின் கதையை ஏற்றப் பாடல் உரைக்கின்றது. வள்ளி திணைக் கொல்லையைக் காக்கின்ற நிகழ்ச்சியைப் பின்வரும் பாடல் ஓவியம் எழுதிக் காட்டுகின்றது:

*இருபதியால் எட்டு*
*இருப்பிடமோ வள்ளி*
*தென் புறமாய்ப் பந்தல்*
*வடபுறமாய்க் கொல்லை!*
*பந்தல் மேலே நின்று*
*ஆயல் என்ற சத்தம்*
*அதட்டுருளாம் வள்ளி!*

வெள்ளியால் கவண்டு
வெண்கலத்தால் உண்டை!
பொன்னாலே கவண்டு
பொரி மணலால் உண்டை
கல்லுபோன தூரம்
காக்கை பறவாதே!
உண்டை போன தூரம்
ஒன்றும் பறவாதே!

முற்றி விளைந்த தினைக் கொல்லையை, பந்தல் மேல்நின்று கவண் வீசிக் கல் எறிந்து காக்கின்ற வள்ளியை நாடி வேலன் வருகின்றான்:

நாற்பதியால் எட்டு
நாட்டமான வள்ளி
ஓட்டுறாளாம் மானை
செந்தினையோ கொல்லை
சேவலோடி வள்ளி?
கருத்தினையோ கொல்லை
காவலோடி வள்ளி!
வடபுறமாம் கொல்லை
வழிக்கரையாம் பந்தல்!
பந்தலின் மேல் நின்று
பாடுறாளாம் வள்ளி!
ஆயால் என்ற சத்தம்
அதட்டுறாளாம் வள்ளி!
வள்ளி குரல் கேட்டு
வாரார் அந்த வேலர்!
வள்ளி குற மேட்டில்
வந்து நின்றார் வேலர்!

வேலனால் காதலிக்கப்படுகின்ற வள்ளியை,

முருகருக்கோ வள்ளி
மோகினிப் பெண் ஆனுள்!
வேலருக்கோ வள்ளி
வேட்டுவப் பெண் ஆனுள்!-
கந்தருக்கோ வள்ளி
கனக ரம்பை ஆனுள்!

என்று புகழ்கின்றது ஏற்றப் பாடல்.

தினைக் கொல்லையைக் காத்து நிற்கின்ற வள்ளியிடம் வந்த வேலன்,

"அம்புபட்ட மானை,
அறிந்ததுண்டோ வள்ளி!
கால் ஒடிந்த மானை
கண்டதுண்டோ வள்ளி!"

என்று வினவுகின்றுன். அதற்கு வள்ளி,

"அம்புபட்ட மானை
அறிந்ததில்லை வேடா!
அறிந்ததில்லை வேடா!
அதுவழியே போடா!
கால் ஒடிந்த மானை
கண்டதில்லை வேடா!
கண்டதில்லை வேடா!
அண்ணன்மார்கள் கண்டால்
அம்புக்கிரை செய்வார்!
தம்பிமார்கள் கண்டால்
தாக்கிடுவார் அம்பால்!

என்று உரைக்கின்றுள்.

வள்ளியை வளர்க்கின்ற வேடர்கள் வேலனைத் தாக்க வரும்போது வேலன், மரமாகி நின்றதை ஏற்றப் பாடல் குறிப்பிடுகின்றது:

*கொல்ல வரும்போது—வேலர்*
*கொன்றை மரம் ஆனார்!*
*அடிக்க வரும்போது—வேலர்*
*அசோக மரம் ஆனார்!*
*வெட்ட வரும்போது*
*வேலர் என்ன செய்தார்?*
*வேலர் என்ன செய்தார்?*
*வேங்கை மரம் ஆனார்.*
*குத்த வரும்போது*
*கொன்றை மரம் ஆனார்.*

## புராணமும் இதிகாசமும்

ஏற்றப் பாட்டில் இராமாயணக் கதை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. சின்னஞ் சிறிய அளவில் — அங்காங்கே விட்டுவிட்டு அந்த நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன.

*மூட ராவணனும்*
*மாது சீதையாளை*
*மண்ணுடன் எடுத்து*
*மண்ணுடன் எடுத்து*
*தேரின் மீது வைத்து,*
*தென் இலங்கை சென்றான்!*
*தென் இலங்கை போன*
*சீதை வரக் காணோம்!*
*சீதையால் அழும்போ*
*சேனநாள் இலங்கை!*

பெண்ணாலே அழும்போ
முன்னாள் இலங்கை!

உத்தர காண்டத்து நிகழ்ச்சியும் ஏற்றபாடலில் வருகின்றது:

ஏது குறையாலே
சீதை வனம் போறாள்;
மனது குறையாலே
மங்கை வனம் போறாள்!
எப்படியோ சீதை
வீடுவிட்டுப் போறாள்!

பாரதக் கதையைச் சுருக்கமாய்ச் சொல்லி விளங்க வைக்கின்றது ஏற்றப்பாடல். அர்ச்சுனன் வில் வளைத்துப் பாஞ்சாலியை மணந்த நிகழ்ச்சி பாடப்படுகிறது:

அருமைக் கொடி வில்லு
ஆர் வளைத்தார் இப்போ
ஐவரில் நடுவர்
அர்ச்சுனரும் கண்டு
ஆண்டி வேசம் பூண்டு
வில் வளைத்துக் கட்டி
வில்லோட பரியம்
மெல்லி துரோபதைக்கு
மாலையிட்டார் மன்னர்!

பாண்டவர்களுக்குத் துரியோதனன், சூதாட ஓலை விடுகின்றான்:

இந்திரா புரியில்
இருக்கும் பாண்டவாளை,

*சூதினுல் சகுனி*
*சொக்கட்டான்கள் ஆட*
*வஞ்சகத் துரியன்*
*வரவிட்டான் ஓலை!*

துகில் உரியப்படும் திரௌபதியின் மானத்தைக் காத்து மாளாத் துகில் அளிக்கின்ருர் மாயவனுர்:

*துரோ பதையைத் துட்டன்*
*துகில் உரியப் போருன்!*
*பத்தினியைத் துட்டன்*
*பட்டுரியப் போருன்!*
*மாயவனுர் அப்போ*
*மாளாத்துகில் தந்தார்!*

பாரதப் போரில் வெற்றியடைய அர்ச்சுனன் தவஞ்செய்து, பாசுபதம் பெறுவதற்குக் கயிலை மலையை நோக்கிச் செல்கிருன். ஆண்டி வேடத்தில் ஒரு சோலை வழியே செல்லும் போது மங்கை ஒருத்தி அர்ச்சுனனை மடக்கி 'யார்?' என்று வினவுகின்ருள்.

*"ஆரடா அவன் ஆண்டி?*
*அடர் வனத்தில் போருன்?"*

அதற்கு அர்ச்சுனன் தான் யார் என்பதை அவளுக்கு விளக்கிக் கூறுகின்ருன்:

*ஆருமில்லே மாதே!*
*ஐவரில் நடுவோன்!*
*அர்ச்சுனன்டி மாதே!*
*வீமனுக்கு இளையோன்!*
*வில் விசயன் பெண்ணே!*

தான் எதற்காக — எங்கே போகின்றான் என் பதையும் உரைக்கின்றான்:

*தவத்துக்கு நான் போறேன்!*
*தென்கயிலே நோக்கி!*
*ஈஸ்வரனை நோக்கி,*
*பாசுபதம் வாங்கி*
*பங்காளியை வெல்ல!*
*ஈஸ்வரனை நோக்கி*
*எதிராளியை வெல்ல*
*தாயாதியை ஒழிக்க,*
*தவசு பண்ணப் போறேன்!*
*பங்காளியை ஒழிக்கப்*
*பரமனிடம் போறேன்!*
*பரமனிடம் போறேன்!*
*பாசுபதம் வாங்க!*
*வழியை மறிக்காதே*
*வாளுக்கு இரையாவாய்!*

பாரதப் போரில், வீமன் வாள் எடுத்துப் பகை வரை வீழ்த்துகின்றான்:

*தொண்ணூறுல் எட்டு*
*தோள்பெருத்த பாரம்!*
*வாள் எடுத்தான் வீரன்*
*வந்ததுதான் சண்டை!*
*மாண்ட படை எல்லாம்*
*மன்னன் படை தானே!*
*வெல்லும் படை எல்லாம்*
*வீமன் படைதானே!*

சிவபெருமானுடன் போட்டியிட்டு ஆடிய காளியையும், காளி தோற்றுப் போகுமாறு காலைத்

தூக்கி நின்று ஆடிய கூத்தனையும் ஏற்றப்பாடல் போற்றுகின்றது.

*ஐம்பதியால் எட்டு*
*அரங்கத்தில் கூத்து*
*ஆடினார் பரமன்!*
*தந்திரமாய்க் காளி*
*தான் ஆடினாள் கூடி!*
*சிவபெருமான் அப்போ*
*தூக்கினாராம் காலை!*

தீராத விளையாட்டுப் பிள்ளையாகிய கண்ணனின் திருவிளையாடல்கள் பின்வரும் பாட்டில் இடம்பெறுகின்றன.

*அன்னுருக்கி வெண்ணெய்*
*அள்ளியுண்டார் மாயன்!*
*தினம் உருக்கி வெண்ணெய்*
*திருடி உண்டார் மாயன்!*
*ஓட்டுத் திண்ணை மேலே*
*உரலைக் கவிழ்த்து ஏறி*
*உறியில் வெண்ணெய் எல்லாம்*
*உருட்டி விட்டார் மாயன்!*

மாயவன், பஞ்சவர்க்குத் தூது நடந்த நிகழ்ச்சி பாடப்படுகின்றது:

*நாடாளத் தூது*
*நடந்தாரே மாயன்!*
*பஞ்சவர்க்குத் தூது*
*பட்சமாய் நடந்தார்!*
*ஐவர்க்கும் தூது*
*அன்பாக நடந்தார்!*

உண்மையை உயிராகப் போற்றி வாழ்ந்த அரிச்சந்திரன் பின்வருமாறு புகழப்படுகின்றான்.

*ஒருபதியால் எட்டு*
*ஒருநாளும் பொய்சொல்லான்*
*திரி சங்கு குமாரன்*
*அரிச் சந்திர ராஜன்!*
*செத்தாலும் பொய் சொல்லான்*
*சத்திய அரிச் சந்திரன்!*
*மாண்டாலும் பொய் சொல்லான்*
*மன்னன் அரிச்சந்திரன்.*

## 16. மன்னன் மகள்

அபிமன்னன் சுந்தரிமாலை என்னும் கதைப் பாடல் நூலில், மன்னன் மகளைப் பற்றிய கதை, கிளைக்கதையாய் இடம் பெற்றுள்ளது.

ஒரு நல்ல கதைக்கு இருக்க வேண்டிய சிறப்பியல்புகள் யாவும் அதில் உள்ளன. கற்பவர் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் நிகழ்ச்சிகள் அடுத்து அடுத்து அமைதல், கதையில் வரும் பாத்திரங்களின் பண்பைத் தெளிவாக விளக்குதல், கதை நிகழ்ச்சிகள் சிக்கலடைந்து எவ்வாறு இவை முடியும் என்று எண்ணத் தூண்டுதல், எல்லோரும் ஒப்பும் வகையில் – இதுவே நல்ல முடிவு என்று மகிழும் வண்ணம் கதை முடிதல் ஆகிய சிறப்பியல்புகள் யாவும் அக்கதையில் உள்ளன. இனிக் கதையைக் காண்போம்:

*அறிவில்லா மன்னன்*
*அரசாளும் நாளையிலே*
*ஆதிசிவன் அருளால்*
*அவனுக்கொரு பெண்பிறந்தாள்!*

என்று கதை தொடங்குகிறது.

அந்த நல்ல பெண்ணை
அழகுள்ள பூங்கொடியை
ஐந்து வயதில்
அறிவறிய வேணுமென்று
வைகுந்தன் என்னும்
வாத்தியார் பள்ளியிலே
மகளைப் படிக்க வைத்து
மன்னவனும் மகிழ்ந்திருந்தான்!

மன்னன் மகள் அந்தப் பள்ளியில்,

ஐந்து வயதில்
அரிச்சுவடி முதலாக
கல்வி ஒழுக்கம்
கலந்ததொரு வேழமுகம்,
ஒன்பதாம் வயதில்
உயர்ந்ததோர் எண்சுவடி,
பத்தாம் வயதில்
பாரச் சுவடியான
நிகண்டு திவாகரமும்
நிகரான இலக்கணமும்

கற்று வந்தாள்.

இத்தனையும் தான்படித்து
இயல்பாக வரும்போது
ஒருநாட் பொழுதினிலே
உயர்ந்தபள்ளிக் கூடந்தனில்
பொழுது போகுமுன்னே
பிள்ளைகளை அனுப்பிவிட்டு
வைகுந்தன் என்ற
வாத்தியார் அப்போது,

மன்னன் மகளை
வகையாகத் தான் இருத்தி,
"அடி பெண்ணே! உன்பேரில்
ஆசைகொண்டேன் வெகுநாளாய்!
மாயை என்ற ஆசை
மறப்பதில்லை பெண்ணணங்கே!
என்னாசை தீர்க்க வேண்டு" மென்று
இயம்பினான் வைகுந்தன்!

மன்னன் மகளின் நிலை எப்படி இருந்தது? அவள் என்ன சொன்னாள்?

அப்போது மங்கையரும்
ஐயகோ என்றழுது,
"என்னவார்த்தை நீர்தான்
இயம்பலுற்றீர் சற்குருவே!
ஐயாவே நீர்தாமும்
அவ்வார்த்தை பேசாதீர்!
படிப்பித்த வாத்தியார்
பாங்கான என்தகப்பன்!
கைச்சரசம் செய்யாதீர்
காரணரே என்குருவே!
என்றுதான் மன்னன்மகள்
இவ்வார்த்தை தானுரைத்தாள்!

மாணவி அறிவுரையைக் கேட்டு ஆசிரியன் திருந்தி விட்டானா? குற்றத்தை உணர்ந்து நாணி நின்றானா?

"அல்ல அடிப்பெண்ணே!
ஆரணங்கே! சொல்லுகின்றேன்:
நீதிமெத்த சொன்னாய்,
நிலைமையுள்ள வாழ்மயிலே

நீ சொன்ன படியே
நிற்குதோ பூவுலகம்?
ஒருநாளைக் காணுலும்
உயர்ந்த ஒரு மனையில்
இருவரும் கூடி
இளமான்களைப் போல
விளையாட நீ வாராய்!
வெற்றியுள்ள பூங்கொடியே!''

என்ற அறிவு நிலை கெட்டுப்பேசுகின்முன் ஆசிரியன்.

வாத்தியார் சொல்ல
மங்கையரும் ஏதுரைப்பாள்!
''ஐயா! உனக்கடியாள்
ஆனபிள்ளை அல்லவோ நான்?
மெய்யாகப் பேசுகிறீர்?
வீண்பேச்சு விட்டுவிடும்!''
என்று சொல்லி மங்கை
இயலாய் எடுத்துரைத்தாள்!

இவ்வாறு மாணவி சொன்னதைக் கேட்ட ஆசிரியன் திருந்தி விடவில்லை! மனம்மாறிவிடவில்லை! மன்னன் மகள் மீது பகைமை கொண்டான். அவளைப் பழி வாங்க முடிவு செய்தான்:

அப்போது வாத்தியார்
ஆன துயரமுடன்
மங்கையரை வீட்டிற்கு
வகையாய் அனுப்பிவிட்டான்!
வாத்தியார் தானும்
வஞ்சம் பகை நெஞ்சில் வைத்தான்!

ஆசிரியன் மனம் பகைமையால் – வஞ்சத்தால் நிரம்பிக்கிடந்தது; மாணவியின் மனம் களங்கமற்று இருந்தது; துணிவும் நேர்மையும் அங்கே குடி கொண்டிருந்தன.

*இராசா மகளும்*
*நடந்து சென்றாள் வீட்டுக்கு!*
*வீட்டிற்குள் தான்புகுந்து*
*விபரமுள்ள மங்கையரும்*
*கூட்டுத் தொகை கூட்டும்*
*கொத்தான புத்தகத்துத்*
*தூக்கும் அங்கே தூக்கித்*
*துணிவாகத்தான் இருந்தாள்!*

காலம் கனிந்தது. மன்னன் மகள் பூத்தாள். மன்னன் மகிழ்ந்தான்:

*மறுநாட் காலையிலே*
*மங்கையருந் திரண்டாள்*
*அப்போது ராசாவும்*
*அகமகிழ்ந்து கொண்டாடி*
*வைகுந்தன் என்னும்*
*வாத்தியார் தனைஅழைத்தான்*

ஆசிரியனின் நெஞ்சு திடுக்கிட்டது. குற்றமுள்ள நெஞ்சு பதைத்தது. மன்னன் மகள் தன்னைப் பற்றி என்ன சொன்னாளோ, என்ன நடக்குமோ என்று அஞ்சினான் ஆசிரியன். அவன் மனநிலையைவிளக்கு கின்றது பாடல்:

*அப்போது வாத்தியார்*
*ஆன வியாகூலமாய்*

என்ன செய்வேன் என்று
ஏங்கி மனந்தளர்ந்து
மன்னன் மனைக்கு
வைகுந்தன் வந்துவிட்டான்!

ஆசிரியனின் மனநிலை மன்னனுக்கு எப்படித் தெரியும்?

இராசாவும் அப்போது
நலமுடனே ஏது சொல்வான்:
"அருமை இளமயிலாள்
ஆரணங்கு என்மகளும்
வெள்ளிக் கிழமையிலே
விடிய ஒரு சாமம் உண்டு;
உத்திராட நட்சத்திரம்
உகந்த பிரதமையில்
இந்த நல்ல வேளையிலே
இயலான என்மகள்தான்
புட்பவதி யானாள்
புராணத்தைப் பாரும்!" என்றான்.

இதைக் கேட்டதும் ஆசிரியனின் மனச்சுமை நீங்கியது; அச்சம் அகன்றது. ஆனால், வஞ்சமனம்திருந்தவில்லை. மன்னன் மகளைப் பழிவாங்கத் துணிந்தான். நல்லவன்போல் நடித்தான்.

அப்போது வைகுந்தன்
ஆனதொரு ஏடெடுத்து,
சாஸ்திரத்தைப் பார்த்துச்
சலிப்பாகத் தான் இருந்தான்

வெள்ளைமனம் கொண்ட மன்னன், கள்ளமனம் கொண்ட ஆசிரியனைப் புரிந்துகொள்ளவில்லை.

அப்போது மன்னன்
அடைவாகத் தான் பார்த்தான்:
"வாத்தியாரே நீர்தான்
மதிமறந்து இருப்பானேன்?
சொல்லுமையா!" என்று
சொன்னனே மன்னவனும்!

மன்னன் மகளைப்பழிவாங்கத் தக்கநேரம் அதுவே என்று துணிந்தான் ஆசிரியன்.

வைகுந்தன் வாத்தியார்
மனது துயரமுடன்
"என்ன செய்வோம் ராசாவே!
இயல்புடைய உன்மகள்தான்
திரண்ட நட்சத்திரம்
திறமாய் இருக்கவில்லை!
ஆண்டவனே மன்னவனே
அரண்மனைக்கு அழிவு வரும்!
உன்மகள் திரண்டதுதான்
உலகுக்கு அழிவுவரும்!
இந்த ஒரு பெண்ணை நீர்
இயல்பாக வைத்திருந்தால்,
சீமைகள் எங்கும்
தீப்பிடிக்கும் இப்போதே!"
என்றந்த வாத்தியார்
இவ்வார்த்தை தான் உரைத்தான்!

வெள்ளைமனம் கொண்ட மன்னன் திடுக்கிட்டான்; கள்ள மனம் கொண்ட ஆசிரியனையே என்ன செய்வது என்று கேட்டான்:

மன்னவனும் அப்பிராறு
வாயில் அடித்துக் கொண்டு

‘என்ன செய்வேன் ஈசுவரனே!’
என்று மிகப் புலம்பி
‘வழி என்ன சொல்வீர்’ என்று
வாத்தியாரைத் தான் கேட்டான்.

மன்னன் தன் சொல்லைத் தட்டாமல் கேட்பான் என்று அறிந்த ஆசிரியன் துணிந்து விட்டான் மன்னன்மகள் மீது தான் கொண்ட பகையைத் தீர்த்துக் கொள்கின்றான்:

வாத்தியார் வைகுந்தன்
வகையாக வார்த்தை சொல்வான்:
“பேழைதனைக் கொண்டுவந்து
பெண்ணை அதனில் வைத்து
ஐந்து கட்டு கட்டி
அரக்கு முத்திரை தான்போட்டு
ஓடுகிற ஆற்றிலே
ஒழித்துவிடு ராசாவே!
தோஷங்கள் எல்லாம்
தொலைந்துபோம் அத்தோடே!”

மன்னன் அப்படியே செய்துவிட்டான்:

அப்போது மன்னவனும்
ஆனவியா கூலமாய்ப்
பேழைதனைக் கொண்டுவந்து
பெண்ணை அதனில் வைத்து
ஐந்து கட்டுகட்டி
அரக்கு முத்திரை தான்போட்டு
“ஐயோ மகளே!” என்று
அழுதானே மன்னவனும்!
“அத்தைமகன் இருக்க

ஆற்ருேடே போருயே!"
அழுது புலம்பி மன்னன்
ஆற்றிலே தள்ளி விட்டான்.

மன்னன் மகளுக்கு ஓர் அத்தை மகன் இருப்பதை மன்னன் நினைக்கிருன்; நமக்கும் நினைவூட்டுகிருன்.

ஆசிரியன் விரைந்து ஆற்றங்கரைக்குப்போகின்ருன்;

வாத்தியார் அப்போது
வகையாகத் தான்எழுந்து
பள்ளிக் கூடத்துப்
பையன்கள் பின்தொடர
ஆற்றங் கரையோரம்
ஆசையுடன் ஓடிவந்தான்!
பேழை வருகுதடா
பிடியுங்கள் என்று சொன்னுன்!
வழிபார்த்துக் கொண்டிருந்தான்
வாத்தியார் வைகுந்தன்!

நினைப்பவை எல்லாம் நடந்து விடுகின்றனவா? திட்டமிட்டபடி எல்லாம் நிகழ்ந்து விடுகின்றனவா?

அவளுடைய அத்தை மகன்
அவ்விடத்தில் வந்து
வேட்டைகள் ஆடி
வேங்கையொன்று தான்பிடித்தான்!
அவ்வேளையிற் பேழை
ஆற்ருேடே வந்ததுகாண்!
கண்டதும் மன்னன் மகன்
களித்து மனம் மகிழ்ந்து,

"ஆரடா சேவகரே!
ஆனதொரு மந்திரியே!
பேழையடா உங்களுக்கு;
பேழைமுதல் என்தனுக்கு!"
என்று இளவரசன்
இயல்பாகத்தான் உரைத்தான்.

இளவரசன் கட்டளையை உடனே நிறைவேற்ற விரைந்து செல்கின்றனர்:

நல்லதென்று ஓடியே
நாலுபேர் பிடித்தார்கள்!
பேழைதனைக் கொண்டுவந்து
பிரியமுடன் வைத்தார்கள்!

பேழையைத் திறக்குமாறு மன்னன்மகன் ஆணையிடுகின்றான். பேழை திறக்கப்படுகின்றது.

பேழைக்குள்ளே ஒரு
பொற்கொடியும் தான் இருந்தாள்!

இதற்குமுன் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்ததில்லை! நல்வினை அவர்களைச் சந்திக்க வைத்திருக்கின்றது.

இராச குமாரன்
இளவரசி முகம் பார்த்து-நீ
ஆர்? என்று கேட்க
அப்போது உரைக்கலுற்றாள்:
"பொல்லாத வேளையிலே
புத்தியறிந்தேன் என்று
ஓடுகிற தண்ணீரின்

உள்ளே தள்ளினர்''—என்று
வந்த வரலாற்றை
வகையாகச் சொல்லிவிட்டாள்.

இளவரசியை எடுத்து வெளியே விட்டுவிட்டுப் பேழையில், தான் பிடித்து வந்த வேங்கையைப் போட்டு மூடி ஆற்றில் மிதக்கவிடுகின்றான்.

கேட்டந்த மன்னன்மகன்
கிளிமொழியைத் தான்எடுத்து,
பெண்ணிருந்த பேழையிலே
பெருவேங்கையை அடைத்து
ஓடுகின்ற தண்ணீரில்
ஓடவிட்டான் உத்தமனும்!

அத்தை மகளை அழைத்துக்கொண்டு அரண்மனைக்கு வந்து விட்டான் இளவரசன்.

மாமன் திருமகளை
வகையாகத் தான் எடுத்துப்
பல்லக்கில் வைத்துக்கொண்டு
பண்புடனும் வந்துவிட்டான்!

வாழப் பிறந்தவர்கள் இவ்வாறு நல்லூழ் சேர்த்து வைக்க இன்பமாக வாழ்கின்றனர்.

வேங்கை அடங்கிய பேழை என்ன ஆயிற்று? பேழையில் மன்னன் மகள் வருவாள் என்று ஆற்றங் கரையில் மாணவர்களுடன் காத்திருக்கும் வைகுந்தன் என்ன ஆனான்?

*அப்பேழை வருகுதையா*
*ஆற்றினிலே நீந்தி!*
*வாத்தியார் கண்டு*
*மனதுமிக மகிழ்ந்து*
*வாசிக்கும் பிள்ளைகளை*
*வாகாகத்தான் பார்த்து,*
*ஆற்றில் வரும் பேழைதனை*
*அன்பாய்ப் பிடியும்! என்றான்.*

ஆசிரியனின் சொற்படி பிள்ளைகள் சென்று ஆற்றில் மிதந்து வந்த பேழைதனைப் பிடித்துத் தூக்கிவந்து வீட்டில் வைக்கின்றனர்.

*நீந்திப் பிடித்தார்கள்*
*நேர்த்தியான பேழைதன்னை!*
*எடுத்துவந்து பெட்டிதன்னை*
*இறக்கி வைத்தார் வீட்டினிலே!*

பிள்ளைகளை அனுப்பிவிட்டபின் ஆசிரியன்,

*தலைவாசலை அடைத்து*
*தாப்பாளும் போட்டுவிட்டான்!*

ஆசிரியன் நெஞ்சத்தில் ஆசையலைகள் பலவாறு எழுகின்றன:

*"மங்கிலியம் நான் தரிப்பேன்*
*வாழ்வேந்தன் மங்கையர்க்கு!*
*சோபன கலியாணம்*
*சீக்கிரமாய் முடிக்கவேணும்!"*

பேழையைத் திறக்குமுன்னரே மன்னன் மகளிடம் காதல் மொழி பேசத் தொடங்கி விட்டான்:

"பேழையுடன் வந்த
பேடைமயிலே! அன்று
பூங்கா வனந்தனிலே
போகிக்கச் சொன்னேனே;
வரமாட்டேன் என்றாயே!
வந்தகப் பட்டாயே!
கல்யாண சோபனம்
கலந்து செய்வோம்!" என்றான்.

இவ்வாறு பேசிக் கொண்டே பேழை மீதிருந்த கட்டை அவிழ்த்தான்.

கட்டை அவிழ்த்தானே
கட்டழகன் வைகுந்தன்!
கட்டை அவிழ்த்தவுடன்
கண்டானே வேங்கைதனே!
வேங்கையும் தான் எழும்பி
மிகவே பசிதீரக்
குரல்வளையைப் பிடித்துக்
குடித்ததே ரத்தத்தை!
வேங்கையும் பின்னர்
வெளிப்பட்டுப் போனதுவே!

தீயவர்களின் முடிவு இது என்று காட்டுவது போல் இவ்வாறு முடிகின்றது கதை.

# படித்தவர் நினைவுக்கு

## நாட்டுப் பாடல்களின் இயல்புகள்

1. எழுத்தறிவில்லாத நாட்டுப்புறத்து மக்களிடையே தொன்றுதொட்டு வழங்கி வருபவை.

2. இவற்றை இயற்றியவர் யாவர், அவை தோன்றிய காலம் யாது என அறுதியிட்டுக் கூற முடியாது,

3. செவி வழியாகவே தலைமுறைதோறும் அவை நீடித்து வந்துள்ளன.

4. எழுத்து வடிவத்தில் அவற்றை யாரும் எழுதி வைக்கவில்லை.

5. பல பாடல்களுக்கு நிலையானதொரு வடிவமும் இல்லை.

6. இடத்துக்கும் காலத்துக்கும் தகுந்தபடி, அவை விரிந்தும் சுருங்கியும் நின்றுள்ளன.

7. பாட பேதம் பெற்றுள்ளன எனினும் அவற்றின் மூலக் கருத்து மாறுபட்டதாகத் தோன்றவில்லை.

8. இசை என்ற சிறகுகள் இருப்பதாலேயே எளிதில் பரவும் தன்மை பெற்றிருக்கின்றன.

9. நிலப் பரப்பின் எல்லைகளையும், மொழி வேறுபாடுகளையும்கூட அவை கடந்து சென்றுள்ளன.

10. தாமாக மலர்ந்து மணம் வீசும் காட்டு மலருக்கு ஒப்பானவை; செயற்கை அரண் இன்றிப் பெருகித் தழைத்தவை.

11. இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தும் மக்களின் உள்ளக் கிளர்ச்சிகளை வெளியிடும் தன்மை வாய்ந்தவை.

12. நாட்டுப்புறத்து மக்களின் ஆசை நம்பிக்கை கனவு காதல் ஆகிய எல்லாவற்றையும் பொன்னொளி பூசிப் போற்றுகின்றன.

—கலைக் களஞ்சியம்6, பக்: 382, 383.

## ஆசிரியரின் பிற நூல்கள்

உரையாசிரியர்கள்
(1968, தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற ஆராய்ச்சி நூல்)

திருக்குறளும் சங்க இலக்கியமும்
(ஒப்பியல் ஆய்வு)

பிழையின்றி எழுதுங்கள்

சிறுவர் உலகம் (குழந்தைக் கவிதைகள்)

வரலாற்றிலே வேலூர்

இலக்கிய வானில் சிந்தாமணி
(காப்பியத் திறனாய்வு)

அருகன் புகழ் மாலை
(இசைப்பாடல்கள்)

சிலம்புச் செல்வி
(சிலப்பதிகார இலக்கிய நாடகம்)

கூட்டுக்கு வெளியே
(உருவகக் கதைகள்)

அரவிந்தன் கவிதைகள்
(மூன்று தொகுதிகள்)

வெள்ளை மலர்கள்
(மறுமலர்ச்சிக் கவிதைகள்)

மை தீட்டிய விழிகள்

பரணிக் கோர் சயங்கொண்டான்
(கலிங்கத்துப் பரணி திறனாய்வு)

சிறுபாணாற்றுப் படை—திறனாய்வு

திருவள்ளுவமாலை—திறனாய்வு

விரைவில் வெளிவர இருக்கும்

# மு. வை. அரவிந்தன்

## படைப்புகள்

தொல்காப்பியக் கலை
தொல்காப்பியம் தெரியுமா?
திருவள்ளுவரைக் கண்டேன்
தமிழகத்தில்—யவனர்
பெரிபுளூஸ் (செங்கடற்பயணக் குறிப்பு)
ஜைனம் வளர்த்த தமிழ்
சொல் சொல்லும் கதைகள்
சிந்தாமணி மகளிர்
கம்பர் படும்பாடு
வன்னியர் வரலாறு
வரலாற்றுப் புகழ்பெற்ற கடிதங்கள்
உள்ளங்கவர்ந்த ஒன்பது கதைகள்
குடும்ப விளக்கும் இருண்ட வீடும்
மூன்று ஆத்திசூடிகள்
காவிய அரங்கில் — கயவர்
இருவேறு உலகம்
காக்கை குருவி எங்கள் ஜாதி
இலக்கிய கல்வி
வெள்ளி வீதியின் காதல் உள்ளம்
தமிழே, நீ ஓர் பூக்காடு!
மின்னல் பொறிகள்
சிலப்பதிகாரத்தில்—இசைப் பாடல்கள்